ஜப்பானியக் காதல் பாடல்கள்

மனோன்மணி சண்முகதாஸ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ஜப்பானியக் காதல் பாடல்கள்

(மன்யோசு தொகுதி 10இல் அடங்கிய
பாடல்களின் மொழிபெயர்ப்பு)

முனைவர் **மனோன்மணி சண்முகதாஸ்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
C.P.T. Campus, Tharamani,
Chennai - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Jappāniya Kādal Pāṭalkaḷ (Japanese Love Poems - Translation of the Poems in Volume Ten of MANYŌSHU)
Author	:	Dr. Manonmani Sanmugadas, Visiting Research Fellow, Gakushuin University, Tokyo, Japan.
Publisher & ©	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai - 600 113.
Publication No	:	369
Language	:	Tamil & English
Edition	:	First
Year of Publication	:	2000
Paper Used	:	18.6 kg TNPL Super Printing
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	11 point
No. of Pages	:	336
No. of Copies	:	1000
Price	:	Rs. 75/-
Printing	:	United Bind Graphics, 101-D, Royapettah High Road, Luz, Mylapore, Chennai - 600 004. Phone : 498 4693, 466 1807

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

ஜப்பானின் தொடக்க கால இலக்கியம் 'மன்யோசு' என்பதாகும். மன்யோசு என்பதற்கு ஆயிரக்கணக்கான பாடல்களின் தொகை என்பது பொருள். மன்யோசு தொகை பன்னிரண்டு பகுதிகளை உடையது. மன்யோசு தொகுப்புக் காலம் ஜப்பானிய இலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனலாம். இக்காலத்தில் தோன்றிய இலக்கிய வடிவம் தங்கா என்பதாகும். இது ஐந்தடிகளைக் கொண்ட யாப்பு வடிவம். தங்கா என்ற பா வடிவம் மட்டுமன்றி, மாந்தரின் உணர்ச்சிக்கு ஏற்ப சோகா, வாகா, நௌஉதா முதலிய யாப்பு வடிவங்களும் மன்யோசு தொகுப்பில் காணப்படுகின்றன.

மன்யோசு பல்வேறு காலங்களில் பாடப்பெற்ற பாடல்கள் ஆகும். கிபி. 4 முதல் 7 வரையிலான கால கட்டங்களில் தொகுக்கப்பெற்ற மன்யோசு கவிதைகள் இயற்கை, காதல், பிரிவு, பருவ காலங்கள், வாழ்க்கை நுகர்ச்சிகள் முதலிய பொருண்மைகளைக் கொண்டமைந்தன.

இயற்கைப் பாடல்களில் மலரும் பறவையும் விலங்கும் பெரிதும் இடம்பெற்றிருக்கக் காணலாம். இவை நேரடியாகப் பாடலுள் குறிக்கப்படினும், உள்ளுறையாகத் தலைவன், தலைவி ஆகியோரின் உணர்ச்சி நிலைகளை ஆழமான பொருள் நுட்பத்தோடு காட்டுவன. இளவேனில் காலத்து உகிஷ் பறவை, இனிய குரலால் இசையோடு பாடும் இயல்புடையது. இது இளவேனிற் காலத்தைத் தெரிவிப்பதற்கான குறியீடு தலைவனின் வருகையை உணர்த்தும் மகிழ்ச்சியின் குறியீட்டை இது உணர்த்தும். அதேபோல் பிரிவுக்கும் காரணமாக இருப்பதைக் காட்டும். அன்னம், மான், கரடி போன்றவையும் இயற்கையின் கருப்பொருளை விளக்க வரும். பூக்களில் சகுராவும், செர்ரியும் இடம்பெறும். கருப்பொருள் பின்னணியில் மலைக்கும் கடலுக்கும் சிறப்பான இடம் உண்டு. இயற்கைப் பாடல்களோடு காதல் பாடல்களில் மகிழ்வும், சோகமும் ததும்பி வழியும். காதலன், காதலி சந்திப்பும், காதலன் குறித்த காலத்தே வாராமையும் உணர்ச்சியோடு பாடப்பெற்றுள்ளன.

ஜப்பானில் இறந்தோரை எண்ணிப் பாடும் கையறுநிலைப் பாடல்களும் உள்ளன. மன்னன் இழப்பு, தலைநகர் மாற்றானிடம் பறிபோன சோகம், தலைநகர் அழிவு முதலியவை கையறுநிலைப் பாடல்களில் பெரிதும்

காணப்படுபவை. வறுமை பற்றிய பாடல்களும் மன்யோசு தொகுப்பில் உள்ளன.

மன்யோசு தொகுப்பில் அரசன் முதல் ஆண்டி வரையிலான பலரும் பாடிய பாடல்கள் உள்ளன. பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தன்னுணர்ச்சிக் கவிதைகள் பெரிதுமாக இடம்பெற்ற தொகுப்பு, ஜப்பானிய இலக்கிய வரலாற்றில் புதிய வரவுகளை உணர்த்திற்று. தங்கா யாப்பிலிருந்து கிளைத்ததுதான் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றி மேலைத் திசையினரைக் கவர்ந்த ஹைகு என்ற மணிச்சுருக்கமான கவிதை வடிவம். எனவே ஹைகுவின் தாய் தங்கா எனலாம்.

தங்காவில் காணப்பெறும் சொல் இயைபு, சொல் இணை (Pillow words) முதலியவற்றின் வளர்ச்சி ஹைகு தோன்றியதன் பின்னணியாகும். பெரிதும் காட்சிப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. ஆழ்ந்த பின்புலத்தில் பல்வேறான பொருள் கொண்டது. எனவே ஐந்தடி தங்கா, மூன்றடியாகச் சுருங்கியது. எனினும் விரிந்த நுட்பமும் செறிவும் கொண்டது.

இத்தகைய சிறப்பு மிக்க மன்யோசு தொகுப்பில் உள்ள காதல் பாடல்களை ஈழத் தமிழ் அறிஞர் முனைவர் மனோன்மணி சண்முகதாசு அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து இந்நூலில் தந்துள்ளார். அவருடைய மொழிபெயர்ப்புப் பணி பாராட்டுக்குரியது.

தமிழுக்கும் ஜப்பானிய மொழிக்கும் உள்ள உறவுகள் குறித்து நெடுங்காலமாக ஆய்வுசெய்து வருபவர் திருமதி மனோன்மணி சண்முகதாசு அவர்கள். தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் உலகுக்கு உணர்த்தும் திருமதி மனோன்மணி சண்முகதாசு அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திரு. சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

மெய்ப்புத்திருத்திய திரு. நடராசன் அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அவர்களுக்கும் நன்றி.

இயக்குநர்

என்னுரை

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உலக அரங்கில் தமிழ் சிறப்புப் பெறுவதற்கு அதன்செழுமையையும் வளமையையும் வெளிப்படுத்திக் காட்டும் ஆவணங்கள் தேவை. புதிய விஞ்ஞானக் கருவிக் கையாட்சி மூலம் எமது தலைமுறையினர் தமிழைக் கற்கவுள்ளனர். அவர்கள் ஒப்பீட்டு நிலையிலே தமிழாய்வு செய்ய வருமிடத்து, வேண்டிய தகவல்களைப் பெற நாம் உதவவேண்டும். பழைய இலக்கியங்களை அவர்கள் படிக்கவும் சுவைக்கவும் வகை செய்ய வேண்டும். இப்பணியின் ஒரு கட்டமாகவே இம்மொழிபெயர்ப்பு அமையும்.

உலக இலக்கியங்களைத் தமிழிலக்கியப் பின்னணியிலே சிறப்பாக விளங்கிக்கொள்ள முடியும் என்பதற்கும் இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு. ஜப்பானியக் காதல் பாடல்களை-அது குறிக்கும் ஆழ்பொருளை நுண்ணிதின் உணர, சங்க இலக்கிய அகப்பாடல்கள் பேருதவி புரியும். இது **மன்யோசுக் காதற் காட்சிகள்** என்னும் நூலில் முன்னரே தெளிவாக்கப் பட்டுள்ளது.

இந்த நூல் மன்யோசுத் தொகுப்பினுள் பத்தாவது தொகுப்பினைத் தமிழிலே பெயர்த்துத் தந்துள்ளது. முன்னர் 155 பாடல்கள் மட்டும் மொழி பெயர்க்கப்பட்டு **மன்யோசுப் பாடல்கள்** என்ற நூலாக வெளிவந்தது. இந்நூல் சங்க அகப்பாடல்களை ஜப்பானியக் காதல் பாடல்களுடன் ஒப்பிட்டுச் செய்யப்படும் ஆய்வுகளுக்கு ஒரு தரவு நூலாகப் பயன்படும் தன்மையது. தமிழ்மொழியின் இலக்கியப் புலமை பிறமொழியாளர்க்குப் பெரிதும் உதவும் என்ற நிலையில், ஜப்பானியர் தெளிவு பெறாத மன்யோசுப் பாடல்களின் காதல் பாடல்களின் மரபைத் தெளிவாக விளங்க இப்பாடல்களுக்கு

எழுதப்பட்டுள்ள விளக்கம், குறிப்புரை, உணர்வுநிலை என்பன உதவியாய் அமையும் என நம்புகின்றோம். தமிழர்க்கு நூலின் நுழைவாயில் நல்ல வரவேற்பை நல்கும்.

உலகம் முழுதும் பரந்துள்ள தமிழர், உலக இலக்கியங்களைக் கற்கும் வேளையிது. இவ்வேளையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் காலத்துக்கேற்ப செம்மையான தமிழ்ப் பணியினைச் செய்ய வேண்டி இந்நூலை வெளியிட முன்வந்தமை ஞாலத்தினும் பெரிது. பல நாடுகளிடையே நடைபெறும் தமிழ் ஆய்வுகளை எல்லாம் 'குவியல்' செய்யும் இயக்குநர்-முனைவர் இராமர் இளங்கோவின் பணி தமிழைக் காத்து நிற்பது. அவருக்குத் தமிழின் பெயரால் நன்றி. இந்நூல் உருவாக என்னை ஊக்கிய பேராசிரியர் சுசுமு ஓனோ தமிழர்களால் நன்றியுடன் நினைக்கப்பட வேண்டியவர்; நூற்படியை நான் தயாரிக்க உதவிய எனது தமிழ் மாணவி SUNAO OZAKIயின் பணி என் நெஞ்சில் இறவாது நிற்கும்; ஒப்பீட்டாய்வில் என்னோடு இணைந்துள்ள என் கணவர்; மற்றும் பேராசிரியர் பொன். கோதண்டராமன் இருவரும் என் நூலாக்கத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தவர்கள். அவர்கள் உதவி மறத்தற்கரிது. எல்லாவற்றிற்கும் மேலாக எம் தமிழன்னையின் முடிக்கு இச்சிறுநூல் ஓர் ஒளி காலும் மணியாக அமைய அருளிய அபிராமியின் தாளில் இந்நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.

- மனோன்மணி சண்முகதாஸ்

நுழைவாயில்

ஜப்பானியக் காதல் பாடல் மொழிபெயர்ப்புக்குச் சங்கப் பாடல் மரபு பற்றிய அறிவின் இன்றியமையாமை

பிறமொழி இலக்கியங்கள்பற்றிய செய்திகளைத் தமிழர் அறிய வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். ஜப்பானிய மொழியும் தமிழ் மொழியும் ஒருமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் கோட்பாடு வலுப்பெற்று வரும் நிலையிலே,[1] ஜப்பானிய இலக்கியங்கள்பற்றிய அறிமுகமும் இன்றியமையாதது. குறிப்பாகப் பழைய ஜப்பானியக் காதல் பாடல்களும், தமிழ் மொழியிலே தோன்றிய - காலத்தால் பழைமை பெற்ற சங்க அகப்பாடல்களும் மிக நெருங்கிய ஒற்றுமைப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ளன.[2] எனவே சங்க இலக்கியங்கள் பற்றிப் பார்க்கின்ற வேளையில், ஜப்பானியக் காதல் பாடல்கள்பற்றிய கருத்துகளையும் இணைத்துப் பார்ப்பது பொருத்தமாகும். இக்கட்டுரை பழைய ஜப்பானியக் காதல் பாடல்கள் பற்றிய சுருக்கமான விளக்கத்தைத் தந்து அவற்றைத் தமிழிலே மொழிபெயர்க்குமிடத்துச் சங்க இலக்கிய மரபு பற்றிய அறிவு எத்துணை இன்றியமையாதது என்பதை விளக்கும்.

1.1. ஜப்பானியப் பழைய காதல் பாடல்கள் : தொகுப்பு நிலை விளக்கம்

ஜப்பானிய மொழியிலே எழுந்த பழைய காதல் பாடல்கள் இன்று **மன்யோசு** *(MAN-YŌ-SHŪ)* என்னும் தொகுப்பு இலக்கியமாக நூல் வடிவம் பெற்றுள்ளன. **மன்யோசு** *(MAN-YŌ-SHŪ)* பாடல்களுக்கு முன்னர் **கொஜிகி, நிகொன்சொகி** போன்ற பழைய செய்திகளின் தொகுப்பு நூல்கள் தோன்றியபோதிலும், காதல் பாடல்களின் தொகுப்பு என்ற வகையிலே

மன்யோசுவே பழைமையானது எனக் கொள்ளலாம். இன்னும் இத்தொகுப்பிலே பல்வேறுபட்ட காலத்தில் பல்வேறு புலவர்களாற் பாடப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கி. பி. *5*ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி. பி. *8*ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பாடப்பட்டுள்ள பாடல்கள் இத்தொகுப்பிலே தொகுக்கப்பட்டுள்ளன. **மன்யோசு** (MAN-YŌ-SHŪ) என்னும் தொகுப்பு நூலின் பெயரைத் தமிழ் மொழியிலே நேர் மொழிபெயர்ப்புச் செய்யின், 'பத்தாயிரம் இலைத் தொகுப்பு' என அமையும். **மன்யோசுத்** தொகுப்பிலே, *450* புலவர்கள் பாடிய *4,516* பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எனவே பல ஆயிரம் பாடல்களின் தொகுப்பு என்ற கணிப்பிலேயே **மன்யோசு** என்ற பெயர் இத்தொகுப்பிற்கு வழங்கப்பட்டதெனலாம். பாடல்கள் யாவுமே வாய்மொழிப் பாடல்களாகப் பேணப்பட்டு வந்து, பின்னர் சீன மொழி வரிவடிவத்திலே எழுத்துப் படியாக்கம் செய்யப்பட்டன. எனினும், சீனமொழி வரிவடிவத்தின் உச்சரிப்பு நிலையை மட்டுமே தம் பாடல்களை எழுத்துப் படியாக்கம் செய்வதற்கு ஜப்பானியர் பயன்படுத்தினர். பொருள் நிலையில் சீன மொழி வரிவடிவம், பாடல்களின் எழுத்துப் படியாக்கத்தில் பயன்படுத்தப்படவில்லை. பொருள் நிலையில் ஜப்பானிய மொழியின் பொருளமைதியே பேணப்பட்டுள்ளது. எனவே **மன்யோசுப்** பாடல்கள் எழுதப்பட்ட சீன மொழி வரிவடிவத்திற்குப் புதிய பெயர் ஒன்றும் வழங்கப்பட்டது. இவ்வரிவடிவத்தை ஜப்பானியர் **மன்யோகந** என அழைத்தனர். இதன்மூலம் **மன்யோசுப்** பாடல்களின் வரிவடிவம் தனித்துவமானது என்பதையும் பாடல் படியாக்கம் செய்தவர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். ஜப்பானிய மொழிக்கெனத் தனியான வரிவடிவம் தோன்றாத காலமாகையால், மன்யோசுப் பாடல்களின் படியாக்கத்திற்குச் சீன மொழி வரிவடிவம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் சீன மொழியிலிருந்து ஜப்பானிய மொழியை வேறுபடுத்திக் காட்டும் நிலையிலே படியாக்கம் செய்யப்பட்டமை சிறப்புடைத்தாகும்.

மன்யோசுப் பாடல்கள் *20* தொகுதிகளாக இன்று நூல் வடிவிலுள்ளன. இவை பல்வேறுபட்ட காலங்களிலே பலரால் தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு முறைக்கென வரையறுக்கப்பட்ட முறைமைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. தொகுப்புகளின் வகைப்பா ஒழுங்குநிலையான அமைப்பும் இல்லையென ஜப்பானிய அறிஞர் கருதுகின்றனர்.[3] **மன்யோசுப்** பாடல்களிலே அவற்றுக்கு முன்னர்த் தோன்றிய **கொஜிகி, நிகொன்சொகி** போன்றவற்றின் குறிப்புகளும் பல இடம்பெற்றுள்ளன. மன்யோசுப் பாடல்கள் மாமன்னர்கள், இளவரசர்கள், இளவரசியர், புலவர்கள் எனப் பலதிறத்தோரால் இயற்றப்பட்டுள்ளன. தொகுதியிலே இடம்பெற்ற முதலாவது பாடல் மாமன்னர் யூர்யகுவினால் இயற்றப்பட்டதாகும். இதைவிட அவைக்களப் புலவர்களால் இயற்றப்பட்ட

பாடல்களும் உள்ளன. கிதொமொறொ *(HITOMORO)* என்பவர் அவைக்களப் புலவர்களிலே சிறந்தவராக எண்ணப்படுகிறார். இவர் பாடிய *470* பாடல்கள் **மன்யோசுத்** தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன. இன்னும் பெயர் அறியப்படாத பல புலவர்களுடைய பாடல்களும் இடம் பெற்றுள்ளன. *539* பாடல்கள் பெயர் அறியப்படாத புலவர்களால் பாடப் பெற்றுள்ளன. மேலும் பெண்பாற் புலவர்களுடைய பாடல்களும் **மன்யோசுத்** தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. **மன்யோசுப்** பாடல்களின் தொகுப்புகள்பற்றிப் பல செய்திகள் பல அறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ளன. இன்று **மன்யோகநவில்** எழுதப்பட்ட பாடல்களை ஜப்பானிய மொழிக்கெனப் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட வரிவடிவத்திலே எழுதிப் படியாக்கம் செய்யப்பட்ட தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றை ஜப்பானிய மொழி அறிவுடையோர் படிப்பதும் எளிதாகையால், **மன்யோசு** தொகுப்புப் பற்றிய கருத்துகளும் பல வெளிவரத் தொடங்கியுள்ளன.[4]

மன்யோசு தொகுப்புப்பற்றிய சுருக்கமான விளக்கத்தைப் பின்வரும் அமைப்பு நிலை விளக்கும் :

1. தொகுதி : ஒன்று

அரசர் : YŪRYAKU *(456-79)* பாடல்கள்

ஆரம்ப நர *(NARA)* காலம். *16* CHOKA பாடல்கள்.

2. தொகுதி : இரண்டு

அரசர் : NINTOKU *(313-99)*

*715*இன் இறுதிக் காலப் பணியெனக் கணிக்கப் பட்டுள்ளது. *19* CHOKA பாடல்கள். HITOMARO பாடல்கள்.

3. தொகுதி : மூன்று

அரசி : SUIKO *(592-628)* *16* வருட TEMPYŌ *(744)*

புஜிவர, நர காலப் பகுதி அரண்மனைப் பாடல்கள். AKAHITO பாடல்கள், OMOTO குலம் பற்றிய பாடல்கள் TABITOவும் YAKAMOCHIயும் பாடியவை.

4. தொகுதி : நான்கு

நரகாலப் பாடல்கள் : TABITO + YAKAMOCHI

பெண் காதலியருடன் பரிமாறிய பாடல்கள்.

5. தொகுதி : ஐந்து

TABITO + நண்பர்களுடன் பரிமாறிய பாடல்கள்

OKURA *(728-733)* காலப்பகுதி

பல CHOKA பாடல்கள், சீனத் தொடர்கள், அடிகள்.

6. தொகுதி : ஆறு

733-744 காலப்பகுதி. தொகுதி நான்கு, எட்டு ஒத்தவை. காலமும் புலவர்களும், *27* CHOKA பிரயாணம், அரசு வளர்ச்சி உண்டாட்டு.

7. தொகுதி : ஏழு

தொகுதி : பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஒத்தது.

பெயர் அறியாப் புலவர்கள் பாடல்கள். ஓரளவுக்கு அரசர் JITO *(686-96)* தொடக்கம் அரசி GEMMYŌ *(715-23)* பல பாடல்கள் HITOMARO *26* SEDŌKA பாடல்கள்.

8. தொகுதி : எட்டு

தொகுதி நான்கு போன்றது. அரசர் JOMEI *(629-41)*வின் பாடல்கள் TANKA பாடல். இறுதிக்கால அளவு *743-45*. இருவகைப் பாடல்கள் : கலம்பகப் பாடல், திருமுக வழக்குப் பாடல் ஒவ்வொன்றும் நான்கு பருவங்களுக்குமாகப் பாகுபாடு. இது பின்னைய அரச தொகுப்புகளுக்கு இலக்கணமாகியது.

9. தொகுதி : ஒன்பது

அரசர் YŪRYAKU வின் ஒரு TANKA. அரசர் JOMEI *(744)* யின் பகுதி பற்றிய பாடல்கள். பல பாடல்கள் HITOMARO, MUSHIMARO இயற்றியவை. *22* CHOKA. பல்வேறு கட்டுக் கதைகள் பற்றியவை.

10. தொகுதி : பத்து

பெயர் தெரியாத புலவர் பாடல்கள். தொகுதி ஏழு போன்றது. நல்ல பாடல்கள் - பிற்காலத்தவை. இயற்கை பற்றிய பாடல்கள்.

11. தொகுதி : பதினொன்று, பன்னிரண்டு

FUJIWARA - ஆரம்ப நரகாலத்தவை - நாட்டுப் பாடலமைப்பு.

12. தொகுதி : பதின்மூன்று

பெயர் தெரியாத புலவர் பாடல்கள். *67* CHOKA கொஜிகி, நிகொன்சொகி காலத்திலிருந்து மன்யோசு காலம் வரையான மாற்ற நிலை. காலத்தைக் குறிப்பிடுவது கடினம்.

13. தொகுதி : பதினான்கு

கீழ்நாட்டுப் பாடல்கள். பிரதேசப் பாடல்கள். மொழிநடையில் இணைவு. காலம், புலவர், தொகுப்பு நிலை அறிவது கடினம்.

14. தொகுதி : பதினைந்து

கடற் பாடல்கள். கொரியா சென்ற தூதரகப் பணியாளர் பாடல்கள் *(736). 63* காதற் பாடல்கள். *(740)* NAKATOMI YAKAMORIயும் அவர் காதலி SANU CHIGAMI.

15. தொகுதி : பதினாறு

அரசர் MOMMU *(697-706)* காலப் பாடல்கள். கட்டுக் கதைப் பாடல்கள். TEMPYŌ காலம்.

16. தொகுதி : பதினேழு - இருபது

YAKAMOCHI யின் தனிப்பாடல்கள். அவர் பற்றிய பாடல்கள். TEMPYŌ காலம். நரகாலம். தொகுதி பதினேழு. *730-748* காலப் பாடல்கள். தொகுதி பதினெட்டு *748*-ஆரம்ப *750* தொகுதி பத்தொன்பது ஆரம்ப *753*. இம்மூன்று தொகுதிகளில் *47* CHOKA. இலக்கிய வரலாற்றுச் சிறப்புடைய பாடல்கள். தொகுதி பத்தொன்பதில் மூன்றில் இரண்டு YAKAMOCHI பாடல்கள். அவருடைய சிறந்த பாடல்கள். தொகுதி இருபது *753-759* வரையான காலப் பாடல்கள். காவலுக்குச் சென்றவர் வீரம், அவர் பெற்றோர், மனைவிமார் துயர நிலை. பிரதேச தொகுதிப் பெயர்கள் கூறும். தொகுதி இருபது இறுதிப்பாடல் YAKAMOCHI அரசாங்க அதிபராக INABA வில் இருந்தபோது. *759* இறுதியாக மன்யோசுவில் குறிப்பிடப்படும் ஆண்டாகும்.

1.2 பொருள் இலக்கண அமைதி நிலை

மன்யோசுப் பாடல்களில் காதல் பாடல்களின் பொருளமைதி சங்க அகப்பாடல்களில் பொருளமைதியுடன் பெரிதும் ஒற்றுமைப்பட்டுள்ளது. பாடல்கள் கூற்று நிலையால் அமைந்துள்ளன. தன்னுணர்வு கூறும்

கூற்றுநிலையான பாடல்கள் **மன்யோசு** காதல் பாடல்களில் அதிகமாக அமைந்துள்ளன. இன்னும் காதலருடன் தொடர்புடையோர் பற்றிய செய்திகளும் இக்கூற்று நிலையாகவே கூறப்பட்டுள்ளன. எனினும் திட்டவட்டமாக அக் கூற்று நிலைப் பாடல்கள் வகுக்கப்படாமையால் பொருள் நிலையில் மயக்கந் தருவனவாகவும் உள்ளன. பாத்திரங்களின் உணர்வுகள் இயற்கைப் புலத்துடன் இணைத்துப் பாடல்களிலே வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இயற்கைப் புலத்தின் இணைப்பு உட்பொருள் நிலையிலே அமைந்திருப்பதை **மன்யோசுப்** பாடல்களைப் படிக்கும் எல்லாரும் அறிவது கடினம். மனத்தினுடைய நுண்ணிய உணர்வுகளைப் புலப்படுத்துவதற்கு இயற்கைப் புலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே பாடற்பொருளும் ஆழமானதாக அமைந்துவிடுகிறது. பின்வரும் மன்யோசுப் பாடலை இந்நிலை விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

Ama fare no
மழை கழிந்த
Kumo ni tagufite
முகிலுடன் இணைந்தே
Fototo gisu
ஒதொதொகிசு (பறவை)
Kasuga wo sasite
கசுகமலை நோக்கி
Koyunaki wataru
நரன்றே கடந்திடும்.[5]

இப்பாடலில் ஒதொதொகிசு என்னும் பறவை கசுகமலையை நோக்கி நரன்று கடக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. ஆனால் பாடலின் ஆழ்பொருள் உள்ளுறையாக அமைக்கப்பட்டுள்ளது. தலைவியைப் பிரிந்த தலைவனின் மனநிலை விளக்கும் பாடல் என இப்பாடலைக் குறிப்பிடலாம். ஆனால் தலைவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் எண்ணத்தை விளக்கும் பாடலாகவும் இப்பாடலைக் கொள்ளலாம். வெளிப்படையாகப் பெயர் சுட்டாத பண்பினால், யார் மனநிலையை இப்பாடல் விளக்குகின்றது என்பதை முடிவு செய்வதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடும் ஏற்பட இடமுண்டு. எனவே இந்த **மன்யோசு** காதல் பாடலை மொழிபெயர்ப்புச் செய்யும்போது, பொருள் விளக்கம் சிதைவுறுவதற்கும் வாய்ப்புண்டு. ஜப்பானியரது பண்டைய வாழ்வியல் நடைமுறைகளை அறிந்திருப்பினும், இயற்கையின் பகைப் புலத்தில் அவை எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. பொருள் நிலை விளக்கத்தைப் பொருத்தமுற அமைப்பதில்

பாடல்களின் சொற்கள் சிறப்பான பங்கினை ஆற்றும் பண்புடையவை. **மன்யோசு** காதல் பாடல்களின் செய்யுள் அமைப்பு சிறப்பான பண்பு கொண்டது. *5-7* அசைகள் கொண்ட அடிகள் கொண்டது. ஜப்பானிய மொழி இலக்கியப் பாடல்கள் ஆரம்பகாலந்தொட்டே *5-7-5-7-7* என்னும் அசைகளைக் கொண்ட வடிவிலேயே அமைந்துள்ளன. அதாவது பாடல் முழுவதும் *31* அசைகளைக் கொண்டதாய் அமைந்திருக்கும். ஒவ்வோர் அடியும் *5-7* எனப் *12* அசைகளைக் கொண்டமையும். அசை என்னும் போது உயிரோசையையே குறிக்கும். இந்த வடிவத்தை ஜப்பானியர் TANKA என அழைக்கின்றனர். இப் பாவடிவம் பற்றிப் பேராசிரியர் சுசுமுஒனோ ஆய்வு செய்து கருத்துகள் வெளியிட்டுள்ளார்.[6]

மன்யோசு காதல் பாடல்களில் CHOKA எனும் இன்னொரு பா வடிவமும் கையாளப்பட்டுள்ளது. TANKA பா வடிவத்திலே *5-7* அசைகள் கொண்ட இரண்டு அடிகள் அமைந்து, இறுதி அடி *7* அசைகள் கொண்டு அமையும். பெரும்பாலும் CHOKA பா வடிவத்திலே *5-7* அசைகள் கொண்ட அடிகள் இரண்டுக்கு மேற்பட அமையும். மூன்றாவதாக SEDOKA என்னும் பா வடிவமும் **மான்யோசுவில்** அமைந்துள்ளது. இதன் அமைப்பு *5-7, 7, 5-7, 7* என்ற அசைகள் கொண்ட அடிகளால் ஆனது. இவைபற்றிய விளக்கநிலையான எடுத்துக்காட்டுகளும் காட்டப்பெற்றுள்ளன.[7] பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக அமைந்ததால், பாடல்களிலே ஒரே சொற்றொடர் திரும்பத் திரும்பக் கையாளப்படுவதும் தவிர்க்க முடியாத பண்பாகிற்று. இன்னும் மரபு வழியாகப் பயன்படுத்தும் பல சொற்றொடர்களும் பாடல்களிலே வந்தமைந்துள்ளன. இவற்றை ஜப்பானியர் **மகுர கொதப** (MAKURA KOTOBA) எனக் குறிப்பிடுகின்றனர். **மன்யோசுப்** பாடல்களில் பயன்படுத்தும் இச்சொற்கள், பாடற் பொருளுடன் தொடர்புறும் பண்பினை இன்னும் ஜப்பானிய இலக்கிய ஆய்வாளர்கள் தெளிவாக விளக்கவில்லையெனவும் கூறப்படுகிறது. **மகுர கொதப** என்னுஞ் சொற்றொடரைத் **தலையணைச் சொற்றொடர்** எனத் தமிழிலே நேர் மொழிபெயர்ப்புச் செய்யலாம். இத்தொடர்களின் தொகுப்பும் தனிநூலாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.[8] எனினும் இந்நூலில் தலையணைச் சொற்றொடர்களின் பாடற்பொருளமைதி தெளிவுற விளக்கப்படவில்லை யென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒரே சொற்றொடர் இரு பொருள்களைத் தரும் நிலையிலும் **மன்யோசுப்** பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொடர் பெரும்பாலும் ஓர் ஊர்ப்பெயருடன் இணைந்திருக்கும். தொடர் புலப்படுத்தும் ஒரு பொருள், பாடற்பொருளுடன் இணைந்து அவ்வூரிலுள்ள ஒரு பொருளைக் குறிப்பதாகவும்; இன்னொரு பொருள், அவ்வூர் மக்கள் மரபாக அறிந்துள்ள

ஒரு விடயத்துடன் தொடர்பு கொண்டதாகவும் அமையும் இத்தொடரை **ககெகொதப (KAKE KOTOBA)** என ஜப்பானியப் பாவல்லுநர் குறிப்பிடுகின்றனர்.

மன்யோசுப் பாடல்களின் மொழிநடை தனித்துவம் வாய்ந்தது. தொடரமைப்பில் இடைச் சொற்களின் பயன்பாடு மிகவும் அருகியே காணப்படுகின்றது. எனினும் பயன்படுத்தப்பட்டுள்ள இடைச்சொற்களின் இயக்கம் தொடர் குறிக்கும் பொருளுடன் இறுகப் பிணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெயர்ச் சொல், வினைச் சொற்களைச் சார்ந்து வரும் இடைச்சொற்கள் தெளிவாகவே அமைக்கப்பட்டுள்ளன. இடைச் சொற்கள் கொண்டமையாத தொடர்கள் பல பாடல்களிலே அமைந்துள்ளன. அத்தொடர்களின் பொருள் நிலை, இலக்கணப் பயிற்சி உடையவர்க்கே எளிதில் புலப்படும். தற்கால ஜப்பானிய மொழியின் இலக்கண அமைப்பு நிலை **மன்யோசு** மொழி இலக்கண அமைப்பிலிருந்து வேறுபட்டுள்ளது. எனவே பாடல்களுக்கு விளக்கம் கூறுமிடத்து, தற்கால மொழியமைப்பு பாடல்களிலே பொருள் நிலையான தொடர்புக்கு மிகவும் இன்றியமையாத நிலையிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை ககரிமுசுபி (KAKARI MUSUBI) என ஜப்பானிய இலக்கணச் சான்றோர் குறிப்பிடுகின்றனர்.[9]

கால நிலையைக் குறிக்கின்ற சொற்கள், **மன்யோசுப்** பாடல்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளன. தனிச் சொற்களாகவும் தொடர் நிலையாகவும் கால நிலை பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. வேனிற்காலம், கோடைக்காலம், இலையுதிர்காலம், பனிக்காலம் என்ற நான்கு பருவ காலங்களும் பாடல்களிலே தெளிவாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன. அப்பருவ காலங்கள் தொடர்பான இயற்கை நிலையான மாற்றங்களும், அவை தொடர்பான மக்கள் வாழ்க்கை நடைமுறைகளும் ஒழுங்குபடப் பாடல்களிலே அமைக்கப்பட்டுள்ளன. காலங்களின் வரவு, கழிவு போன்றவற்றைப் புலவர்கள் மக்கள் வாழ்க்கை நிலைக்கான விளக்கமாகவும் தொடர்புறுத்திக் காட்டியுள்ளனர். எனவே அதற்கேற்ற வண்ணம் பாடல் அமைப்பு நிலையைக் குறும்பாடல், நெடும்பாடல் என வகைப்படுத்தியுள்ளனர். **மன்யோசுப்** பாடல்களில் குறும்பாடல்களின் தொகையே அதிகமாகவுள்ளது. வாய்மொழி மரபு நிலையும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். பாடல்களை வடிவ நிலையில் அட்டவணைப்படுத்தியுள்ளனர்.[10] அவ்வட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை

தொகுதி	தங்க	சொக	செதொக	புசொகசெகிக	தொகை
I	68	16	-		84
II	131	19	-		150
III	229	23	-		252
IV	301	7	1		309
V	104	10	-		114
VI	132	27	1		160
VII	324	-	26		350
VIII	236	6	4		246
IX	125	22	1		148
X	532	3	4		539
XI	480	-	17		497
XII	383	-	-		383
XIII	60	66	1		127
XIV	238	-	-		238
XV	200	5	3		208
XVI	92	7	4	1	104
XVII	127	14	1		142
XVIII	97	10	-		107
XIX	131	23	-		154
XX	218	6	-		224
தொகை	4,208	264	63	1	4,536

By Dr. Nobutsuna Sasaki

பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட
DAISABURO MATSUSHITAவின் கணக்கீடு

தங்க	*4186*	பாடல்கள்
சொக	*266*	பாடல்கள்
செதொக	*63*	பாடல்கள்
புசொகசெகிக	*1*	பாடல்
முழுத்தொகை	*4516*	பாடல்கள்

2. ஜப்பானியக் காதல் பாடல் மொழிபெயர்ப்புத் தொடர்பான சிக்கல்கள்

மன்யோசுப் பாடல்களின் மொழிபெயர்ப்பு மேலைத் தேச மொழிகளிலே *19*ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. **மன்யோசுத்** தொகுதியிலுள்ள கடைசிப் பாடலை *(4516) 1834*ஆம் ஆண்டிலே கிளப்ரொத் (KLAPROTH) என்பவர் பிரான்சிய மொழியிலே மொழிபெயர்த்துள்ளார். *1871*இல் லியோன் டி ரொஸ்னி (LEON DE ROSNY) என்னும் பிரான்சிய அறிஞர் வெளியிட்ட ANTHOLOGIE JAPANOISE என்னும் நூலில் பிரான்சிய மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்ட ஒன்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒஸ்ரிய அறிஞரான ஒகஸ்ற் பிஸ்மயர் (AUGUST PFIZMAIER 1808-1887) Proceedings of the Imperial Academy of Vienna என்னும் பிரசுரத்திலே *200* **மன்யோசுப்** பாடல்களை மொழிபெயர்த்து வெளியிட்டார். *1880*இல் பசில் ஹோல் சேம்பலெயின் (BASIL HALL CHAMBERLAIM) வெளியிட்ட Classical Poetry of the Japanese என்னும் நூலில் ஆங்கில மொழியிலே மொழிபெயர்க்கப்பட்ட சில **மன்யோசுப்** பாடல்கள் இடம் பெற்றுள்ளன. *1897*இல் தோமிற்சு ஒகசகி (TŌMITSU-OKASAKI) என்னும் ஜப்பானியர் லைப்ஸிக் (LEIPZIG) பல்கலைக் கழகத்திற்கு **மன்யோசு** பற்றி எழுதிச் சமர்ப்பித்த கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வேட்டிலே பல பாடல்களை ஜொ்மன் மொழியிலே மொழிபெயர்த்து இணைத்துள்ளார். ஹித்தொமரொவினுடைய எல்லாப் பாடல்களையும், *1927*இல் அல்பிரட் லோரென்ஸென் (ALFRED-LORENZEN) என்பவர் ஜொ்மன் மொழியிலே மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். *1935*இல் THREE HUNDRED MANYO POEMS என்னும் நூலைப் பேராசிரியர் தெத்சுஒ ஒகத (TETSUO OKADA) வெளியிட்டார். இந்நூலில் *300* **மன்யோசுப்** பாடல்கள் ஆங்கில மொழியிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பேராசிரியர் அசதரோ மியமொரி (ASATARŌ MIYAMORI) Master peices of Japanese Poetry - Ancient and Modern என்னும் நூலினை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார். முதலாம் தொகுதி மூன்றிலொரு பங்கு ஆங்கில மொழியிலே மொழிபெயர்க்கப்பட்ட **மன்யோசுப்** பாடல்களைக் கொண்டது. *1940*இல் ஆயிரம் **மன்யோசுப்** பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக் கொண்ட ஒரு தொகுதி The Nippon Gakujutsu Shinkōkai என்னுங் குழுவினரால் வெளியிடப்பட்டது. ஜப்பானியல் அறிஞரான பேராசிரியர் டொனல்ட் கீன் (DONALD KEENE) இத்தொகுதிக்கு ஆராய்ச்சி முன்னுரையை வழங்கியுள்ளார்.

மன்யோசுப் பாடல்கள் முழுவதையும் முதலிலே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் டாக்டர் ஜே. எல். பியர்சன் (Dr. J. L. PIERSON) ஆகும். ஏறக்குறைய *39* வருடங்களை அவர் இம்மொழிபெயர்ப்புக்காகச் செலவிட்டுள்ளார். *1930*இல் தொடங்கிய இவரது **மன்யோசு** மொழிபெயர்ப்பு வேலை, *1969* வரை தொடர்ந்தது. *1963*இல் **மன்யோசு** தொகுதியில் *20*ஆம் புத்தகம் வெளியிடப்பட்டது. *1964*இல் **மன்யோசுப்** பாடல்கள் முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட தலையணைச் சொற்றொடர்களை நிலைப்படுத்தி ஒரு தொகுப்பு நூலாகப் பியர்சன் வெளியிட்டார். *1969*இல் **மன்யோசுப்** பாடல்களை ஆங்கில மொழியிலே மொழிபெயர்த்ததுடன் மட்டுமன்றிப் பாட வேறுபாடுகள், இலக்கணக் குறிப்புகள் பல்வேறு ஜப்பானிய உரை விளக்க ஆசிரியர்களது வேறுபட்ட விளக்கங்கள், தலையணைச் சொற்றொடர் விளக்கங்கள் என்பவற்றையும் தமது தொகுதிகளிலே சேர்த்துள்ளார்.

ஜப்பானிய அறிஞரான H.H. HONDA *1967*இல் **மன்யோசுப்** பாடல்கள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். NAKANISHI SUSUMU என்ற ஜப்பானியரும் **மன்யோசுப்** பாடல்களை ஆங்கில மொழியிலே மொழிபெயர்த்துள்ளார். அவருடைய முதல் தொகுதி *1978*இல் வெளியிடப்பட்டது. IAN HIDEO LEVY என்பவர் *1971*இல் **மன்யோசுப்** பாடல்களை மொழிபெயர்க்கத் தொடங்கி முதல் *906* பாடல்கள் கொண்ட தொகுதியை *1981*இல் வெளியிட்டார். அண்மைக்காலத்தில் *1991*ஆம் ஆண்டு ஜப்பானிய கந்த பல்கலைக் கழகப் பேராசிரியர் SUGA TERUO, **மன்யோசுப்** பாடல்கள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இவ்வாறு இதுவரை வெளிவந்த **மன்யோசுப்** பாடல்களின் மொழிபெயர்ப்புகள் மொழிபெயர்ப்பு நிலையிலே சில சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளன. அவற்றை மொழிபெயர்ப்பினைப் படிக்கும்போது உணர முடிகின்றது.

2.1 வகை நிலை

மொழிபெயர்ப்பிலும் சில வகைகள் உண்டு. சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்த்தல், மூல நூலின் செய்திகளைவிட விரிவான விளக்கங்களைச் சேர்த்து மொழிபெயர்த்தல், மூலநூற் செய்திகளைச் சுருக்கமாக மொழிபெயர்த்தல், மூல நூலைத் தழுவி மொழிபெயர்த்தல், பிறமொழியாக்கமாக மொழிபெயர்த்தல் என இவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைப்பற்றி சு. சண்முகவேலாயுதம் விரிவான விளக்கத்தைத் தந்துள்ளார்.[11] இம்மொழிபெயர்ப்பு வகைகளிலே பொருத்தமான வகையைத்

தெரிவு செய்ய வேண்டியது மொழிபெயர்ப்பாளருடைய முதல் வேலையாகின்றது. மொழிபெயர்ப்பின் நோக்கத்திற்கும் பயனுக்கும் ஏற்பப் பொருத்தமான வகையை அவர் தெரிவு செய்யக்கூடும். இன்னும் இலக்கியப் பாடல்களை மொழிபெயர்க்கும்போது மூலப்பாடல்களின் பொருளமைதி சிதைவுறாவண்ணம் மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும். இவ்விடத்தில் நா. கடிகாசலத்தின் கருத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

> "இலக்கிய நயம் நோக்கிப் பல பொருள் உள்ள ஒரு சொல் மூலத்தில் பயன்படுத்தப்பட்டிருத்தல் இயல்பு. அதனை மொழிபெயர்க்குங்கால் அச்சொல் அந்த இடத்தில் எந்தப் பொருளைக் கொண்டுள்ளது? எப்பொருள் மிகுந்த ஏற்புடைத்தாய் இருக்கிறது என்பதனை நோக்கி அதற்கேற்ற இணையான சொற்களையே பயன்படுத்த வேண்டும். இல்லையாயின் பொருள் மாற்றம் ஏற்பட்டுக் கவிதையின் அழகும் சிறப்பும் கெட்டுவிடும்."[12]

மொழிபெயர்ப்பில் பொருள்நிலை மாறாத வகையில் சொற்களின் பயன்பாடு நடைபெற வேண்டும்.

மன்யோகுப் பாடல்களை மொழிபெயர்க்கும்போது மூலபாடம் பற்றிய தெளிவான விளக்கம் இன்றியமையாதது. சீன வரிவடிவத்திலே எழுதப்பட்டுள்ள மூலபாடத்தை, ஜப்பானிய சொல் நிலையில் கண்டு மொழிபெயர்க்க வேண்டியுள்ளது. ஜப்பானிய மரபு சார்ந்த சொற்களைத் தெளிவாக இனங்காண வேண்டும். ஒலிக்குறிப்பு நிலைச் சொற்கள், சிலேடைப் பொருள் தரும் சொற்கள், இரட்டைக் கிளவிகள், அடுக்குத் தொடர்கள் என்ற பல்வேறுபட்ட சொல் நிலைகளையும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். சீன வரிவடிவத்தில் சொற்களை இனங்காணுவது தவறு. மூலபாடம் ஜப்பானியச் சொல் என்பதை மனத்தில் கொண்டு மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும்.

2.2 பொருள் நிலை

பொருளமைதி தொடர்பான நடைமுறைச் சிக்கல்களும் பல **மன்யோகுப்** பாடல்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும். ஜப்பானிய மக்களின் அன்றைய வாழ்வியலை விளக்கும் பழமொழிகளும், மரபுச் சொற்றொடர்களும் **மன்யோகுப்** பாடல்களிலே அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஜப்பானியப் பண்பாட்டு நிலையை அவை விளக்கி நிற்கின்றன. அவற்றையே மகுரகொதப (MAKURA KOTOBA), ககெ கொத (KAKE KOTOBA) என ஜப்பானிய இலக்கியச் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். பிறமொழியிலே **மன்யோகுப்** பாடல்களை மொழி பெயர்க்கும்போது இவைபற்றிய தெளிவு இன்றியமையாததாகும். பொருளமைதியிலே உணர்வு

நிலைகளைக் குறிக்கின்ற பல சொற்கள் **மன்யோசுப்** பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் புலப்படுத்தக்கூடிய பிறமொழிச் சொற்களை மொழிபெயர்ப்பாளர்கள் கவனமாகத் தெரிவு செய்ய வேண்டும். **மன்யோசுப்** பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ள சில தொடர்கள் உள்ளுறை பொருளைக் கொண்டமைந்துள்ளன. இன்னும் குறியீட்டு நிலையிலும் பல தொடர்கள் வந்துள்ளன.

Asa - gasumi
காலைப் புகாரில்
Yafe - yama koyete
யப மலை கடந்தே
Yobu - ko - dori
கூவுங் குருவி
Noki yo naga kuru
நரன் று வந்திடுவாய்
Yado mo aranaku ni
தங்கும் இடமும் இன்றே.[13]

மேற்காணும் **மன்யோசுப்** பாடல், குறியீட்டுப் பொருள் தருகின்ற பாடலாயுள்ளது. பாடி வருங் குயிலைக் குறியீட்டுப் பொருளாக்கிப் பிரிவின் துயர் புலப்படுத்தப்படுகின்றது. இன்னும் "asa gasumi" என்ற தொடர் தலையணைச் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாடலின் மேலோட்டமான பொருள் நிலையில் குருவியைப் பற்றிய செய்தியாக இருப்பினும், ஆழ்பொருள் நிலையில் பிரிவுத் துயர்நிலை காட்டும் பாடலாகும். பாடலில் Kodori என்பது சிறு பறவையைக் குறிக்கும் சொல்லாகும். ஆனால் தமிழில் அதை மொழிபெயர்ப்புச் செய்யும்போது பொருளின் ஆழ்நிலையைப் புலப்படுத்த 'குருவி' எனக் குறிப்பிட வேண்டியுள்ளது. ஆனால் அவ்வாறு பொருத்தமான சொல் கிடையாதவிடத்து, பாடலுக்குக் குறிப்பு விளக்கம் இணைக்கப்பட வேண்டி நேரிடும்.

2.3 மரபு நிலை

மன்யோசுப் பாடல்களில் சிறப்பு நிலையான மரபுகளும் பாடற்றொடர்கள் மூலம் பேணப்பட்டுள்ளன. அவற்றைப் பிறமொழிகளிலே மொழிபெயர்ப்புச் செய்யும்போது சிதைவுபடாமல் பிற மொழியிலும் பேணவேண்டியுள்ளது. பின்வரும் **மன்யோசுப்** பாடல்களைச் சில எடுத்துக்காட்டுகளாகக் காட்டலாம்.

1. பாடல் *: 2103* மலர் காணச் செல்லுதல்

2. பாடல் *: 2105* மலர் பறித்து அணிதல்

3. பாடல் : *2106* மலர் பறித்து அணிதல்

4. பாடல் : *2188* மலர் பறித்து அணிதல்

5. பாடல் : *2225* ஆண் மலரணிதல்

6. பாடல் : *2129* பறவையை மனைவியிடம் தூது விடல்

7. பாடல் : *2326* மலர் பெண்ணுக்குக் கொடுத்தல்

8. பாடல் : *2330* மனைவிக்காக மலர் பறித்தல்

9. பாடல் : *2219* வயல் காவலுக்குத் தோரணம் கட்டல்

10. பாடல் : *2223* நிலாவினுள் ஆண் மகன் புணை செலுத்தல்

11. பாடல் : *2235* நெல் வயல் குடில் இருப்பு

12. பாடல் : *2230* நெல் வயல் குடில் இருப்பு

மேற்கண்டவற்றை மொழிபெயர்க்கும்போது, அத்தொடர்கள் காட்டுகின்ற சிறப்பு நிலையான தகவல்களை நன்கு விளங்கிக்கொண்டே மொழி பெயர்க்க வேண்டும். ஜப்பானியரது பண்பாடுபற்றிய தெளிவான விளக்கமின்றேல், **மன்யோசுப்** பாடல்களின் மொழிபெயர்ப்பும் சிக்கல் தருவதாகிவிடும். பண்பாட்டு நிலையில் மொழிபெயர்ப்பாளரது மொழிக்கும் ஒற்றுமை நிலை இருப்பின் மொழிபெயர்ப்பும் எளிதாகும். அவ்வாறு இல்லாதவிடத்து ஜப்பானியப் பண்பாட்டுடன் ஒற்றுமையுற்று விளங்கும் பிறிதொரு பண்பாட்டின் ஊடாக அதனை விளங்கிக் கொண்டு மொழிபெயர்ப்புச் செய்வது நல்லது.

3. மொழிபெயர்ப்புச் சிக்கல் தீர்ப்பதில் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு

மன்யோசுப் பாடல்களைத் தமிழ்மொழியில் மட்டுமன்றி, ஏனைய பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதில், சங்க இலக்கியம்பற்றிய அறிவு இன்றியமையாததாக விளங்குகின்றது. **மன்யோசுப்** பாடல்களின் பண்புகள் சங்கப் பாடல்களுடன் பெரிதும் ஒற்றுமைப்பட்டிருப்பதாலும் இது நடைமுறைச் சாத்தியமானதாகும். **மொழிபெயர்ப்பின் சிக்கல்களை** நன்குணர, பைபிள் மொழிபெயர்ப்பு பெரிதும் உதவி செய்யும் என்பர். மேலைநாடுகளிலே மிகப்பழைமையான மொழிபெயர்ப்பாகவும் இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வருவதுமான பைபிள் மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பாளர்க்குப் பல நிலைகளில் உதவும் என்பதில் ஐயமில்லை. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே 'பழைய ஏற்பாடு' ஹீப்ரு மொழியிலிருந்து கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இன்று பைபிள் இருநூற்றுக்கு மேற்பட்ட பிற மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே கால அளவில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பைபிள் மொழிபெயர்ப்பு நடைபெறுவதால், அதைப் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பதில் பல சிக்கல்கள் உண்டென்பதும் உறுதியாகின்றது. பைபிள் மொழிபெயர்ப்புப்பற்றிய பின்வருமாறு ஒரு கருத்து விளக்கம் அமைகிறது.

> "பைபிள் மொழிபெயர்ப்பானது தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு முற்றிலும் புதிய வடிவந்தாங்கி அமைகின்றது. புதிய கருத்துகள் மூலபாடத்தைப்பற்றிய புதிய எண்ணங்கள், மொழிபெயர்க்கப்படுகின்ற மொழியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் இன்னபிற புதிய வடிவத்திற்குக் காரணமாக அமைகின்றன. பைபிள் மொழிபெயர்ப்பு மொழியியல், சமயம், தொல்லெழுத்துக் கலைத்திறன் ஆகிய இவை அடங்கியது. பைபிள் மொழிபெயர்ப்புகளைப் படிப்பது மற்ற மொழிகளைப் பற்றிய நம் அறிவினை மிகுவிக்கும். அதோடு ஒரு மொழியைத் தரமான வடிவத்திற்கு மாற்றியமைக்கவும் பயன்படுகிறது."[14]

பைபிள் நீண்ட காலமாக ஆய்வுக்குட்பட்ட ஒரு மொழிபெயர்ப்பு வரலாறாக அமைந்துள்ளது. ஆனால் காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களையும் பைபிள் குறிப்பிட்டுச் சொல்வதால் மூலநிலையிலிருந்து மாறுபாடு அடையும் தன்மையும் விளக்கி நிற்கிறது. இன்னும் அது ஒரு சமயப் பரப்பலுக்கு அவசியமான நூலாகவுமிருப்பதால், மொழிநடை மாற்றங்களைப் பெற வேண்டியதும் இன்றியமையாததாகின்றது. இங்குக் கிறிஸ்தவத் தமிழ் வேதாகமத்தின் வரலாற்றை எழுதிய சபாபதி குலேந்திரனின் கருத்துகளைச் சுருக்கமாக இணைத்து நோக்குவது பொருத்தமானதாய் அமையும்.

1. சாதாரண மொழிபெயர்ப்பும் வேத மொழிபெயர்ப்பும் வேறுபட்டது.

2. சாதாரண இலக்கியங்களை வேறு பாஷையில் திருப்புகிறவர்களுக்கு அதிக சுயாதீனமுண்டு. ஆனால் வேதம் என்று எந்த மார்க்கத்திலும் பாராட்டப்படும் எந்த நூலும் இப்படி மொழிபெயர்க்கப் படுவதில்லை. இவைகள் சொல்வனவெல்லாம் அவ்வச் சமயத்தவர்களுக்கு முக்கியமானவை. இவைகளில் வசனங்கள் சொற்கள் மாத்திரமன்றி, உருபுகள் இடைச்சொற்கள் முதலியனவும் முக்கியமானவை. ஆகவே வேத நூல்களை மொழிபெயர்ப்பவருடைய சுயாதீனம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாகும்.

3. இப்படியான நூலை வெவ்வேறு பாஷைகளில் திருப்புவதென்றால், மூலத்தின் முக்கியத்துவமும் வல்லமையும் குன்றாமல் இருக்க வேண்டும்.

4. திருப்புதல் எவ்விடத்திலும் தவறாமல் மூலத்தைத் திட்டமாய்த் தழுவுதல் வேண்டும். ஒரு சொல் தவறானதாயிருக்குமாயின் கடவுளைப்பற்றிய செய்தி குறித்தோ, மனிதக் கடமை குறித்தோ அபத்தம் கூறப்பட நேரிடும்.

5. மூலபாஷையின் கருத்தை இன்னொரு பாஷையில் யதார்த்தமாய்த் தெரிவிக்க வேண்டும். யதார்த்தமாய் மூலத்தைத் தழுவுவதானால் புதுப் பிரயோகங்கள் அவசியமாகும். எபிரேய பாஷையைப் பேசியவர்களும் கிரேக்க பாஷையைப் பேசியவர்களும் நம்முடைய பாஷையைப் பேசுவோரும் வெவ்வேறு பண்பாட்டிற்குரியவர்கள். ஆகவே முந்தையவர்களுடைய கருத்துகளை நமது பாஷையில் கொண்டு வரும்போது புதிய பிரயோகங்கள் அவசியமானவை.

6. பாஷை அழகாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு மூல பாஷையை விட்டு வேறு பாஷைக்குள் வருகிறது என்பதை நினைவு கூர வேண்டும்.

7. இலக்கண விதிகள் பாதுகாக்கப்பட வேண்டியதவசியம்.

8. வேதந் திருப்புதலின் பாஷை நடைக்குத் தேவையான அடுத்த இலட்சணம் தெளிவு.

9. மூல பாஷைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும். வேதத்தை மொழிபெயர்ப்பவர்கள், எபிரேய கிரேக்க பாஷைகளை நன்கு அறிந்தவர்களாயிருத்தல் வேண்டும். இலக்கண இலக்கிய அறிவு மட்டுமன்றி பாஷை தோன்றிய நாட்டுப் பழக்க வழக்கங்கள், சரித்திரம், கலாச்சாரம் ஆகியவற்றையும் அறிந்திருக்க வேண்டும். அகராதிகளில் கண்டுகொள்ள இயலாத நுட்பக் கருத்துகளைக் கலாச்சாரத்திலிருந்தும் நாட்டுப் பழக்க வழக்கங்களிலிருந்தும் அநுமானிக்கக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

10. மொழிபெயர்ப்பாளர் எந்தப் பாஷையில் வேதாகமத்தைத் திருப்புகிறார்களோ அந்தப் பாஷையை நன்கறிய வேண்டும். இதுவும் வெளியில் இருந்தல்ல உள்ளேயிருந்தறிய வேண்டும்.

11. ஒரே பாஷையில் பல திருப்புதல்களும் தேவைப்படும். மூலம் பற்றிய ஆய்வு, வழக்கிறந்த பாஷைகளில் உள்ளவற்றை புதுத்திருப்புதல்

செய்தல், மூல பாஷைகளில் மட்டுமன்றித் திருப்புதல் செய்யப்படும் பாஷையில் ஏற்படும் மாற்றங்களும் உண்டு.

12. தமிழில் மாற்றம் குறைவு. அதனால் வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள் வேதத்தின் கருத்துகளை எடுத்துச் செவ்வனே அமைத்து விடுவது மிக அரிது. பாஷை நடைபற்றி மிசனெரிமாருக்கு அதிருப்தி இருந்தமையால் பல திருப்புதல்கள் தோன்றின. இதற்குப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட மூலப் பிரதிகளும் காரணமாயமைந்தன.

மேற்காணும் கருத்துகள் மொழிபெயர்ப்பின்போது கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கருத்துகளுமாகும். இன்னும் பைபிள் மொழிபெயர்ப்பைவிட இலக்கிய மொழிபெயர்ப்பு வேறுபட்டது என்பதையும் சபாபதி குலேந்திரன் குறிப்பிட்டுள்ளார். எனவே மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள் பற்றிய கருத்துகளை அறிவதற்கு பைபிள் மொழிபெயர்ப்பு உதவி செய்யினும், இலக்கியப் பாடல்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் மரபு தொடர்பான சிக்கல்களை நீக்குவதற்குப் போதுமான அளவு உதவக்கூடிய நிலையில் இல்லை என்பதையும் உணரக் கூடியதாகவுள்ளது.

தமிழ் மொழியிலே மொழிபெயர்ப்பு செய்யப்படும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை, தமிழ் மொழி இலக்கண மரபு நிலையில் தொல்காப்பியரும் தனது சூத்திரமொன்றிற் குறிப்பிட்டுள்ளார். மேலைத் தேச மொழிபெயர்ப்பு நெறியினைப் பின்பற்றும்போது தமிழ் மொழிக்கெனவும் ஒரு நெறிமுறை இருப்பதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

> ***"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்***
> ***ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே."[16]***

மேற்காணும் சூத்திரத்தில் 'மொழிபெயர்த்து' என்பது பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது என உரையாசிரியர்கள் விளக்குவர். அவ்வாறு மொழிபெயர்க்குமிடத்து தொகுத்துக் கூறல், விரித்துக் கூறல், நிறுத்தமுறையானே பின் விரித்துக் கூறல் எனச் சில நெறிப்பட்ட நிலைகளும் பேணப்பட்டதை இச்சூத்திரம் விளக்குகின்றது. இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் பின்வருமாறு உரைசெய்வர் :

> "முதனூலாசிரியன் விரித்துச் செய்ததனைத் தொகுத்துச் செய்தலும் தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும் அவ்விருவகையி னையும் தொகை விரியாகச் சொல்லுதலும் வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ் மொழியாற் செய்தலும் என்றவாறு."[17]

இங்கு இளம்பூரணர் வடமொழி நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தலைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் முதலில் வடமொழி நூல்களே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியிலே மொழிபெயர்க்கப்பட்ட பிறமொழி நூல்கள் பற்றிய செய்திகளைத் தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியம் தருகிறது.[18] வடமொழி நூல்களுக்குப் பின்னர் இன்று பலமொழிகளிலுமுள்ள இலக்கியங்களைத் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மொழி பண்பாட்டு ஒப்பீட்டு ஆய்வு நிலையில் மொழிபெயர்ப்பு நூல்கள் பெரிதும் வேண்டப்படுகின்றன. மொழிபெயர்ப்பு நிலையில் ஜப்பானிய **மன்யோசுப்** பாடல்கள் தமிழில் நூல் வடிவம் பெற வேண்டியவை. அப்பாடல்களை மொழிபெயர்க்கும்போது சங்கப் பாடல்களின் பண்புகளின் பின்னணியில் விளக்கங்களைப் பெற்றால் மொழிபெயர்ப்பு எளிதாயமையும்.

சங்க இலக்கியப் பாடல்களின் தொகுப்பு நிலையிலே **மன்யோசு** அகப்பாடல்களையும் வகுத்துக்கொண்டால், தமிழ் மொழியிலே **மன்யோசுப்** பாடல்களையும் விளங்கிக்கொள்வது எளிதாயிருக்கும். அகப்பொருள் மரபு நிலையிலே சங்கப் பாடல்களுக்கு வகுக்கப்பட்டுள்ள திணை, துறை விளக்கங்கள் **மன்யோசுக்** காதல் பாடல்களுக்கும் பொருந்துவனவாயுள்ளன. நேரடி அமைப்பு நிலையிலே **மன்யோசுப்** பாடல்களுக்கு அவற்றைப் பொருத்திப் பாராமல், தொகுப்பு நிலையிலே முக்கியமான பொருள்நிலைப் பின்னணியில் **மன்யோசுப்** பாடல்களை வகைப்பாடு செய்துகொள்ள முடியும். பின்வகைப்பாடுகளில் மன்யோசுப் பாடல்களை அமைக்கலாம்.

1. கூற்று நிலையாக அமைந்த பாடல்கள்

   அ. காதலன், காதலி, கண்டோர், நற்றாய் கூற்றாய் அமைந்த பாடல்கள்.

   ஆ. புலவர் கூற்றாய் அமைந்த பாடல்கள்

   இ. பிற பாடல்கள்

2. உணர்வு நிலைப் புலப்பாடுபற்றிய பாடல்கள்

   அ. காதலன் பிரிந்து செல்கின்ற வழிபற்றிய பாடல்கள்

   ஆ. வழியின் இடர்கள் கூறும் பாடல்கள்

   இ. காதலன் திரும்பி வரும் கால நிலைபற்றிய பாடல்கள்

   ஈ. காதலியின் காத்திருப்பு நிலைபற்றிய பாடல்கள்

உ. தாய்மார்களின் கண்டிப்பு நிலைபற்றிய பாடல்கள்

ஊ. ஊரலர்பற்றிய பாடல்கள்

3. வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற ஆண் பெண் தொடர்பு நிலை அதன் விளைவுகள்பற்றிய பாடல்கள்

4. பொருந்தாக் காதல் நிலையை விளக்கும் பாடல்கள்

5. ஆண் பெண் சூளுரை பரிமாறும் நிலைபற்றிய பாடல்கள்

(மலை, ஆறு, மரம், கடல் என்பனவற்றை முன்னிறுத்திச் சூளுரை செய்யும் மரபுநிலை)

6. தெய்வ நம்பிக்கை, நடைமுறைபற்றிய பாடல்கள்

7. நிலங்களின் தன்மைக்கேற்ற வாழ்க்கை நிலை விளக்கும் பாடல்கள்

8. தொழில்நிலை விளக்கும் பாடல்கள்
(தூது, பகை, விவசாயம், மீன்பிடி)

9. இயற்கை நிலையான காலப் பாகுபாடுபற்றிய பாடல்கள்

10. இயற்கைக் கருப் பொருட்கள்பற்றிய பாடல்கள்

11. உண்டாட்டு, வேள்விபற்றிய பாடல்கள்

12. வரலாற்றுச் செய்தி கூறும் பாடல்கள்.

இப்பாகுபாட்டு நிலையிலே **மன்யோகப்** பாடல்களைத் தரம் பிரித்துக்கொண்டால் தமிழிலே அவற்றை மொழிபெயர்ப்பது எளிது.

பொருள் நிலையிலே பாகுபாடு செய்தபின்னர், அவற்றைச் சங்கப் பாடல்களின் பொருளமைதியில் முதல், கரு, உரி என்ற பொருட் பாகுபாட்டு நிலையில் வைத்துப் பொருளை நுணுக்கமாக விளக்கும் தன்மையில் மொழிபெயர்ப்பை அமைக்க முடியும். ஜப்பானியர் **மன்யோகப்** பாடல்களில் வந்தமைந்துள்ள இயற்கைப் பகைப்புல விளக்கத்தை அகப்பொருள் மரபுநிலையாக எண்ணுவதில்லை. ஆனால் **மன்யோக** அகப்பாடல்களை அகப்பொருள் மரபு நிலையிலே கணிப்பீடு செய்து, தமிழில் மொழிபெயர்க்கும்போது, ஜப்பானியரது ஆழமான பண்பாட்டு நிலையையும் வெளிப்படுத்த முடியும். பின்வரும் **மன்யோகப்** பாடலின் மொழிபெயர்ப்பு வடிவம் இக்கருத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

Faru Sareba

வேனில் வந்ததே

Mi kusa no ufe ni

நீர்வளர் புல்லின் மேலே

Oku simo no

விழுபனியே

Ke tutu mo ware fa

கரைதல் போலென்

Kofi wataru kamo

காதல் கழியுங் கொலோ.[19]

இப்பாடலுடன் பொருள் நிலையிலே ஒற்றுமையான சங்க அகப்பாடல் ஒன்றினையும் இணைத்து நோக்கும்போது, அகப்பொருள் மரபு நிலையில் பாடல் மொழிபெயர்ப்பு நடைபெறும்போது, சங்கப் பாடல் எவ்வாறு வழிகாட்டியாய் அமையுமென்பது தெளிவுபடும்.

"கான விருப்பை வேனல் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை உகுத்தலி னார்கழல்பு
களிறு வழங்கு சிறுநெறி புரையந் தாஅம்
பிறங்குமலை அருஞ்சுரம் இறந்தவர்ப் படர்ந்து
பயிலிருள் நடுநாள் துயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே."[20]

இருமொழிப் பாடல்களிலும் பாடுபொருள் பிரிவுத் துன்ப நிலை. அதனைத் துல்லியமாக விளக்குவதற்கு இயற்கையின் பகைப்புலம் விளக்க நிலையாகப் பாடலில் அமைக்கப்பட்டுள்ளது. இரு பாடல்களிலும் காலம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. வேனிற் காலத்தை விளக்க மன்யோசுவில் FARU என்ற சொல்லும் குறுந்தொகையில் வேனில் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. காலம் வந்ததை உணர்ந்த காதலியர் துன்பம் பெருகுகிறது. காதலன் சென்ற வழியிடைக் காட்சிகளைச் சங்கக் காதலி எண்ணித் துன்பப்படுகிறாள். ஆனால் **மன்யோசுக்** காதலியோ வேனிலில் கரையும் பனிபோலத் தன் காதலும் மறையுமோ என எண்ணித் துயருறுகின்றாள். மன்யோசுப் பாடல் பிரிவின் ஆழமான நிலையை வெளிப்படுத்துவதை விளங்கிக்கொள்ள குறுந்தொகைப் பாடலின் முதல், கருப் பொருட்களின் விளக்கந்தான் பெரிதும் துணை நிற்கிறது. எனவே மொழிபெயர்ப்பு நிலையில் சங்க இலக்கியம்பற்றிய அறிவு பெரிதும் துணைசெய்வதாக அமையும்.

சங்க இலக்கியங்கள்பற்றிய அறிவு, தமிழ் மொழி மொழிபெயர்ப்பாளர்க்கு மட்டுமன்றிப் பிற மொழியாளர்க்கும் இன்றியமையாததாகும். அவர்களும் சங்க இலக்கியங்களைப் பின்வரும் நிலைகளில் அறிந்திருப்பின், மன்யோசுப் பாடல்களின் மொழிபெயர்ப்பில் ஏற்படக்கூடிய பல சிக்கல்களை எளிதில் தீர்க்க முடியும்.

1. சங்கப் பாடல்களின் தொகுப்பு நிலை
2. பொருள் மரபு விளக்கும் நிலை
3. இலக்கண அமைப்பின் தெளிவு நிலை
4. பண்பாட்டு நிலை விளக்கம்
5. மரபும் ஆவணப்படுத்தும் பண்பும் இணைந்த நிலை.

மன்யோசுப் பாடல் மொழிபெயர்ப்பில் பாடலின் சொற்றொடர்களை-வரிசையை மாற்றியமைக்கின்ற பண்பையும் காணக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு மாற்றியமைத்தால்தான் மொழிபெயர்ப்பாளருடைய மொழி நடையமைதியில் பொருள் தெளிவுற அமையும். பியர்சனுடைய மொழிபெயர்ப்பில் மட்டுமன்றி ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் அனைவரிலுமே பெரும்பான்மையாக இப்பண்பினைக் காணக் கூடியதாகவுள்ளது. திருக்குறளை ஆங்கில மொழியிலே மொழிபெயர்க்கும் போது இப்பண்பு பெரிதும் காணப்பட்டது. ஆங்கில மொழியினுடைய மொழியமைதியும் இலக்கண அமைப்பும் வேறுபட்டதாக அமைவதால் இந்நிலை தவிர்க்க முடியாததாயுள்ளது. சில பாடற்றொடர்களை மேலோட்டமாகவே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முடியும். எடுத்துக்காட்டாக G.U. Pope வினுடைய குறள் மொழிபெயர்ப்பொன்றைக் காட்டலாம்.

> "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
> அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" *(குறள்.148)*

> manly excellence that looks not on another's wife is not virtue
> merely 'tisful propriety of life'[27]

மூல பாடத்தில் 'நோக்காத' என்ற சொல் 'பார்க்காத' என்ற பொருளில் மட்டுமன்றிப் பிற பெண்களைக் காம இச்சையோடு பார்த்து விரும்பி அடைய முயலுகின்ற நிலையையும் விளக்குவதாகும். எனவே ஆங்கில மொழிபெயர்ப்பில் குறித்த சொல் இத்துணை ஆழமான பொருளைக் குறிக்கவில்லையென்பதும் வெளிப்படையே.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டை ஆங்கில மொழியிலே மொழிபெயர்ப்புச் செய்த J. V. செல்லையா தனது நூலின்

முகவுரையிலே மொழிபெயர்ப்பின் இலக்குப்பற்றிய தனது கருத்தினைத் தெரிவித்துள்ளார். அவற்றை இவ்விடத்து எடுத்துக்காட்டுவதன் மூலம் மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களை மேலும் தெளிவுபடுத்தலாம்.

1. ஆங்கில மொழி மரபை முற்றிலும் புறக்கணியாதிருப்பது.
2. மூல பாடத்தில் ஒவ்வொரு சொல்லையும் மொழிபெயர்த்து எனது சொந்தச் சொற்களின் இணைப்பைத் தவிர்ப்பது.
3. மூல பாடத்தைப் படிக்க விரும்புகிறவர்களை இம்மொழிபெயர்ப்பின் உதவியுடன் படிக்க வைப்பது.
4. சங்க இலக்கியச் செய்யுளமைப்பு, இலக்கண அமைப்பு பற்றிய நிலைகளை விளக்குவது, ஆங்கில மொழி நடை மரபு குன்றாமல் வாக்கியங்களை அமைப்பது.
5. செய்யுள்களில் அமைந்துள்ள தொடர்நிலையை முறித்துத் தனிவினை முற்றுடைய தொடராக ஆக்கி மொழிபெயர்ப்பது.
6. புதிய சமூகத்தவருக்குப் பழைய சங்கச் செய்யுள்கள் கூறும் செய்திகள் அறியப்படாதவையாக இருப்பதை உணர்ந்தும், அவற்றைத் திரிபடையச் செய்யாதிருப்பது. அப்படிச் செய்யின் மூல பாடத்தைப் படிப்பதற்கு உதவும் நூல் என்ற வகையில் மொழிபெயர்ப்பின் பயன்பாடு குறைவுபடும்.
7. பழந்தமிழ் இலக்கியத்தின் சிறப்பு குறைவுபடாதிருக்க வேண்டும்.[22]

செல்லையாவின் பத்துப்பாட்டு ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முற்பட்ட மொழிபெயர்ப்பாகும். எனினும் தமிழ் இலக்கியத்தை ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கும்போது ஏற்படக்கூடிய சிக்கல்களையும் தனது மொழிபெயர்ப்புக் கொள்கையையும் அவர் வெளிப்படையாகவே எடுத்துக் கூறியுள்ளார். சங்க இலக்கியங்களை ஆங்கில மொழியிலே பலர் மொழிபெயர்க்க முற்பட்டுள்ளனர். மொழி மரபு நிலையிலே எல்லாருக்கும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஜப்பானிய **மன்யோசு** காதல் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது மொழி மரபான சிக்கல்கள் மிகவும் குறைவே. பழந்தமிழ்ச் சொற்களையும் இலக்கண அமைதியையும் கையாண்டு மொழிபெயர்ப்பைச் செவ்வனே செய்யமுடியும் செய்யுள் வடிவ அமைப்பில், ஜப்பானிய TANKA வடிவத்திலேயே தமிழ் மொழி பெயர்ப்பினையும் செய்ய முடியும். இத்தகைய வடிவ நிலையில் **மன்யோசு** அகப்பாடல்கள் 155 தமிழில்

மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.[23] அவற்றினுள் ஒன்றை இங்கு எடுத்துக்காட்டாக காட்டலாம்.

ஜப் :	ககுக நொ நொ	*(5 உயிர் மெய்கள்)*
	தொமொ உகுபிசு நொ	*(7 உயிர்+உயிர் மெய்கள்)*
	நகி வகரெ	*(5 உயிர் மெய்கள்)*
	கபெரிமசு மமொ	*(7 உயிர் மெய்கள்)*
	ஓமொ பொசெ வரவொ	*(7 உயிர்+உயிர் மெய்கள்)*
தமி :	ககுக வயல்	*(5 உயிர் மெய்கள்)*
	இணை உகுபிசுவின்	*(7 உயிர்+உயிர் மெய்கள்)*
	அழும் பிரிவு	*(5 உயிர்+உயிர் மெய்கள்)*
	திரும்பிடு வேளையும்	*(7 உயிர் மெய்கள்)*
	நினையாயோ என்னையே	*(7 உயிர்+உயிர் மெய்கள்)*

இம்மொழிபெயர்ப்பு ஒரு பரீட்சார்ந்த நிலையிலே செய்யப்பட்டது. இங்கு இடைச் சொற்களின் பயன்பாடு அருகியமைவதால் தற்காலத்தவர்களுக்கு விளக்கக் குறைவாகவும் அமையலாம். ஆனால் சங்கப் பாடல்களில் அமைப்புடன் பொருந்தியமைவதால் பழந்தமிழ்ச் செய்யுள் வடிவம்போலக் காணப்படுகிறது. இத்தகைய செய்புள் வடிவ அமைப்பில் மரகொதப, ககெகொதப போன்ற அமைப்புகளையும் ஜப்பானிய மொழித் தொடர் போலவே தமிழில் அமைக்க வாய்ப்புண்டு. ஜப்பானிய மொழியும் தமிழ் மொழியும் இலக்கண அமைப்பிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதால் இவ்வாறான மொழிபெயர்ப்பு செய்யப்படும்போது சிக்கல்கள் தோன்ற இடமில்லாமல் போகிறது.

4. மன்யோசு ஆய்வும் சங்க இலக்கியமும்

மன்யோசுப் பாடல்களின் மொழிபெயர்ப்பைச் செய்வதற்கு மன்யோசு பற்றிய ஆய்வும் இன்றியமையாதது. ஒரு மொழி இலக்கியப் பாடல்களை இன்னொரு மொழியிலே மொழிபெயர்க்கும்போது, மூல பாட மொழியின் பின்னணி பற்றிய ஆய்வும் தேவை. **மன்யோசுப்** பாடல்களின் தோற்றம், தொகுப்பு நிலை, பாடல் யாத்தோர் போன்றவற்றின் செய்திகள்பற்றிய அறிவிற்கும் மேலாக **மன்யோசுப்** பாடல்கள் நோக்கம்பற்றிய தேடுதலும் மொழிபெயர்ப்பின் தெளிவு நிலைக்குப் பெரிதும் வேண்டப்படுவதொன்றாகும். **மன்யோசுப்** பாடல்கள்பற்றிய ஆய்வுகள் மூல பாடம் சீன வரிவடிவத்திலே அமைந்திருப்பதால் சீனப் பண்பாட்டுடன் தொடர்புறுத்தப்பெற்றே நடைபெறுவனவாயிற்று. இன்னும் ஜப்பானுக்குச் சீனாவிலிருந்து புத்த சமயம் வந்து சேர்ந்தபோது சீனப் பண்பாட்டு அம்சங்களும் உடன் வந்து சேர்ந்தன. இதனால் பண்பாட்டாய்வாளர்கள் சீனப் பண்பாட்டையே ஜப்பானியப் பண்பாட்டின் அடிப்படையென எண்ணி

ஆய்வுகளை மேற்கொண்டனர். கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில் புத்த சமயம் ஜப்பானுக்கு சீனாவூடாக வந்து சேர்ந்தது. கி. பி. *752*இல் 'தைபுற்சு' என அழைக்கப்படும் பெரிய புத்தர் சிலை அமைக்கப்பட்ட காலம் ஜப்பானிலே புத்த சமயம் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த காலமாகும். புத்த சமயம் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்திலேதான் **மன்யோசுப்** பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. எனினும் **மன்யோசுப்** பாடல்களிலே புத்த சமயக் கருத்துகளின் செல்வாக்கு இல்லாதிருப்பது வியப்பாகவே உள்ளது. SHUICHI KATO என்னும் ஜப்பானிய ஆய்வறிஞர்-இதற்கு முக்கியக் காரணம், புத்த சமயம் ஜப்பானில் உயர் சமூகத்தில் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தமையே எனக் கூறுகிறார்.

எனவே சீன மொழிப் பண்பாட்டு அடிப்படையில் **மன்யோசுவின்** ஆய்வு சற்றுச் சிக்கலானதாகவும் அமையலாம். மொழி இலக்கண அமைப்பிலும் சீன மொழி ஜப்பானிய மொழியிலிருந்து வேறுபட்டிருப்பதால் **மன்யோசுப்** பாடல்களின் பொருளமைதியிலும் விளக்கக் குறைபாடுகள் நேரிடக்கூடும். Dr. பியர்சன் இதுபற்றிய சில குறிப்புரைகளைத் தனது ஆங்கில மொழிபெயர்ப்பிலே குறிப்பிட்டுள்ளார். ஆனால் சங்க இலக்கியங்களின் இலக்கண அமைதி ஜப்பானிய மொழியின் பழைய இலக்கண அமைதியுடன் ஒற்றுமையுற்றிருப்பதால், மொழிபெயர்ப்பு நிலைக்கும் பெரிதும் உதவுவதாக உள்ளது. ஜப்பானியர் **மன்யோசுப்** பாடல்களிலே தெளிவாக விளக்கிக் கொள்ள முடியாத கூறுகளின் பொருட்டெளிவு இதன் மூலம் பெறப்படலாம். வேறு மொழிகளிலே மொழிபெயர்த்தவர்களுடைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சங்க இலக்கியங்கள் உதவும். இன்னும் இதன் மூலம் பிறமொழியாளர்களின் மொழிபெயர்ப்பு இடர்நிலைகள் கூர்மையாக விளங்கும் நிலையும் ஏற்படுகிறது. எனவே **மன்யோசு** காதல் பாடல்களின் மொழிபெயர்ப்புக்குச் சங்க இலக்கியங்கள்பற்றிய அறிவின் இன்றியமையாமை பிற மொழியாளர்க்கும் வேண்டப்படுவதொன்றாகின்றது. இன்னும் இதன்மூலம் தமிழாய்வு நிலையில் சங்க இலக்கியங்கள் பெற்றுள்ள தனித்துவமும் புலனாகின்றது. இந்த நூற்றாண்டிலே வாழ்ந்த பாரதியின் கூற்று இங்கே நினைவு கூரப்பட வேண்டியது:

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாப் புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."[24]

தமிழ் மொழிக்கு நாம் ஆற்ற வேண்டிய பணியினைப் பாரதி தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளான். மொழிபெயர்ப்பு நூல்கள் பிற மொழி வளத்தைத் தமிழ் மொழியால் அறிய வைப்பதுடன், தமிழ் மொழியின் தனித்துவத்தைப் பிறர் அறியவும் வகை செய்வன. தமிழ் மொழியின் பேணலுக்கும் மொழிபெயர்ப்பு நூல்கள் மிகவும் இன்றியமையாதவை. சங்க இலக்கியங்களைப் பிற மொழிகளிலே மொழிபெயர்ப்பதன் மூலம், தமிழ் மொழியின் சிறப்பையும் தனித்துவத்தையும் உலகோர் அறியச் செய்யலாம்.

மேற்காலங்களிலே தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் பெரும்பாலும் தழுவல்களாகவே காணப்படுகின்றன. ஆனால் இன்று மொழிபெயர்ப்புப்பற்றிய அறிவு நிலை பெரிதும் வளர்ச்சியடைந்திருப்பதால் மூல பாடத்தை முழுமையாகவே தமிழில் மொழிபெயர்ப்புச் செய்ய முடியும். வடமொழி, பாலி, பிராகிருதம்போன்ற நூல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டபோது மணிப்பிரவாள நடையிலே மொழிபெயர்ப்புகள் அமைந்தன. ஆனால் இன்று அந்நிலை தவிர்க்கப்பட்டுத் தூய தமிழ் மொழிநடை மொழிபெயர்ப்புகள் உருவாகுவதற்கு, சங்க இலக்கிய மொழி நடையும் இலக்கண அமைதியும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

அடிக் குறிப்புகள்

1. ஜப்பானியப் பேராசிரியர் **சுசுமு ஓனோ** இதுபற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

2. சண்முகதாஸ், ம.
"தமிழர் - ஜப்பானியர் அகப்பொருள் மரபு" ஆறாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, கோலாலம்பூர் *1987*.

3. **மன்யோசு.** தொகுப்பு முன்னுரை
தொகுப்பு : ஓனோ சுசுமு. இவனமி சொதென், தோக்கியோ. *1952*.

4. ஜப்பானிய இலக்கியப் பேராசிரியர்கள் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர்.

5. **மன்யோசு**, பாடல் *1959*.

6. Dr. Susumu Ohno
Prosody of Sangam and Japanese Tanka 5-7-5-7-7 Syllable Meter. Pulamai. pp. 39-68, Vol.19 No.2 Chennai, 1993.

7. சண்முகதாஸ், ம.
மன்யோசு *(ஜப்பானியக் காதற் பாடல்கள்)* மொழிபெயர்ப்பு முன்னுரை வராவொல்லை வெளியீடு, *1992* இலங்கை.

8. Dr. J.L. Pierson
Makura Kotoba - 1964

9. Dr. Susumu Ohno
Kakari Musubi

10. Teruo Suga
The Manyoshu A complete English - Translation in 5-7 Rhythm. Kanda University International Studies, Japan.

11. சண்முக வேலாயுதம், சு.
மொழிபெயர்ப்பியல், பக். 14-26, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1985.

12. கடிகாசலம், நா.
மொழிபெயர்ப்பு - ஒரு கண்ணோட்டம், வாரக் கருத்தரங்கம் (3.10.1980) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

13. **மன்யோசு**, பாடல் 1941.

14. சண்முக வேலாயுதம், சு.
மு.கு. நூல் பக்.22-23.

15. சபாபதி குலேந்திரன்.
கிறிஸ்தவத் தமிழ் வேதாகமத்தின் வரலாறு, இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், 1967.

16. **தொல்காப்பியம்**, மரபியல் சூத்.97, கழகப் பதிப்பு, சென்னை, 1975.

17. **தொல்காப்பியம்**, மரபியல் இளம்பூரணருரை. சூத். 99, பக்.576, கழகப் பதிப்பு, சென்னை 1977.

18. **Encyclopaedia of Tamil Literature** Vol.I, pp.427-440. 1990, Translations and Tamil Literature M. Mathialagan, Institute of Asian Studies, Chennai.

19. **மன்யோசு**, பாடல் 1908.

20. **குறுந்தொகை**, பாடல் 329.

21. Pope, G.U.
The Sacred Kural of Tiruvalluvar - Nayanar p:22, Asian educational services, New Delhi, 1980.

22. Chelliah, J.V.
Pattupattu : Ten Tamil Idylls. Translated into English verse General publishers Ltd., Colombo 1946.

23. சண்முகதாஸ், ம.
மு.கு. நூல்.

24. **பாரதி பாடல்,** பக்.*41,* வானதி பதிப்பகம், சென்னை, *1983.*

மன்யோகசு தொகுதி பத்து

பாடல் வகைப்பாடு	வேனிற் கலம்பகம்
1. கலம்பகப் பாடல்கள் *(7)*	*1812-1818*
2. பறவை பற்றிய பாடல்கள் *(13)*	*1819-1831*
3. பனி பற்றிய பாடல்கள் *(11)*	*1832-1842*
4. புகார் பற்றிய பாடல்கள் *(3)*	*1843-1845*
5. யனகி பற்றிய பாடல்கள் *(8)*	*1846-1853*
6. பூக்கள் பற்றிய பாடல்கள் *(20)*	*1854-1873*
7. நிலவைப் பற்றிய பாடல்கள் *(3)*	*1874-1876*
8. மழையைப் பற்றிய பாடல் *(1)*	*1877*
9. ஆற்றைப் பற்றிய பாடல் *(1)*	*1878*
10. புகையைப் பற்றிய பாடல் *(1)*	*1879*
11. வயல்வெளி பற்றிய பாடல்கள் *(4)*	*1880-1883*
12. பழமையைப் பற்றிய பாடல்கள் *(2)*	*1884-1885*
13. இணையின் மகிழ்வு பற்றிய பாடல் *(1)*	*1886*
14. செதொக பாடல்கள் *(2)*	*1887-1888*
15. கியுக பாடல் *(1)*	*1889*

வேனில் விளக்கம்

1. விளக்கப் பாடல்கள் *(7)*	*1890-1896*
2. பறவை பற்றிய பாடல்கள் *(2)*	*1897-1898*
3. பூக்கள் பற்றிய பாடல்கள் *(9)*	*1899-1907*
4. உறைபனி பற்றிய பாடல் *(1)*	*1908*
5. புகார் பற்றிய பாடல்கள் *(6)*	*1909-1914*
6. மழை பற்றிய பாடல்கள் *(4)*	*1915-1918*

7. புல் பற்றிய பாடல்கள் *(3)* *1919-1921*

8. பைன் மரம் பற்றிய பாடல் *(1)* *1922*

9. முகில் பற்றிய பாடல் *(1)* *1923*

10. கண்ணி அனுப்புவது பற்றிய பாடல் *(1)* *1924*

11. பிரிவுத் துயர் பற்றிய பாடல் *(1)* *1925*

12. வினா விடை நிலையான பாடல்கள் *(11)* *1926-1936*

கோடைக் கலம்பகம்

1. பறவை பற்றிய பாடல்கள் *(27)* *1937-1963*

2. வண்டு பற்றிய பாடல் *(1)* *1964*

3. **Hari** மரம் பற்றிய பாடல் *(1)* *1965*

4. பூக்கள் பற்றிய பாடல்கள் *(10)* *1966-1975*

5. வினா விடை நிலைப் பாடல்கள் *(2)* *1976-1977*

6. கியுக பாடல் *(1)* *1978*

கோடை விளக்கம்

1. பறவை பற்றிய பாடல்கள் *(3)* *1979-1981*

2. வண்டு பற்றிய பாடல் *(1)* *1982*

3. புல் பற்றிய பாடல்கள் *(4)* *1983-1986*

4. பூக்கள் பற்றிய பாடல்கள் *(7)* *1987-1993*

5. பனித்துளி பற்றிய பாடல் *(1)* *1994*

6. கதிரவன் பற்றிய பாடல் *(1)* *1995*

காரின் கலம்பகம்

1. விண்மீன் விழா பற்றிய பாடல்கள் (Tanabata) *(98)* *1996-2093*

2. பூக்கள் பற்றிய பாடல்கள் *(34)* *2094-2127*

3. காட்டு வாத்துப் பற்றிய பாடல்கள் *(13)* *2128-2140*

4. மான் பற்றிய பாடல்கள் *(16)*	*2141-2156*
5. வண்டு பற்றிய பாடல் *(1)*	*2157*
6. வெட்டுக்கிளி பற்றிய பாடல்கள் *(3)*	*2158-2160*
7. தவளை பற்றிய பாடல்கள் *(5)*	*2161-2165*
8. பறவை பற்றிய பாடல்கள் *(2)*	*2166-2167*
9. பனித்துளி பற்றிய பாடல்கள் *(9)*	*2167-2176*
10. மலை பற்றிய பாடல் *(1)*	*2177*
11. மஞ்சள் இலை **(momihi)** பற்றிய பாடல்கள் *(41)*	*2178-2218*
12. கழனி பற்றிய பாடல்கள் *(3)*	*2219-2221*
13. ஆறு பற்றிய பாடல் *(1)*	*2222*
14. நிலா பற்றிய பாடல்கள் *(7)*	*2221-2229*
15. காற்றுப் பற்றிய பாடல்கள் *(3)*	*2230-2232*
16. காளான் பற்றிய பாடல் *(1)*	*2233*
17. மழை பற்றிய பாடல்கள் *(4)*	*2234-2237*
18. உறைபனி பற்றிய பாடல் *(1)*	*2238*

கார் விளக்கம்

1. விளக்கப் பாடல்கள் *(5)*	*2239-2243*
2. கழனி பற்றிய பாடல்கள் *(8)*	*2244-2251*
3. பனித்துளி பற்றிய பாடல்கள் *(8)*	*2252-2259*
4. காற்றுப் பற்றிய பாடல்கள் *(2)*	*2260-2261*
5. மழை பற்றிய பாடல்கள் *(2)*	*2262-2263*
6. வெட்டுக்கிளி பற்றிய பாடல் *(1)*	*2264*
7. தவளை பற்றிய பாடல் *(1)*	*2265*
8. காட்டு வாத்து பற்றிய பாடல் *(1)*	*2266*
9. மான் பற்றிய பாடல்கள் *(2)*	*2267-2268*
10. நாரை பற்றிய பாடல் *(1)*	*2269*

11. புல் பற்றிய பாடல் *(1)* *2270*

12. பூக்கள் பற்றிய பாடல்கள் *(23)* *2271-2293*

13. மலை பற்றிய பாடல் *(1)* *2294*

14. மஞ்சள் இலை பற்றிய பாடல்கள் *(3)* *2295-2297*

15. நிலா பற்றிய பாடல்கள் *(3)* *2298-2300*

16. இரவு பற்றிய பாடல்கள் *(3)* *2301-2303*

17. ஆடை பற்றிய பாடல் *(1)* *2304*

18. வினாவிடை நிலையான பாடல்கள் *(4)* *2305-2308*

19. கியுக பாடல் *(1)* *2309*

20. செதொக பாடல்கள் *(2)* *2310-2311*

பனிக் கலம்பகம்

1. கலம்பகப் பாடல்கள் *(4)* *2312-2315*

2. பனி பற்றிய பாடல்கள் *(9)* *2316-2324*

3. பூக்கள் பற்றிய பாடல்கள் *(5)* *2325-2329*

4. பனித்துளி பற்றிய பாடல் *(1)* *2330*

5. மஞ்சள் இலை பற்றிய பாடல் *(1)* *2331*

6. நிலவைப் பற்றிய பாடல் *(1)* *2332*

பனி விளக்கம்

1. விளக்கப் பாடல்கள் *(2)* *2333-2334*

2. பனித்துளி பற்றிய பாடல் *(1)* *2335*

3. உறைபனி பற்றிய பாடல் *(1)* *2336*

4. பனி பற்றிய பாடல்கள் *(12)* *2337-2348*

5. பூ பற்றிய பாடல் *(1)* *2349*

6. இரவு பற்றிய பாடல் *(1)* *2350*

* * *

பாடல் : 1816

Tama Kagiru	*மணியின் ஒளிர்*
Yufu sari kuraba	*மாலையும் வந்திடினே*
Satu - fito no	*வில்லாளரது*
Yu tuki ga take ni	*'யுதுகி' உச்சியிலே*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*

விளக்கம்

மணியின் ஒளியைப்போன்ற அழகிய மாலைப் பொழுதும் வந்துவிட்டால், வில்லாற்றலுடையோர் புகழ்கின்ற யுதுகி மலையின் முகட்டிலே புகாரும் தவழ்கிறது.

குறிப்புரை

இப்பாடலில் இரு தலையணைச் சொற்றொடர்கள் அமைந்துள்ளன. 'Tama kagiru' என்னும் தொடர் 'yufu'வுடன் அணையும். 'Satu fito no' என்னும் தொடர் 'yutuki' யுடன் அணையும். 'Yutuki' என்பதை நேரடி மொழிபெயர்ப்புச் செய்யின், 'விற்பிறை' என அமையும். மலையின் தோற்றம் நோக்கி இப்பெயர் பெற்றதென்பர். யுதுகி மகிமுகு மலையின் உச்சி. நரவில் உண்டு (மிவா நகரில்).

உணர்வு நிலை

வேனிற் காலத்தை எதிர் நோக்கியிருக்கும் பெண்ணின் மனநிலையை இப்பாடல் உணர்த்துகிறது. மலையில் தவழும் புகாரைக் காணும் பெண் உள்ளம் கால மாற்றத்தையே காண்கிறது. பலரும் புகழ்ந்து பேசுகின்ற மலையை மாலை வேளையிலே பார்த்திருந்த பெண்ணுக்குத் தவழ்கின்ற புகார் புதிய அறிவிப்பைத் தந்து நின்றது. வேனிலின் வருகை விரைவில் எனச் சொல்கிறது.

பாடல் : 1817

Kesa yukite	*இன்று நானே போய்*
Asu va kinamu to	*நாளையே வரும் எனக்*
Ifisi ko ga	*கூறும் மகள் போல்*
Asaduma yama ni	*அசதும மலையில்*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*

விளக்கம்

இன்று நான் சென்று நாளைக்கே திரும்பி வந்துவிடுவேன் என்று கூறும் மகளின் தோற்றத்தைப்போன்று 'அசதும' மலையிலே புகாரும் தவழ்கிறது.

குறிப்புரை

புகாரின் தோற்றம் விடைபெற்றுப் போகும் மகளின் தோற்றத்தினை நினைவுபடுத்துகின்றது. வெறும் இயற்கைத் தோற்றமாக அன்றி உள்ளுணர்வுக்கு உருக்கொடுப்பதாகவும் அமைகிறது. அசதும என்பதன் பொருள், காலையின் மனைவி.

உணர்வு நிலை

பெண்ணின் உள்ளுணர்வு காட்சி நிலையிலே இயற்கையின் தோற்றப்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. சென்ற காலத்து நினைவுகளை உள்ளம் மீட்டுப் பார்க்கும்பொழுது, நினைவுகளின் கோலமாக இயற்கையாகப் படரும் புகார் அமைந்துவிடுகிறது. இயற்கை வரையும் ஓவியமாகக் காத்திருக்கும் பெண்ணின் கண்களில் காட்சி தருகிறது. மலையை நோக்கும் கண்கள் பெண்ணின் கண்களே.

பாடல் : 1818

Ko ra ga nani	*குறுமகள் பெயரின்*
Kake no yorosiki	*தொடர்போலப் பொருந்து*
Asa duma no	*அசதும மலையின்*
Kata yama gisi ni	*ஒருசார் செங்குத்திலே*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*

விளக்கம்

எனது காதலியின் பெயருடன் நன்கு பொருந்துகின்ற (அழைக்கும் போது) அசதும என்னும் பெயருடைய மலையின் ஒரு பக்கத்து செங்குத்தாக விளங்கும் பகுதியிலே புகாரும் தவழ்கிறது.

குறிப்புரை

'அசதும' என்னும் மலையின் பெயரும், தனது காதலியின் பெயரை ஒலிக்கும்போது, ஒலி நிலையிலே ஒன்றுபட்ட தொடராக அமைவதை அவன் உணர்ந்துள்ளான். மலையைக் கடக்கும்போது அதன் பெயரையும் சொல்லிக் கடப்பது இயல்பு.

உணர்வு நிலை

வினைமேற் சென்றிருக்கும் ஆண் மலையைக் கடக்கும்போது காதல் மனையாளையும் எண்ணுகிறான். அவளை மனத்துள் அழைக்கிறான். அவள் பெயர் கடக்கும் மலையின் பெயரான 'அசதும'வுடன் தொடர்நிலையில் செவ்வனே பொருந்தி நிற்கிறது. தவழும் புகார் மலையைக் காட்ட மலையின் பெயர் காதலியின் பெயரை நினைவிற் கொணர்கிறது.

பாடல் : 1819

Uti nabiku	*தளிர்கள் தாழும்*
Faru tatinu rasi	*வேனில் அலர்ந்ததுவே*
Waga kado no	*என் வாயிலிலே*
Yanagi no ure ni	*யநகியின் கிளையில்*
Uguvisu nakitu	*உகுவிசு நரலும்*

விளக்கம்

தளிர்கள் எல்லாம் மாஞ் செடிகளிலே நன்கு தழைத்துத் தாழுகின்ற வேனிற் காலம் வந்துவிட்டது. என் வீட்டு வாயிலிலே உள்ள 'யநகி' மரத்தின் கிளையிலே வந்திருந்து உகுவிசுப் பறவையும் குரல் கொடுக்கின்றது.

குறிப்புரை

இப்பாடலில் **'uti nabiku'** என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். **'Faru'** என்னும் சொல்லுடன் அணையும். வேனிற் காலத்தின் தன்மையை இத்தொடர் விளக்கி நிற்கிறது. 'யநகி', மரத்தின் பெயர்; 'உகுவிசு', பறவையின் பெயர்.

உணர்வு நிலை

உகுவிசுப் பறவையின் குரல் அவளுக்கு வேனிலின் வருகையை அறிவிக்கும் குரலாகிறது. யநகியின் கிளையிலிருந்து குரல் கொடுக்கும் உகுவிசுப் பறவை காலம் வந்ததையறிந்து, தனது துணைப் புள்ளிற்குக் குரல் கொடுக்கிறது. அதுபோலத் தன் காதலனும் கடைவாயில் வந்து குரல் கொடுப்பான் எனப் பெண் மனம் எண்ணுகிறது. காதலன் அழைப்பைக் காத்து நிற்கும் பெண்ணுக்கு உகுவிசு குரல் கொடுப்பது புதியதொரு நம்பிக்கையும் தருகிறது.

பாடல் : 1820

Ume no fana	*உமெயின் மலர்*
Sakeru wokabe ni	*மலர்ந்த குன்றின் சாரல்*
Ife woreba	*என் வீட்டருகே!*
Tomosiku mo arazu	*புது நிகழ்வும் அன்று*
Uguvisu no kowe	*உகுவிசு குரலே!*

விளக்கம்

உமெயின் மலர் மலர்ந்திருக்கும் குன்றின் சாரலிலே எனது வீடு அமைந்திருப்பதால், உகுவிசுப் புள்ளின் குரல் கேட்பதும் ஒரு புதிய நிகழ்வன்று.

குறிப்புரை

குன்றின் சாரலில் உமெ மலர்ந்து நிற்கிறது. அதனால் அம்மரத்திலே உகுவிசுவும் வந்திருந்து குரல் கொடுக்கிறது. இது இயற்கை நிலை. புதிய நிகழ்வும் அன்று என நினைத்தல் உகுவிசு வீடு தேடி வந்து குரல் கொடுக்கவில்லை.

உணர்வு நிலை

புள்ளின் குரல் வழமையான குரலே என எண்ணி அமைதியுறும் பெண், அவள் காலம் வரும்வரை காத்திருப்போம் என்ற மனவுறுதியை இயற்கை நிலையில் ஏற்றிக் கூறுகிறாள். தன் வாழ்க்கையின் நடைமுறையினையும் இயல்பான நிலையிலே ஏற்றுக்கொள்ளும் மன ஒழுங்குடையவள் பெண்ணே.

பாடல் : 1821

Faru gasumi	*வேனிலில் புகார்*
Nagaruru nabe ni	*கழிந்திடும் போதிலே*
Awo yagi no	*பசும் யகியின்*
Yeda kufi motite	*கிளைச் சுள்ளி கவ்வியே*
Uguvisu naku mo	*உகுவிசு நரலும்*

விளக்கம்

வேனிற் காலம் வரும்போது புகார் கழிந்து செல்கின்றது. பசிய 'யகி' மரத்தின் கிளையின் காய்ந்த சுள்ளியைத் தனது வாயிற் கவ்வியபடி உகுவிசுவும் குரல் கொடுக்கிறது.

குறிப்புரை

உகுவிசு வாயில் சுள்ளியைக் கவ்வுவது கூடு கட்டுவதற்காகவே. வேனிற் காலத்தில் அது கூடு கட்டி முட்டையிடும்போலும். கூடு கட்டும் காலம் வந்ததைத் தன் துணைப் பறவைக்கும் உணர்த்திக் குரல் கொடுக்கிறது. 'யகி', மரத்தின் பெயர்.

உணர்வு நிலை

வேனிற் காலத்தின் வரவைக் காத்திருக்கும் பெண். யகியின் சுள்ளியை வாயில் கவ்வியபடி குரல் கொடுக்கும் உகுவிசு, கருப்பொருள் நிலையில் உள்ளுறைப் பொருளை உணர்த்தி நிற்கிறது. பறவை கூடுகட்டி இனம் பெருக்கும் பணி செய்ய முனைவது, பெண்ணின் எதிர்கால ஆவலைக் காட்டுகிறது.

பாடல் : 1822

Waga seko wo	*என் காதலரே*
Na kosi no yama no	*கடவாது மலையைக்*
Yobu-ko-dori	*கூவிடும் குருவியே*
Kimi yobi kafese	*நீ கூவி நிறுத்துவாய்*
Yo no fukenu to ni	*இரா வளரு முன்னே*

விளக்கம்

என்னைப் பிரிந்து சென்ற என் காதலர், மலையைக் கடந்து செல்லா வண்ணம் கூவிடும் குருவியே, நீயே கூவியழைத்து அவரை நிறுத்துவாய். இவ்விரவும் வளரு முன்னே அதைச் செய்வாய்.

குறிப்புரை

இப்பாடலில் காலத்தை உணர்த்தும் சொல் அமையவில்லை. ஆனால் கூவிடும் குருவியின் மூலம் காலம் மறைமுகமாக உணர்த்தப் பட்டுள்ளது. மலையைக் கடந்து செல்லல் வழிச் செலவின் கால நீட்டத்தை விளக்கி நிற்கிறது. 'யொபுகொதொரி' பறவையின் பெயர். கொசி (Kosi) மலை நரவில் உண்டு, பறவையிடம் தூது செல்லும் பாங்கு.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற அன்பரைத் தடுத்து நிறுத்த ஆற்றலற்ற பெண், கூவிடும் குருவியைக் கேட்கிறாள். குருவியின் குரல் காலத்தின் வருகையை உணர்த்தும். அதைக் கேட்பின் அவனும் வினையை

மேலும் தொடராது அவளை நாடி வருவான். மாலையில் மனம் விரும்புவது குருவியின் குரலால் நடக்கும் என்ற நம்பிக்கையே அவளுக்கு உறுதுணையாய் இருக்கிறது.

பாடல் : 1823

Asa ide ni	*காலைக் கிணற்றடி*
Ki naku Kavodori	*வந்து நரல் 'கவொ'வே!*
Nare dani mo	*என்னைப் போல நீ!*
Kimi ni kofure ya	*உனக்கே நலிவுதான்*
Toki wofezu naku	*வேளையின்றி நரல்வாய்!*

விளக்கம்

காலை வேளையில் கிணற்றடியில் வந்து குரல் கொடுக்கும் 'கவொ' பறவையே, என்னைப்போல நீயும் காதலில் நலிகின்றயா? எனக்கே என்றும் நலிவுதான். நீயோ வேளையின்றிக் குரல் கொடுக்கிறாய்.

குறிப்புரை

காலையில் கிணற்றடியில் வந்து பறவை குரல் கொடுப்பது ஒரு புதிய நோக்கமாகத் தெரிகிறது. பறவையும் காதல் நலியால் வாடுவது போலத் தெரிகிறது. வேளையின்றிக் குரல் கொடுப்பது இவ்வாறு எண்ணத் தூண்டுகிறது. 'கவொ', பறவையின் பெயர்.

உணர்வு நிலை

பெண்ணின் பிரிவின் நிலை, சூழவுள்ள இயற்கை நிலைகளையும் தன்னிலையோடு இணைந்து நோக்கும் பண்பு; பறவையின் குரலில் புதிய பொருள் காண விழையும் பெண் உள்ளம்;. காதல் நலிவுக் காலம் குறையுமா என்ற ஏக்கம்.

பாடல் : 1824

Fuyu gomori	*பனி மறையும்*
Faru sari kureba	*வேனிலும் வந்திடவே*
Asifiki no	*அடி இழுக்கும்*
Yama ni mo noni mo	*மலையிலும் வயலிலும்*
Uguvisu naku mo	*உகுவிசு நரலும்*

விளக்கம்

வேனிற் காலம் வந்திடப் பெய்கின்ற பனியும் மறைந்துவிடும். காலடிகளை இழுக்கின்ற கடக்க அரிதான மலையிலும் அதனைச் சார்ந்த வயற்பகுதிகளிலும் உகுவிசுவும் குரல் கொடுக்கும்.

குறிப்புரை

இப்பாடலில் 'Fuyu gomori' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Faru' என்னுஞ் சொல்லுடன் அணையும். மலையைக் கடந்து செல்லும்போது காலடிகளை இழுத்து வருத்தும் தன்மையுடைய மலை என்பது, மலையின் சுற்றளவின் பரப்பை உணர்த்தும் 'asifikino' என்னுந் தொடரும் தலையணைச் சொற்றொடர் 'yama'வுடன் அணையும்.

உணர்வு நிலை

பறவையின் குரல் கேட்டு வழிச்செலவிற் சென்றிருக்கும் அன்பிற் குரியவன் திரும்பி வரும் காலம் அண்மித்ததை உணரும் பெண். ஆனால் மலை கடந்து அவன் வரவேண்டும் என்பதையும் நினைத்துப் பார்க்கிறாள். பனி மறையும் வேனிற் காலம் வந்திட்டால் உகுவிசு குரல் கொடுக்கும். இது இயற்கையின் நடைமுறை. இயற்கையோடு இணைந்து வாழ வேண்டியதை அவள் நன்கு உணர்ந்திருக்கின்றாள்.

பாடல் : 1825

Murasaki no	*முரசகியின்*
Ne hafu yokonu no	*வேர் படரும் யொகொது*
Faru no ni va	*வேனில் வயலில்*
Kimi wo kaketutu	*உன்னையே நினைந்துமே*
Uguvisu naku mo	*உகுவிசு நரலும்*

விளக்கம்

முரசகியின் *(செடி)* வேர் படர்ந்து கிடக்கின்ற வேனில் வயல்கள் நிறைந்த யொகொது *(இடப்பெயர்)*வில், உன்னையே நினைந்துதான் உகுவிசுவும் குரல் கொடுக்கின்றது.

குறிப்புரை

யொகொது வயல்கள் நிறைந்த இடம். ஒசகாவில் உள்ளது. அங்குப் புகழ்பெற்ற வழிபாட்டிடம் உண்டு. வயலிலே முரசகி செடியின் வேர்கள் படர்ந்திருக்கும். 'முரசகி' நிறம் எனவும் பயன்படுகிறது.

உணர்வு நிலை

தன் பிரிவு நிலையைப் பறவையின் உணர்வில் ஏற்றிக் கூறல்/ உகுவிசுவும் உன்னையே நினைத்துக் குரல் கொடுக்கிறதோ. ஏனெனில் அப்பறவை காலத்தின் வரவை அறியும் ஆற்றல் உடையது. நீ திரும்பி வருங்காலத்தைக் கணக்கிட்டுக் குரல் கொடுக்கிறது.

பாடல் : 1826

Faru sareba	*வேனில் வந்ததே*
Tuma wo motomu to	*துணையைத் தேடுகின்ற*
Uguvisu no	*உகுவிசுவும்*
Ko nure wo tutafi	*கிளைகளில் தாவியே*
Naki tutu moto na	*நரலும் நாணமின்றே*

விளக்கம்

வேனில் வந்தது. தனது துணையைத் தேடுகின்ற உகுவிசுப் பறவையும் கிளைகளில் தாவியே நாணமின்றிக் குரல் கொடுக்கின்றதே.

குறிப்புரை

பறவை நாணமின்றிக் குரல் கொடுப்பது மனித உணர்வைப் பறவைக்கும் ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளது. 'நாணமின்றி' என்பது கோப உணர்வைக் காட்டுவதாயமைகின்றது.

உணர்வு நிலை

அன்புக்குரியவளை விரைவில் சேர எண்ணுகின்ற ஆண். வேனிற்காலம் வந்தது. இனிமேலும் காலம் கடத்த உள்ளம் விரும்பவில்லை. செய்வினை முடித்தே செல்ல வேண்டும். கிளையில் தாவித் துணையைத் தேடும் உகுவிசுப் பறவையின் உள்ளந்தான் அவனுக்கும். பறவை நாணமின்றிக் குரல் கொடுக்கிறது. அவனால் அது முடியவில்லை.

பாடல் : 1827

Kasuga naru	*கசுகவினது*
Hagafi no yama yu	*ஹகபி மலை தொடங்கி*
Savo no uti ve	*சவொ ஊர் வரை*

Naki yuku naru va — *நரன்று செல்லக் கேட்கும்*
Tare yobu ko-dori — *யாரைக் கூவுங் குருவி*

விளக்கம்

சுசுகவிலுள்ள ஹகபி மலை தொடங்கி சவொ ஊர்வரை கூவுங் குருவியின் குரல் கேட்கிறது. அது யாரைத்தான் கூவி அழைக்கின்றதோ?

குறிப்புரை

கூவுங் குருவியின் குரல் கேட்கும் இடம். மலைப் பகுதியிலிருந்து ஊர்ப்புறம்வரை யாரைத் தேடிச் செல்லுமோ? காலம் வந்தது. ஆனால் இருக்குமிடம் தெரியவில்லை. 'ஹகபி', மலையின் பெயர்; 'சவொ', ஊரின் பெயர்.

உணர்வு நிலை

குருவியின் குரலைச் செவிசாய்த்துக் கேட்டிருக்கும் பெண். குருவியே பல மைல் தூரம் தேடிச்சென்று குரல் கொடுக்கிறது. அது தேடுவது யாரை என்ற வினா பெண் உள்ளத்தில் எழும் வினாவுடன் ஒத்தியையும். அவளும் தேட எண்ணுகின்றாள்.

பாடல் : 1828

Kotake nu ni — *விடை தராமல்*
Na yobi toyome so — *கூவாதே குரலாலே*
Yobu kodori — *கூவுங் குருவி*
Savo no yama be wo — *சவொ மலைச் சாரலில்*
Nobori kudari ni — *மேலும் கீழும் பறந்தே*

விளக்கம்

உன் குரலுக்கு யாரும் விடை தராதபோது நீ குரலெடுத்துக் கூவாதே. சவொ மலைச்சாரலில் மேலும் கீழுமாய்ப் பறந்தே கூவாதே கூவுங் குருவியே!

குறிப்புரை

ஒருவர் குரல் கொடுக்கும்போது இன்னொருவர் விடை கூறும் நிலையிற் குரல் கொடுப்பர். இது நடைமுறை. விடையாகக் குரல் வாராதவிடத்து, மீண்டும் மீண்டும் குரல் கொடுப்பது பயனற்ற முயற்சியாகும். 'சவொ', மலையின் பெயர்.

உணர்வு நிலை

அன்புக்குரியவரிடம் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெண். மலைச் சாரலில் மேலுங்கீழும் பறந்து குரல் கொடுக்கும் குருவி போல அவளால் இயங்க முடியாது. மரபு நிலை பேண வேண்டிய நிலை. எனவே கூவுங் குருவிக்கும் மரபை உணர்த்திட எண்ணுகின்றாள்.

பாடல் : 1829

Adusa yumi	*அதுச வில்லின்*
Faru yama tikaku	*வேனில் மலை அருகில்*
Ife voreba	*வீடு இருக்கத்*
Tukite kiku ramu	*தொடர்ந்துமே கேட்குமே*
uguvisu no kowe	*உகுவிசுவின் குரல்*

விளக்கம்

அதுச வில்லின் நாண் ஏற்றியதுபோன்ற அமைப்புடைய வேனில் மலையின் அருகில் உனது வீடு அமைந்திருப்பதால், உகுவிசுவின் குரல் தொடர்ந்தும் கேட்குமே.

குறிப்புரை

இப்பாடலில் 'adusa yumi' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். பரவி நாண் ஏற்றும் பொருளில் 'Faru' என்னும் சொல்லுடன் அணையும். 'அதுச', வில்லின் பெயர்.

உணர்வு நிலை

வீட்டிலே விட்டுப் பிரிந்து வந்த அன்புக்குரியவளைப் பற்றி எண்ணிப் பார்க்கும் ஆணின் நிலை. அவள் வீடு மலையருகில் இருப்பதால் உகுவிசுவின் வேனில் வரவை உணர்த்தும் குரலினைத் தொடர்ந்து கேட்டிருப்பாள். அது என் பிரிவை நினைவுபடுத்துமே.

பாடல் : 1830

Uti nabiku	*தாழ்ந்தே வீழ*
Faru sari kureba	*வேனிலுமே வந்ததால்*
Sino no ure ni	*மூங்கிலின் முன்னே*
Wofa uti furete	*சிறகை அடித்திட்டே*
Uguvisu naku mo	*உகுவிசு நரலும்*

விளக்கம்

தளிர் தாழ்ந்து வீழ்கின்ற வேனில் காலம் வந்ததால், மூங்கிலின் முன்னே தன் சிறகை அடித்து உகுவிசுவும் குரல் கொடுக்கும்.

குறிப்புரை

இப்பாடலில் **'uti nabiku'** என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். **'Faru'** என்னும் சொல்லுடன் அணையும். மூங்கில் தழைத்திருப்பதால் அதன் முன் கொப்பில் உகுவிசுவும் இருந்து குரல் கொடுக்கும்.

உணர்வு நிலை

காலம் வந்ததை இயற்கைக் காட்சிகள் உணர்த்தக் கண்டு, ஆற்றாமை மீதூரப் பெற்ற பெண்ணின் மனநிலை. உகுவிசு சிறகடிப்பது அதன் உள்ளத்துணர்வை வெளிப்படுத்தும்.

பாடல் : 1831

Asa giri ni	*காலைப் புகாரில்*
Sino noni nurete	*முற்றாகவே நனைந்து*
Yobu ko dori	*கூவுங் குருவி*
Mifune no yama yu	*மிபுநெ மலையையே*
Naki wataru miyu	*கூவிக் கடக்கக் காண்பாய்*

விளக்கம்

காலை வேளையிலே படியும் புகாரிலே முழுதாக நனைந்து கூவுங் குருவியும் மிபுநெ மலையினைக் கூவிக் கடப்பதை நீயும் காண்பாய்.

குறிப்புரை

நீண்ட தூரம் புகாரில் பறப்பதால் குருவி முற்றாக நனைகிறது. மிபுநெ மலை நரவில் அமைந்துள்ளது (யொசிரொ நகரில்).

உணர்வு நிலை

தன்னைப் பிரிந்து சென்றுள்ள அன்புக்குரியவன் இயற்கைக் காட்சிகளிலும் கண் செலுத்துவான் என எண்ணும் பெண். குருவியின் குரல் அதன் தோற்றத்தைப் பார்க்கத் தூண்டும். தோற்றமோ, அது கடந்து வந்த காலையின் தன்மையை உணர்த்தும். தூரமும் காலமும் பிரிவில் முனைப்பாய்த் தெரியும்.

பாடல் : 1832

Uti nabiku	*தாழ்ந்தே வீழ*
Faru sari kureba	*வேனிலுமே வந்ததால்*
Sikasu gani	*இன்னுமேதான்*
Ama gumo kirafu	*விண் முகில் படர்ந்திட*
Yuki va furi tutu	*பனிப் பெயலுந் தொடரும்*

விளக்கம்

தளிர்கள் தாழ்ந்து விழுகின்ற வேனிற் காலம் வந்துவிட்டது. ஆனால் இன்னமும் விண் முகில் படர்ந்திடப் பனிப்பெயலும் தொடர்கிறதே.

குறிப்புரை

இப்பாடலின் **'uti nabiku'** என்னுந் தொடர் தலையணைச் சொற்றொடராகும். **'Faru'** என்னுஞ் சொல்லுடன் அணையும். வேனிற் காலம் வந்த பின்னரும் பனிப் பெயல் தொடர்வது இயற்கை நிலையில் முரண்பட்டது.

உணர்வு நிலை

பெண்ணின் காத்திருப்பின் நீட்டம். வேனில் வந்ததால் சேருங்காலம் வந்ததென மகிழ முடியவில்லை. இன்னும் விண்முகில் படர்ந்திடப் பனியும் பெய்கிறது. காலக் கணிப்பில் தவறு ஏற்பட்டுவிட்டது/ இயற்கை நிலையும் முரண்பட்டதோ!

பாடல் : 1833

Ume no fana	*உமெ மலரை*
Furi ofofu yuki wo	*மூடிய பனியையே*
Tutumi moti	*பொதிந்து வைத்து*
Kimi ni misemu to	*உனக்குக் காட்டிடவென*
Toreba ke ni tutu	*எடுக்கக் கரையுதே*

விளக்கம்

உமெ மலரை மூடியிருக்கும் பனியையே பொதியாக்கி வைத்து, உனக்குக் காட்டிடவெனக் கையில் எடுக்கக் கரைந்துவிட்டதே.

குறிப்புரை

பனியின் பெயல் உமெ மலரையே மூடியுள்ளது. மலரை மூடிய பனியை அக்கோலத்திலேயே அவனுக்குக் காட்ட விரும்புதல் தன்னிலை கூறல்.

உணர்வு நிலை

பனிக்காலம் பிரிவு கொடுமையானது. உமெ மலரைப் பார்க்கும்போது தன்னிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பெண் உள்ளம், எதுவும் செய்ய முடியாத நிலையில் இரங்கி நிற்கிறது.

பாடல் : 1834

Ume no fana	*உமெயின் மலர்*
Saki tiri suginu	*மலர்ந்து உதிர்ந்தது*
Sikasu gani	*இன்னுமேதான்*
Sira yuki niva ni	*வெண் பனியும் பூங்காவில்*
Furi sikiri tutu	*பெயல் தொடர்கின்றதே*

விளக்கம்

உமெயின் மலரும் மலர்ந்து உதிர்ந்தும்விட்டது. ஆனால் இன்னுமே தான் வெண் பனியும் பூங்காவில் தொடர்ந்தும் பெய்கின்றதே.

குறிப்புரை

காலத்தைத் தெளிவாகக் கணிக்க முடியாமை பனியின் பெயல் பிரிவின் நீட்டத்தை உணர்த்துகிறது. உமெ ஒரு பூமரம்.

உணர்வு நிலை

பிரிவு இன்னும் இயற்கை நிகழ்வால் நீள்வது காணும் பெண். பூங்காவில் பார்வையைப் படரவிட்டால் பனி பெய்வது தெரிகிறது. அன்புக்குரியவனைக் காத்திருக்கையில் காலத்தைத் தெளிவாக அறியும் முயற்சி.

பாடல் : 1835

Ima sara ni	*இந்த வேளையில்*
Yuki furame ya mo	*பனியும் பெய்திடுமோ*
Kagirovi no	*கானல் பரவி*
Moyuru farube to	*எரியும் வேனிற் காலம்*
Nari ni si mono wo	*ஆகி வந்திட்டதுவே*

விளக்கம்

இந்த வேளையிலே பனியும் பெய்யுமோ? ஏனெனில் கானல் பரவி எரிக்கின்ற வேனிற் காலமாகிவிட்டதே.

குறிப்புரை

வேனிலின் கானல் தோற்றம் சிலந்தி நூல்போலத் தோற்றும்/ பனியும் இப்போது பெய்திடுவது காலத்தின் கணிப்பு மாறுபட்டதை உணர்த்தும். 'Kagirovi no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடர். 'moyuru farube'யுடன் அணையும்.

உணர்வு நிலை

பெண்ணின் காத்திருப்பில் காலம் முரண்பட்டுத் தோற்றுகிறது. வேனிலின் வரவை உள்ளம் எதிர்பார்க்கிறது. அதன் இயல்பை நினைவு கூர்கின்றது.

பாடல் : 1836

Kaze majie	*காற்றுக் கலந்து*
Yaki va furi tutu	*பனிப் பெயல் தொடரும்*
Sikasu gani	*இன்னுமே தான்*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*
Faru sari ni keri	*வேனிற் காலம் வந்ததே!*

விளக்கம்

காற்றுடன் கலந்து இன்னும் பனிப்பெயல் தொடர்கின்றது. ஆனால் புகார் தவழ்கிறது. வேனிற் காலமாகிவிட்டதோ!

குறிப்புரை

பனிப்பெயல் காற்றுடன் தொடரும் வேளையில், புகாரும் தவழ்வது வேனில் வருவதை உணர்த்தும்.

உணர்வு நிலை

பிரிவில் இயற்கையைக் கூர்மையாய் நோக்கும் இயல்பு பெண்ணின் சிறப்பியல்பு.

பாடல் : 1837

Yama no ma ni	*மலையிடையே*
Uguvisu nakite	*உகுவிசு நரலத்*
Uti nabiku	*தாழ்ந்தே வீழு*
Faru to omofedo	*வேனிலென நினையப்*
Yuki furi sikinu	*பனிப் பெயல் தொடரும்*

விளக்கம்

மலைகளிடையே உகுவிசு குரல் கொடுக்கும். தளிர்கள் தாழ்ந்து வீழும். இதனைக் கண்டு வேனில் வந்துவிட்டதே என நினைக்க மீண்டும் பனிப்பெயலும் தொடர்கிறது.

குறிப்புரை

உகுவிசு குரல் கொடுப்பதும் பசுந்தளிர்கள் தாழ்ந்து வீழ்வதும் வேனிற் காலத்தின் காட்சிகள். அப்போது பனியும் பெய்வது, காலம் இன்னும் கனியாததை உணர்த்துகிறது. 'uti nabiku' தலையணைச் சொற்றொடர் 'Faru'யுடன் அணையும்.

உணர்வு நிலை

மலையை நோக்கியிருந்தவள் காதில் உகுவிசுவின் குரல் கேட்கிறது. கண்ணில் தாழும் பசுந்தளிர்கள் படுகின்றன. எனினும் பனிப்பெயலும் தொடர்வதால் உள்ளம் நலிகிறது. பிரிவு நீள்வதை உணர்தல்.

பாடல் : 1838

Wo no ufe ni	*மலை உச்சியில்*
Furi oku yuki si	*பெய்து விழு பனி*
Kaze no muta	*காற்றின் போக்கிலே*
Koko ni tiru rasi	*இங்கும் சிதறிடுமே*
Faru niva aredomo	*வேனிலே வந்திடினும்*

விளக்கம்

மலை உச்சியிலே பெய்து கீழே விழுகின்ற பனி, காற்றின் போக்கிலே இங்கு வந்து சிதறுகின்றது. வேனிற் காலமாகிவிட்டாலும் இது நடக்கிறது.

குறிப்புரை

மலைப் பகுதி குளிரானதால் பனிப்பெயல் அதிகம். அப்பெயல் வீசும் காற்றினால் சிதறிக் கீழே வரும் இது, வேனிற் காலத்திலும் காணும் காட்சியாகும். இப்பாடல் இபாகி பிரதேசத்திலுள்ள சுகுப மலைபற்றிய பாடலாகும்.

உணர்வு நிலை

கால நிலை முரண்பாட்டை இயற்கை நிலையில் நன்கு விளங்கிக் கொள்ளும் பெண்.

பாடல் : 1839

Kimi ga tame	*உனக்காகவே*
Yamada no sava ni	*மலைக் குளிரோடையில்*
Wegu tsumu to	*'எகு' பறிக்கப்*
Yukige no mitu ni	*பனி கரைந்த நீரில்*
Mono suso nuremu	*பாவாடை நனைந்ததே*

விளக்கம்

உனக்காக மலைச் சாரலில் உள்ள குளிர்ந்த ஓடையில் 'எகு' பறிக்கச் சென்றேன். அங்குப் பனி கரைந்த குளிர் நீரிலே எனது பாவாடைக் கரை நனைந்துவிட்டது.

குறிப்புரை

'எகு' ஒரு வகையான கிழங்கு; கசப்பான சுவையுடையது; குரொகுகி (Kurokui) என்றும் அழைக்கப்படும். பாவாடைக் கரை பனி நீரில் நனைவது, குறிப்பாக அவள் உணர்த்தும் பொருள்.

உணர்வு நிலை

திரும்பி வரும் அன்புக்குரியவனுக்கு உணவிடும் ஆவல். கிழங்கு பறித்தல் நடைமுறை வாழ்வு காட்டும்.

பாடல் : 1840

Ume ga ye ni	*உமெயின் கிளை*
Nakite uturofu	*நரன்றே தாவுகின்ற*
Ugufisu no	*உகுவிசுவின்*
Fane siro tafe ni	*சிறகு வெண்ணிறம் பெற*
Awa yuki zo furu	*கரை பனிதான் பெய்யும்*

விளக்கம்

உமெ மலர் மரத்தின் கிளைகளிலே, குரல் கொடுத்துக்கொண்டே தாவுகின்ற உகுவிசுப் பறவையின் சிறகு வெண்ணிறம் பெறக் கரைகின்ற பனி பெய்திடும்.

குறிப்புரை

பறவையின் இறகு வெண்ணிறம் பெறல் என்பதில் உள்ளுறைப் பொருளுண்டு. வழிச்செலவில் சென்றவனும் கரை பனியில் நனைந்துமே வருவான்.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற அன்புக்குரியவன் திரும்பி வருங்கோலத்தைக் கரை பனியில் கிளை தாவும் பறவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பெண்.

பாடல் : 1841

Yama taka mi	*மலை உயர்வில்*
Furi kuru yuki wo	*பெய்துவரு பனியே*
Ume no fana	*உமெ மலரை*
Tiru kamo kuru to	*உதிர்த்து வருமென*
Omofi turu kamo	*நினைந்து இருக்குங்கொல்.*

விளக்கம்

உயர்ந்த மலையிலிருந்து பெய்து வருகின்ற பனியானது, மலர்ந்திருக்கின்ற உமெயின் மலரையும் உதிரச் செய்து வருமென நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

குறிப்புரை

மலையின் உயர்வால் பனி நிறையப் பெய்யும். அது மலரைச் சிதைத்திடும். குறிப்புப் பொருள்: கால நீட்டம் நன்றன்று-பாட வேறுபாடு 'மலர் உதிர்ந்து வருமோ என நினைந்து'.

உணர்வு நிலை

இயற்கை நிலையிலே தொழிற்பாடுகள் நடப்பதை உணர்ந்த பெண். காலம் நீளின் நிலையும் மாறுமெனக் கவல்கின்றாள்.

பாடல் : 1842

Yuki wo okite	*பனி பாராதே*
Ume wo nakofi so	*உமெயை விரும்பாதே*
Asifiki no	*அடி இழுக்கும்*
Yama katadukite	*மலைச் சாரல் முடிவின்*
Ife wi seru kimi	*மனையில் வாழும் நீயே*

விளக்கம்

பனியைப் பாராதே, உமெ மலரை விரும்பாதே, அடியை இழுக்கும் மலைச் சாரலின் முடிவிலே அமைந்துள்ள வீட்டிலே வாழ்கின்ற நீயே.

குறிப்புரை

இயற்கைக் காட்சிகளில் புலன் செலுத்தாமல் உன் கடமையைச் செய். மனைவாழ்வில் நடைமுறைகள் செவ்வனே பேணப்பட வேண்டும். குறிப்புப் பொருள் வேறு பெண்மேல் நாட்டம் கொள்ளாதே. 'asifiki no' தலையணைச் சொற்றொடர். 'yama'வுடன் அணையும்.

உணர்வு நிலை

வீட்டு வாழ்க்கை உனக்குண்டு. எனவே இயற்கையழகிலே காலங்கடத்தாமல் விரைவில் வந்துவிடு. பனியும், உமெயும், உன்னை வேறிடம் போக வைக்கும். ஆனால் நீ வாழும் வீட்டை மறந்துவிடாதே.

பாடல் : 1843

Kino fu koso	*நேற்றுத்தான் சென்ற*
Tosi va fatesi ka	*ஆண்டு முடிந்திட்டதோ!*
Faru gasumi	*வேனிற் புகாரும்*
Kasuga no yama ni	*கசுகவின் மலையில்*
Faya tati ni keri	*விரையப் படருதே*

விளக்கம்

நேற்றுத்தான் இந்த ஆண்டு முடிந்ததுபோலிருக்கிறது. ஆனால் வேனிலின் புகாரோ கசுகவின் மலையிலே விரைவாகப் படர்கிறதே.

குறிப்புரை

நேற்று ஆண்டு முடிந்தது. சென்ற ஆண்டின் கழிநிலை வேனில் புகார் படிவது காலத்தின் விரைவைக் காட்டும். புகார் தொடர்பு படுத்திய பாடல். மூன்று பாடல்கள், தொகுப்பு நிலையில் அமைந்துள்ளன.

உணர்வு நிலை

காலத்தை-விரைவை இயற்கையிலே காணும் மகிழ்வு. காத்திருப்பும் முடிகிறதே என உள்ளம் துள்ளும் நிலை; பழைய துன்ப நிலை மாறும் என்ற நம்பிக்கை.

பாடல் : 1844

Fuyu sugite	*பனி கழிய*
Faru kitaru rasi	*வேனிலும் வந்ததுவே*
Asa fi sasu	*காலைக் கதிர் வீசும்*
Kasuga no yama ni	*கசுகவின் மலையில்*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*

விளக்கம்

பனிக் காலம் கழிய வேனிற்காலமும் வந்தது. காலைக் கதிர் ஒளி வீசுகின்ற கசுகவின் மலைப்பகுதியிலே புகாரும் தவழ்கிறது.

குறிப்புரை

பனிக் காலம் முடிவடைந்ததைத் தெளிவுபடுத்தும் நிலைகள், கதிர் ஒளியும் புகார் தவழ்தலும். கசுக, ஒரு பகுதி.

உணர்வு நிலை

கதிரொளியில் புகார் தவழும் காட்சி, பனிக் காலம் முடிவுற்றதை விளக்கப் பெண் உள்ளம் மகிழ்கிறது. கால மாற்றம் வரையறை செய்யப்பட்ட நிலை.

பாடல் : 1845

Ugufisu no	*உகுவிசுவின்*
Faru ni naru rasi	*வேனில் வந்ததுவே*
Kasuga yama	*கசுக மலை*
Kasumi tanabiku	*புகார் தவழ்கிறது*
Yome ni miredomo	*இரவிலுங் காணுமே*

விளக்கம்

உகுவிசு குரல் கொடுக்கின்ற வேனிற் காலமாகிவிட்டதே. கசுக மலையிலே தவழ்கின்ற புகாரை இரவிலும் காண முடிகின்றது.

குறிப்புரை

புகாரை இரவிலும் காண்பது வேனிற்காலத்தைத் தெளிவாய் உணர்த்தும். மலையை இரவிலும் பார்த்திருத்தல். உகுவிசு குரல் கொடுப்பதால் உகுவிசுவின் வேனில் மகிழுங் காலம்.

உணர்வு நிலை

இரவிலும் மலை வழியைப் பார்த்திருக்கும் பெண். அன்புக்குரியவரின் வரவு காலம் தவறாது என்ற நம்பிக்கை.

பாடல் : 1846

Simo gare no — *உறைந்திட்ட*
Faru no yanagi va — *பனியில் யனகியே*
Miru fito no — *காணும் மாந்தரின்*
Katura ni subeku — *கண்ணிபோலவே தோன்றும்*
Moye ni keru kamo — *அரும்பிடும் முகையே*

விளக்கம்

உறைந்திருக்கின்ற பனியிலே யனகியைப் பார்ப்போருக்கு மாந்தர் சூடுகின்ற கண்ணிபோலத் தோற்றமளிக்கும். அரும்பிடுகின்றன முகைகளே. அவையும் பனியில் உறையும்.

குறிப்புரை

தொடர்ந்து ஏழு பாடல்கள் யனகியைத் தொடர்புறுத்தியமைக்கப் பட்டுள்ளன. கண்ணி சூடும் வழக்கம் ஜப்பானியரிடையும் இருந்துள்ளது.

உணர்வு நிலை

கண்ணி கட்டிச் சூட்டிட எண்ணியிருக்கும் பெண் உள்ளம். உறை பனியில் யனகி அரும்புகளின் தோற்றம், அழகுணர்வு தருகிறது.

பாடல் : 1847

Asa midori — *பசுமையான*
Some kake tari to — *நிறமூட்டியதுபோல்*
Miru made ni — *பார்க்கும் வரையும்*
Faru no yanagi va — *வேனில் யனகியது*
Moye ni keru kamo — *அரும்பிடும் முகையே*

விளக்கம்

பசுமையான நிறமூட்டியதுபோலத் தோன்றுகிறது யனகி மரத்திலே அரும்பியிருக்கின்ற மொட்டுகள்.

குறிப்புரை

வேனிலில் யனகி மொட்டுக் கட்டும். அதன் பசுமை நிறம், காலத்தின் மலர்ச்சியைக் காட்டும். பார்க்குமிடமெல்லாம் அவை அரும்பியுள்ளன.

உணர்வு நிலை

இயற்கையின் எழிலில் மனம் ஒன்றிய பெண். யனகியில் அரும்புகள் பசுமையாக நிரையில் காண்பது நிறமூட்டிய திரைச்சேலையை நினைவுபடுத்துகிறது.

பாடல் : 1848

Yama no ma ni	*மலையின் இடைப்*
Yuki va furi tutu	*பனிப்பெயல் தொடரும்*
Sikasu gani	*இன்னுமேதான்*
Kone kafa yagi va	*இவ்வாற்றின் யனகியில்*
Moye ni keru kamo	*அரும்பிடும் முகையே*

விளக்கம்

மலைகளினிடையே இன்னும் பனிப்பெயல் தொடர்கின்றது. ஆனால் இவ்வாற்றின் ஓரத்து யனகி மரத்திலே மொட்டுகள் அரும்பியுள்ளன.

குறிப்புரை

யனகி அரும்புகள் ஆற்றின் கரையிலே. பனிப்பெயல் மலைகளிடையே வீட்டில் காத்திருக்கும் பெண். வழிச் செலவிலே சென்றிட்ட ஆண். உணர்வு வேறுபாடு குறிப்பால் கூறல்.

உணர்வு நிலை

பெண் காலம் கண்டு வருந்துதல் ஆண் வழிச் செலவில் மலையிடையில் பெய் பனி பிரிவை ஏற்படுத்துகிறது. பனி கரையும் காலம் எப்போது?

பாடல் : 1849

Yama no ma no	*மலையின் இடைப்*
Yuki va kezaru wo	*பனியே கரையாதே*
Mina girafu	*நீர் வடிந்திடு*
Kafa no yanagi va	*ஆற்றின் யனகியே*
Moye ni keru kamo	*அரும்பிடும் முகையே*

விளக்கம்

மலைகளிடையே பெய்திருக்கும் பனியே கரையாதே. நீர் வடிந்தோடும் ஆற்றின் கரையிலுள்ள யனகியிலே மொட்டுகள் அரும்பியுள்ளன.

குறிப்புரை

வேனிற் காலம் வந்திடப் பனி கரைந்தோடும். அது ஆற்றுடன் கலந்திடும். யனகியும் அரும்பிடும். பனியின் கரைவு குறிப்புப் பொருள். இருவரும் சேர்தல்.

உணர்வு நிலை

ஆண் வர வேண்டும். அரும்பிடும் யனகி காண வேண்டும். ஆற்றங் கரை யனகியில் அரும்புகள் காலத்தை உணர்த்தும். ஆற்றின் நீரோட்டம் பிரிவின் தன்மையை வெளிப்படுத்தும்.

பாடல் : 1850

Aaana asana	*நாளுங் காலையில்*
Waga miru yanagi	*நான் காணும் யனகியே*
Ugufisu no	*உகுவிசுவும்*
Ki wite naku beki	*வந்து நரல வேண்டும்*
Mori ni faya nare	*காடு ஆகு விரைவில்*

விளக்கம்

ஒவ்வொரு நாட் காலையிலும் நான் பார்க்கின்ற யனகி மரமே உகுவிசு வந்து உன்மேலிருந்து குரல் கொடுக்க வேண்டும். நீயே விரைவில் சடைத்து வளர்ந்து காடுபோல ஆகிடுவாய்.

குறிப்புரை

யனகி வளர்ச்சியின் விரைவை வேண்டல். உகுவிசு வந்து தங்கிக் குரல் கொடுப்பதைக் கேட்க விரும்பல். பொருள் நிலைப் பிரிவு குறிப்புப் பொருள்.

உணர்வு நிலை

பெண் உள்ளம் யனகி மரத்தில் உகுவிசு குரல் கொடுப்பதைக் கேட்க விரும்புகிறது. மரத்தின் வளர்ச்சி விரைவாய் நடக்க வேண்டுதல் செய்கிறது.

பாடல் : 1851

Awo yagi - no	*பசும் யனகி*
Ito no kufasi sa	*நூல் போன்ற தளிருமே*
Faru kaze ni	*வேனிற் காற்றிலே*
Midare nu ima ni	*கலங்கு முன் இப்போது*
Misemu ko mo gamo	*காட்டக் காதலியின்றே*

விளக்கம்

பசுமையான யனகியினுடைய நூல்போன்ற தளிர்தான் வேனிற் காற்றிலகப்பட்டுக் கலங்குவதற்கு முன்னர், அதை நான் காட்டிடக் காதலி இருப்பின் நன்றே.

குறிப்புரை

காதலி அருகில் விரும்பும் காளை. ஒன்றாய் இணையும் விருப்பு. ஆனால் காலத்தாற் பிரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆண் உள்ளத்து நிலை.

உணர்வு நிலை

காதலியை விட்டுப் பிரிந்திருக்க, ஆண் அவள் அருகாமையை நினைந்து இயற்கையைக் காணல். 'காற்றில் கலங்கும் தளிர்' இரு பொருள் நிலை. ஒன்று, இயற்கையான யகிச் செடியின் தோற்றம். மற்றது உள்ளுறை. காதலியின் உடல்நிலைத் தோற்றம்.

பாடல் : 1852

Momo siki no	*கல் நகரது*
ofo miya fito no	*ஒபொ மாளிகை மாந்தர்*
katura keru	*கண்ணியாகிட*
sidari yanagi va	*கூம்பிடு யனகியே*
Miredo akanu kamo	*காணின் சிலவாகுகொல்!*

விளக்கம்

கல் நகரத்து ஒபொ மாளிகையின் மாந்தரது சூடும் கண்ணியாவதற்காகக் கூம்பி நிற்கும் யனகியைப் பார்த்தால் கண்ணி செய்திடக் காணாது.

குறிப்புரை

இப்பாடலில் 'momosiki no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ofo miya' என்னுந் தொடருடன் அணையும். கல் அடுக்கிக் கட்டப்பட்ட மாளிகை.

உணர்வு நிலை

கண்ணி செய்வதற்குக் காலம் வரவில்லையே என ஏங்கும் பெண் உள்ளம், நீண்ட நாள் காத்திருக்கும் நிலைமை. யனகியில் தன் உணர்வேற்றிக் கூறல்.

பாடல் : 1853

Ume no fana	*உமெயின் மலர்*
Tori moti mireba	*பறித்து வைத்துப் பார்ப்பின்*
Waga yado no	*எனது முன்றில்*
Yanagi no mayo si	*யனகியின் புருவம்*
Omofoyuru kamo	*நினைவிலே வருங்கொல்!*

விளக்கம்

உமெயின் மலரைப் பறித்துக் கையிலே வைத்துப் பார்க்கும்போது என் முன்றிலிலேயுள்ள யனகியின் கண் புருவம் நினைவில் வரும்.

குறிப்புரை

வீட்டு வாயிலில் உள்ள யனகியின் மொட்டுக் கட்டிய தாழ்ந்த தோற்றம், பெண்ணின் அழகிய புருவத்திற்கு ஒப்பாக்கப்பட்டுள்ளது. மலர், பெண்ணை நினைவுபடுத்தியது; யனகி, புருவத்தை நினைவு படுத்துகிறது.

உணர்வு நிலை

அன்புக்குரியவளைப் பிரிந்து வினைமேற் சென்ற ஆண், காலத்தில் மலர்ந்த உமெ மலரைக் கண்டவுடன் பறித்துக் கையிலே வைத்து உற்றுப் பார்க்கிறான். அது அவளுடைய சிறப்பழகின் இயல்பை நினைவூட்டுகிறது. வீட்டு வாயிலில் மொட்டரும்பிய யனகிபோல அவரும் புருவம் வளைத்து வழி பார்த்திருப்பாளென எண்ண வைக்கிறது.

பாடல் : 1854

Ugufisu no	*உகுவிசுவும்*
Ko dutafu ume no	*கிளை கடக்க உமெ*
Uturofeba	*சிதறிட்டது*
Sakura no fana no	*சகுர மலரது*
Toki kata makenu	*காலமும் நெருங்கிடும்*

விளக்கம்

உகுவிசுப் பறவை கிளைகளிடையே பறந்து கடந்து சென்றிட உமெயின் மலரும் சிதறிவிட்டது. இனி சகுர மலர் மலர்கின்ற காலமும் விரைவிலே வந்திடும்.

குறிப்புரை

உமெ மலரின் காலம் கழிந்தது. இனிமேல் சகுர் மலர் மலரும். பண்டைய ஜப்பானியர் மலர்களின் மலர்விலே காலத்தின் வருகையைக் கணித்தமை புலப்படுகிறது.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவன் திரும்பி வரும் காலத்தை மலர்களின் மலர்விலே கணிப்பீடு செய்து காத்திருக்கும் பெண். உமெ மலரின் சிதறல் முடிவு துன்ப நிலை முடிவுற்றதை உணர்த்துகிறது.

பாடல் : 1855

Sakura fana	*சகுர மலரின்*
Toki va sugi nedo	*காலமே கழியாது*
Miru fito no	*காணும் மாந்தரின்*
Kofi no sakari to	*விருப்பின் அலர்வுமே*
Ima si tiru ramu	*இப்போ சிதறிடும்*

விளக்கம்

சகுர மலரினுடைய மலர்வுக் காலம் இன்னும் கழிந்திடவில்லை. ஆனால் காண வேண்டும் என்னும் மாந்தருடைய விருப்பத்தின் மலர்ச்சியோ இப்போது சிதறிவிட்டது.

குறிப்புரை

சகுர மலரைப் பார்க்க வேண்டுமென விரும்பும் மாந்தர்கள், தங்களுக்கு விருப்பமானவர்களையும் பார்க்க வேண்டும் என்ற உள்ள மலர்வுடன் இருப்பர். காலம் சென்றதால் உள்ள மலர்வு சிதறிவிட்டது.

உணர்வு நிலை

சகுர மலர்க் காட்சியை அன்புக்குரியவனுடன் காணக் காத்திருக்கும் பெண்ணின் உள்ள மலர்ச்சிச் சிதறல், அவன் வரவு பிந்திவிடுமென உணர்ந்தாள்.

பாடல் : 1856

Waga saseru	*நான் சூடுகின்ற*
Yanagi no ito wo	*யனகியின் தளிரை*
Fuki midaru	*வீசிக் கலைக்கும்*
Kaze ni ka imo ga	*காற்றிலா காதலியின்*
Ume no tiru ramu	*உமெயும் சிதறிடும்*

விளக்கம்

நான் தலையிலே சூடுகின்ற நூல்போன்ற யனகியின் மென்றளிரை வீசிக் கலைக்கின்ற காற்றிலே, என் காதலியின் உமெ மலரும் சிதறிடும்.

குறிப்புரை

ஆண்கள் மலர் சூடும் வழக்கம் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. பியர்சன், ஆண் நாட்டி வைத்த யனகி என விளக்கம் கூறுகிறார். வேனிற் காலம் வந்ததை உமெயும் சிதறும் எனக் குறிப்பினாலே விளக்கல்.

உணர்வு நிலை

காலம் கழிவது உணர்ந்த ஆணின் கவலை, சூடும் யனகியும் உமெ மலரும் காற்றில் சிதறுவது பிரிவினால் பெண் நலியும் என வருந்துவதை உணர்த்தும்.

பாடல் : 1857

Tosi no va ni	*ஒவ்வோ ராண்டுமே*
Ume va sake domo	*உமெ மலர்ந்திடினும்*
Utusemi no	*வெறுங் குடிலின்*
Yono fito kimi si	*தேய மாந்தன் உனக்கு*
Faru nakari keri	*வேனில் மீண்டும் வராதே*

விளக்கம்

ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் உமெ மலர் மலர்ந்தாலுமே வெறுங்குடிலை யொத்த உயிர் வாழ்க்கையையுடைய தேயத்து மாந்தனாலே உனக்கு வேனில் மீண்டும் வாராதே.

குறிப்புரை

'utusemi no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடர். 'yo'வுடன் அணையும். உயிர் வாழ்வு பற்றிய விளக்கம் வெறுங்குடில் போன்ற உடம்பு.

உணர்வு நிலை

உலக வாழ்க்கையில் ஈடுபாடு கொண்ட ஆணுக்கு இயற்கைபற்றிய உணர்வு இல்லையே என வருந்தும் பெண் பிரிவு நீண்டதால் இவ்வுணர்வு.

பாடல் : 1858

Ututave ni	*முற்றிலுமே தான்*
Tori va famanedo	*புள்ளே உண்ணாதெனினும்*
Sime fafete	*தோரணம் நாட்டிக்*
Moramaku fosiki	*காவலிடவே ஆவல்*
Ume no fana kamo	*உமெயின் மலர்கொலோ!*

விளக்கம்

முற்றிலும் புள் உண்ணாது உமெயின் மலரையே. எனினும் அம்மலரைத் தோரணம் நாட்டிக் காவல் செய்திட ஆவலாய் உள்ளேன்.

குறிப்புரை

காதலியாகிய உமெயைக் காவல் செய்ய எண்ணல். Sime ஜப்பானியரது மரபான தோரணம். கடுதாசித் துண்டுகளைக் கயிற்றிலே கட்டித் தொங்கவிடல்.

உணர்வு நிலை

தான் பிரிந்திருக்கும் வேளையிலும் அன்புக்குரியவளைக் காவல் செய்ய விரும்பும் ஆண் உள்ளம்.

பாடல் : 1859

uma mabete	*மா நிரைத்திட்ட*
Taka no yama fe wo	*தக மலைச் சாரலை*
sirotave ni	*வெண் நிறமாக*

Nifofasitaru va	*மாறச் செய்திருப்பது*
ume no fana kamo	*உமெயின் மலர்கொலோ!*

விளக்கம்

குதிரை அணி வகுத்தாற்போன்ற தகா மலையின் சாரலை வெண்நிறமாக மாறச் செய்திருப்பது, அங்கே மலர்ந்திருக்கிற உமெ மலர்போலும்.

குறிப்புரை

மலர் வெண்ணிறம், மலைச்சாரல் முழுவதற்கும் வெண்ணிறம் பூசியது போலாக்கியுள்ளது. சார்ந்தோரை மாற்றும் மலர் உமெ காதலியின் இயல்பு.

உணர்வு நிலை

வினைவயின் செல்லும் ஆண், இயற்கைக் காட்சி காணும்போது தன் காதலி இயல்பையும் காணல்.

பாடல் : 1860

Fana sakite	*மலர் அலர்ந்தே*
Mifa narazudomo	*கனி யாகா தெனினும்*
Nagaki-ke ni	*நெடு நாளிலும்*
Omofoyuru kamo	*நினைத்திடும் உனையே*
Yama buki no fana	*யமபுகி மலரே!*

விளக்கம்

மலர் அலர்ந்து கனியாகாதெனினும் நீண்ட நாள்களுக்கு உனையே நினைத்திருப்பேன் யமபுகி மலரே. நேரே வந்து காண முடியா விட்டாலும் என்றும் உன்னை நினைத்துக்கொண்டிருப்பேன்.

குறிப்புரை

நீண்டகாலப் பிரிவு காணும் நிலையும் ஐயமே. எனினும், நினைத்து வாழும் பண்பு. பெண் யமபுகி மலராக உருவகம். 'யமபுகி' மஞ்சள் ரோஜா எனவும் அழைக்கப்படும் மலர்.

உணர்வு நிலை

காதலியைக் காண முடியாமல் நீண்ட காலம் பிரிந்திருக்கும் காதலன் மனநிலை. நினைவில் வாழும் தன்மை.

பாடல் : 1861

Noto gava no	*நொதொ ஆற்றிலே*
Mi na zoko safe ni	*நீர் அடி மட்டத்திலும்*
Teru made ni	*ஒளிரும் வரை*
Mikasa no yama va	*மிகசவின் மலையே*
Saki ni keru kamo	*மலர்ந்து வந்ததுகொல்!*

விளக்கம்

நொதொ ஆற்று நீரின் அடி மட்டத்திலும் ஒளிரும்வரை மிகச் மலையிலே சகுர மலரும் மலர்ந்ததே.

குறிப்புரை

பாடலில் குறிப்பிடப்படாத மலர் சகுர. ஆற்று நீரின் தெளிவில் அடிமட்டம் வரை மலர் ஒளிரும்.

உணர்வு நிலை

பெண்ணின் எழில் கூறும் ஆண். மிகச மலையில் மலரும் சகுர போன்ற காதலி. உவகையின் மிக்குணர்வு.

பாடல் : 1862

Yuki mireba	*பனி காண்பதால்*
Imada fuyu nari	*இப்போதும் பனிக் காலம்*
Sikasu gani	*இன்னுமேதான்*
Faru gasumi tati	*வேனிலின் புகார் நிற்க*
Ume va tiri tutu	*உமெயே உதிர்ந்திடும்*

விளக்கம்

பனியைப் பார்க்கும்போது இப்போதும் பனிக் காலம்தான். எனினும் வேனிற் புகாரும் நிற்க உமெயின் மலரும் உதிர்ந்திடும்.

குறிப்புரை

காலம்பற்றிய தெளிவின்மை. பனி பெய்யும்போதே வேனிற் புகாரும் எழுகின்றது. வேனிலில் உமெ உதிர்ந்திடும் என்பது குறிப்புப் பொருள்.

உணர்வு நிலை

காதலன் வரவு நீட்டத்தால் துன்புறும் பெண். உமெயின் உதிர்வில் அவள் துயர் பொதியப்பட்டுள்ளது.

பாடல் : 1863

Koso sakisi	*சென்ற ஆண்டு அலர்*
Fisaki ima saku	*பிசகி இப்போ அலர்ந்து*
Itadura ni	*நலிவினிலே*
Tuti ni ya otimu	*வருந்தியே உதிரும்*
Miru fito nasi ni	*காணும் மாந்தர் இன்றியே*

விளக்கம்

சென்ற ஆண்டுபோல இப்போதும் பிசகி மலர் மலர்ந்துள்ளது. ஆனால் அதைப் பார்த்து மகிழும் மாந்தர் இன்மையால், நலிவில் வருந்தியே உதிர்ந்திடும்.

குறிப்புரை

மலர்கள் மலர்வது மாந்தர் பார்த்து மகிழ்வதற்காக. அப்படி யாரும் பார்த்து மகிழாவிடின், அவை துன்பத்தால் வாடிப் பயனின்றி வீணே உதிரும். இயற்கைக் காட்சியின் கடமை உணர்த்தப்பட்டுள்ளது.

உணர்வு நிலை

பெண்ணின் மலர்ச்சியும் ஆண் பயன் பெறுவதற்காகவே. ஆண் பயன்படுத்தாவிடின் மலர்ச்சியும் பயனற்றதாகிவிடும்.

பாடல் : 1864

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama no ma terasu	*மலையின் இடை ஒளிர்*
Sakura fana	*சகுர மலர்*
Kono faru same ni	*இவ்வேனில் மழையிலே*
Tiri-yukamu kamo	*உதிர்ந்து செலுங்கொலோ!*

விளக்கம்

அடி இழுக்கும் மலையின் இடையிலே மலர்ந்து ஒளிர்கின்ற சகுர மலர், இப்போது பெய்கின்ற வேனில் மழையிலே உதிர்ந்தும் போய்விடுமோ.

குறிப்புரை

'asifi kino' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடர். 'yama' என்ற சொல்லுடன் அணையும். வேனில் மழை, சகுர மலரின்

உதிர்வை விரைவுபடுத்தும் என்பதில் குறிப்புப் பொருள். பிரிவுத் துயரால் பெண்ணழகு கெடும்.

உணர்வு நிலை

பிரிவின் துயரால் வாடும் பெண். மழையில் உதிரும் மலருடன் தன்னை ஒப்பிடல்.

பாடல் : 1865

Uti nabiku	*தளிர்கள் தாழும்*
Faru sari kurasi	*வேனிலும் வந்ததுவோ*
Yama no ma no	*மலை இடையின்*
Tofoki ko-nure no	*தொலை மரக் கிளையின்*
Saki yuku mireba	*மலர்ச்சியைக் காணவே*

விளக்கம்

தளிர்கள் தழைத்துத் தாழுகின்ற வேனிற் காலம் வந்துவிட்டது போலும். மலை இடையே உள்ள தொலைவான மரக்கிளையும் நன்கு மலர்ந்து காணப்படுகிறதே.

குறிப்புரை

காலத்தின் வருகையைத் தொலைவிலுள்ள மரம் உணர்த்தல். படிப்படியாக வேனிற் காலமும் வருகிறதென்ற மகிழ்வு.

உணர்வு நிலை

அன்புக்குரியவன் வருங்காலம் படிப்படியாக அண்மித்து வருவதை உணர்தல். பொறுமையோடு காத்திருக்கும் பெண்.

பாடல் : 1866

Kigisi naku	*கிகிசி நரல்*
Taka mato no fe ni	*தகமதொவின் சாரல்*
Sakụra fana	*சகுர மலர்*
Tirite nagaravu	*உதிர்ந்து வந்திடுமே*
Mimu fito mo ga mo	*காணும் மாந்தரும் உண்டோ!*

விளக்கம்

கிகிசிப் புள் ஒலிக்கின்ற தகமதொ மலையின் சாரலிலே சகுர மலர் உதிர்ந்து வருகின்றது. அதைப் பார்க்கின்ற மாந்தர் யாராவது இருப்பின் நன்று.

குறிப்புரை

கிகிசி, பறவையின் பெயர். நீண்ட வால் கொண்டது. தகமதொ, மலையின் பெயர். சுசுக மலையின் தெற்குப் பக்கம் உள்ளது. நரவிலுள்ளது.

உணர்வு நிலை

மலர் உதிர்வைச் சேர்ந்து காண்பதற்கு ஆவல். ஆனால் அவள் காதலன் அருகிலே இல்லை. திரும்பி வரும் வழியில் அவன் மலர் உதிர்வைக் காணக்கூடுமென்ற எண்ணம்.

பாடல் : 1867

Afo yama no	*அவொ மலையின்*
Sakura no fana va	*சகுரவின் மலரே*
Kefu mo ka mo	*இன்றும் தானோகொல்*
Tiri midaru ramu	*உதிர்ந்து சிதறிடும்*
Miru fito nasi ni	*காணும் மாந்தரும் இன்றே*

விளக்கம்

அவொ மலையில் மலர்ந்துள்ள சகுர இன்றும் உதிர்ந்து சிதறியிருக்குமோ. அதைப் பார்க்கும் மாந்தரும் இல்லையாகும்.

குறிப்புரை

மலர் உதிர்வு சில நாட்கள் இருப்பது. சகுர மலர் உதிர்வு மாந்தர் காணாமலே சிதறுகிறது. அவொ மலை மியெ பகுதியில் உள்ளது.

உணர்வு நிலை

மலர் உதிர்வு தொடர்கிறது. விரைவில் முழுவதுமே சிதறிவிடும். அதற்கிடையில் அன்புக்குரியவன் வர வேண்டுமே என்ற ஆவல்.

பாடல் : 1868

Kafadu naku	*தவளை கத்தும்*
Yosinu no kava no	*யொசிநு ஆற்றினது*
Tagi no fe no	*அருவியின்மேல்*
Asifi no fana zo	*அசிபியின் மலர்தான்*
Fasi ni oku na yume	*நிலத்தில் வீழ விடேல்*

விளக்கம்

யொசிநு ஆற்றினது அருவியின்மேல் தவளை கத்தும். இந்த அசிபி மலர்களைக் கீழே வீழ்த்திவிடாதே.

குறிப்புரை

ஆண் பெண்ணுக்கு மலர் கையுறையாகக் கொடுக்கும் மரபு. அசிபி மலர்களை நிலத்தில் வையாதே குறிப்புப் பொருள் உணர்த்தும். அன்பு நிலை பேண வேண்டுதல்.

உணர்வு நிலை

தன் காதல் உணர்வைப் பெண்ணுக்குக் கையுறை வழங்கிப் புலப்படுத்தும் ஆண்.

பாடல் : 1869

Faru same ni	*வேனில் மழையின்*
Arasofi kanete	*பெயல் வலி தாங்காமல்*
Waga yado no	*எனது முன்றில்*
Sakura no fana va	*சகுரவின் மலரே*
Saki some ni keri	*மலர்ந்து வந்திட்டது*

விளக்கம்

வேனிற் காலத்து மழையின் வலியைத் தாங்க முடியாமல், எனது வாயிலிலே உள்ள சகுரவின் மலர் அலர்ந்துவிட்டது.

குறிப்புரை

வேனில் மழையின் பெயல், ஆணின் வலிக்கு உவமை; சகுர மலர் அலர்வு, பெண்ணின் ஒப்புதல்.

உணர்வு நிலை

விருப்பிற்கு இணங்கிய பெண்ணை உவமித்தல். ஆண்மையின் வெளிப்பாடு.

பாடல் : 1870

Faru same va	*வேனில் மழையே*
Itaku na furi so	*வன்பெயல் பொழியாதே*
Sakura fana	*சகுர மலர்*
Imada mi naku ni	*இப்போது காணாமலே*
Tiramaku wosi mo	*உதிர்ந்திடக் கூடுமோ!*

விளக்கம்

வேனில் மழையே வலிமையாகப் பெய்யாதே. சகுர மலருமே நான் இப்போது போய்க் காணாமலே உதிர்ந்திடக்கூடுமோ!

குறிப்புரை

வேனில் மழை பெண்ணின் பார்வையில் அழகு சிதைக்கும் பண்புடையதாய்த் தெரிகிறது.

உணர்வு நிலை

மலர் காணச் செல்லும் விருப்பு. வேனில் மழை தடுப்பு. நிறுத்திட முயற்சி. களவுக் காதல் நிலை.

பாடல் : 1871

Faru sareba	*வேனில் வந்ததே*
Tiri maku wosiki	*உதிர்ந்திடக் கூடுமே*
Ume no fana	*உமெயின் மலர்*
Simasi va sakazu	*உடனே மலராது*
Fufumite mo ga mo	*மூடிடு முகை நன்றே*

விளக்கம்

வேனில் வந்தது. உமெ மலர் உதிர்ந்திடக் கூடும். எனவே உடனே உமெ மலராது மூடிய மொட்டாகவே இருப்பதுவே நன்று.

குறிப்புரை

மலரைவிட மொட்டை விரும்பல். விரிந்தால் மலர் உதிர்ந்து சிதறும் எனவே அரும்பு நிலையிலே காலநீட்டம் வேண்டல்.

உணர்வு நிலை

வினை முடியும் காலம்வரை மலர் அலர்வை மறிக்கும் ஆண் மகன், பெண்ணின் துயர் காணப்பொறாத நல்ல உள்ளம் கொண்டவன். சற்றுக் காலம் பொறுக்க வேண்டும்.

பாடல் : 1872

Mi wataseba	*பார்வை கடப்பின்*
Kasuga no nobe ni	*கசுகவின் சாரலில்*
Kasumi tati	*புகார் நிற்கவே*
Saki nifoferu va	*முகிழ்த்து மலர்ந்ததே*
Sakuma fana kamo	*சகுரவின் மலர்கொல்!*

விளக்கம்

பார்வையைத் தொலைவில் செலுத்தினால், கசுக மலைச் சாரலிலே புகார் எழுந்து நிற்கிறது. அங்கே சகுர மலர் முகிழ்த்து மலர்ந்துள்ளது.

குறிப்புரை

பார்வையை இயன்றவரை தொலைவில் செலுத்துவது, போனவர் வரவு காத்திருக்கும் நிலை.

உணர்வு நிலை

பிரிந்தவரோடு கூடக் காத்திருக்கும் பெண்ணுக்குத் தொலைவிலே மலைச் சாரலிலே பூத்திருக்கும் சகுரமலர் மகிழ்வைக் கொடுக்கிறது. மலரின் அழகுத் தோற்றம் உள்ளத்தையும் மலர வைக்கிறது. பிரிவின் துயர்நிலையைக் குறைக்கிறது.

பாடல் : 1873

Itu si kamo	*எப்போதுகொல்லோ*
Kono yo no akemu	*இவ்விராவும் விடியும்*
Uguvisu no	*உகுவிசுவின்*
Ko dutafi tirasu	*கிளைத் தாவலில் உதிர்*
Ume no fana mimu	*உமெ மலர் காண்போம்*

விளக்கம்

இந்த நீண்ட இரவு எப்போது விடியப் போகிறதோ? உகுவிசு கிளை தாவிச் செல்லும்போது உதிர்கின்ற உமெ மலரைக் காண்பதற்கே.

குறிப்புரை

உதிர்கின்ற உமெ மலர் குறிப்புப் பொருள். பிரிவால் உடல் நலிகின்ற பெண்ணைக் குறிக்கிறது.

உணர்வு நிலை

விரைவில் அன்புடையாளைச் சேரும் விருப்பு. இரவும் நீண்டதாகத் தெரிகிறது. பிரிவினால் தூக்கமில்லாத நிலை.

பாடல் : 1874

Faru gasumi	*வேனில் புகார்*
Tanabiku kefu no	*தவழ்கிறது இந்த*
Yufu - duku yo	*மாலை நிலாவும்*
Kiyoku teru ramu	*நன்கு ஒளி வீசிடும்*
Takamatu no no ni	*தகமது சாரலே*

விளக்கம்

வேனிற் புகார் தவழ்கிறது. இந்த மாலை நேரத்திலே தகமதுவின் சாரலில் நிலாவும் நன்கு ஒளி வீசிடும்.

குறிப்புரை

வேனிற் புகாரும் நிலவும் காலமும் பொழுதும் உணர்த்துவன. வேனிற் காலம் மாலைப் பொழுது.

உணர்வு நிலை

வினைவயிற் சென்றோன் நிலவு கண்டு பிரிவுத் துயரால் நலிதல். உள்ளத்துக்கினியவளுடன் மகிழ நிலாவும் அங்கு இருக்குமென எண்ணல்.

பாடல் : 1875

Faru sareba	*வேனில் வந்ததே*
Ki no ko no kure no	*மரக்கிளை அடர்வில்*
Yufu duku yo	*மாலை நிலாவே*
Obotu kanasi mo	*மங்கிக் கலங்கிடுமோ*
Yama - kage ni site	*மலையின் நிழலிலே*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது எனில், மரக்கிளைகளின் அடர்விலே மலையின் நிழலிலே மாலைக் காலத்து நிலவும் இனி மங்கித் தெளிவின்றித் தெரியுமோ?

குறிப்புரை

காலமும் பொழுதும் கூறல். வேனிற் காலம். மாலைப் பொழுது. நிலவு குறிப்புப் பொருள். பிரிந்து சென்றவனைக் குறிக்கிறது. மலை நிழலும் மரக்கிளை அடர்வும் இருட்டைக் கொடுப்பது; துன்பத்தின் பெருக்கம்.

உணர்வு நிலை

பிரிந்தவன் வரும்வரை நிலவைப் பார்த்து அவன் கடமை உணர்ந்திருந்தாள். ஆனால் இயற்கை நிலை மாற்றம் அவள் உள்ளத்தைக் கலங்க வைக்கிறது.

பாடல் : 1876

Asa - gasumi	*காலைப் புகாரின்*
Faru-fi no kure ba	*வேனில் கதிர் மடியும்*
Ko-no- ma yori	*மரங்களிடை*
Utu rofu tuki wo	*நகர்ந்திடு நிலவை*
Itu to ka matamu	*என் றுவரை காத்திடும்?*

விளக்கம்

காலைப் புகாரின் வேனிலிலே, கதிர் மடிய மரங்களிடையே நகர்ந்திடும் நிலவை, நான் காண்பதற்கு என்றுவரை காத்திட வேண்டுமோ?

குறிப்புரை

இப்பாடலிலே 'Asa-gasumi' என்ற தொடர் தலையணைச் சொற்றொடராகும். 'Faru' என்ற சொல்லுடன் அணையும். நிலவு குறிப்புப் பொருள். பிரிவிற் சென்றுள்ள ஆணைக் குறிக்கும்.

உணர்வு நிலை

மரங்களிடையே நகரும் நிலவைப் பார்த்துப் பிரிந்து சென்றவனது பணியை எண்ணிப் பொறுமையுடன் காத்திருக்கும் பெண். வேனிலின் வரவால்–உள்ளம் தளும்பல்.

பாடல் : 1877

Faru no ame ni	*வேனில் மழையின்*
Arikeru mono wo	*பொழிவின் கடுமையிலே*
Tati kakure	*தங்கி நின்றிடக்*
Imo ga ife di ni	*காதலி வீட்டுத்தெரு*
Kono fi kurasitu	*இந்நாளில் இருண்டதே*

விளக்கம்

வேனிற் காலத்திலே பொழிகின்ற மழையின் கடுமையிலே நான் தங்கி நின்றிட்ட காதலியின் வீட்டுத் தெருவும் இந்நாளின் முடிவிலே இருண்டது.

குறிப்புரை

மழைக்குத் தங்கி நின்றிட்டதால் தெருவாலே சென்று அவன் பணியைத் தொடர முடியாமற் போயிற்று. நீண்ட நேரம் கடுமையான பெயல். வேனில் மழையின் இயல்பு.

உணர்வு நிலை

இருள் பரவுமுன்னர் காதலியைப் பிரிய விரும்பியவனை மழை தடுத்து நிறுத்திவிட்டது. இன்னோர் இரவு அவளுடன் இருக்க முடிந்ததில் மகிழ்ச்சி.

பாடல் : 1878

Ima yukite	*இப்போது சென்று*
Kiku mono ni mo ga	*கேட்க விரும்பிடுமே*
Asuka - gava	*அசுக ஆற்றில்*
Faru same furite	*வேனில் மழை பொழிந்த*
Tagitu se no to wo	*நீர் சுழிக்கும் குரலே*

விளக்கம்

(நான்) இப்போது சென்று கேட்க விரும்புவதே அசுக ஆற்றிலே வேனில் மழை பொழிந்ததால் நிறைந்த நீர் சுழித்து ஓடும் குரலே.

குறிப்புரை

ஆறு தொடர்புடுத்திய பாடல். 'நீர் சுழிக்கும் குரல்' குறிப்புப் பொருள். மகிழ்வின் குரல். ஆற்றில் நீர் நிறைய நீரின் சுழிக்கும் குரல்

வேறுபடும். அவனைக் கண்ட மகிழ்வாள் அவள் குரல் வேறுபடும். அசுக ஊர் நரவில் உண்டு.

உணர்வு நிலை

காதலியை மகிழ்விக்க விரைந்து செல்ல விருப்புற்ற ஆண் மகன். அவன் உள்ளத்து நிலையை மழை நீர் நிறைந்த ஆற்றின் ஓட்டம் விளக்கும்.

பாடல் : 1879

Kasuga no ni	*கசுக வயல்*
Kefuri tatu miya	*புகை நின்றிடக் காணும்*
Wotome rasi	*மகளிர் தானோ*
Faru no no ufagi	*வேனில் வயலின் தழை*
Tumite ni rasi mo	*பறித்து அவிக்குமோ?*

விளக்கம்

கசுக வயல் வெளியிலே புகை நிற்பது தெரிகிறது. மகளிர் கூடி வேனில் வயலின் தழையைப் பறித்து அவிக்கின்றார்களோ?

குறிப்புரை

மகளிர் தழை பறித்து உணவுக்காக அவிக்கும் வழக்கம் கூறப்பட்டுள்ளது. வேனிற் காலத்து உணவு. 'புகை நிற்றல்' தொகையை விளக்கும். புகையைத் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

விரைந்து வீடு செல்ல நினையும் ஆண் மகன், வேனிற் கால உணவும் நினைவுக்கு வந்தது.

பாடல் : 1880

Kasuga no no	*கசுக வயல்*
Asadi ga ufe ni	*நாணலின் கரையிலே*
Omofu doti	*ஆயத்துடனே*
Asobu kono fi va	*ஆடிய இந் நாளையே*
Wasurayeme ya mo	*மறந்திடக் கூடுமோ?*

விளக்கம்

கசுக வயல்வெளியின் நாணற் கரையிலே ஆயத்துடன் விளையாடிய இந்த நாளினை என்னால் மறந்திட முடியுமோ?

குறிப்புரை

ஆயத்துடனான ஆடல் தொடர்புறுத்திய பாடல். காதலியை முதலில் கண்ட நிலை.

உணர்வு நிலை

உள்ளம் கவர்ந்த நிகழ்வை நினைத்தல். மறக்காமல் உள்ளத்திலே இருத்தும் முயற்சி. ஆண் இயல்பு விளக்கம்.

பாடல் : 1881

Faru-gasumi	*வேனிலின் புகார்*
Tatu kasuga no wo	*நிற்கும் கசுக வயல்*
Yuki kaferi	*போய்த் திரும்பிட*
Ware va avi-mimu	*நாங்களே நேரில் காணும்*
Iya tosi no fa ni	*ஒவ்வோர் ஆண்டிலுமே*

விளக்கம்

வேனிற் காலத்துப் புகார் படர்ந்து நிற்கும் கசுக வயல். அப்புகார் போய் மீண்டும் அடுத்த ஆண்டு திரும்பி வரும். அதுபோலவே நாங்களும் ஒவ்வோர் ஆண்டிலும் நேரிலே காணுவோம்.

குறிப்புரை

வேனிற்காலம் ஆண்டுதோறும் வரும். புகாரும் போய்த் திரும்பி வரும். இருவர் இணைவும் அவ்வாறு ஆண்டுக்கொரு முறையாவது நடக்க வேண்டும்.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவன் ஆண்டில் ஒருமுறையாவது தன் அன்புக்குரியவளை இணைய எண்ணுதல்.

பாடல் : 1882

Faru no no ni	*வேனில் வயலில்*
Kokoro nobemu to	*உள்ளம் குளிர்ந்திடவே*

Omofu - doti	*ஆயத்துடனே*
Kosi kefu no fi va	*நான் சென்றிட ஞாயிறே*
Kurezu mo aranu ka	*மறைந்திடாதன்று கொல்*

விளக்கம்

என் உள்ளங் குளிர்ந்திடவே தோழருடன் நான் சென்றேன். வேனிற் காலத்து வயல் நாடி இன்று சென்றேன். ஞாயிறு மறையாத நாளும் உண்டோ!

குறிப்புரை

ஞாயிறு மறையாத நாள் இருப்பின் நன்று. உள்ளத்துத் துயர நினைவுகளைக் களைந்து நெடுநேரம் வேனில் வயலிலே தோழர்களுடன் இருக்கலாம். இயற்கையை மாற்ற முடியாமை உணர்ந்திருத்தல்.

உணர்வு நிலை

பிரிவுத் துயர நினைவுகளிலிருந்து விடுபட வழி தேடும் ஆண் தோழர்களுடன் வேனில் வயலிலே நீண்ட பொழுதைக் கழிக்க ஞாயிறும் மறையாமலிருப்பதை விரும்பி நிற்கிறான்.

பாடல் : 1883

Momosiki no	*கல் நகரது*
Ofomiya fito va	*மாளிகை மாந்தருக்கே*
Itoma are ya	*வேளை இருந்ததே*
Ume wo kazasite	*உமெ தலையிற் சூடி*
Koko ni tudoferu	*இங்கே கூடிடவுமே!*

விளக்கம்

கல் நகரத்து ஒபொ மாளிகையின் மாந்தருக்கு ஓய்வு வேளையும் இருந்ததே? உமெ மலரைத் தலையிற் சூடி இங்கே வந்து கூடிடவே.

குறிப்புரை

இப் பாடலிலே 'momosiki no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ofomiya' என்னுந் தொடருடன் அணையும். இம்மாளிகை பல்லாயிரம் கற்களாற் கட்டப்பட்டது.

உணர்வு நிலை

ஆண் மாளிகை மாந்தரது கூட்டம் கண்டு தன்னிலை எண்ணல்.

பாடல் : 1884

Fayu sugite	*பனி கழிய*
Faru si kitareba	*வேனில் தொடர்ந்ததுவே*
Tosi tuki va	*ஆண்டும் மாதமும்*
Arata nare domo	*புதிதாகு மெனினும்*
Fito va furi yuku	*மாந்தர் முதியராகும்!*

விளக்கம்

பனி பெய்யுங் காலங் கழிய, வேனிற் காலம் தொடர்ந்து வந்தது. ஆண்டும் மாதமும் புதிதாக மாறின. ஆனால் மாந்தரோ வயது கூடி முதியவராகின்றனரே!

குறிப்புரை

மாந்தர் வயது கணக்கிடும் முறைமை. இயற்கையின் மாற்றம் புதியது. மாந்தர் தோற்றம் புதுமை பெறாது. முதுமையே பெறும்.

உணர்வு நிலை

முதுமை நிலை கண்டு கழிவிரக்கம் கொள்ளும் ஆண், நீண்ட பிரிவில் இளமைக் காலம் திரும்பாமை உணர்ந்து கூறல்.

பாடல் : 1885

Mono mina va	*எல்லாப் பொருளும்*
Aratasiki yosi	*புதிதாகிடும் நன்றே*
Tadasiku mo	*புதுமை பெறும்*
Fito va furusiki	*மாந்தர் பழைமைபெறும்*
Yorosi karu besi	*இதுவே நன்று ஆகும்*

விளக்கம்

எல்லாப் பொருள்களுமே புதிதாகிவிடும். காணும்போது புதுமை பெறும். ஆனால், மாந்தரோ பழைமை பெறுவர். இதுவே நன்றும் ஆகும்.

குறிப்புரை

புதுமை, பழைமைபற்றிய பட்டறிவு. மனிதன் தோற்றம் ஆண்டு கழியின், பழைமை பெறும். புதுமையாகப் பொலிவுடன் தோற்றாது.

உணர்வு நிலை

பட்டறிவு மிக்க ஆணின் நிலை வழுமை நிலை உணர்தல். பிரிவு நீளும்போது வழமையான நிலைகளை எண்ணிப் பார்க்கும் அறிவுடைமை.

பாடல் : 1886

Suminoye no — *சுமி நொயெயின்*
Sato yukisikaba — *ஊருக்குச் சென்றிடவே*
Faru fana no — *வேனில் மலரின்*
Iya medurasiki — *காதல் புதுமையிலே*
Kimi ni aferu kamo — *உன்னையுமே கண்டேன்கொல்!*

விளக்கம்

சுமிநொயெயில் உள்ள என் ஊருக்குச் சென்றதாலே, வேனில் மலரின் காதல் புதுமையிலே உன்னையும் நான் காண முடிந்ததே. மீண்டும் மீண்டும் காண வேண்டுமென்ற விருப்புத் தரும் அழகு. வேனில் மலர் அழகு அத்தகையது.

குறிப்புரை

சுமிநொயெ, இடத்தின் பெயர். ஒசக நகரில் அமைந்திருந்தது. வேனில் மலரைக் காணச் சென்றபோது காதலியையும் கண்டமை. அதனால் ஒப்பிட்டுக் கூறல்.

உணர்வு நிலை

உள்ளம் கவர்ந்தாளை முதன் முதல் கண்டபோது ஏற்பட்ட உணர்வின் வெளிப்பாடு. இயற்கை இருவரையும் இணைய வைத்தது. மலரைக் காணச் சென்றபோது மலர்போன்ற அழகும் இயல்புமுடையவளைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி நிலை.

பாடல் : 1887

Kasuga naru — *கசுகவின்*
Mikasa no yama ni — *மிகச மலையின்மேல்*

Tuki mo idenu kamo	*நிலவும் வந்திடுங்கொல்!*
Saki-yama ni	*சகி மலையில்*
Sakeru sakura no	*அலர்ந்த சகுரவின்*
Fana no miyu beku	*மலரைக் காண வேண்டும்*

விளக்கம்

சுகுசுவிலுள்ள மிகச மலையின்மேல் நிலவு எழுந்து வந்திடாதோ! சகி மலையிலே மலர்ந்துள்ள சகுர மலரை அப்போது தெளிவாகக் காண முடியும்.

குறிப்புரை

இது Sedoka பாடல். ஆறு அடிகள் கொண்டது. நிலவொளியில் மலரின் அழகுத் தோற்றம். சகிமலை நரவில் அமைந்துள்ளது.

உணர்வு நிலை

காலம் காத்திருக்கும் பெண். இரவில் மலையில் அலர்ந்த சகுரவைக் காண விரும்பி, நிலவொளி வரவைக் காத்திருத்தல். இரவின் இருளில் மலை கண்ணுக்குப் புலப்படாது. மலர் காண விரும்புவோர்க்கு நிலவொளியும் வேண்டும்.

பாடல் : 1888

Sira yuki no	*வெண் பனியும்*
Tune siku fuyu va	*பெய்யும் பனிக்காலமே*
Sugini kerasi mo	*கழிந்திடுகின்றதோ*
Faru-gasumi	*வேனிலின் புகார்*
Tanabiku nube no	*தவழும் வயலிலே*
Ugufisu nakinu	*உகுவிசு நரலும்*

விளக்கம்

வெண்மையான பனி தொடர்ந்து பெய்கின்ற பனிக் காலமேதான் கழிந்திடுகின்றதோ! வேனிலின் புகார் தவழுகின்ற வயலிலே உகுவிசுப் பறவையும் குரல் கொடுக்கின்றது.

குறிப்புரை

இதுவும் Sedoka பாடல். பனிக் கால இயல்பும் வேனிற் கால இயல்பும் விளக்கம் பெற்றுள்ளன. பறவையின் குரல் வேனிற் காலத்தின் குரல்.

உணர்வு நிலை

காலத்தைக் காத்திருக்கும் பெண். இயற்கை நிலையிலே கால வேறுபாட்டினைக் கணிக்கும் தன்மை. உகுவிசுவின் குரல் காத்திருக்கும் வேனிற் காலத்தின் குரலாக அவள் காதில் விழுகிறது.

பாடல் : 1889

Wago yado no	*எனது முன்றில்*
Ke-momo no sita ni	*மயிர் மொமொ அடியில்*
Tuku yo sasi	*நிலா ஒளிர*
Sita kokoro yosi	*ஆழத்தில் உள்ளமேதான்*
Utate konogoro	*சோர்ந்திடும் இந்நாளிலே*

விளக்கம்

எனது வீட்டு வாயிலிலே நிற்கின்ற மெல்லிய மயிர் படர்ந்த மொமொ பழ மரத்தினடியிலே, நிலவு இரவிலே ஒளிர்வதைக் காண, எனது உள்ளத்தின் அடியில் சோர்வுதான் இந்நாட்களில் ஏற்படுகிறது.

குறிப்புரை

இப்பாடல் உரையாசிரியர்க்கிடையில் வேறுபட்ட பொருள் தரும் பாடலாகும். மகளின் பூப்பு நிலை கண்ட தாயின் நிலைபற்றிய பாடல் என்றும், நிலவு கண்டு வருந்தும் பெண்ணின் மனநிலை என்றும் இருவேறுபட்ட பொருள் உண்டு. பியர்சன் முதற் பொருள் பற்றிக் குறிப்பிடவில்லை. பேரா. ஒனோவின் பதிப்பு குறிப்பிடப் பட்டுள்ளது. மொமொ பழம் பாடலிலே உருவகமாகப் பயன்பட்டுள்ளது. 'மயிர் மொமொ' என்பது உள்ளுறைப் பொருள் தருகின்றது என்பர்.

பாடல் : 1890

Kasuga no no	*கசுக வயல்*
Tomo ugufisu no	*இணை உகுபிசுவின்*
Naki wakare	*அழும் பிரிவு*
Kaferimasu ma mo	*திரும்பிடு வேளையும்*
Omofose ware wo	*நினையாயோ எனையே!*

விளக்கம்

கசுக வயல் வெளியிலே இணைந்திருந்த உகுவிசுப் பறவைகள் பிரியும்போது அழுதுகொண்டே பிரிகின்றன. நீயும் (வினை முடித்து)

திரும்பி வரும்போது பறவைகள் பிரிந்து செல்கின்ற காட்சியைக் காணும்போது என்னையும் நினைப்பாயே!

குறிப்புரை

உகுவிசு, பறவையின் பெயர். பறவைகளும் பிரியும்போது மாந்தரைப் போல அழுது பிரியும். தொடர்ந்து 7 பாடல்கள் வேனிற் பிரிவு பற்றியவை.

உணர்வு நிலை

பிரிந்து சென்றிருக்கும் துணைவனைக் காத்திருக்கும் பெண், தன்னையே நினைத்து வர, இயற்கைக் காட்சி துணை நிற்குமென எண்ணுகிறாள்.

பாடல் : 1891

Fuyu gomori	*பனி மறையும்*
Faru saku fana wo	*வேனிலில் அலர் மலர்*
Tawori moti	*பறித்து வைத்தே*
Ti Tabi no kagiri	*ஆயிரம் செலவிடை*
Kofi wataru kamo	*காதல் கழியுங்கொலோ!*

விளக்கம்

பனிப் பெயல் மறைகின்ற வேனிற் காலத்திலே அலர்ந்த மலரைக் கையிலே பறித்து வைத்திருக்குங் காலம், அவரது ஆயிரம் செலவு நடைபெறுங் காலமாகுமோ! அதுவரையும் என் காதலும் தணியாது போலும்.

குறிப்புரை

இப்பாடலில் 'Fuyu gomori' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Faru' என்னுஞ் சொல்லுடன் அணையும்; 'செலவு' என்பது பொருள். அல்லது வினைவயிற் பிரிந்து போவதைக் குறிக்கும் ஆயிரம் செலவு, நீண்ட காலப் பிரிவு குறிப்பது.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவனை எதிர்கொண்டழைக்க, மலர் பறித்துக் கையிலே வைத்துக் காத்திருக்கும் பெண். பல வேனில் கழிந்துவிட்டன; இன்னும் போனவன் வரவில்லை.

பாடல் : 1892

Faru yama no	*வேனில் மலையின்*
Kiri ni madoferu	*புகார் வழிமயங்கு*
Ugufisu mo	*உகுபிசவும்*
Ware ni masarite	*என்னினும் உயர்ந்ததோர்*
Mono omofame ya	*பொருளை நினைத்ததே*

விளக்கம்

வேனில் மலையிலே படர்ந்திருக்கின்ற புகாரிலே வழிமயங்கிச் செல்லும் உகுவிசுப் பறவையும், நான் நினைத்துக்கொண்டிருக்கும் பொருளைக் காட்டிலும் உயர்ந்ததொரு பொருளை நினைத்ததே! *(இல்லை)*

குறிப்புரை

பறவையின் வழிமயங்கும் நிலைக்கு விளக்கம் கூறும் முயற்சி. தனது துன்பமே பெரிது என எண்ணல். பறவைகள் நினைவு குறைவானது.

உணர்வு நிலை

தன் துன்ப நிலையைப் பிற கருப்பொருள் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல். தன் துன்பமே பெரிதென எண்ணல்.

பாடல் : 1893

Idete miru	*புறத்தே காணும்*
Mukafi no woka ni	*எதிர்ப்படு குன்றிலே*
Moto sige ku	*காம்பில் அடர்ந்து*
Sakitaru fana no	*அலர்ந்திட்ட மலரின்*
Narazu va yamazi	*பழாதெனினும் விடேன்*

விளக்கம்

வீட்டுக்குப் புறத்தே பார்க்கையில் எதிர்ப்படுகின்ற குன்றிலே காம்பிலே அடர்த்தியாகப் பூத்திருக்கின்ற மலரைப்போல, பழமாக முழு நிலையடையாத காதல் எனினும் நான் மறக்கமாட்டேன்.

குறிப்புரை

காதல் நிறைவேறாது என்பதை உணர்ந்திருந்தும் அதனைக் கைவிடாதிருத்தல். மலர் பழமாதல் முழு நிலை.

உணர்வு நிலை

ஒரு பக்கக் காதல் உணர்வின் வெளிப்பாடு. மலரைப் போலக் கனியாக முழு நிலையடைவதற்கு வாய்ப்பில்லை என்பதையும் குறிப்பாய் உணர்த்தல்.

பாடல் : 1894

Kasumi tatu	*புகார் நின்றிடு*
Faru no nagafi wo	*வேனில் நீள் நாளினைக்*
Kofi kurasi	*காதலில் போக்கி*
Yo no fuke nureba	*இரவு ஆழமாகிடக்*
Imo ni aferu kamo	*காதலியைக் கண்டேன்கொல்!*

விளக்கம்

புகார் படர்ந்து நிற்கின்ற வேனிலின் நீண்ட நாளை, காதல் நினைவிலே போக்கி, இரவு வளர்ந்திடக் காதலியைக் கண்டேன்.

குறிப்புரை

வேனிற் காலம் நீண்ட பகற்பொழுது கொண்டது. இரவு ஆழமாதல்- இரவுக் காலம் வளர்தல். ஜப்பானியர் திருமண மரபு கூறும் பாடல். இரவில் மனையாளைக் காணும் மரபு.

உணர்வு நிலை

நீண்ட போது காத்திருந்து காதலியைச் சேரும் ஆண். வேனிற்காலப் பகற்பிரிவு நீண்டது. அதனால் துன்பம்.

பாடல் : 1895

Faru sareba	*வேனில் வந்ததே*
Madu sakikusa no	*தோன்றிடும் சகிகுச*
Sakiku araba	*நல்லூழ் இருப்பின்*
Noti ni mo afamu	*மீண்டுமே கண்டிடுவோம்*
Nakofi so wagimo	*நலியேல் என் காதலி*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. சகிகுசவும் தோன்றுகிறது. நல்லூழ் இருப்பின் மீண்டும் நாம் ஒருவரையொருவர் காண்போம். என் காதலியே வருந்தாதே.

குறிப்புரை

சகிகுச என்பது மூன்று காம்புடைய செடி. இரு கரைக் காம்புகளும் முறையே தந்தையையும் தாயையும் குறிக்கும். நடுக்காம்பு மகனைக் குறிக்கும் என்பர்.

உணர்வு நிலை

வீட்டிலே விட்டுப் பிரிந்து வந்த மனைவியின் நினைவிலே ஆழ்ந்து போன ஆண் மகனின் எண்ணம். 'வருந்த வேண்டாமே' என சகிகுச கூறுமென எண்ணுகிறான்.

பாடல் : 1896

Faru sareba	*வேனில் வந்ததே*
Sidari yanagi no	*சாய்ந்திடு யனகியின்*
Towo wo nimo	*சரிவினிலும்*
Imo va kokoro ni	*காதலி என் உள்ளத்தில்*
Nori ni keru kamo	*ஏறி இருந்திடுவாள்*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. யனகி மரத்தின் தளிர்கள் சாயத் தொடங்கிவிட்டன. அவற்றின் சாய்வினைக் காட்டிலும் என் காதலி என் உள்ளத்திலே ஏறி இருப்பதால் என் உள்ளம் சாய்வது பெரிது.

குறிப்புரை

மனைவியின் நினைவால் உள்ளம் அவள் பக்கமே சாய்ந்திடல். வேனில் வந்துவிட்டதால் அவளையன்றி வேறொன்றையும் அவனால் நினைக்க முடியவில்லை. உள்ளத்தில் அவளே குடிகொண்டுள்ளாள்.

உணர்வு நிலை

காதலியின் நினைவால் நிரம்பிய உள்ளம் வேறு எதையும் எண்ணாமல் அவளிடமே செல்ல விரும்புகிறது. யனகியிடம் தன் உணர்வு கூறுகிறது.

பாடல் : 1897

Faru sareba	*வேனில் வந்ததே*
Mozu no kusa guki	*புல் புகு மொசுவினைக்*
Miyezu tomo	*காணாவிடினும்*
Ware va miyaramu	*யானே காண்பேனாயினேன்*
Kimi ga atari wo ba	*நின் உறையுள் பக்கமே*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. புல்லினுள்ளே போய் வருகின்ற மொக பறவையை நான் பார்க்காவிட்டாலும், உன்னுடைய வீடு இருக்கின்ற பக்கத்தைப் பார்க்கத் தொடங்கிவிட்டேன்.

குறிப்புரை

மொகு, பறவையின் பெயர். வேனிற் காலத்திலே முட்டையிடுவதற்காகப் புல் அடர்ந்திருக்குமிடத்தில் புகும் பழக்கமுடையதென்பர். பறவை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

வேனிற் காலம் வந்துவிட்டது. அவன் வினை முடியவில்லை. எனவே மனையாள் வாழும் பக்கத்தை நோக்கத் தலைப்பட்டுவிட்டான்.

பாடல் : 1898

Kafo dori no	*கபொ பறவை*
Ma naku siba naku	*இடைவிடாக் குரலின்*
Faru no no no	*வேனில் வயலின்*
Kusa ne no sigeki	*புல் வேரினும் நெருங்கிக்*
Kofi mo suru kamo	*காதல் செய்திடுவேனே!*

விளக்கம்

கபொ பறவை இடைவிடாமல் குரல் கொடுக்கின்ற வேனிற் காலத்து வயலிலே படர்ந்துள்ள புல்லின் வேரது நெருக்கத்தைக் காட்டிலும், நெருங்கி நான் காதல் செய்திடுவேனே (உணர்வின் நெருங்கியிருத்தல்).

குறிப்புரை

கபொ, பறவையின் பெயர். வேனிற் காலத்தில் இடைவிடாமல் குரல் கொடுக்கும். வேனில் வயற் புல்லின் வேர் நெருங்கிப் படரும் தன்மையது. பறவை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

கபொ பறவையின் பெருங்குரல் வேனிற் காலத்தை உணர்த்தப் பிரிந்தவன்மேல் தான் கொண்டுள்ள காதலின் நெருக்கத்தை எண்ணிப் பார்க்கும் பெண் அளவிட்டுக் கூறும் முயற்சி.

பாடல் : 1899

Faru sareba	*வேனில் வந்ததே*
U no fana gutasi	*'உ'வின் மலர் சிதறி*
Waga koyesi	*நான் கடந்திட்ட*
Imo ga kaki ma va	*காதலி வேலியிடைச்*
Areni keru kamo	*சிதைந்திட்டதுவோகொல்!*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. 'உ' மரத்தின் மலர்கள் வேனில் மழையிலே சிதறி நான் கடந்து வந்த காதலியின் வீட்டு வேலியிடையே இப்போது சிதைந்தும் இருக்குமோ.

குறிப்புரை

'உ', ஒரு வகை மலர்ச் செடி. மலர் வேலி கொண்ட காதலியின் உறைவிடம். தொடர்ந்து ஒன்பது பாடல்கள் மலர்கள் பற்றியவை.

உணர்வு நிலை

மலரின் சிதைவை எண்ணி வருந்தும் ஆண் மகன் காதலியின் இருப்பிடச் சூழலைக் காலமாற்றத்தில் எண்ணிப் பார்க்கிறான்.

பாடல் : 1900

Ume no fana	*உமெ மலரின்*
Saki tiru sono ni	*அலர் சிதறு பொழில்*
Ware yukamu	*நான் போக வேணும்*
Kimi ga tukafi wo	*உன்னுடைய செய்தியை*
Kata mati gateri	*நோக்கியே காத்திருப்பேன்*

விளக்கம்

உமெ மரத்தின் மலர்களது இதழ்கள் சிதறிக் கிடக்கும் பூங்காவுக்கு நான் போக வேண்டும். உன்னுடைய செய்தியை நோக்கியே அங்குப் போகாமல் காத்திருக்கிறேன்.

குறிப்புரை

மலர் காணப் பொழில் செல்லும் வழக்கம்; பிரிந்து சென்றவர் செய்தி அனுப்பும் வழக்கம்; ஜப்பானிய வாழ்வியல் நடைமுறைகள் பதிவு.

உணர்வு நிலை

அழகான உமெ மலர்ப் பூங்காவுக்குச் செல்லும் விருப்பைத் தள்ளி வைத்துவிட்டுக் காதலனின் செய்தியாளனைக் காத்திருக்கும் பெண்.

பாடல் : 1901

Fudi nami no	*புதியின் மலர்*
Sakeru faru no ni	*அலர் வேனில் வயலில்*
Fafu kuzu no	*படரும் புல்லின்*
Sita yosi kofiba	*வேர்போலக் காதலது*
Fisasiku mo aramu	*காலமும் நீண்டிடுமே*

விளக்கம்

'புதி' கொடியின் மலர் அலர்கின்ற வேனிற் காலத்து வயலிலே படர்கின்ற புல்லது வேர்போல எமது காதலது காலமும் நீண்டு செல்கிறதே (ஒருவர் மட்டும் தனியாயிருக்கும்போது).

குறிப்புரை

புதி, ஒரு மலர்க்கொடி; வேனிற் காலத்தில் மலர்வது. வேரின் ஆழம் வெளியில் தெரியாது; அதுபோன்று உள்ளம் வருந்துவதும் வெளியே தெரியாது.

உணர்வு நிலை

தனியே இருந்து காதலால் நலியும் பெண்ணின் உள்ளம் யாருக்கும் தெரியாது. நலிவின் அளவை இயற்கைத் தோற்றங்களில் எடுத்துக் காட்ட முயல்கிறாள்.

பாடல் : 1902

Faru no no ni	*வேனில் வயலில்*
Kasumi Tanabiku	*புகார் தவழ்கிறது*
Saku fana no	*அலரும் மலர்*
Kaku naru made ni	*கனிந்திடு வரையில்*
Afanu kimi kamo	*காண்பேனோ உன்னையும்*

விளக்கம்

வேனிற் காலத்து வயலிலே புகாரும் தவழ்கிறது. அலர்கின்ற மலர்களும் கனியாகிடும் வரையிலே நான் உன்னைக் காணவும் முடியாதோ?

குறிப்புரை

இந்த வேனிற் காலம் மலரும் மலர் கனியாகிட இன்னும் காலம் உண்டு.

உணர்வு நிலை

நீண்ட காலம் இன்னும் பிரிவுதான் என்பதை உணர்ந்திருக்கும் பெண்ணின் துன்பம். கனியைக் காத்திருப்போருக்குக் கால இடைவெளி துன்பம் தருவதே.

பாடல் : 1903

Waga seko ni	*என் தலைவனில்*
Waga kofuraku va	*என் காதல் விருப்பமே*
Oku yama no	*ஒகு மலையின்*
Asibi no fana no	*அசிபி மலர்போல*
Ima sakari nari	*இப்போ மலர்ந்திட்டதே*

விளக்கம்

எனது தலைவன்மேல் நான் கொண்டுள்ள காதல் விருப்பமே, ஒகு மலையிலே மலர்ந்திருக்கின்ற அசிபி மலரைப்போல முற்றாக மலர்ந்திட்டது.

குறிப்புரை

அசிபி மலரின் முழு மலர்வுபோன்ற முழுமையான விருப்பம் வெளிப்படையாகப் பெண் விருப்பினைக் கூறல். 'என் தலைவன்' கணவன் என்ற பொருள் தரும்.

உணர்வு நிலை

பெருகிடும் காதல் உணர்வை இயற்கை நிலையில் விளக்கும் பெண். கணவன்பால் கொண்ட காதல் விருப்பை மலரின் தோற்றத்தில் வைத்து விளக்கல்.

பாடல் : 1904

Ume no fana	*உமெயின் மலர்*
Sidari yanagi ni	*உதிர் யனகியுடன்*
Wori majife	*பறித்துச் சேர்த்து*
Fana ni matura ba	*மலர் மடையிடினே*
Kimi ni afamu kamo	*உன்னையே சேர்ந்திடுங்கொல்*

விளக்கம்

உமெயின் மலரை உதிர்ந்த யனகியுடன் பறித்துச் சேர்த்து கடவுளுக்கு மலர் மடையிட்டால் உன்னோடு விரைவிலே சேர முடியுமோ.

குறிப்புரை

கடவுளுக்கு மலர் மடை போடுதல் ஜப்பானியரது பழைய வழிபாட்டு நடைமுறை. உமெ மலர், யனகியின் தளிர் இரண்டும் கலந்து மலர் மடை வெண்மையும் பசுமையும் சேர்ந்த மடை.

உணர்வு நிலை

நீண்ட பிரிவால் வாடும் பெண், வழிபாட்டு நடைமுறை செய்து காதலனைச் சேர எண்ணுகிறாள். கடவுள் இணைக்கும் என்ற நம்பிக்கை.

பாடல் : 1905

Womina besi	*வொமிநபெசி*
Saku no ni ofuru	*அலர் வயலில் தோன் றும்*
Siratu tyzi	*வெண் மலரே போல்*
Siranu koto moti	*அறியாப் பொருள் பற்றிச்*
Ifaesi waga se	*சொன்ன என் காதலரே*

விளக்கம்

வொமிநபெசி மலர்கின்ற வயலிலே தோன்றும் வெண்மலரைப்போல அறியாப் பொருள் பற்றிச் சொன்ன என் காதலரே (மக்கள், காதலனை எதுவும் அறியாமலே பேசுகின்றனர்).

குறிப்புரை

பழையவைபற்றி அறியாமல் விரும்பல். இப்பாடலில் 'wominabesi' தலையணைச் சொல். 'saku no' என்பதனுடன் அணையும். வேனில் வயலில் மலரும் மலர்போன்ற அறியாத பொருள் பழைய செய்திகள்.

உணர்வு நிலை

காதல் கொண்டவரைப்பற்றி மற்றவர் பேசுவது பெண்ணுக்குத் துன்பம் தருவது. மாந்தர் அலர் மலரின் தோற்றம் போலாயிற்று. காலம் கண்டு மலர் அலரும். வாய்ப்புக் கண்டு மாந்தர் அலர் எழும்.

பாடல் : 1906

Ume no fana	*உமெயின் மலர்*
Ware va tirasaji	*நானே சிதறவிடேன்*
Awoni yosi	*அவொநி போல*
Nara naru fito no	*நரன்வின் மாந்தரது*
Ki tutu miru gane	*பார்வைக்கு இருக்குமே*

விளக்கம்

உமெயின் செடியிலே உள்ள மலர்களை நான் சிதறவிட மாட்டேன். பசுமையும் செம்மையும் கலந்த நரவின் மலைத் தோற்றம்போல மாந்தருக்குக் காட்சியாக அது இருக்கட்டும். நர சென்றிருக்கும் காதலன் திரும்பி வர அவனுக்கும் காட்சியாக இருக்கட்டும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Awoni yosi' என்பது தலையணைச் சொற்றொடராகும். 'nara'வுடன் அணையும். 'awo' என்பது பசுமை. ni என்பது செம்மை (நிலம்) நரமலைத் தோற்றம். வினைவயின் நர சென்றிருக்கும் காதலன் பார்க்க வேண்டும்.

உணர்வு நிலை

இயற்கைத் தோற்றத்தைக் காதலனுடன் இணைந்து காண வேண்டும் என்ற பெண்ணின் விருப்பு.

பாடல் : 1907

Kakusi araba	*இப்படி யெனில்*
Nani ka uve kemu	*ஏனோ வளர்த்திடுவேன்*
Yama buki no	*யமபுகிபோல்*
Yamu toki mo naku	*விடவும் வேளையில்லாக்*
Kofuraku omofeba	*காதலை நினைக்கவே*

விளக்கம்

யமபுகி செடியினை ஏனோ நான் வளர்க்கின்றேன். ஏனெனில் அச்செடி மலர்ந்து நிற்பதை வந்து நீ பார்க்கவேயில்லை. என் காதலையும் இப்படித்தான் விடவும் வேளையின்றி வளர்க்கின்றேன்.

குறிப்புரை

யமபுகி, ஒரு செடியின் பெயர். மஞ்சள் நிறமான பூக்களையுடையது. அதனை வளர்ப்பதன் நோக்கம், அதன் மலரை மற்றவர் பார்க்க வேண்டும் என்பதற்காகவே.

உணர்வு நிலை

காதலன் நினைவை அவன் இன்னும் வரவில்லையே என்பதற்காக விட்டுவிட முடியாமல் மேலும் உள்ளத்திலே வளர்க்கும் பெண். செடியை வளர்க்கும்போது காதலன் வந்து காணுவான் என நினைத்து அவள் வளர்த்தாள். காதல் நினைவையும் அப்படியே வளர்த்து வந்தாள்.

பாடல் : 1908

Faru sareba	*வேனில் வந்ததே*
Mi kusa no ufe ni	*நீர் வளர் புல்லின் மேலே*
Oku simo no	*விழு பனியே*
Ke tutu mo ware va	*கரைதல் போலென்*
Kofi wataru kamo	*காதல் கழியுங்கொலோ!*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. நீரிலே வளர்கின்ற புல்லின்மேலே விழுகின்ற பனி கரைவதுபோலவே, என் காதல் நினவுகளும் கரைந்து விடும்போலும்!

குறிப்புரை

நீர் வளர் புல் - நீரின்மேல் வளர்கின்ற புல். கடல் தாவரம்போன்றது. பனி கரைவது வேனில் வரவையும் கால நீடிப்பையும் காட்டுகிறது. பனிக்கட்டி தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

உள்ளத்திலே இறுக்கமாகப் படர்ந்திருந்த காதல் நினைவு, கால நீட்டத்தினாலே கரைய ஆரம்பித்துவிட்டது. காத்திருக்கும் பெண்ணின் பொறுமை சிதையத் தொடங்குகிறது.

பாடல் : 1909

Faru gasumi	*வேனிற் புகாரும்*
Yama ni tanabiki	*மலையிற் தவழ்கிற*
Ofofosiku	*மங்கல் வேளையில்*
Imo wo ofimite	*என் காதலியைக் கண்டேன்*
Noti kofimu kamo	*மீண்டும் காதல் நலிகொல்!*

விளக்கம்

வேனிற் காலத்திலே புகாரும் மலையிலே தவழ்கின்ற மங்கலான வேளையில் என் காதலியைக் கண்டேன். மீண்டும் எனக்குக் காதல் துன்பந்தான்!

குறிப்புரை

இரவு காதலியுடன் தங்கி புகார் படியும் காலை நேரம் பிரிதல். ஜப்பானியத் திருமண மரபு. மீண்டும் காணும்வரை பிரிவே. புகார் தொடர்புறுத்திய பாடல். புகார் படியும் நேரம் பிரிவு. உள்ளத்தில் துயர் படியும் பிரிவு.

உணர்வு நிலை

காதலியைப் பிரிந்து வினைவயின் வந்தவன்-மீண்டும் அவளைக் காணும்வரை காதல் நலிவே என ஏங்குகிறான்.

பாடல் : 1910

Faru gasumi	*வேனிற் புகாரும்*
Tati nisi fi yori	*நின்றிடு நாள்முதல்*
Ima made ni	*இன்று வரையில்*
Waga kofi yamazu	*என் காதலும் நில்லாது*
Moto no sige keba	*உணர்வின் நெருக்கத்தால்*

விளக்கம்

வேனிற் காலத்திலே புகார் மலைச்சாரலிலே முதல் முதல் தோன்றிய நாள் முதலாக, இன்றுவரையும் என் காதல் துன்பமும் தீராது. எனது உள்ளத்திலே உணர்வின் நெருக்கத்தால் துன்பமோ மேலும் மேலும் பெருகிடும்.

குறிப்புரை

ஒரு பக்கக் காதல் நலிவு. உணர்வு பரிமாற்றப்படாததால் நெருக்க நிலை பெறக் காதல் துன்பம் அடர்கிறது. புகார் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

ஆண் மகன் உணர்வுகளிடம் தோற்றுப் போகும் நிலை. காதல் உணர்வின் நெருக்கத்தை வெளிப்படையாகவே கூறும் நிலை.

பாடல் : 1911

Sanidurafu	*செங்கன்னமுடைக்*
Imo wo omofu to	*காதலியை நினைத்திட*
Kasumi tatu	*புகார் நின்றிடு*
Faru fi mo kure ni	*வேனில் நாளின் கருமையில்*
Kofi wataru kamo	*காதல் கழியுங்கொலோ!*

விளக்கம்

செம்மையான கன்னங்கொண்ட என்னுடைய காதலியின் நினைவிலே மலைச் சாரலிலே நிற்கின்ற புகாரும், வேனில் நாளைக் கடுமையாக்கிட என் காதல் துன்பமும் கரையும்தானோ.

குறிப்புரை

இப்பாடலிலே 'Sanidurafu' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Imo'வுடன் அணையும் புகார் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

நினைவிலே சுகம் பெற எண்ணும் ஆண். பிரிவுத் துயரைப் பழைய இனிய நினைவுகளிலே கரைக்கும் நிலை.

பாடல் : 1912

Tama kifaru	*மணி ஆரமாய்*
Waga yama no fe ni	*என் மலை மீதிலே*
Tatu kasumi	*நின்றிடு புகார்*
Tatu tomo u tomo	*நிற்பதும் தங்குவதும்*
Kimi ga mani mani	*நீ விரும்பும் வண்ணமே*

விளக்கம்

என் பக்கத்து மலைமீதிலே அழகான மணிகளால் அமைந்த ஆரம்போல வேனிற் புகாரும் நின்றிடும். நீ விரும்பும் வண்ணமே அப்புகார் அங்கு நின்று தங்கிப் போகும்.

குறிப்புரை

இப்பாடலிலே **'Tama kifaru'** என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். **wa** என்னும் சொல்லுடன் அணையும். புகாரின் மணி ஆரம் குறுகிய நேரத்தில் மறையலாம். என் உயிரும் அத்தகையதே.

உணர்வு நிலை

மாலை நேரப் புகாரில் பிரிந்தவன் வரவையும் தன்னிலையையும் ஒன்றாய் இணைத்துப் பார்க்கும் பெண்.

பாடல் : 1913

Mi wataseba	*பார்வை படரின்*
Kasuga no nobe ni	*கசுகவின் பள்ளத்தில்*
Tatu kasumi	*நின்றிடும் புகார்*
Mi maku no fosiki	*நான் காண விரும்பிடும்*
Kimiga sugata ka!	*நின் காதல் உருவமே*

விளக்கம்

என்னுடைய பார்வையைப் படரவிட்டால் கசுக மலைச் சாரலின் பள்ளத்திலே புகார் நிற்பது தெரிகிறது. ஆனால் நான் காண விரும்புவது, உனது காதல் உருவமே.

குறிப்புரை

இப்பாடல் பெண்ணால் பாடப்பட்டதெனப் பியர்சனும் குறிப்பிடுகிறார். பிரிந்து சென்றவன் தோற்றத்தை நினைத்து வாழும் நிறையுடை வாழ்க்கை. இறுதியில் அமைந்த **ka** ஆவலை வெளியிடும் இடைச் சொல்.

உணர்வு நிலை

மலைச் சாரல் படியும் புகாரிடையே பிரிந்து போனவன் திரும்பி வருவான் எனக் காத்திருக்கும் காதலி. இயற்கையின் அழகுத்

தோற்றத்தைவிடக் காதலிக்கு அன்பன் உருவத் தோற்றமே அழகுடையது.

பாடல் : 1914

Kofi tutu mo	*காதல் நினைப்பில்*
Kefu va kurasitu	*இன்று நாள் கழிந்தது*
kasumi tatu	*புகார் நின்றிடும்*
Asu no faru fi wo	*நாளையின் வேனிற் போதை*
Ika ni kurasamu	*எப்படிக் கழிக்குமோ?*

விளக்கம்

காதலனைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்ததில் இன்றைய நாள் ஒருவாறு கழிந்துவிட்டது. ஆனால் புகார் நிற்கின்ற நாளைய வேனிற் பொழுதை நான் எப்படிக் கழிக்கப் போகிறேனோ?

குறிப்புரை

நினைவில் நாள் கடத்தல், வேனிற் பகற்பொழுதின் நீளம் குறிப்பிடப் படுகிறது.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவனை நினைந்து பகல் முழுவதும் இரங்கும் பெண். ஒரு நாள் கழிவதே கடினமாயுள்ளது. மறுநாள் எப்படிக் கழியுமோ என்ற நினைவு இன்றே தொடங்கிவிட்டது.

பாடல் : 1915

Waga seko no	*என் தலைவரின்*
Kofite sube nami	*காதலில் மயங்கியே*
Faru same no	*வேனில் மழையின்*
Furu waki sirazu	*பெய் முறை அறியாதே*
Idete kosi kamo	*வெளிவர ஆவல்கொல்!*

விளக்கம்

எனது தலைவனின் காதலிலே உள்ளம் மயங்கியே, வேனிற் காலத்து மழையின் பெயல் முறையையும் அறியாமல் என் உள்ளம் வெளியே வர ஆவல் கொண்டதே.

குறிப்புரை

வேனில் மழையின் பெயல் முறை. சில நேரம் மழை பெய்யும்போது வெயிலும் இருக்கும். அதுபோல இரவு பகலின் வேறுபாடு தெரியாத காதல் நினைவு. இப்பாடல் ஆணின் உணர்வுக்கும் இணையும் தன்மையது. 4 பாடல்கள் தொடர்ந்து மழை தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதல் நினைவால் மயங்கி நிற்கும் பெண். வேனில் மழைபோல இரவு பகல் வேறுபாடு இன்றி எந்நேரமும் காதலில் நலியும் நிலை. மழையின் பெயல் முறை அறியாது போனவன் திரும்பல்.

பாடல் : 1916

Ima sara ni	*இப் போதினிலே*
Kimi va i yakazi	*நீ வெளியே செல்லாதே*
Farusame no	*வேனில் மழையின்*
Kokoro wo fito no	*உள்ளத்தையே நீயுமே*
Sirazaranaku ni	*அறிந்திடா யன் றுகொல்!*

விளக்கம்

நீ இந்த நேரத்திலே வெளியே செல்லாதே. வேனில் மழையும் உன்னைத் தடுத்து நிறுத்துவதை நீயும் அறிவாயே.

குறிப்புரை

வேனில் மழையின் பொழிவை உள்ளூர விரும்பல். வேனில் மழையின் உள்ளத்தை அறிந்திருப்பதாகக் கூறல். தடுத்து நிறுத்த வேனில் மழையையும் இணைத்தல்.

உணர்வு நிலை

வேனில் மழையைத் தன் ஆவலை நிறைவேற்றுவதற்கு இயற்கை தந்த ஒத்துழைப்பு என எண்ணும் பெண். மரபு மீறாதிருக்க ஆணுக்கும் மழை ஒத்துழைப்புத் தருகிறது.

பாடல் : 1917

Farusame ni	*வேனில் மழையில்*
Koromo va itaku	*ஆடையே நனைந்திடச்*

Toforame ya	*செல்வாயோ நீயே*
Nanu ka si furaba	*ஏழு நாளும் பொழியின்*
Nana yo kosi to ya	*ஏழிராவும் வாராயோ*

விளக்கம்

இப்போது பொழிகின்ற வேனில் மழையிலே உன்னுடைய ஆடையெல்லாம் நனைந்திட நீயும் திரும்பிப் போவாயோ. இந்த மழை தொடர்ந்து ஏழு நாள் பொழியும் எனில், அந்த ஏழு இரவும் நீ வரமாட்டாயா?

குறிப்புரை

ஏழு நாள் மழை தொடர்ந்து பெய்வது, கால நீட்டம் குறிப்பிடுவது. நீண்ட பிரிவை விரும்பாமை.

உணர்வு நிலை

இப்போது மழை பெய்யும் நேரம் பிரிந்து செல்லவிட்டால், தொடர்ந்தும் மழை பெய்யின் காதலனைக் காணுவதும் தடைப்படும். எனவே முன்னரே அவன் நோக்கத்தைத் தெரிந்துகொள்ள எண்ணுகின்றாள்.

பாடல் : 1918

Ume no fana	*உமெயின் மலர்*
Tirasu farusame	*சிதறும் வேனில் மழை*
Itaku furu	*கடிதாய்ப் பெய்யும்*
Tabi ni ya kimi ga	*செலவில் சென்ற நீயும்*
Ifori seruramu	*குடில் செய்திருப்பாயோ*

விளக்கம்

உமெயின் மலரைச் சிதறச் செய்யும் வேனில் மழை பெரியதாகப் பெய்கிறது. வழிச் செலவிலே சென்ற நீயும் தங்கி நிற்கக் குடில் செய்திருக்கும்.

குறிப்புரை

வழிச் செலவில் செல்பவர் தாமே தங்குவதற்குக் குடில் அமைத்துத் தங்கும் மரபு.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவன் தங்குவதற்கு இடம் செய்திருப்பானோ என எண்ணி இரங்கும் பெண்; வெளிச் செல்லும் ஆடவர் வழித் துன்பங்களையும் எண்ணி வாழும் பெண்.

பாடல் : 1919

Kunisura ga	*குநிசு மாந்தர்*
Waga na tumu ramu	*வேனில் தழை கொய்திடும்*
Siba no no no	*சிம வயலின்*
Siba siba kimi wo	*'சிப சிப' உன்னையே*
Omofu konogoro	*நினைக்கும் இவ்வேளையே*

விளக்கம்

குநிசுவில் வாழ்கின்ற மாந்தர் 'சிம' வயலின் வெளியிலே வேனில் தழைகளைக் கொய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆரவாரம் எனக்குக் கேட்கிறது. வேனிற் காலம் வந்ததை 'சிப சிப' ஒலி உணர்த்த, நான் இந்த வேளையில் உன்னையே நினைக்கிறேன்.

குறிப்புரை

குநிசு, ஓர் ஊரின் பெயர்; சிம, வயலின் பெயர்; 'சிப சிப' தழை; கொய்யும்போது ஏற்படும் ஒலி. ஆரவார ஒலி. தழை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதலனின் காலடி ஒலியைக் காத்திருக்கும் பெண். கூர்மையாகக் காதைக் கொடுத்திருக்க, வயல்வெளி மாந்தர் ஒலி விழவே பிரிவு இன்னும் கூடுகிறது.

பாடல் : 1920

Faru kusa no	*வேனிற் புல்லது*
Sigeki waga kofi	*நெருக்கம் என் காதலே*
Ofo umi no	*பெருங் கடலின்*
Fe ni yuku nami no	*கரை புரள் அலையின்*
Tife ni tumori nu	*ஆயிரம் அடுக்காகும்*

விளக்கம்

வேனிற் காலத்திலே அடர்ந்து வளரும் புல்லினது நெருக்கம் போன்றது என் காதலே. பெருங்கடலில் கரையிலே புரள்கின்ற அலைகளின் ஆயிரம் அடுக்குப் போன்றது.

குறிப்புரை

இப்பாடலிலே 'Faru kusa no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'sigeki' என்னுஞ் சொல்லுடன் அணையும். வேரின் நெருக்கம் காதல் இறுக்கம். ஆயிரம் அலை அடுக்கு காதல் நினைவு புல் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

தன் காதலையும், காதல் நினைவுகளையும் வெளிப்படுத்தி விளக்க முனையும் பெண். பிரிவு நீளும்போது மற்றவர்க்குத் தன் நிலை வெளிப்பட வைத்தல்.

பாடல் : 1921

Ofofosiku	*தெளிவு இன்றி*
Kimi wo afi mite	*உன்னையும் எதிர்கண்டே*
Suga no ne no	*சுக வேர்போல*
Nagaki forufi wo	*நீள் வேனிலது நாளில்*
Kofi wataru kamo	*காதல் கழியுங்கொலோ!*

விளக்கம்

தெளிவில்லாமல் உன்னை மங்கலான நேரத்திலே எதிரே கண்டேன். ஆனால் மீண்டும் காணாமல் ஒவ்வொரு நீண்ட வேனில் நாளும் காதல் நலிவிலே கழிகின்றதே.

குறிப்புரை

இப்பாடலிலே 'suga no ne no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'nagaki' என்ற சொல்லுடன் இணையும். 'சுக'வினுடைய வேர் நீண்டது. வேனிலின் பகற்பொழுதும் நீண்டது. வேர் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

பிரிவின் நீட்டம் தாளாத பெண்மை இயற்கைத் தோற்றங்களுடன் நீண்ட பிரிவை ஒப்பிட்டுப் பார்க்கிறது.

பாடல் : 1922

Ume no fana	*உமெயின் மலர்*
Sakite tirinaba	*அலர்ந்து சிதறிடின்*
Wagimoko wo	*என் குறுமகள்*
Komu ka kozi ka to	*வருமோ வராதோவென*
Afa matu no ki zo	*'மது' மரமானேன் நான்*

விளக்கம்

உமெயின் மலர் பூத்துச் சிதறிவிட்டது. என் காதல் குறுமகள் இப்போது வருமோ வராதோவெனக் காத்து நிற்கின்ற நான் 'மது' மரமானேன்.

குறிப்புரை

ஒரேயொரு பாடல் 'மது' மரத்தைக் குறிப்பது. **matu** என்ற சொல் பல பாடல்களிலே காத்திருத்தல் என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இங்கு **matu** என்பது 'பைன்' மரத்தைக் குறிக்கிறது. காத்திருப்பின், கால நீட்டத்தில் மரமாக அசையாது நிற்றல்.

உணர்வு நிலை

நேரில் காணும் காலம் வந்ததை உமெயின் சிதறல் வந்து உணர்த்தியது. ஆனால் அவளோ இன்னமும் வரவில்லை. மரம்போல மரத்துக் காத்திருக்கும் ஆண் நிலை.

பாடல் : 1923

Sira ma yumi	*வெண் மர வில்போல்*
Ima faru yama ni	*இப்போ வேனில் மலையில்*
Yuku kumo no	*போகும் முகிலின்*
Yuki ya wakaremu	*போதியோ நீ பிரிந்தும்*
Kofi siki mono wo	*புணர்ந்திடு பொருளை*

விளக்கம்

வெண் மர வில்லைப்போல இப்போது வேனில் மலைமேலே செல்கின்ற முகிலைப்போல, நீயும் உனக்கு விருப்பமான பொருளையே பிரிந்தும் செல்கின்றாயோ!

குறிப்புரை

இப்பாடலிலே 'Sira ma yumi' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Faru yama' என்னுந் தொடருடன் அணையும். விரும்பிய பொருளைப் பிரிந்து செல்லுதல் வழமையோ. முகில் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

வழிச் செலவு போக இருக்கும் ஆணிடம் அவன் மன நிலையறிய முயலும் பெண். பிரிந்து செல்வதால் என் காதல் நலிவே மிஞ்சும். எனவே என்னைப் பிரிந்து நீயும் செல்லாதே.

பாடல் : 1924

Masurawo ga	*வல் ஆண் மகன் நான்*
Fusiwi nagekite	*குழும்பிப் புலம்பியே*
Tukuri taru	*செய்து வைத்துள்ள*
Sidari yanagi no	*உதிர் யணகியது*
Kadura se wagimo	*கண்ணி சூடு காதலி*

விளக்கம்

வலிய ஆண் மகனான நான், காதல் நலிவிலே குழும்பி உள்ளம் புலம்பியே செய்து வைத்தேன். இந்த உதிர் யணகியாலே நான் செய்த கண்ணியை நீ அணிந்திடுவாய் என் காதலி.

குறிப்புரை

ஆண் பெண்ணுக்கு மலர்க்கண்ணி செய்தனுப்பும் மரபு. கண்ணி, தலையிலே சூடும் மலர்மாலை.

உணர்வு நிலை

பிரிந்து வந்த காதலிக்குத் தலையிலே சூடுவதற்காக மலர்மாலை கட்டி அனுப்பும் காதலன் உள்ளம், காதல் நலிவிலே குழும்பியபடி செய்த மாலையென்று கூறுவதன் மூலம் தன்னிலை உணர்த்தல்.

பாடல் : 1925

Asa to de no	*காலை வாயிலில்*
Kimi ga sugata wo	*நின்னுடைய உருவையே*

Yoku mizute	*நன்கு காண்கிலேன்*
Nagaki faru fi no	*நீள் வேனில் நாளையே*
Kofi ya kurasamu	*உன் நினைவில் கழிக்கும்*

விளக்கம்

நீ காலையிலே என்னைவிட்டுப் பிரிந்து போகும்போது-வாசலில் போகும்போது உன்னுடைய உருவத்தை நான் தெளிவாகப் பார்க்கவில்லை. இந்த வேனிற் காலத்தின் நீண்ட பகற்பொழுதெல்லாம் உன்னுடைய நினைவில் நான் வருந்தியிருக்கின்றேன்.

குறிப்புரை

இரவில் வந்து தங்கிக் காலை நன்கு பொழுது புலரு முன்னே விட்டுப் பிரிவது வழக்கம். அதனால் பிரியும்போது தெளிவாக ஒருவரையொருவர் பார்த்து விடை பெறுவதில்லை.

உணர்வு நிலை

காலையிலே ஒளி பரவுமுன் வைகறையிலே பிரிந்து போன காதலனை நினைந்து பகலெல்லாம் வருந்தும் பெண். உருவம் நன்கு உள்ளத்தில் பதிக்கவில்லையே என்ற ஏக்கம்.

பாடல் : 1926

Faru yama no	*வேனில் மலையின்*
Asibi no fana no	*அசிபியின் மலர்போல்*
Niku karanu	*ஒளிரச் செய்யும்*
Kimi ni va sieya	*உன்னிடம் என் எண்ணமே*
Yosayu tomo yosi	*தங்கினும் அது நன்றே*

விளக்கம்

வேனில் மலையிலே மலர்ந்துள்ள அசிபி மலரின் ஒளிபோல என் உள்ளத்தை உன் நினைவு ஒளிரச் செய்கிறது. என் காதலரே! நான் உம்மிலே முழுவதுமாக நினைவினிலே தங்கியிருந்தாலும் அதுவும் நன்றேயாம்.

குறிப்புரை

உன் நினைவிலே வாழும் நிலையாக இருப்பினும் அது நன்று. மலையில் மலர்ந்த மலர்போலத் தூர இருப்பினும் ஒளிரச் செய்யும் தன்மை.

உணர்வு நிலை

பிரிவின் கால நீட்டம் புரியாவிட்டாலும் காதலன் நினைவிலே வாழ முடிவு செய்யும் பெண். தூர இருப்பினும் அவனை வெறுக்காது விரும்பும் நிலை.

பாடல் : 1927

Iso no kami	*இசொ நொகமி*
Furu no kamu sugi	*புருவின் இறையுரு*
Kamubinisi	*முது கோலம்போல*
Ware ya sara sara	*நானே மீண்டும் மீண்டும்*
Kofini afi ni keru	*காதல் நலிவு காணும்*

விளக்கம்

'இசொநொகமி' என்னுமிடத்திலுள்ள 'புரு' கோவிலிலே இருக்கின்ற பழைமையான கடவுள்போல நானும் மீண்டும் மீண்டும் என் காதல் நலிவினையே காண்கிறேன்.

குறிப்புரை

கடவுளின் பழைமைபோலக் காதல் நலிவின் காலம் நீண்டது. இசொநொகமி நரவில் உண்டு. புரு என்னும் கோவில் ஜப்பானியரது பழைய 'சிந்தோ' வழிபாட்டுக் கோவிலாகும். நரவில் உண்டு.

உணர்வு நிலை

தன் காதல் நலிவைக் கடவுளின் பழைமைக்கு ஒப்பிட்டுக் கூறும் பெண். வயது முதிர்ந்த நிலையிலும் காதலில் வாழும் நிலை.

பாடல் : 1928

Sanokata va	*சநுகதவே*
Mi ni narazu tomo	*கனியாகா தெனினும்*
Fana no mi ni	*மலர் அலரும்*
Saki te miye koso	*மலர்ச்சியைக் காண்பேனே*
Kofi no nagu ni	*காதல் நலிவினுக்கே*

விளக்கம்

சநுகதவின் மலர்கள் பழமாகவில்லை. எனினும் அந்த மலர்களின் மலர்ச்சியைக் காண்பதில் என் காதல் நலிவும் ஓரளவு தீரக்கூடும்.

குறிப்புரை

சநுகத ஒரு மரத்தின் பெயர். இடப் பெயரைக் கொண்டது. காதல் நலிவு தீரக் காலத்தில் மலரும் மலரையாவது காணல் பிரிவின் நீட்டம்.

உணர்வு நிலை

இருவரும் நினையும் காலமன்று எனினும், அக் காலத்து மலரின் மலர்ச்சியிலே காதல் நலிவு தீரக் கூடுமென என்னும் பெண் நிலை. இயற்கையழகிலே பிரிவை மறக்க முயற்சி.

பாடல் : 1929

Sanukata va	*சநுகதவே*
Mi ni narinisi wo	*கனிந்திடு நிலையில்*
Ima sara ni	*இதன் பின்னரும்*
Farusame furite	*வேனில் மழையும் பெய்தே*
Fana sakame ya mo	*மலர் அலர்ந்திடுமோ*

விளக்கம்

சநுகதவிலுள்ள வெளியிலே மரங்களெல்லாம் கனியீன்றிருக்கும் நிலையிலே, வேனில் மழை பெய்தே இன்னொரு முறை மலர்களும் அலர்ந்திடுமோ? அப்படி நடப்பதில்லையே.

குறிப்புரை

கேள்வி-விடை நிலையான பாடல். பழமாகும் நிலை வந்த தொடக்க நிலையான மலர் அலரும் நிலை மீண்டும் நடப்பதில்லை. இயற்கை நடைமுறையும் காதல் நடைமுறையும் இவ்வாறே பேணப்பட வேண்டும்.

உணர்வு நிலை

பிரிவினால் காதல் நலிவு எனினும், காதல் அழிவதில்லை. ஒருமுறை உள்ளத்தில் மலர்ந்து முதிர்ந்து பழமாகும் நிலையடைந்த காதல் உணர்வு மாறாது எனத் தன்னிலை கூறும் பெண்.

பாடல் : 1930

Adusa yumi	*அதுச வில்லின்*
Fikitu no fe ni aru	*பிகுதுவின் கரையில்*
Na nori so no	*நநொரிசொவின்*

Fana saku made ni — *மலர் அலரும் வரை*
Afanu kimi kamo — *காணன்று நின்னையேகொல்!*

விளக்கம்

அதுச வில்லின் நாண்போன்ற பிகுதுவின் கரையிலே நநொரிசொவின் மலர்கள் அலரும் வரையும் உன்னை நானும் நேரில் காண முடியாதோ.

குறிப்புரை

இப்பாடலிலே 'Adusa yumi' என்னும் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Fikitu'வுடன் அணையும். வெண்மரவில் பிகுது கரை ஒத்தது. நநொரிசொ கடல் வளர் செடி. ந-நொரி-சொ என வேறு பொருளும் தரும். என் பெயரைச் சொல்லாதே.

உணர்வு நிலை

நீண்ட காலம், நநொரிசொ மலரும் வரையும் உன்னை நான் காண முடியாதா எனக் கேட்கும் காதலி.

பாடல் : 1931

Kawa no fe o — *ஆற்றின் கரைமேல்*
Itumo no fana no — *இதுமோ மலர்போல*
Itumo itumo — *என்றுமே என்றுமே*
Kimase waga seko — *வாராயே என் காதல*
Tokizikeme yamo — *வேளையும் இன்றுகொல்லோ!*

விளக்கம்

ஆற்றின் கரைமேல் நீந்தும் 'இதுமோ' மலர்களைப்போல எப்பொழுதுமே நீ வரமாட்டாயா? என் காதலனே வேளையும் இதற்கு இல்லையே.

குறிப்புரை

'இதுமோ', பூவின் பெயர். வருகைக்கும் நேரம் குறித்து வைத்திருக்கிறாயா? இல்லையல்லவா! எனவே எப்பொழுதும் நீ வரலாமே.

உணர்வு நிலை

காதல் நேரக் கட்டுப்பாடின்றித் தன்னைக் காண வரவேண்டுமென விரும்பும் காதல. ஆற்றில் எப்போதும் நீந்திக் கொண்டிருக்கும் இதுமோ மலர்போல நீ வரலாமே எனக் கேட்கிறாள்.

பாடல் : 1932

Farusame no	*வேனில் மழையின்*
Yamazu furu furu	*விடாது பொழி பெயல்*
Waga kofuru	*நான் காதலிக்கும்*
Fito no mesura wo	*உருவின் விழிதனைக்*
Afi misime naku	*காணத் தடுக்கின்றதே*

விளக்கம்

வேனில் மழை விடாது பொழிகின்றது. நான் காதலிக்கும் பெண்ணின் விழிகளைப் போய்க் காணவிடாமல் என்னைத் தடுக்கின்றதே.

குறிப்புரை

தொடர்ந்து பெய்யும் மழை பிரிவை ஏற்படுத்தியுள்ளது. விழிகளைக் காணல் நெருக்கமான உறவின் தன்மை.

உணர்வு நிலை

காதலியைப் போய்ச் சேரத் துடிக்கும் ஆடவனை வேனிலின் விடாது பெய்யும் பெயல் தடுத்திருக்கிறது. பிரிவுக்கு இயற்கை நிலையே காரணமானதால் பெரும் துன்பமான நிலை.

பாடல் : 1933

Wagimoko ni	*என் காதலியைச்*
Kofitutu woreba	*சேர்ந்து புணரவெனின்*
Farusame no	*வேனில் மழையும்*
Sore mo sirugoto	*அதையும் அறியுமோ*
Yamazu furitutu	*விடாது பொழிந்திடும்*

விளக்கம்

என்னுடைய அன்புக்குரியவளுடன் சேர்ந்திட என நான் எண்ணி இருக்க, வேனில் மழையும் என் எண்ணத்தை அறியாமலே தொடர்ந்து பெய்கின்றதே.

குறிப்புரை

பியர்சன் வேனில் மழையின் விடாத பொழிவுபோலக் கண்ணீர் விடுதல் என்ற குறிப்பையும் தந்துள்ளார். துன்பத்தால் கண்ணீர் பெருகுதல். ஜப்பானியரில் ஆண்களும் கண்ணீர் விடுதல் வழக்கம்.

உணர்வு நிலை

காதலியுடன் சேரவிடாமல் தடுக்கும் வேனில் மழையை வெறுக்கும் ஆடவன். தன் உள்ளத்து ஆவலை அது அறியவில்லையே என்ற ஏக்கம்.

பாடல் : 1934

Afi omofanu	*காண நினையாத*
Imo wo ya moto na	*காதலியைப் படர்ந்த*
Suga no ne no	*சுகசு வேரிலும்*
Nagaki fara fi	*நீண்ட வேனில் நாளிலே*
Omofi kurasamu	*நினைத்தே வாழ்ந்திடும்*

விளக்கம்

நீ என்னை வந்து நேரிலே காண நினையாவிட்டாலும், நானோ சுகசு வேரிலும் பார்க்க நீண்ட வேனில் நாளிலே உன்னை நினைத்தே வாழ்கின்றேன். இதுவா என் நிலை!

குறிப்புரை

நீளமாக நிலத்தின் கீழே வேர் படரும் சுகசு. வேனில் நாளின் நீட்டம் அதைவிடக் கூடியது. காதலன் நினைவில் காதலி ஆழமாகப் பதிந்த நிலையையும் காட்டும். இப்பாடலில், 'Sugano ne no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடர். 'Nagaki'யுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலி அவனைக் காண நினையாவிட்டாலும், ஆண் அவளை நினைத்து வாழும் நிலை. ஒருதலைக் காதல்போலும் தோற்றம்.

பாடல் : 1935

Faru sareba	*வேனில் வந்ததே*
Madu naku tori no	*முதல் ஒலித்திடு புள்*
Ugufisu no	*உகுபிசு போல்*
Koto sakidatisi	*காதலை முன் மொழிந்த*
Kimi wo si matamu	*உன்னை நான் காத்திருப்பேன்*

விளக்கம்

வேனிற் காலம் வந்துவிட்டது. இக்காலத்திலே முதற்குரல் கொடுக்கும் உகுவிசுப் பறவைபோலக் காதலை என் முன் மொழிந்த உன்னையே நான் காத்திருப்பேன்.

குறிப்புரை

காதல் விருப்பை முன் மொழிதல். காலம் கண்டு முதற்குரல் கொடுக்கும் பறவைபோல, விரும்பியவளிடம் காதலை வெளிப் படுத்தியமை.

உணர்வு நிலை

தன்னிடம் முதலிலே காதல் விருப்பைக் கூறியவனை, அவன் வரும்வரை காத்திருக்கும் பெண். முன்னே மொழிந்தமையால் அவன் தன்பால் கொண்ட பெருவிருப்பை உணர்ந்துள்ளாள்.

பாடல் : 1936

Afi omofazu	*காணவும் நினையாது*
Aruramu ko yuwe	*இருக்கும் மகள் என்னை*
Tama no wo no	*மணிக் கரையின்*
Nagaki faru fi wo	*நீண்ட வேனில் நாளை நான்*
Omofi kurasaku	*நினைத்தே கழித்திடும்*

விளக்கம்

என் விருப்பத்துக்குரிய குறுமகள், என்னைக் காண வேண்டும் என்ற நினைப்பு இல்லாமலே இருக்கலாம். ஆனால் நானோ மணிகள் பதித்த ஆடையின் கரைபோல நீண்ட வேனில் நாளை அவள் நினைவிலேயே கழிக்கின்றேன்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Tama no wo no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Nagaki' என்னும் சொல்லுடன் அணையும். தன்னை நினைந்தும் இருக்காதவரைப்பற்றி நினைத்து வாழுதல். ஒருதலைக் காதல் நிலை.

உணர்வு நிலை

விருப்பங் கொண்டவளை எண்ணி வாழும் ஆணின் நிலை. பெண்ணுக்கு விருப்பமில்லாவிட்டாலும் கைவிடேன் என்ற நிலை. ஆண்களின் உண்மையான உள்ள நிலைப் புலப்பாடு.

பாடல் : 1937

Masurawo no	*வீரனைப்போல*
Ide tati mukavu	*வந்து திரும்பிப் போகும்*
Furusato no	*பழ ஊரது*
Kamunabi yama ni	*கமுநபி மலையில்*
Ake kureba	*விடிந்து வர*
Tumi no sayeda ni	*துமியின் கிளையிலே*
Yufu sareba	*மாலை வந்திட*
Komatu ga ure ni	*இள மதுக் கிளையில்*
Satofito no	*ஊரது மாந்தர்*
Kiki kofuru made	*கேட்க விரும்பும் வரை*
Yama biko no	*மலைக்குரலில்*
Kotave suru made	*விடை தரும் வரையும்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Tumagofi surasi	*துணை தேடி நலிந்தே*
Sayo naka ni naku	*நள்ளிரவில் நரலும்*

விளக்கம்

வாள் கொண்ட வீரர் வந்து போகின்ற பழைய ஊர். கமுநபி மலையின் அருகில் உள்ளது. காலை விடிந்து வர துமி மரக் கிளையிலே, மாலை வந்திட இள 'மது' மரக் கிளையிலே, ஊரிலுள்ள மாந்தர் கேட்க விரும்பும்வரை, மலை எதிர்க் குரலிலே விடை தரும் வரையும் ஒதொதொகிசுப் பறவை, தன்னுடைய துணைப் பறவையைத் தேடி நலிந்தே நள்ளிரவில் குரல் கொடுக்கும்.

குறிப்புரை

தொடர 25 பாடல்கள் (நீண்ட குறுகிய TANKA) பறவை பற்றியவை. துமி, மரத்தின் பெயர்; 'மது', மரத்தின் பெயர். மலையின் எதிரொலிக் குரல், குறியீடு.

உணர்வு நிலை

பெண்ணின் பிரிவு நிலை உகுவிசுபோலக் காதலில் நலிதல்.

பாடல் : 1938

Tabi ni site	*வழிச் செலவிலே*
Tuma kofisurasi	*துணையைச் சேர்ந்திடவே*
Fototogisu	*ஒதொதொகிசு*
Kamunabi yama ni	*கமுநபி மலையில்*
Sayo fuke te naku	*நீள் இரவில் நரலும்*

விளக்கம்

தான் செல்லுகின்ற வழிச் செலவிலே தனது துணையையும் சேர்த்துச் செல்ல ஒதொதொகிசுப் பறவை கமுநபி மலையிலே இரவு நீளும் வரையில் நரலும்.

குறிப்புரை

இரவு நீள்தல் - குறியீடு காத்திருப்பின் நீட்டம்.

உணர்வு நிலை

காதலனை அவனது வழிச் செலவிலே சென்று இணைய எண்ணும் பெண்.

பாடல் : 1939

Fototogisu	*ஒதொதொகிசு*
Naga fatu kowe va	*நீண்ட முதற் குரலே*
Ware ni mo ga	*என்னிடத்துமே*
Satu ki no tama ni	*ஐந்தாம் மாத மணியின்*
Ma ji fete nugamu	*மாலையின் நாராகுமே*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவையே, உன்னுடைய நீண்ட முதல் குரலை என்னுடையதாக்க வேண்டும். ஐந்தாம் மாதம் செய்யும் மணிப்பந்துக்கு அதனை ஆக்குகின்ற மாலையின் நாராக்கவே.

குறிப்புரை

'ஐந்தாம் மாத மணியின் மாலை', செயற்கைப் பூக்களால் செய்யப்பட்ட -பட்டு நூலால் சுற்றப்பட்ட பூம்பந்து. ஐந்து வகையான நிறமுள்ள பட்டு நூல் சுற்றப்படும். ஐந்தாம் நாள் தொங்கவிடப்படும். ஜப்பானியர் நடைமுறை.

உணர்வு நிலை

பறவையின் குரலால் பிரிந்தவனை அழைக்கும் முயற்சி. பறவையின் முதற்குரல் காலம் வந்ததை உணர்த்தும் என எண்ணுகிறாள்.

பாடல் : 1940

Asa gasumi	*காலைப் புகாரும்*
Tanabiku nube ni	*தவழ்கின்ற வயலில்*
Asifi ki no	*அடி இழுக்கும்*
Yama fototogisu	*மலை ஒதொதொகிசு*
Itu ka ki-nakamu	*எப்போ வந்து நரலும்*

விளக்கம்

காலைப் புகார் தவழ்கின்ற வயல்வெளியில் அடி இழுக்கும் மலையில் ஒதொதொகிசுப் பறவை எப்போது வந்து குரல் கொடுக்கும்?

குறிப்புரை

இப்பாடலில் 'Asifi ki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வுநிலை

ஒதோதொகிசு பறவையின் குரலைக் காத்திருக்கும் பெண். வேனிலின் வரவை ஆவலுடன் காத்திருக்கும் நிலை.

பாடல் : 1941

Asa gasumi	*காலைப் புகாரில்*
Yave yama koyete	*யவெ மலை கடந்தே*
Yobu kodori	*கூவுங் குருவி*
Naki ya naga kuru	*நரன்று வந்திடுவாய்*
Yado mo ara naku ni	*தங்கும் இடமும் இன்றே*

விளக்கம்

காலைப் புகாரிலே யவெ மலையைக் கடந்தே கூவுங் குருவியே. தங்கி நிற்க இடமும் இன்றியே குரல் கொடுத்து வந்திடுவாய்.

குறிப்புரை

இப்பாடலில் 'Asa gasumi' என்னும் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yave' என்னுஞ் சொல்லுடன் அணையும். தங்குமிடமில்லாத கூவுங் குருவி.

உணர்வு நிலை

தங்குமிடமில்லாத கூவுங் குருவிபோலத் தனது அன்புக்குரியவனும் வர வேண்டும் என்று விரும்பும் பெண்.

பாடல் : 1942

Fototogisu	*ஒதொதொகிசு*
Naku kowe kiku ya	*நரல் குரல் கேட்பாயா?*
U no fana no	*உவின் மலரே*
Saki tiru woka ni	*அலர்ந்து உதிர் குன்றில்*
Kuzu fiku wotome	*தளிர் கொய் குறுமகள்*

விளக்கம்

'உ'வின் மலர் அலர்ந்து உதிர்ந்துள்ள குன்றிலே தழை கொய்கின்ற என் அன்புக்குரிய குறுமகளே, நீ ஒதொதொகிசுப் புள்ளின் குரலைக் கேட்பாயா?

குறிப்புரை

'உ', மலரின் பெயர். இம்மரத்திலே ஒதொதொகிசுப் புள் தங்கும்.

உணர்வு நிலை

தன் அன்புக்குரியவளை நினைந்து இரங்கும் ஆண் மகன். மலை கடந்து அவள் வாழுகின்ற குன்றிலே அவள் என்ன செய்வாளென்பதை நினைந்து, பறவை குரலில் நலிதல்.

பாடல் : 1943

Tukuyo yomi	*நிலாவும் நன்றே*
Naku Fototogisu	*நரல் ஒதொதொகிசு*
Mimaku vori	*காணும் ஆவலில்*
Ware kusa toreri	*நானே தழை பறிக்கப்*
Mimu fitomo ga mo	*பார்க்கும் மாந்தர் உண்டோ!*

விளக்கம்

நிலாவின் அழகு நன்றாயிருக்கிறது. குரல் கொடுக்கின்ற ஒதொதொகிசுவைப் பார்க்க ஆவலாயுள்ளேன். நான் தழை பறிப்பதைப் பார்க்கும் மாந்தர் இருப்பின், நன்றாயிருக்கும்.

குறிப்புரை

ஒதொதொகிசுப் பறவையிருந்து குரல் கொடுக்கும் மரத்தினடியிலே தழை பறித்தல்.

உணர்வு நிலை

காதலன் வரவை ஆவலுடன் பார்த்தபடி தழை பறிக்கும் பெண். இயற்கையின் அழகை இருவருமாய்க் காணும் ஆவல் நிலை. நிலவில் வரலாம் என்ற எதிர்பார்ப்பு.

பாடல் : 1944

Fudinami no	*புதிநமியின்*
Tira maku wosi mi	*உதிர்வு துன்பமாக*
Fototogisu	*ஒதொதொகிசு*
Imaki nowoka wo	*இமாகியின் குன்றிலே*
Nakite koyu nari	*நரன்று கடந்திடும்*

விளக்கம்

'புதிநமி'யின் மலரின் உதிர்வு காண்பது துன்பமே. ஒதொதொகிசுப் புள்ளும் இமாகிக் குன்றிலே குரல் கொடுத்துக் கடந்து போகும்.

குறிப்புரை

'புதிநமி', மலரின் பெயர்; கொடி வகையைச் சேர்ந்தது; கொத்தாகப் பூக்கும் தன்மையது.

உணர்வு நிலை

தன் காதலி வாழ்கின்ற பகுதியைப்பற்றி எண்ணி இரங்கும் ஆண் மகன். பறவையின் குரல் கேட்டு அவள் வருந்துவாள் என எண்ணுகிறான். இயற்கை அவளுக்குப் பிரிவைக் கூட்டுமே என்ற உணர்வு.

பாடல் : 1945

Aasa giri no	*காலைப் புகாரின்*
Yave-yama koyete	*யவெ மலை கடந்தே*
Fototogisu	*ஒதொதொகிசு*
O no fana be kara	*உநொ மலர்க்காவையே*
Nakite koye kinu	*நரன்று கடந்திடும்*

விளக்கம்

காலைப் புகார் படியும் நேரத்தில் யவெ மலை கடந்தே வரும் ஒதொதொகிசுப் பறவை, உநொ மலர்கள் அலர்ந்துள்ள பூங்காவையும் குரல் கொடுத்தபடி கடந்து செல்லும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Aasagiri no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yave yama' என்னுந் தொடருடன் அணையும். 'யவெ', மலையின் பெயர். பல மடிப்புக்களைக் கொண்ட மலை.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற காதலனின் வழிச் செலவுக் காட்சியை எண்ணி இரங்கும் காதலி, ஒதொதொகிசுப் பறவைபோல அவன் உள்ளம் வருந்தியே பொழில் கடந்து; மலை கடந்து போவான் எண்ணும் பெண் உள்ளம்.

பாடல் : 1946

Ko takaku va	*மரம் உயர*
Katute ki uweji	*என்றுமே வளர்த்திடேன்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Kinaku toyome te	*வந்து நரன்றிடவே*
Kofi masa rasimu	*காதலில் நலியுமே*

விளக்கம்

நான் மரத்தை உயரமாக வளர விடமாட்டேன். ஏனெனில், ஒதொதொகிசுப் பறவை அங்கு வந்திருந்து குரல் கொடுக்கும்போது, என் பிரிவுத் துன்பம் மேலும் பெருகிடுமே.

குறிப்புரை

மரம் வளர்த்தல் மகளிர் கடன். வீட்டு வாயிலில் நாட்டி வளர்க்கும் வகை கூறல். பறவை வந்து தங்கிச் செல்லுமிடமும் அதுவே.

உணர்வு நிலை

காதல் திரும்புங் காலத்தையுணர்த்திக் குரல் கொடுக்கும் பறவையை வரவொட்டாமல் தடுக்க முயற்சி செய்யும் பெண்ணின் மனநிலை. நீண்ட பிரிவால் ஏற்பட்ட வெறுப்புணர்வின் வெளிப்பாடுமாம்.

பாடல் : 1947

Afi gatoki	*காண முடியாத*
Kimi ni aferu yo	*உன்னைக் காணும் இரவு*
Fototogisu	*ஒதொதொகிசு*
Koto toki yori va	*வேறு பொழுதின்றியே*
Ima koso nakamu	*இப்போது நரல்வாயே*

விளக்கம்

உன்னை நேரிலே காணுவதோ மிகவும் கடினமானது. இன்று உன்னை நான் காண்கின்ற இரவு (எனக் கூறும் பெண்), ஒதொதொகிசுப் பறவையே, வேறு பொழுது குரல் கொடுக்காமல் இன்று வந்து குரல் கொடுப்பாயே (என வேண்டுகிறாள்).

குறிப்புரை

இருவருமாகப் பறவையின் குரலைக் கேட்க வேணுமென்ற ஆவல்.

உணர்வு நிலை

ஒன்றாய் இருவரும் சேர்ந்து இயற்கையைச் சுவைக்க வேண்டுமென எண்ணும் பெண்ணின் மனநிலை.

பாடல் : 1948

Kono kure no	*மர நிழலில்*
Yufu yami naru ni	*மாலையில் தங்கிடாது*
Fototogisu	*ஒதொதொகிசு*
Iduku wo ife to	*ஏனோ வீடு தேடியோ*
Naki wataru ramu	*நரன்று கடந்திடுவாய்*

விளக்கம்

மர நிழலிலே மாலைக் காலத்திலே தங்கி இருந்திடாமல், ஒதொதொகிசுப் பறவையே, நீ எங்கு பறந்து போகிறாய்? உனக்குத் தங்குமிடம் தேடியோ நீ குரல் கொடுத்துக் கடந்து போகிறாய்?

குறிப்புரை

பறவை தான் வழமையாகத் தங்குமிடத்திற்கே சென்று தங்கும் இயல்பு உடையது. மரமுள்ள இடமெல்லாம் தங்காது. மாந்தரும் அப்படி இருக்க வேண்டும்.

உணர்வு நிலை

பறவையின் இயல்பு தன் காதலனுக்கும் உண்டு என நம்பும் பெண். கால நீட்டத்திற்கான ஏதுவை எண்ணி இருக்கும் நிலை.

பாடல் : 1949

Fototogisu	*ஒதொதொகிசு*
Kesa no asake ni	*இன்றைய காலையிலே*
Naki turu va	*நரன்றிடுதே*
Kimi kiki kemu ka	*நீயும் கேட்டிடுவாயோ*
Asa i ka nekemu	*காலை துயில்கின்றாயோ!*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவை இன்றைக்குக் காலையிலே வந்து குரல் கொடுக்கின்றது. என் காதலனே, நீயும் அதன் குரலைக் கேட்டிடுவாயோ? அல்லது காலையும் துயில்கின்றாயோ?

குறிப்புரை

பறவைகளின் குரல் கேட்டுத் துயில் கலைந்து எழுவது மாந்தர் இயல்பு. சிலர் காலையும் துயிலும் வழக்கமுடையவர்.

உணர்வு நிலை

வழிச் செலவிலே சென்றவன் துயில் நிலை எண்ணித் துன்புறும் பெண். அவன் துயிலைப் பறவையின் குரல் கலைத்திட்டால், தன்னிடம் வரும் எண்ணம் அவனுக்கு வரலாம் என நம்புகிறாள்.

பாடல் : 1950

Fototogisu	*ஒதொதொகிசு*
Fana tatibana no	*மலர் தசிபநவின்*
Yeda ni wite	*கிளை தங்கியே*
Naki toyo moseba	*நரன்று இருந்திட*
Fana va tiritutu	*மலரே சிதறிடும்*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவை மலர்கள் அலர்ந்துள்ள தசிபந மரத்தின் கிளையிலிருந்து குரல் கொடுக்க, மலர்கள் உதிர்ந்து சிதறிடும்.

குறிப்புரை

தசிபந - தோடை மரம். பறவை அசைந்து குரல் கொடுக்க மலர்கள் உதிரும். மலரின் மென்மையான தன்மை.

உணர்வு நிலை

தசிபந மலர்களின் சிதைவில் காலம் வந்ததை உணர்ந்து பிரிவால் வருந்தும் பெண்.

பாடல் : 1951

Ure taki ya — *துன்பத்துடனா*
Siko Fototogisu — *நாவால் ஒதொதொகிசு*
Ima koso va — *இப்போ வந்துமே*
Kowe no karu gani — *குரல் எதிரொலிக்க*
Konaki toyomame — *வந்து நரன்றிடுதே*

விளக்கம்

மிகுந்த துன்பத்துடன்போலும் ஒதொதொகிசுப் பறவை இப்போது வந்து, குன்றிலே குரல் எதிரொலிக்கும் வண்ணம் தன்னுடைய நாவினாலே குரல் எழுப்பிடுதே.

குறிப்புரை

பறவையின் குரல் மாற்றம். அதன் உள்ளுணர்வு காட்டுமெனக் கூற முயலல். பெருங்குரல் கொடுக்கும் நிலை - எதிரொலித்தல். துயரக் குரல்.

உணர்வு நிலை

தன் துன்பத்தைப் பறவையில் காண முயலல். பிரிந்து சென்ற காதலனைத் தன் குரல் கொடுத்துக் கூப்பிட விரும்பல்.

பாடல் : 1952

Koyora no — *இன்றிரவுமே*
Obotsuka naki ni — *பயன் ஏதும் இன்றியே*
Fototogisu — *ஒதொதொகிசு*
Naku naru kowe no — *நரன்று வரு குரல்*
Oto no faru kesa — *தொலைவில் கேட்டிடுமே*

விளக்கம்

இன்றிரவுந்தான் எதுவிதப் பயனும் இன்றியே ஒதொதொகிசுப் பறவையின் குரல் தொலைவிலே கேட்குமே.

குறிப்புரை

பறவை குரல் கேட்டால் பயன் உண்டு. அதன் உணர்வைப் புரிந்து கொள்ளலாம். தொலைவில் கேட்கையில் பயன் இல்லை; துன்பந்தான் மிகும்.

உணர்வு நிலை

தூங்காமல் பிரிவால் வாடும் பெண் நிலை. தொலைதூரம் பிரிந்து போயிருப்பவன் குரல் கேட்கும் ஆவல்.

பாடல் : 1953

Satuki yama	*ஐந்திங்கள் மலை*
U no fana duku yo	*'உ' மலர் அலர் இரா*
Fototogisu	*ஒதொதொகிசு*
Ki ke domo akozu	*கேட்டும் உள்ளம் நிறையா*
Mata nakanu kamo	*மீண்டுமே நரல்வாய்கொல்!*

விளக்கம்

ஐந்தாம் மாதம் மலையிலே, நிலவொளியிலே உமெயின் மலர் பூத்திருக்கும் இரவு. ஒதொதொகிசுப் பறவையே, உன் குரலைக் கேட்டு உள்ளம் இன்னும் நிறையவில்லை. நீ இன்னொரு முறை குரல் கொடுப்பாயா?

குறிப்புரை

ஐந்தாம் மாத நிலவொளியில் மலை அழகு. உமெ மலரின் அலர்ச்சி அதனை இன்னும் கூட்டும்.

உணர்வு நிலை

ஐந்தாம் மாதம் நிலவொளியிலே மீண்டுமொருமுறை காதலனுடன் இணைய விரும்பும் பெண்.

பாடல் : 1954

Fototogisu	*ஒதொதொகிசு*
Kiwi mo nakanu ka	*வந்துமே நரலாதோ*

Waga yado no — *எனது முன்றில்*
Fana tatibana no — *தசிபந மலரும்*
Tuti ni tiramu mimu — *உதிர்ந்து சிதறல் காணும்*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவையும் வந்து குரல் கொடுக்காதோ! எனது வாயிலிலே உள்ள தசிபந மரத்திலே அது வந்திருந்து சிறகடித்துக் குரல் கொடுக்க, மலர் உதிர்ந்து சிதறுவது காணலாம்.

குறிப்புரை

பறவை வரவை எதிர்பார்த்தல். குறிப்புப் பொருள் கொண்டது. வந்தால் மகிழலாம் என்ற எதிர்பார்ப்பு.

உணர்வு நிலை

காதலனோடு இணைய விரும்பிக் காத்திருக்கும் பெண். தன் விருப்பைப் பறவையின் தொழிற்பாட்டில் ஏற்றிக் கூறல்.

பாடல் : 1955

Fototogisu — *ஒதொதொகிசு*
Itofu toki nasi — *வெறுக்கும் பொழுதின்று*
Ayame - gusa — *நீலப் பூங்கொடி*
Katura ni semu fi — *கண்ணியாய் செய்திடு நாள்*
Koyu naki watasi — *வந்து நரன்று கடவாய்*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவையே, உன்னை எப்போதுமே வெறுப்பதில்லை. நீலப் பூங்கொடியால் நான் தலை மாலை செய்கின்ற நாளிலே வந்து குரல் கொடுத்து இவ்விடத்தைக் கடந்து செல்வாயே.

குறிப்புரை

நீலப் பூங்கொடியால் அழகான தலை மாலை செய்தல், குறிப்பிட்ட நாளில் செய்யும் வழக்கம்.

உணர்வு நிலை

குறிப்பிட்ட நாளிலே தன் அன்பன் வரவேண்டுமெனக் காத்திருக்கும் பெண். விழவு நாளிலே சேர்ந்திருக்க விரும்புதல்.

பாடல் : 1956

Yamato ni va	*யமதொவிலே*
Nakite ka kuramu	*நரன் றுகொல் வந்திடும்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Naga naku goto ni	*நீள்குரல் எப்போதுமே*
Naki fito omofoyu	*என் இறப்பை நினையும்*

விளக்கம்

யமதொவிலே குரல் கொடுத்து வந்திடும் ஒதொதொகிசுப் பறவையினது குரலைக் கேட்கும்போது, எப்போதும் எனது இறப்பு நினைவில் வரும்.

குறிப்புரை

யமதொ - ஜப்பானிய நாடு முழுவதையும் குறிக்கும் சொல்; இறப்பை நினைத்தல் - நிலையற்ற வாழ்வை நினைத்தல்.

உணர்வு நிலை

பறவையின் நாடு சுற்றி வந்த குரலை எப்போதும் கேட்டுப் பிரிவால் நலிந்து உயிர் மடியுமென எண்ணும் பெண். காலங் கடக்கிறது. காதலன் இன்னும் வரவில்லை.

பாடல் : 1957

U no fana no	*உ மலரது*
Sira maku wosi mi	*சிதறல் வருந்துமே*
Fototogisu	*ஒதொதொகிசு*
Nu ni de yama ni iri	*வயல் தாண்டி மலை*
Kinaki toyomosu	*வந்து நரன்றிடுமே*

விளக்கம்

உ மரத்தின் மலர்களின் சிதறலைக் காண்பது எனக்கு வருத்தமே. ஒதொதொகிசுப் பறவையும் வயலைத் தாண்டி வந்து மீண்டும் மலைகளிடையே பறந்து வந்து குரல் கொடுக்குமே.

குறிப்புரை

மலையிடையே குரல் எதிரொலிக்கப் பறவை குரல் கொடுத்தல். செவிகளைக் கூர்மையாக்கிக் கேட்கும் இயல்பு.

உணர்வு நிலை

மலர் சிதறுமுன் காதலன் வரவேண்டுமென விரும்பும் பெண். ஆனால் வயலும் மலையும் கடந்து நீண்ட வழிச் செலவில் வருவதால் காலம் குறிப்பிட முடியாமை. அதனால் பிரிவு நீள்கிறது.

பாடல் : 1958

Tatifana no	*தசிபநவின்*
Fayasi wo uwe mu	*செடியை நாட்டுவோம்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Tune ni fuyu made	*என்றுமே பனிவரை*
Sumi wataru gane	*தங்கிக் கடந்திடவே*

விளக்கம்

தசிபநவின் செடியை நான் நாட்டுவேன். ஒதொதொகிசுப் பறவை வந்து பனிக்காலம்வரை அதில் தங்கியிருந்து பின்பு சென்றிடவே.

குறிப்புரை

பறவை தங்க மரம் நாட்டல் - குறிப்புப் பொருள் தருவது. பறவையைத் தன் வீட்டில் தங்க வைத்தல். செயற்கை உறையுள் செய்தல்.

உணர்வு நிலை

காதலன் தன்னுடன் பனிக்காலம் வரை வந்து தங்க வேண்டுமென விரும்பும் பெண். அவனுக்கு உகப்பான தங்குமிடமாகத் தனது வீட்டை மாற்றியமைக்க முயல்தல்.

பாடல் : 1959

Ama ware no	*மழை கழிந்த*
Kumo ni tagufite	*முகிலுடன் சேர்ந்து*
Fototogisu	*ஒதொதொகிசு*
Kasuga wo sasite	*கசுகவை நோக்கியே*
Koyu naki wataru	*கரைந்தே கடந்திடும்*

விளக்கம்

மழை பெய்து வெறுமையான முகிலுடன் சேர்ந்தே ஒதொதொகிசுப் பறவையும் கசுக மலையை நோக்கிக் குரல் கொடுத்து இங்கே கடந்து போகும்.

குறிப்புரை

உயரமாகப் பறக்கும் பறவை முகிலோடு சேர்ந்து போதல்.

உணர்வு நிலை

காதல் நலிவிலே காதலன் வழிச் செலவு நிலையையும் எண்ணிப் பார்க்கும் பெண்மை. அவன் திரும்பி வருவதற்கு நாளாகும் என்பதை உணர்ந்த நிலை.

பாடல் : 1960

Mono omofu to	*பொருள் நினைந்தே*
I nenu asake ni	*விழித்திரு விடியல்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Nakite sa wataru	*நரன்றே கடந்திடும்*
Sube naki made ni	*தடுத்திடலும் இன்றே*

விளக்கம்

நான் பல்வேறு பொருட்களை நினைந்தே தூங்காமல் முழு இரவும் விழித்திருந்த விடியற்காலை, ஒதொதொகிசுவும் குரல் கொடுத்தே கடந்து செல்லும். அதை யார் தடுக்க முடியும்?

குறிப்புரை

எப்போதும் துன்பமானவற்றை நினைந்து தூக்கம் வராமல் இரவு முழுவதும் விழித்திருத்தல். பிரிவின் நலிவு.

உணர்வு நிலை

அன்பனுடைய வழிச் செலவைத் தடுக்கும் ஆற்றல் அற்ற பெண். அதனால் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருக்கும் நிலை. பிரிவின் நலிவு.

பாடல் : 1961

Waga koromo	*எனது ஆடை*
Kimi ni kise yoto	*உனக்கு அணியவே*
Fototogisu	*ஒதொதொகிசு*
Ware wo sirasete	*என்னையே பணித்திட்டு*
Sode ni kiwi tutu	*கையாடையில் இருக்கும்*

விளக்கம்

என்னுடைய ஆடையை உனக்கு அணியவே ஒதொதொகிசு பறவையும் என்னைப் பணித்திட்டு, எனது கையாடையிலே வந்து இருக்கும்.

குறிப்புரை

இப்பாடல் பல உரையாசிரியர்களால் கடினமான பாடல் எனவும் பொருள் விளங்காத பாடல் எனவும் கருதப்படுகிறது. ஆனால் உள்ளுறைப் பொருள் நிலையில் பறவை பணிப்பது எளிதில் பொருள் விளக்கம் தரும். காதலர் உள்நிலை உரையாடல்.

உணர்வு நிலை

இருவரும் தனியே இணையும் நேரம், தலைவன் விருப்பின் வேண்டுகோளை இப்போது நினைந்து காதலில் நலியும் பெண்.

பாடல் : 1962

Moto to fito	*பழ மனிதன்*
Fototogisu wo ya	*ஒதொதொகிசு எனில்*
Meturasi mi	*வியப்பாகவே*
Ima ka naga kosi	*இப்போதுகொல் வந்திடும்*
Kofi tutu wore ba	*காதல் தொடரும் நானே*

விளக்கம்

என்னுடைய பழைய நண்பன் ஒதொதொகிசு எனில், நான் வியப்படையும் வண்ணம் இப்போது வந்திடுமன்றோ! நீயும் வந்திட்டால் என் காதலும் தொடரும்.

குறிப்புரை

காதல் நலிவுறும்போது வந்ததில் வியப்பு. பழைய நண்பரெனும்போது - நினைக்கும்போது தேவையானவற்றைச் செய்வர்.

உணர்வு நிலை

காத்திருக்கும்போது காதலன் வந்ததால் ஏற்பட்ட மகிழ்வு. பழைய காலத்து நட்பாளன். உளம் புரிந்து செயலாற்றுபவன்.

பாடல் : 1963

Kaku bakari	*இவ்வளவிலே*
Ame no furaku ni	*மழை பொழிந்திடவும்*
Fototogisu	*ஒதொதொகிசு*
U no fana yama ni	*உ மலர் அலர் மலை*
Nafo ka nakuramu	*இன்னுங்கொல் நரன்றிடும்*

விளக்கம்

இவ்வளவு பெரிய மழை பொழிந்திடும்போதும், ஒதொதொகிசுப் பறவை 'உ' மலர் அலர்ந்திருக்கின்ற மலையிலே இன்னும் குரல் கொடுக்குமோ!

குறிப்புரை

மழை பெய்யும்போது பறவை வந்து குரல் கொடுக்காது.

உணர்வு நிலை

பெருமழையின் பொழிவு காதலன் வரவைத் தடுப்பதனால் இரங்கும் பெண். உ மலரின் அலர்வு காலத்தை உணர்த்துகிறது.

பாடல் : 1964

Moda mo aramu	*அமைதியான*
Toki mo nakanamu	*போழ்து நரன்றிடாது*
Figurasi no	*பிகுரசியும்*
Mono omofu toki ni	*பொருள் நினையும் நேரம்*
Naki tutu moto na	*நரலத் தொடங்கிடும்*

விளக்கம்

பிகுரசி ஒலிக்கும் நேரம் அமைதியாக இருக்க வேண்டும். ஆனால் அதுவோ நான் துன்பமான பொருளை நினையும் நேரம் ஒலிக்கும். அதனால் ஒரு பயனும் இல்லை.

குறிப்புரை

பிகுரசி, வண்டின் பெயர்; அழகான சிறகுகள் கொண்டது; காலம் கண்டு ஒலிக்கும் இயல்புடையது.

உணர்வு நிலை

பிரிவால் துன்புற்றுப் பிரிந்தவனை நினைத்திருக்கும் நேரம் வண்டின் ஒலி நினைவைத் தடுப்பதால், பயனற்ற ஒலியாகப் பெண்ணுக்குத் தோன்றுகிறது.

பாடல் : 1965

Omofu ko ga	*நினையுங் காதலி*
Koromo suramu ni	*ஆடையில் நனைத்திடும்*
Nifofi koso	*நிறம் பெறுமே*
Sima no farifara	*சிமவின் பரி வயல்*
Aki tatazu tomo	*காரே வராதெனினும்*

விளக்கம்

நான் நினைத்திருக்கும் காதலி தன் ஆடைக்கு நிறமூட்டவென நனைத்திடும் நிறமாகிவிட்டது. ஆனால் சிமவிலே உள்ள பரி வயல் இந்நிறத்தைப் பெற்றுவிட்டாலும், இன்னும் கார்காலமோ வரவில்லையே!

குறிப்புரை

'சிம', இடத்தின் பெயர்; 'பரி', செடியின் பெயர். ஆடைக்கு ஊட்டும் நிறம்போலக் கார்காலத்தில் நிறம் மாறும் இயல்புடையது.

உணர்வு நிலை

'பரி'யின் நிற மாற்றங்கண்டு பிரிந்து வந்த காதலியின் ஆடை நிறம் நினைவு கூறும் ஆண் மகன். கார்காலம் விரைவில் வர விரும்புகிறான்.

பாடல் : 1966

Kaze ni tiru	*காற்றில் சிதறும்*
Fana tatifa wo	*மலர் தசிபநவை*
Sode ni ukete	*கையாடை சேர்த்தே*
Kimi ga mitame to	*உனக்குத் தரவென*
Omofi turu kamo	*நினைவுந் தொடருமே*

விளக்கம்

காற்றினாலே உதிர்ந்து சிதறும் தசிபநவின் மலர்களை, என்னுடைய கையாடையிலே சேகரித்து உனக்குத் தரவென எண்ண, என் காதல் நலிவுந் தொடருமே.

குறிப்புரை

மலர்களைச் சேகரித்துக் கொடுக்கும் மரபு. தொடர்ந்து பத்துப் பாடல்கள் மலர்களைத் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்திருக்கும் பெண், காற்றில் உதிர்ந்து சிதறும் மலர் கண்டு இரங்கல். மலர்கள் காலத்தை நினைவுபடுத்தத் துயரம் பெருகுகிறது.

பாடல் : 1967

Kagu fasiki	*நன் மணம் வீசு*
Fana tatifana wo	*மலர் தசிபநவை*
Tama ni nuki	*மணி ஆரமாய்*
Okuramu imo va	*அனுப்பும் காதலியே*
Miturete mo aruka	*மெலிந்தும் இருக்குமோ!*

விளக்கம்

நல்ல மணம் வீசும் தசிபநவின் மலர்களை மணி ஆரமாகச் செய்து அனுப்பும் என் காதலி, இவ்வாண்டு இன்னமும் அனுப்பவில்லையே. ஏதாவது உடல்நலக் குறைவு உற்றிருப்பாளோ!

குறிப்புரை

காலத்தில் மலரும் மலர்களிலே மாலை செய்து பெண் காதலனுக்கு அனுப்பும் வழக்கம். **'imo'** என்ற சொல் ஆணின் உணர்வு நிலை கூறும் பாடல் என்பதை உறுதி செய்கிறது.

உணர்வு நிலை

காதலியின் கையால் செய்த மலர் மாலை காத்திருக்கும் காதலன். குறிப்பிட்ட காலத்திலே மாலையை அவள் அனுப்பாததால் உடல் நலயீனமுற்றிருப்பாளோ என எண்ணி வருந்துதல்.

பாடல் : 1968

Fototogisu	*ஒதொதொகிசு*
Ki-naki toyomosu	*வந்து நரன்றிடுமே*
Tatifana no	*தசிபநவின்*
Fana siru niwa wo	*மலர் சிதறு பொழில்*
Mimu fito ya tare	*காணும் மாந்தன் யாரோ?*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவையும் வந்து குரல் கொடுக்கின்றது. தசிபநவின் மலர்கள் சிதறியிருக்கின்ற பூங்காவின் அழகினைக் காண வருகின்ற மாந்தன் யாரோ? *(வேறு யாருமல்ல, நீயே!)*

குறிப்புரை

காணும் மாந்தன் தன் காதலனே என்பதைத் தெரிவித்தல்.

உணர்வு நிலை

காலம் வந்ததால் காதலனும் விரைந்து வர வேண்டுமென விரும்பும் காதலி. அவனைத் தவிர தனக்கு வேறு யாரும் இல்லையென உணர்த்தும் நிலை.

பாடல் : 1969

Waga yado no	*எனது முன்றில்*
Fana tatifana va	*மலர் தசிபநவே*
Tiri ni keri	*சிதறிட்டது*
Kuyasiki toki ni	*அந்தப் பொழுதினிலே*
Aferu kimi kamo	*காண வேண்டும் நீயேகொல்!*

விளக்கம்

எனது வீட்டு முற்றத்து தசிபந மரத்தின் மலர்களெல்லாம் சிதறி விட்டன. நீ அந்த மலர்களைக் காண வராமல் இப்போது வந்திருக்கின்றாயே. மலர்களை நீ அழகு நிலையிலே காண முடியவில்லை. அது எனக்குத் துயரமாகவுள்ளது.

குறிப்புரை

இந்த ஆண்டு அழகான தசிபந மலரைக் காணும் வாய்ப்பு இல்லை. பிந்தி வந்தமை வருத்தம் தருகிறது. பிரிவுத் துயரைக் கண்ணியமாய் வெளிப்படுத்துதல்.

உணர்வு நிலை

காதலன் திரும்பி வந்துவிட்டான். அவனது பிரிவால் தான் அடைந்த துன்பத்தை, இயற்கை அழகு நிலையில் வைத்துக் கூறும் காதலி.

பாடல் : 1970

Mi-watese ba	*பார்வை படரின்*
Mukafi no nobe no	*எதிர் வயல் வெளியின்*
Nadesiko no	*நதெசிகொவின்*
Tira maku wosi mo	*உதிர்வு துன்பந்தரும்*
Ame nafuri so ne	*மழையே பொழியாதே*

விளக்கம்

வீட்டுக்கு வெளியே பார்வையைப் படரவிட்டால், எதிர்ப் பக்கத்து வயல் வெளியிலே நதெசிகொவின் மலர்கள் உதிர்வதைக் காணும்போது மிகுந்த துன்பமாக இருக்கின்றது. இப்பொழுது பெய்கிற மழையே நீயும் பெய்யாதே.

குறிப்புரை

நதெசிகொ, பூவின் பெயர். மழைப் பொழிவால் மலர்கள் உதிரல் காலக் கடப்பை உணர்த்துவது.

உணர்வு நிலை

காதலன் வரவு பார்த்திருக்கும் பெண்ணுக்கு மழை பெய்வது மேலும் துன்பந்தருகிறது. கால மழை காலக் கடப்பை உணர்த்த, பிரிவின் நீட்டம் புரிநிலை.

பாடல் : 1971

Ama ma akete	*மழை நிற்கவே*
Kuni mimo semu wo	*நாடு காண விரும்பும்*
Furu sato no	*பழைய ஊரின்*
Fana tatifana va	*மலர் தசிபநவே*
Tiri ni kemu kamo	*சிதறி இருந்ததுகொல்!*

விளக்கம்

பெய்யும் மழையும் நின்றிடவே நாட்டுச் சூழலைப் பார்க்க விரும்புவர். பழைய ஊரில் அலர்ந்திருந்த தசிபநவின் மலர்களெல்லாம் சிதறி இருந்தனவே.

குறிப்புரை

மழை நிற்க, மலையிலே இருப்பவர் கீழே குடியிருப்புகளைப் பார்க்க விரும்புவர். வழிச் செலவிலே செல்லும் ஆடவர் தமது ஊரைப் பார்க்க விரும்புவர்.

உணர்வு நிலை

வழிச் செலவிலே மலைப் பகுதியில் செல்லும் ஆடவன், தான் ஊரில் விட்டுப் பிரிந்து வந்த காதலியைப் பார்க்க முடியாமையால், அவள் இருக்கும் ஊர்ப்புறத்தையாவது காண விரும்பும் நிலை. காதலியும் உதிர்ந்த மலர்போல வாடி இருக்குமென எண்ணுதல்.

பாடல் : 1972

Nube mire ba	*வயல் காணவே*
Nadesiko no fana	*நதெசிகொவின் மலர்*
Saki ni keri	*அலர்ந்ததுவே*
Waga matu aki va	*நான் காத்திடு காருமே*
Tikaduku rasi mo	*அண்மையில் வந்திடுமே*

விளக்கம்

வயல்வெளியைப் பார்க்கின் நதெசிகொவின் மலரும் அலர்ந்திருக்கிறது. நான் எதிர்பார்த்துக் காத்திருக்க கார்காலமும் விரைவிலே வந்திடுமே.

குறிப்புரை

பொறுமையாய்க் காத்திருந்த காலம். 'நதெசிகொ', மலரின் பெயர்.

உணர்வு நிலை

வினைவயிற் சென்ற ஆடவன் தன் காதலியிடம் சென்று சேரும் காலத்தை ஆவலுடன் காத்திருக்கும் நிலை. குறிப்பிட்ட காலம் போய்ச் சேர நாட்களை எண்ணிக் காத்திருக்கிறான்.

பாடல் : 1973

Wagimoko ni	*என் காதலியின்*
Afuti no fana va	*அபுதியின் மலரே*

Tiri sugizu	*சிதறிச் செல்லாது*
Ima sakeru goto	*இப்போ மலர்ந்ததுபோல்*
Ari kosenu kamo	*இருந்திட மாட்டாய்கொல்!*

விளக்கம்

என் காதலியைச் சோலை ஒத்த அபுதி மலர் இன்னும் உதிரவில்லை. அதுபோல என் காதலியும் இருந்திடின் நன்று. அன்றலர்ந்த மலர் போல அவளும் எப்போதும் அழகாய் இருக்க வேண்டும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'wagimoko ni' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். அபு என்னுஞ் சொல்லுடன் அணையும். காதலி அழகு மலர்போல இருக்க விரும்பல்.

உணர்வு நிலை

காதலியைப் பிரிந்து வந்த காதலன் உள்ளத்தில், பிரிவுத் துயரால் அவள் அழகு கெட்டுவிடக் கூடாதே என்ற எண்ணம் மிக்கிருத்தல். இயற்கை நிலையில் அழகுள்ளவள் அவள். பிரிவு என்னும் கொடுமையாலே வாடிவிடக் கூடாது என இரங்குதல்.

பாடல் : 1974

Kasuga no no	*கசுக வயல்*
Fudi va tiri nite	*புதீ உதிர்ந்திட்டதே*
Nani wo kamo	*என்னவும் ஏதும்*
Mikari no fito no	*வேட்டுவர் மாந்தர்தானே*
Worite kasasamu	*பிடுங்கி அணிந்திடுமோ*

விளக்கம்

கசுக வயல்வெளியிலே பூத்துக் குலுங்கிய 'புதி' மலரும் உதிர்ந்து விட்டது. இப்போது வேட்டைத் தொழில் செய்யும் மாந்தர் எதனைப் பிடுங்கித் தமது தலையிலே அணிவார்களோ?

குறிப்புரை

அரச வேட்டுவர் வேட்டைத் தொழில் செய்யும்போது தலையிலே மலர் சூடுகின்ற வழக்கம். அவர்கள் சூடுவதற்குப் பூ இருக்க வேண்டுமென்ற ஆவல்.

உணர்வு நிலை

வினைவயிற் பிரிந்து சென்ற ஆடவன் வரவு காத்திருக்கும் பெண். மரபுநிலையான மலர் சூடலுக்கு மலர்கள் இருக்குமோ என ஐயுற்று நலியும் நிலை.

பாடல் : 1975

Toki narazu	*பொழுது இன்றி*
Tama wo zo nukeru	*மணியாகத் தான் கோக்கும்*
U no fana no	*உவின் மலரின்*
Satuki wo motaba	*ஐந்தாம் திங்கள் காக்கவே*
Fisasi karu bemi	*காலமும் நீண்டிடுமே*

விளக்கம்

காலத்தைக் கணக்கெடாமல் தலையிற் சூடும் மணியாகக் கோத்தோம். இப்போது ஐந்தாம் திங்கள் வரை காலமும் நீண்டு கிடக்கிறதே. உவின் மலர் மலர இன்னும் காலம் இருக்கிறதே.

குறிப்புரை

தலையிற் சூடும் மணி கோக்கும் மரபு; பொழுதைக் கழிக்கப் பெண்கள் செய்யும் தொழில். உவின் மலர் மலருங் காலக் குறிப்பு.

உணர்வு நிலை

காலம் வருமுன்னரே காதலன் வரவு காத்து நலியும் பெண்; மலர் மலருங் காலம் இன்னும் வரவில்லையே என்ற ஏக்கம்.

பாடல் : 1976

U no fana no	*'உ'வின் மலரே*
Saki tiru woka yu	*பூத்துச் சிதறும் குன்றில்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Nakite sa-wataru	*நரன்றே கடந்திடும்*
Kimi va kikituyu	*நீயே கேட்டிருப்பாயோ!*

விளக்கம்

'உ' வினது மலர் பூத்துச் சிதறும் குன்றிலே, ஒதொதொகிசுப் பறவையும் குரல் கொடுத்துப் பறந்து கடந்து செல்லும். நீயும் அதன் குரலைக் கேட்டிருப்பாயோ!

குறிப்புரை

கேள்வியும் விடையுமாய் அமையும் பாடல் அமைப்பு. ஒரு கேள்வி அமைந்துள்ளது.

உணர்வு நிலை

வினைவயிற் சென்றவன் குன்றிடைச் செல்லும்போது பறவையின் குரலைக் கேட்பானோ என எண்ணும் பெண். அதுவே அவள் உள்ளத்தில் கேள்வியாக உறைந்து கிடக்கிறது.

பாடல் : 1977

Kikitu ya to	*கேட்பாயே என*
Kimi ga tofaseru	*நீயும் கேட்டிருக்குமே*
Fototogisu	*ஒதொதொகிசு*
Sinono ni nurete	*முற்றுமாக நனைந்தே*
Koyu naki wataru	*கடந்து நரன்று போகும்*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவையின் குரலை நீயும் கேட்பாயோ என நீயும் என்னை (காதலனை)க் கேட்டிருக்கும். ஒதொதொகிசு முற்றிலும் நனைந்து இவ்விடம் கடந்து செல்லும்.

குறிப்புரை

விடை நிலையாக அமைந்த பாடல். ஆண் விடை கூறும் நிலை. பழைய ஜப்பானியக் காதல் பாடல்களில் இந்நிலை மிகுதி.

உணர்வு நிலை

வினைவயின் இருக்கும் காதலன் தன்னிருப்பிடம் கடந்து நனைந்து துணை தேடிக் குரல் கொடுத்துச் செல்லும் பறவை கண்டு, காதலியின் நிலை எண்ணுதல்.

பாடல் : 1978

Tatifana no	*தசிபநவின்*
Fana tiru sato ni	*மலர் சிதறு ஊரில்*
Kayofinaba	*பறந்திடினே*
Yama Fototogisa	*மலை ஒதொதொகிசு*
Toyomosamu kamo	*பெரிதாய்க் கூவிடுங்கொல்!*

விளக்கம்

தசிபநவின் மலர்கள் பூத்துச் சிதறுகின்ற ஊரிலே ஒதொதொகிசுப் பறவை மலையைக் கடந்து செல்லும்போது பெருங்குரலில் கூவிச் சென்றிடுமோ!

குறிப்புரை

ஊரைக் கடந்து பறந்து செல்லும்போது பறவை பெரிதாய் ஒலியெழுப்பல். அது கேட்டுப் பிரிந்திருக்கும் பெண் பிரிவின் கொடுமை கூறுதல்.

உணர்வு நிலை

காதலன் வரவைக் காத்திருக்கும் பெண்ணுக்கு ஊரைக் கடந்து செல்லும் பறவையிடம் ஏற்படும் நலிவுணர்வு. பறவை குரல் கொடுப்பது தன் துணை தேடி. ஆனால் இந்தப் பெண்ணோ அது தன் பிரிவுத் துயரைப் பெருக்கவே குரல் கொடுப்பதாக எண்ணுதல்.

பாடல் : 1979

Faru sareba	*வேனில் வந்ததே*
Sugaru naru no no	*வண்டு செறி வயலின்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Foto foto imo ni	*குரலில் காதலியைக்*
Afazu kini keri	*கண்டிட வந்தனனே*

விளக்கம்

வேனில் வந்தது. வண்டுகள் நிறைந்த வயலில் ஒதொதொகிசுப் பறவை குரல் கொடுத்தது. நானோ இப்போதுதான் பல நாட்களின் பின்னர் என் காதலியைக் காண வந்தேன்.

குறிப்புரை

காலந் தாழ்த்தி வந்தமை இயற்கை நிலையால் விளக்கல். இவை கோடைக் காலக் காதற் பாடல்கள். இதனால் வேனில் போயிற்று என்ற பொருளில் பாடல்கள். வேனில், இளவேனில்; கோடை, முதுவேனில்.

உணர்வு நிலை

இளவேனில் கழிந்தபின் காதலியைக் காண வந்த காதலன் உள்ளத்து நிலை.

பாடல் : 1980

Satuki yama	*ஐந்திங்கள் மலை*
Fana tatifana ni	*மலர் தசிபநவில்*
Fototogisu	*ஒதொதொகிசு*
Kakurafu toki ni	*மறைந்திடு நேரமே*
Aferu kimi kamo	*கண்டேன் உன்னையேகொல்லோ!*

விளக்கம்

ஐந்திங்கள் மலையிலே மலர்ந்துள்ள தசிபந மரத்திலே, ஒதொதொகிசுப் பறவையும் மறைந்திருந்து ஒலிக்கும் நேரத்திலே நான் உன்னையுமே கண்டேன். அந்த மகிழ்வு சொல்லும் தரமன்றோ!

குறிப்புரை

சதுகி - ஐந்தாம் திங்கள். அதனையொத்த வடிவிலமைந்த மலையென்பதால் அப்பெயர் பெற்றது. பறவை மறைந்திருந்து ஒலித்தல் குறிப்புப் பொருள். இருவரின் இணைவு விளக்கும்.

உணர்வு நிலை

காதலனைக் கண்ட மகிழ்வை வெளிப்படுத்தும் பெண். பறவையின் இயல்பில் மறைபொருளாக்கி உணர்வு கூறல்.

பாடல் : 1981

Fototogisu	*ஒதொதொகிசு*
Ki-naku satuki no	*வந்து நரல் ஐந்திங்கள்*
Mizika yo mo	*குறு இரவும்*
Fitori si nureba	*தனியே உறங்கிடும்*
Akasi kanetu mo	*காலையும் வந்திடவே*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவை வந்து குரல் கொடுக்கின்ற ஐந்தாம் மாதத்தின் குறு இரவும் நான் தனியே உறங்கிடும். காலையும் காத்து நில்லாமல் வந்திடவே. (இரவு தனியே உறங்குவதால் குறுகிய இரவுமே நீண்டது. எனவே காலையை விரைவில் காண விரும்புகிறேன்).

குறிப்புரை

ஐந்தாம் மாதம் குறுகிய இரவு நாள்களைக் கொண்டது. பறவை குரல் கேட்க விரும்பினும், நீண்ட இரவைப் பிரிவுக் காலத்திலே விரும்பாமை.

உணர்வு நிலை

காதலன் பிரிவால் தனித்துறங்குவதால் நலிவடையும் பெண். குறுகிய இரவையும் கழிக்கப் பெரிதும் துன்புறும் நிலை.

பாடல் : 1982

Figurasi va	*பிகுரசியும்*
Toki to nakedomo	*நேரம் நோக்கி நரலும்*
Mono kofi ni	*நட்பிலும் நலியும்*
Tawayame ware va	*காதல் மென்மகள் நானே*
Toki wakazu naku	*நேரமின்றி அழுவேன்*

விளக்கம்

பிகுரசியும் குறிப்பிட்ட நேரம் நோக்கியே ஒலிக்கும். காதலன் நட்பிலே நலியும் மெல்லியளான நானோ நேரம் குறியாமல் எப்போதுமே அழுவேன்.

குறிப்புரை

பிகுரசி - சிள் வண்டு. குறிப்பிட்ட நேரத்திலே ஒலி செய்யும்.

உணர்வு நிலை

காதலன் பிரிவால் பெரிதும் நலியும் பெண். எந்நேரமும் அழுதபடியே அவனைக் காத்திருக்கும் நிலை.

பாடல் : 1983

Fito-goto va	*மாந்தர் அலரே*
Natu-no no kusa no	*கோடை வயல் புல்லினும்*
Sigeku tomo	*அடர்ந்திடினும்*
Imo to ware to si	*காதலியொடு நானும்*
Tadusafari neba	*கையணைத் துறங்கினேன்*

விளக்கம்

மாந்தர் பேசுகின்ற அலர் கோடைக் காலத்து வயல்வெளியிலே வளர்ந்துள்ள புல்லது அடர்த்தியாக இருப்பினும்-அதிலென்ன. நானும் என் காதலியோடு கையணைத்து உறங்கினேன்.

குறிப்புரை

ஊரலர் நிலை. தொடர்ந்து நான்கு பாடல்கள் செடிகொடியைத் தொடர்புறுத்தி. உறங்கல் நிலை - நெருக்க நிலை.

உணர்வு நிலை

காதலியுடன் சேர்ந்துறங்கியதால் ஊர் அலர் தூற்றினாலும் கவலை கொள்ளாத ஆண் மகன் நிலை. திருமணத்திற்கு முன்னர் இருவரும் நெருங்கிப் பழகுவதில் தவறில்லை என எண்ணுதல்.

பாடல் : 1984

Konogoro no	*இந்த நேரத்தின்*
Kofi no sigekeku	*காதலது செறிவு*
Natu gusa no	*கோடைப் புல்லினை*
Kari farafe domo	*வெட்டியே எறியினும்*
Ofi siku gotosi	*படரும் நிலை ஒக்கும்*

விளக்கம்

எனது இப்போதைய காதல் நலிவின் செறிவு கோடைக் காலத்துப் புல்லை வெட்டி எறிந்தாலும் மீண்டும் தழைப்பதுபோல மீண்டும் மீண்டும் நினைவிலே வளரும்.

குறிப்புரை

கோடைப் புல்லின் இயல்பு, காதல் நலிவுக்கு ஒப்பீடு.

உணர்வு நிலை

வினைவயிற் சென்ற ஆணின் காதல் நலிவு, வினை செய்யும்போதும் காதல் நலிவை மறக்க முடியாமல் வருந்தல். கோடைப் புல்லை வெட்டும்போது காதலி நினைவு வருதல்.

பாடல் : 1985

Ma kusa fafu	*நல் குசு நிறை*
Natu kuzu fafu	*கோடை வயல் அடர்வு*
Kakui kofiba	*நேர் காதலாயின்*
Makoto waga inoti	*உண்மையில் என்னுயிரே*
Tune narame ya mo	*நின்று நிலைத்திடுமோ!*

விளக்கம்

நல்ல குசு செடி கோடை வயலிலே அடர்ந்து செழித்திருப்பதை ஒத்த என் காதல் நலிவு. இந்த நலிவினால் உண்மையில் என் உயிர் வாழ்க்கையும் தொடருமோ! *(இல்லை, நான் நலிவில் இறந்திடுவேனோ?)*

குறிப்புரை

'குசு', வயலில் தழைத்து வளரும் ஒரு செடி. இதன் கிழங்கு உணவாகப் பயன்படும்.

உணர்வு நிலை

காதல் நலிவினால் தொடர்ந்தும் உயிர் வாழ முடியுமோ என அஞ்சும் பெண் உள்ளம். பிரிவுத் துயரால் உடல் நலம் கெட, உயிர் வாழ்க்கைக்கு ஊறு ஏற்படலாம் என எண்ணுதல்.

பாடல் : 1986

Ware nomi ya	*எனக்குத்தானா*
Kaku kofi suramu	*இந்தக் காதல் நலிவு?*
Kakitubata	*ககிதுபத*
Nidurafu imo va	*செம்முகக் காதலி*
Ika ni ka aruramu	*எப்படி இருக்குமோ?*

விளக்கம்

இந்தக் காதல் நலிவின் துன்பம் எனக்கு மட்டும்தானா? ககிதுபத மலரின் நிறமொத்த சிவந்த முகத்தையுடைய என் காதலி, காதல் நலிவின் துன்பத்தை என்னைப்போலவே பொறுக்க முடியாமல் வருந்தி இருக்குமோ?

குறிப்புரை

இப்பாடலில் 'kakitu bata' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Nidurafu', என்னும் தொடருடன் அணையும். ககிதுபத - ஒரு மலரின் பெயர்.

உணர்வு நிலை

காதலியின் நினைவால் வருந்தும் ஆண், தனது காதலியும் தன்னைப்போலவே காதல் நினைவால் வாடியிருக்குமோ என எண்ணுதல்.

பாடல் : 1987

Kata yori ni	*ஒரு பக்கமாய்*
Ito wo zo waga yoru	*நூலைத்தான் சுற்றுவேன்*
Waga suko ga	*என் காதலரின்*
Fana tatifana wo	*மலர் தசிபநவை*
Nukamu to mofite	*சேர்த்திட நினைந்தேனே*

விளக்கம்

நான் நூலை ஒரு பக்கமாகவே முறுக்குவேன். எனது காதலரின் தோட்டத்திலேயுள்ள தசிபந மலர்களைத் தொடுத்திடும் நினைப்புடனே.

குறிப்புரை

ஒரு பக்கமாய் நூல் முறுக்கல், ஒரு பக்கமான காதல். காதலனுக்கு எதிர்காலத்திலே தசிபந மலரிலே கண்ணி செய்து கொடுப்பதை நினைவில் இருத்திய பெண். ஏழு பாடல்கள், தொடர்ந்து பூக்கள் தொடர்புறுத்தி.

உணர்வு நிலை

தன் காதல் நிலையை ஆணிடம் தெளிவுபடுத்தாத பெண்ணின் நிலை. ஒரு பக்கமாய் நினைந்து இரங்குதல்.

பாடல் : 1988

Uguvisu no	*உகுவிசுவும்*
Kayofu kaki ne no	*நின்று போகும் வேலியின்*
U no fana no	*உ நொ மலரின்*

Uki koto are ya — *நலிநிலை அதுவோ*
Kimi ga kimasanu — *நீயும் வாராதிருக்கும்*

விளக்கம்

உகுவிசுப் பறவை வந்து நின்று கடந்து போகின்ற வேலியில் மலர்ந்த உநொ மலரின் நிலையான காதல் நலிவுதான் எனக்கும். நீயுமே இங்கு வராமலிருக்கின்றாயே.

குறிப்புரை

உகுவிசுப் பறவை உநொ மலர் வேலியிலே சிறிது நேரம் தரித்துப் போனதுபோன்ற அவன் வருகை.

உணர்வு நிலை

காதலன் வராமையால் வருந்தும் பெண், முன்னர் அவன் வந்து போன குறுகிய வரவை நினைந்து நலிதல்.

பாடல் : 1989

U no fana no — *உநொ மலரின்*
Saku to va nasi ni — *அலர்ச்சியைப் போலன்றி*
Aru fito ni — *காணும் அவரில்*
Kofi ya wataramu — *என் காதலே படரும்*
Katamofi ni site — *ஒரு பக்க நினைவாய்*

விளக்கம்

உநொ மலரின் முழுமையான மலர்வு போலல்லாது, நானும் நேரிலே கண்ட அவரிலே என் காதல் நினைவு செறியும். இது ஒரு பக்க நினைவாகவே நின்றிடுமோ? (இல்லை, அவ்வாறு நிற்பதை நான் விரும்பேன்)

குறிப்புரை

இப்பாடலிலே 'uno fana no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'saku' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

தன் காதல் உணர்வை ஆணிடம் வெளிப்படுத்த எண்ணும் பெண். ஒருசார் காதலைவிட உண்மை நிலையை உரியவரிடம் நேரே உரைப்பதே நன்று என எண்ணும் பெண் உள்ளம்.

பாடல் : 1990

Ware koso va	*என்னிடத்திலே*
Nikuku mo arame	*வெறுப்பும் இருக்குமோ*
Waga yado no	*எனது முன்றில்*
Fana totifana wo	*தசிபந மலரைக்*
Mini va kozi to ya	*காணவே வருவாயோ!*

விளக்கம்

என்னிடத்திலே உனக்கு வெறுப்பும் இருக்குமோ? எனது முற்றத்திலே மலர்ந்திருக்கும் தசிபந மலரைக் காண்பதற்கும் நீ வரமாட்டாய் போலும் (நீ முன்னரே கூறியதுபோல).

குறிப்புரை

மலர் தசிபநவைக் காண்பதற்கு என்னால் வர முடியாது எனக் காதலன் முன்னரே கூறியுள்ளான். வினை முடியும் காலம் குறிப்பிட முடியாமை.

உணர்வு நிலை

காதலன் மலர் காண வர முடியாது என்று கூறிச் சென்றதை எண்ணிப் பார்த்து, அவனுக்குத் தன்னில் வெறுப்பும் இருக்குமோவென வருந்தும் காதலி நிலை.

பாடல் : 1991

Fototogisu	*ஒதொதொகிசு*
Ki naki toyomosu	*வந்து ஒலியெழுப்பும்*
Wokabe naru	*குன்றில் இருக்கும்*
Fudi nami mi ni va	*புதிநமி காணவே*
Kimi va kozi to ya	*நீயுமே வருவாயோ!*

விளக்கம்

ஒதொதொகிசுப் பறவை வந்து எதிரொலிக்கும்வண்ணம், குரல் எழுப்பும் குன்றிலே மலர்ந்திருக்கின்ற புதிநமியின் பூக்களைக் காணவாகிலும் நீ வரமாட்டாயோ!

குறிப்புரை

எனக்காக வர வேண்டாம். ஒதொதொகிசுப் பறவையின் குரலையும் புதிநமி மலரையும் பார்ப்பதற்காக வா.

உணர்வு நிலை

என்னைக் காண நீ வரவேண்டாம். இயற்கை அழகைக் காண்பதற்கு நீ வர வேண்டும் எனக் காதலனை வேண்டி நிற்கும் பெண். பிரிந்து சென்றவனைத் திரும்பி வரச் செய்ய இயற்கையை நாடுகிறாள்.

பாடல் : 1992

Komori nomi	*மறைத்திருக்கும்*
Kofureba kurusi	*காதலெனின் வருத்தும்*
Nadesiko no	*நதெசிகொவின்*
Fana ni saki de yo	*அலர்போல் மலர்ந்திடு*
Asanasana mimu	*நாளும் காலை நான் காணும்*

விளக்கம்

காதலை மறைத்திருக்கும் அதனால் வருத்தமே ஏற்படும். எனவே நதெசிகொவின் மலர்போலக் காதலை வெளிப்படுத்து. நான் ஒவ்வொரு நாளும் காலை உனைக் காண வருவேன்.

குறிப்புரை

காலையில் மலரும் மலர் புதியது; அழகானது; உள்ளம் மறைக்காத காதலும் அத்தகையது.

உணர்வு நிலை

தன் காதலியிடம் உள்ளத்துணர்வைத் தெளிவாய்ப் புலப்படுத்தும்படி வேண்டும் ஆண் நிலை; பெண்ணின் முழுமையான காதலை விரும்பும் ஆண் மகன்.

பாடல் : 1993

Yoso nomi ni	*தொலைவில் நின்று*
Mitutu kofisemu	*கண்டதைக் காதலிக்கும்*
Kurenawi no	*குரெநவியின்*
Suwe tumu fana no	*காம்பு களை மலரின்*
Iro ni idezu tomo	*நிறம் பெறாவிடினும்*

விளக்கம்

தொலைவிலே உன்னைப் பார்த்திருந்து காதலிக்கின்றேன். குரெநவியின் காம்பிலிருந்து களையப்பட்ட மலர் முழுமையாக நிறம் பெறாததுபோல, என் காதலும் இன்னும் முழுமை பெறவில்லை.

குறிப்புரை

குரெநவியின் மலர்களை முழுமையாக மலரும்முன் களைந்தால், அதன் முழுமையான அழகு நிறத்தைக் காண முடியாது. நேரில் காணும் ஆவல், குறிப்புப் பொருள்.

உணர்வு நிலை

பெண்ணைத் தூரத்திலே கண்டு விருப்பங்கொண்ட ஆணின் நிலை. முகத்தோடு முகம் நோக்கும் ஆவல்.

பாடல் : 1994

Natu gusa no	*கோடைப் புல்லது*
Tuyu wake goromo	*துளியில் நனை ஆடை*
Tuke naku ni	*இன்று அணியாது*
Waga koromo de no	*என் ஆடை நனைகரை*
Firi toki mo naki	*காய நேரமும் இல்லை*

விளக்கம்

கோடைப் புல்லின்மேல் விழுந்த பனித் துளியில் நனைந்த ஆடையை நான் அணியவில்லை. ஆனால் என் ஆடை நனைந்த கரைப் பகுதியும் காய்வதற்கு நேரமும் இல்லையே.

குறிப்புரை

காதல் நலிவு, அதனால் தொடர்ந்து கண்ணீர் விடுதல்; பனித் துளியைத் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

நீண்ட காலமாகக் காதலன் வரவு நோக்கிக் கண்ணீர் விடும் பெண். அவள் தொடர்ந்து கண்ணீர் விடுவதால் கண்ணீர் காய்வதற்கும் நேரமில்லை. பெருந் துன்ப நிலை.

பாடல் : 1995

Mina duki no	*ஆறாம் மாதத்து*
Tuti safe sakete	*நிலம் பகு வெம்மையில்*
Teru fi ni mo	*தெளிர் ஞாயிறும்*
Wage sode fime ya	*என் ஆடை உலர்த்துமா*
Kimi ni afazu site	*உன்னைக் காணாவிடினே*

விளக்கம்

நிலம் வெடிக்கும்படி கனன்று ஒளி வீசுகின்ற கதிரவனும் என்னுடைய ஆடையை உலரச் செய்ய முடியுமா, உன்னை நான் நேரில் காணாது விட்டால்? (இல்லை, அது முடியாது)

குறிப்புரை

கண்ணீரளவு, கதிரவன் வெம்மையைவிடக் கூடியது. கதிரவன் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதலன் வராமல் காலம் கடக்கவே கண்ணீர் விடும் பெண். அவள் கண்ணீரைக் கதிரவனால் காய வைக்க முடியாது. காதலனே வர வேண்டும். காதல் நலிவின் உச்சமான நிலை.

பாடல் : 1996

Ama no gava	*விண்ணாற்றினது*
Mina soko safeni	*நீர்ப்பரப்பு வரையில்*
Terasu fana	*ஒளிரும் புணை*
Fatsi sunafito	*படியும், புணை மாந்தன்*
Imo ni miyeki ya	*காதல் காணுவானோ?*

விளக்கம்

விண்ணாற்றினது நீர்ப்பரப்புவரை ஒளிர்ந்து வரும் புணை துறையிலே தரிக்கும். புணை செலுத்தி வந்த மாந்தன் தனது காதலியையும் கண்டு போகக்கூடியதாக இருக்குமோ?

குறிப்புரை

தொடர்ந்து *98* பாடல்கள் ஏழாம் மாதத்து ஏழாம் நாளின் HIKOBOSIயும் TANABATAவும் விண்ணாற்றிலே கடந்து காணும் மரபு பற்றியவை. புணை மாந்தன் கிகொபொசி; காதலி தநபத. புணை படியும்போது ஒளி வீசல். இருவரும் ஆண்டில் ஒருமுறை நேரில் காணுவர்.

உணர்வு நிலை

புலவர் உள்ளத்து நிலை.

பாடல் : 1997

Fisakata no	*பிசகதவின்*
Ama no kafara ni	*விண்ணாற்று வெளியினில்*
Nuye tori no	*நுள புள்ளது*
Ura nake masitu	*குரல் கேட்க வந்திடும்*
Sube naki made ni	*தடுத்திடும் வரையில்*

விளக்கம்

முடிவில்லாத விண்ணாற்று வெளியினில் நுள பறவையின் துயரமான குரலைத் தடுக்கும் வரையில் கேட்க வந்திடும்.

குறிப்புரை

இப்பாடலில் இரு தலையணைச் சொற்றொடர்கள் 'Fisakata no' என்னுந் தொடர் 'ama'வுடன் அணையும். 'Nuyetori no' என்னுந் தொடர் 'ura nake'யுடன் அணையும். தநபத நீண்ட நேரம் நிற்க முடியாது.

உணர்வு நிலை

காதலனைக் காத்து நிற்கும் தநபத.

பாடல் : 1998

Waga kofi wo	*என் காதலையே*
Tuma va sireru wo	*காதலனே அறியும்*
Yuku fune no	*செல்லும் புணையில்*
Sugite ku besi ya	*பிரிந்தே சென்றிடுமோ*
Koto mo tuge namu	*விடையும் கூறாமலே*

விளக்கம்

எனது காதல் நிலையைக் காதலன் நன்கு அறிவான். அவனது புணையும் பிரிந்து சென்றிடுமோ! நானும் விடை எதுவும் கூறாமலே.

குறிப்புரை

Tuma இங்கு காதலன்/கணவன் என்ற பொருளில். தநபதவின் பாடல்.

உணர்வு நிலை

தனது காதலன் தன்னிடம் விடை பெறாமலே புணையில் பிரிந்து சென்றிடுமோ என எண்ணுதல்.

பாடல் : 1999

Akara fiku — *செம்மையாகிடு*
Siki tave no kowo — *நிற முகம், அவளை*
Siba mire ba — *உற்று நோக்கிடின்*
Fito-duma yuwe ni — *பிறன் மனையாளெனும்*
Wase kofinu besi — *என் காதல் பெருகிடும்*

விளக்கம்

செம்மையான நிறத்து முகம்; அம் முகத்தவளை உற்றுப் பார்த்திடவே பிறன் மனைவியென்பது தெளிவாயிற்று; எனினும், அவள்மீது எனது காதலோ பெருகும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Akara fiku' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Sikitave no ko' என்னுந் தொடருடன் அணையும். இப்பாடல் 7ஆம் மாத 7ஆம் நாள் பாடல்களுடன் பொருந்தாது எனப் பியர்சன் கூறுவர். 'பிறன் மனையாள்' என்பது, கருத்து முரண்பாடு தருவது. கொறொசு பாடலில் கூறப்படும் பெண், தநபத என்பார்.

உணர்வு நிலை

அழகிய பெண்ணிடம் காதல் கொள்ளுதல். கிகொபொசியின் பாடல்.

பாடல் : 2000

Ama no gava — *விண்ணாற்றினது*
Yasu no watari ni — *துறையைக் கடந்திடும்*
Fune ukete — *புணை கொண்டுதான்*
Aki tatu matu to — *கார்காலம் காத்து நிற்கும்*
Imo ni toge koso — *காதலிக்கு உரையே*

விளக்கம்

விண்ணாற்றினது துறையைப் புணைகொண்டு கடந்திடுவேன். ஆனால் கார்காலத்தினுடைய வரவைக் காத்து நிற்கின்றேன் என என் காதலியிடம் தூது உரைத்துவிடு.

குறிப்புரை

துறையின் பெயர், யசு; காதலி - தநபத.

உணர்வு நிலை

கிகொபொசியின் பாடல். காதலியைக் கார்காலம் வரும்வரை காத்து நிற்றல். காலம் இருப்பதால் தூது அனுப்பல்.

பாடல் : 2001

Ovo sora yu	*பெரு வானத்தைக்*
Kayofu ware sura	*கடந்து நான் செல்லும்*
Nare yuwe ni	*உனக்காகவே*
Ama no gava-diwo	*விண்ணாற்றுத் தெருவிலே*
Natumite zo kosi	*நலிந்தேதான் வந்தேனே*

விளக்கம்

பெருவானத்தை நான் கடந்து செல்லும் வழக்கமுடையவன். உன்னைக் காண்பதற்காக விண்ணாற்றின் தெருவையே காதல் நலிவுடனேதான் கடந்து வந்தேன்.

குறிப்புரை

விண்மீன்கள் வானத்தைக் கடந்து செல்பவை.

உணர்வு நிலை

காதல் நலிவு கூறும் கிகொபொசியின் பாடல்.

பாடல் : 2002

Yatifoko no	*யசிபொகொவின்*
Kami no miyo yori	*இறையின் பழைமைபோல்*
Tomosi duma	*காதல் மனைவி*
Fito siri ni keri	*மாந்தரும் அறிவாரே*
Tugite si omofaba	*தொடர்ந்தும் நினையுமே.*

விளக்கம்

யசிபொகொ கடவுளின் பழைமைபோல அவளே என் காதல் மனைவி என்பதை மாந்தரும் அறிந்திருப்பார்கள். நான் தொடர்ந்துமே அவளை நினைக்கின்றேன்.

குறிப்புரை

யசிபொகொ - எண்ணாயிரம் வேல் கொண்டு விளங்கும் கடவுள். வலிமையானது. பழைய ஜப்பானியக் கடவுள். onamuchi - okuni nushino - mikoto.

உணர்வு நிலை

கிகொபொசி தன் காதலியின் பழைமையான அன்பு நிலை கூறல்.

பாடல் : 2003

Waga kofuru	*நான் நலிந்திடும்*
Ni nofo no omowa	*செம்முக நினைவிலே*
Koyo fi mo ka	*இன்று இராகொல்*
Ama no kavara ni	*விண்ணாற்றங் கரையிலே*
Iso makuro maku	*கல்லணையில் துயிலும்*

விளக்கம்

என் காதலியின் சிவந்த முகத்தை நினைந்து நான் வருந்தும் இன்றிரவுதானா விண்ணாற்றங்கரையிலே கல்லணையிலே இருவரும் உறங்குவது.

குறிப்புரை

கல்லணை - கல்லைத் தலையணையாக வைத்து உறங்கல். காதலி முகம் - செந்நிறக் கதிர் போன்றது. நாணும்போதைய முகம்.

உணர்வு நிலை

காதலியோடு கல்லணையிலே உறங்கக் காத்து நிற்கும் கிகொபொசி.

பாடல் : 2004

Onoga tuma	*நான் மனையாளே*
Tomosimu ko ra va	*கணவனைக் காண் மகள்*
Fatemu.tu no	*படியும் துறை*
Ariso makite nemu	*கல் மடித்து உறங்க*
Kimi motigate ni	*உன்னைக் காத்திடுவேன்*

விளக்கம்

மனையாளான நானே இங்குக் கணவனைக் காணக் காத்து நிற்கும் குறுமகளே! புணை வந்து நிற்கும் துறையின் **கரையிலே**

கல்லிலே அணை செய்து இருவரும் உறங்க உன்னைக் காத்து நிற்கிறேன்.

குறிப்புரை

புணை வந்து படியும் துறை - மணல் நிறைந்த கரை. கற்பாறைகள் உள்ள கரை.

உணர்வு நிலை

கணவனைக் காத்து நிற்கும் தநபத.

பாடல் : 2005

Ame tuti to	*விண் நிலமெனப்*
Wa karesi toki yu	*பிரிந்திட்ட போதிலே*
Onoga tuma	*நான் மனையாளைக்*
Sika zo tosi ni aru	*காண இப்படி ஆண்டில்*
Aki matu ware va	*கார் வரவு காக்குமே*

விளக்கம்

விண்ணும் நிலமும் எனப் பிரிந்திட்ட காலத்திலிருந்து, நான் என் காதல் மனையாளைக் காண்பதற்கு, இப்படி ஆண்டில் ஒருமுறை கார் காலத்தின் வரவை ஆவலுடன் காத்து நிற்பேனே.

குறிப்புரை

ஆண்டில் ஒரு முறை - ஏழாம் மாதத்து ஏழாம் நாள்.

உணர்வு நிலை

தநபதவைக் காண்பதற்குக் கார் காலத்தைக் காத்து நிற்கும் கிகொபொசி.

பாடல் : 2006

Fikofosi va	*பிகொபொசியே*
Nage kasu tuma ni	*வருந்து காதலிக்கு*
Koto dani mo	*இனிய சொல்லும்*
Tuge ni zo kituru	*கூறத்தான் வந்திடும்*
Mireba kurusimi	*காணின் நலிவாகுமே*

விளக்கம்

பிகொபொசி பிரிவில் வருந்தும் காதலிக்கு, இனிய சொல்லாகக் கூறி அனுப்பிய தூதுதான் வந்திடும். அதைக் காண்பதும் வருத்தம் தருவதாகும்.

குறிப்புரை

பிகொபொசியும் தநபதவும் ஆண்டில் ஒருமுறைதான் நேரிற் காண்பர். இடையே இனிய சொற்களால் ஒருவருக்கொருவர் தூதனுப்புவர்.

உணர்வு நிலை

தூது கண்ட தநபத நிலை.

பாடல் : 2007

Fisa kata no — *பிசகதவின்*
Ama tu sirusi to — *விண்ணது முறைமையில்*
Minasi gawa — *நீரற்ற ஆறு*
Fadate ni okisi — *எனவே நிலைத்திட்ட*
Kami-yo si uramesi — *கடவுட் கால முறை*

விளக்கம்

பிசகதபோல முடிவற்ற பழைமையான விண்ணின் முறைமையே நீரற்ற ஆறு என நிலைபெற்றது. இது கடவுட் காலத்தின் முறைமையாதலால் மாற்ற முடியாது.

குறிப்புரை

இப் பாடலிலே 'Fisakata no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ama'வுடன் அணையும். முடிவற்ற விண். முடிவற்ற எல்லையால் இருவரும் பிரிக்கப்பட்டனர்.

உணர்வு நிலை

கடவுட் கால முறைமையால் பிரிக்கப்பட்ட இருவரதும் நிலை.

பாடல் : 2008

Nuba tama no — *நுப பழம்போல்*
Yo giri gomerite — *இராப் புகார் மறைந்தே*

Tofoke domo — *தூரமெனினும்*
Imo ga tutafe va — *காதலியின் தூதே*
Fayaku toge koso — *விரைந்து அனுப்பும்தான்*

விளக்கம்

நுப பழம்போன்ற கரிய இரவிலே புகாரும் மறைந்திருக்கும் தொலைவிலே நான் இருக்கிறேன். எனினும் என் காதலியின் தூதையும் விரைவில் அனுப்பிடும் என எண்ணுகிறேன்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Nuba tama no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yo'வுடன் அணையும். நுப பழம் மிகவும் கரியது.

உணர்வு நிலை

காதலி தூது காத்து நிற்கும் பிகொபொசி; தொலை வாழ்பவரையும் தூது செய்மைப்படும்; நலிவிலிருந்து விலக்கி அணிமைப்படுத்தும்.

பாடல் : 2009

Naga kofuru — *நீள் நலிவிலே*
Imo no mikoto va — *காதலியின் உயிரே*
Aku tara ni — *மகிழும்வரை*
Sodefuru miyetu — *கையசைவு காண்கும்*
Kumo gakuru made — *முகில் மறைக்கும்வரை*

விளக்கம்

நீண்ட காலமான காதல் நலிவின் காதலி அவள். உயிர் போகும் நிலையான நலிவு. உன்னை விடை கூறுமிடத்து நான் மகிழும்வரை கையசைத்து நிற்கும். நீ முகிலில் மறையும்வரை தன் கை களைக்கும் வரை கையசைத்து நிற்கும்.

குறிப்புரை

கையசைத்தல் - தன் மகிழ்ச்சிக்காகத் தோற்றம்...... முகிலில் மறையும்வரை அசைத்தல். பிரியா விடை கூறல்.

உணர்வு நிலை

காதலியின் ்கையசைவு நினைவு கூடும் பிகொபொசி.

பாடல் : 2010

Yufu dutu mo	*மாலை வெள்ளியும்*
Koyofu amadi wo	*கடக்கும் விண் தெருவை*
Itu made ka	*என்றுவரைகொல்*
Afugite matamu	*பார்த்துக் காத்திடுவதோ*
Tuki fito wotoko	*நிலா மாந்தன் நீயுமே*

விளக்கம்

மாலை நேரத்து வெள்ளியும் விண் தெருவைக் கடந்தது. நான் எப்போது வரைக்கும் காதலன் வரவை எதிர்பார்த்துக் காத்திடுவதோ? நிலா மாந்தனே, நீ அழகான ஆண் மகனே!

குறிப்புரை

நிலவை ஆண் மகனாகக் கூறல். விண் தெரு வெள்ளியும் கடக்கும் பெருந்தெரு.

உணர்வு நிலை

பிகொபொசியின் வரவு காத்து நிற்கும் தநபத.

பாடல் : 2011

Ama no gava	*விண்ணாற்றினது*
I mukafi tatite	*எதிர்க் கரை நின்றுமே*
Kofuramu ni	*நலிந்திடுமே*
Koto dani tugemu	*சொல் தானுமே உரைக்கும்*
Tuma tofu made va	*மனைவியைக் காணும்வரை*

விளக்கம்

விண்ணாற்றினது இக்கரையிலே நின்று எதிர்க்கரையைப் பார்த்து நலிகின்றேன். நான் மனைவியைப் போய்க் காண, முன்பு ஒரு சொல் தானும் அவள் அனுப்பிடும்.

குறிப்புரை

இருவரும் இணையுமுன் பிரிவுக் காலத்தில் தூதனுப்பல். சொல்லுரைத்தல் என்பதன் பொருளிது.

உணர்வு நிலை

தநபதவின் தூது மொழியைக் காத்திருக்கும் பிகொபொசி.

பாடல் : 2012

Sira tama no *வெண் முத்தினது*
Ifotu tudofi wo *ஐந்தாறு ஆரம் தளர்*
Toki mo mizu *உறக்கமின்றி*
Ava fosi gatanu *கண்ணீர் ஆடை காயாதே*
Afamu fi matu ni *காணும் நாள் காத்திட்டே*

விளக்கம்

வெண்மையான முத்துக்கள் ஐந்நூறு பதிக்கப்பட்ட தலையிலணிகின்ற முத்தாரத்தை அவனும் வந்து தளர்த்தவில்லை. பிரிவால் உறக்கமின்றி நான் அழுவதால் என் ஆடையின் கண்ணீரும் காய்ந்திடாது. அவனைக் காணும் நாளைக் காத்திருக்கின்றேன்.

குறிப்புரை

ஆண்கள் தலையில் அணியும் முத்தாரம். உறங்கும்போது கழற்றி வைத்துவிட்டு உறங்குவர்.

உணர்வு நிலை

பிகொபொசி வரவு காத்துக் கண்ணீர்விடும் தநபத.

பாடல் : 2013

Ama no gava *விண்ணாற்றினது*
Midu kage gusa no *நீர் வளரும் புல்லும்*
Aki kaze ni *கார் காற்றினிலே*
Nabiku wo mireba *ஆடுவதை கண்டிடப்*
Toki va kini keri *பொழுதே வந்ததுவே*

விளக்கம்

விண்ணாற்றினது நீரிலே வளர்கின்ற புல்லும் கார்காலக் காற்றிலே அசைந்தாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க, இணையும் பொழுதும் வந்துவிட்டது.

குறிப்புரை

இணையும் பொழுது - ஏழாம் மாதத்து ஏழாம் நாள்.

உணர்வு நிலை

பிகொபொசியைக் காத்திருக்கும் தநபத.

பாடல் : 2014

Waga mati si	*நானே காத்திடும்*
Akifagi sakinu	*கார்பகி மலர்ந்தது*
Imadani mo	*இன்னுமே நானும்*
Nifofini yukana	*அணையச் செல்லுவேனா*
Woti kata fito ni	*தொலைவின் மகளிடம்*

விளக்கம்

நான் ஆவலோடு காத்திருந்த கார்காலத்துப் பகியும் மலர்ந்து விட்டது. இன்னும்தான் நான் அந்த மலர்களை அணைந்து தொலைவிலே இருக்கின்ற என் காதலியை சேரச் செல்ல வேண்டும்.

குறிப்புரை

மலர் அணையச் செல்லுதல். பகி மலர்கள் நிறையக் குலையாகப் பூத்துத் தாழ்ந்திருக்கும். அதன்கீழ் நடப்போர் ஆடை அணைந்து நிறம் மாற்றும் இயல்புடையது.

உணர்வு நிலை

இது பிகொபொசியின் பிரிவுணர்த்தும் பாடல்.

பாடல் : 2015

Waga seko ni	*என் காதலனை*
Ura kofi wo.e ba	*நினைந்து நலிந்திட*
Ama no gava	*விண்ணாற்றினது*
Yo fune kogu naru	*இரவுப் புணை நரல்*
Kadino to kikoyu	*ஒலியுமே கேட்டிடும்*

விளக்கம்

எனது காதலனை நினைத்து நான் துன்புறும்பொழுது விண்ணாற்றிலே இரவுப் புணையைச் செலுத்தி வரும் ஒலியும் என் செவியில் கேட்டது.

குறிப்புரை

அமைதியான நேரமாகையால் புணை வரும் ஒலி செவியில் கேட்க முடியும்.

உணர்வு நிலை

பிகொபொசியின் புணை வரும் ஒலியைக் கேட்டிடும் தநபத.

பாடல் : 2016

Ma-ke nagaku	*நீண்ட நாளாக*
Kofuru kokoro yu	*நலியும் உள்ளமெனில்*
Aki kaze ni	*கார் காற்றிலுமே*
Imo ga oto kikoyu	*மனைவி குரல் கேட்கும்*
Fimo toki yukana	*ஆடை தளர்த்திடுவேனா*

விளக்கம்

நீண்ட நாள்களாகக் காதலில் நலியும் உள்ளமாக இருப்பின், கார்காலக் காற்றிலுந்தான் மனைவியின் குரல் கேட்கும். நான் அங்குச் சென்று ஆடை தளர்த்தி உறங்கமாட்டேனா?

குறிப்புரை

கார்காலக் காற்றில் மனைவியின் நலிவுள்ளத்தின் குரல் கேட்டல், அன்பின் நெருக்கம் புலப்படுத்தும்.

உணர்வு நிலை

தநபத நிலை நினைந்து இரங்கும் பிகொபொசி.

பாடல் : 2017

Kofisiku va	*காதல் நலிவே*
Ke nagaki mono wo	*பல நாளின் பொருளை*
Imada nimo	*இன்னுமே தானும்*
Tomosimu besiya	*குறைத்திட வேண்டுமா*
Afu beki yo dani	*காண வேண்டும் இரவே*

விளக்கம்

பல நாட்களாக நலிந்த விரும்பிய பொருளை இன்னுந்தான் குறைத்திட வேண்டுமா? இரவே காண வேண்டும் (ஓர் ஆண்டில்

ஒருமுறை காண்பதில் முன்னர் நிறைவு பெற்றிருந்தாலும், அதற்காக இப்போது நலிவு குறைத்திட வேண்டுமா? இல்லை).

குறிப்புரை

பல நாளாக விரும்பிய பொருளை அடையும் விருப்பில் குறைபாடு இல்லை. உடனேயே காணும் விருப்புத்தான் உண்டு.

உணர்வு நிலை

பிகொபொசியின் உணர்வு கூறும் பாடல்.

பாடல் : 2018

Ama no gava no	*விண்ணாற்றினது*
Kozo no watarite	*சென்ற ஆண்டு கடந்த*
Uturofefa	*குழிவிடமே*
Kafase wo fumuni	*நீரால் நிரம்பிட்டது*
Yo zo fuke ni keru	*இரா ஆழமாயிற்று*

விளக்கம்

விண்ணாற்றிலே சென்ற ஆண்டு நான் கடந்த குழிவிடம் இப்போது நீரால் நிரம்பிவிட்டது. அதைக் கடந்து வர இரவும் வளர்ந்துவிட்டது.

குறிப்புரை

நீரின் பெருக்கத்திற்கேற்ப புணை கடக்கும் இடம் வேறுபடல்.

உணர்வு நிலை

தநபத உறைவிடம் நோக்கிப் புணையில் நீராற்றைக் கடந்து வருகின்ற பிகொபொசி.

பாடல் : 2019

Inisife yu	*பழங்காலத்தில்*
Agetesi fata mo	*நெசவு செய் தறியும்*
Kaferi mizu	*திரும்பிப் பாரா*
Ama no gava-tuni	*விண்ணாற்றுத் துறையிலே*
Tosi zo fe ni keru	*ஆண்டுதான் கழிந்ததே*

விளக்கம்

பழங்காலத்திலிருந்து நெசவு செய்த தறியையும் நோக்காமலே விண்ணாற்றங்கரையின் துறையிலே காத்து நின்று ஆண்டுதான் கழிந்ததே.

குறிப்புரை

பழங்காலத்திலிருந்து பயன்படுத்தும் ஆடை நெய்யும் தறி. அதனையே பயன்படுத்தாமல் காத்திருத்தல்.

உணர்வு நிலை

பிகொபொசியை ஆவலுடன் காத்துப் பல நாட்களாக நிற்கும் தநபத.

பாடல் : 2020

Ama no gava — *விண்ணாற்றினது*
Yo fune wo kogite — *இராப் புணை செலுத்தி*
Akenu tomo — *விடிந்திட்டாலும்*
Afamu to mofe ya — *இணைய நினைந்ததே*
Sode Kafesu aramu — *கையாடை மாற்றிடாதோ!*

விளக்கம்

விண்ணாற்றிலே இராப் புணை செலுத்தி வருகையிலே பொழுது விடிந்துவிட்டாலும், இருவரும் ஒன்றிணைய நினைந்தனர். கையாடை மாற்றி நிற்பரோ!

குறிப்புரை

இரவு உறங்கும்போது ஒருவர் ஆடையை மற்றவர் மாற்றி உடுத்து உறங்குதல் - பழைய ஜப்பானியர் நடைமுறை வழக்கம்.

உணர்வு நிலை

தநபத, பிகொபொசி இருவரதும் நிலை கூறும் பாடல்.

பாடல் : 2021

Tofo-duma to — *சேண் மனையாளின்*
Ta makura kafete — *கையணையை மாற்றியே*
Sanuru yo va — *உறங்கும் இரா*

Kakefana naki zo — *சேவலின் கூவலில்தான்*
Akeba akanu tomo — *விடியின் விடியட்டுமே*

விளக்கம்

தொலைவில் இருக்கும் மனைவி கையணையாக வைத்து உறங்கும் இரவும், சேவல் கூவலிலே விடிந்தால் விடியட்டுமே.

குறிப்புரை

பொழுது விடிந்தாலும் என்ன என எண்ணும் தன்மை. நீண்ட துயில்.

உணர்வு நிலை

பிகொபொசி திரும்பிப் போக வேண்டுமென நினைந்திரங்கல்.

பாடல் : 2022

Afi miraku — *நிறையக் காண*
Aki darane domo — *விரும்பி இருப்பினும்*
Ina no me no — *நெல்லின் கதிரில்*
Ake sari ni keri — *காலை மலர்ந்ததுமே*
Fana de semu tuma — *புணை தள்ளும்! காதலி!*

விளக்கம்

உன்னைக் கண் நிறையக் காண வேண்டும் என விரும்பியிருப்பினும் அது முடிவதில்லை. நெல்லின் கதிர்போல அழகிய காலையும் விடிந்தது. நான் திரும்பிச் செல்வதற்காகப் புணையைத் தள்ளுகிறேன். என் காதலி! (நான் முற்றாக விடியுமுன் அக்கரை செல்ல வேண்டும்)

குறிப்புரை

இப்பாடலில் 'Ina no me no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ake' என்ற சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

தநபதவிடம் விடைபெறும் பிகொபொசி.

பாடல் : 2023

Sa-ne somete — *சேர்ந்துறங்க*
Ikuda mo araneba — *அத்துணை இல்லையெனில்*

Siratafe no	*வெண் சலவையின்*
Obi kofu besi ya	*அரைப்பட்டி வேண்டுமே*
Kofi mo tukineba	*நலிவுங் கழியாமே*

விளக்கம்

இருவரும் சேர்ந்துறங்குகின்ற நேரமும் அவ்வளவாக இல்லை என்பதால், என் காதல் நலிவு தீர்க்க உனது வெண்சலவை ஒத்த அரைப்பட்டியைப் பெற விரும்புகிறேன்.

குறிப்புரை

இப்பாடலில் 'Siratafe no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'obi' என்னும் சொல்லுடன் அணையும். பட்டி கொண்டு சென்றாலும் காதல் நலிவு தீராது. எனினும் அதையாவது என்னுடன் கொண்டு செல்ல விரும்புகிறேன் எனப் பொருள்படும்.

உணர்வு நிலை

தநபத பிகொபொசியின் நினைவாக வைத்திருக்க அரைப்பட்டியை வேண்டல்.

பாடல் : 2024

Yorodu yo ni	*பல்லாண்டு மண்ணில்*
Tadusafari wite	*கைகளை இணைத்துமே*
Afi mi tomo	*சேர்ந்திருப்பினும்*
Omofi sugu beki	*நினைவு கழியவேணும்*
Kofi ni aranaku ni	*காதல் உள்ளம் கடவாதே*

விளக்கம்

பல்லாண்டுக் காலம் இருவரும் கைகளை இணைத்துச் சேர்ந்து வாழ்ந்தாலும், எமது காதல் நினைவு கழிந்திட வேண்டும். ஆனால் எமது உள்ளத்திலுள்ள காதலோ எம்முள்ளத்தை விட்டுமே கடந்து செல்லாது.

குறிப்புரை

ஒன்றாக வாழ்ந்தாலும் எமது உள்ளம் காதல் நிறை உள்ளமாகவே நலியும். இப்படியான காதல் உள்ளம் எம்மிடம் மட்டுமேயுண்டு.

உணர்வு நிலை

தநபத அல்லது பிகொபொசி காதல் நலி உள்ளம் பற்றிய பாடல். பிரிய விரும்பாத காதலர். என்றுமே உள்ளத்தால் பிரியாத அன்பு நிலை.

பாடல் : 2025

Yorodu yo ni	*பல்லாண்டு மண்ணில்*
Teru beki tuki mo	*ஒளிதரும் நிலாவும்*
Kumogakuri	*முகில் மறையும்*
Kurusiki mono zo	*துன்பமான பொருள்தான்*
Afamu to mofedo	*இணைய நினைந்திடும்*

விளக்கம்

பல்லாண்டு மண்ணுக்கு ஒளி தருகின்ற நிலவும், சிற்சில நேரம் முகிலில் மறைகின்ற துன்பமான பொருள்தான். நாங்களும் நீண்டநாள் இணைந்திருக்க நினைப்பதும் அத்தகையதே (பிரிந்து செல்கின்றோமே).

குறிப்புரை

ஓர் ஆண்டில் ஒருமுறை இணைபவர், முகில் மறை நிலவுடன் ஒப்பிடப்படுகின்றனர்.

உணர்வு நிலை

தநபதவும் பிகொபொசியும் தம் பிரிவை இயற்கை நடைமுறையுடன் ஒத்து அமைதி காண முற்படல்.

பாடல் : 2026

Sira kumo no	*வெண் முகிலுமே*
Ifofe kakurite	*பல நூறாய் மறைந்தே*
Tofoke dome	*சேணில் செல்லும்*
Yoru sarazu mimu	*இராக் கழியக் காண்போம்*
Imo ga atari va	*காதலி உறையுளே*

விளக்கம்

வெண் முகிலும் பல நூறாக மறைந்து தொலைவில் செல்லும். ஒவ்வோர் இரவும் கழிந்திட, காதலி உறைகின்ற பக்கத்தைப் பார்ப்போம்.

குறிப்புரை

ஒவ்வோர் இரவும் கழியக் காத்திருத்தல். இரவு நேரம் கழியும்வரை காதலி நினைவாக அவள் வாழும் பக்கத்தை நோக்கியிருத்தல். தொடர்ந்த காதல் நலிவு வெளிப்படுத்தல்.

உணர்வு நிலை

பிகொபொசியின் பிரிவுத் துன்ப நிலை கூறும் பாடல்.

பாடல் : 2027

Waga tame to	*எனக்காகத்தான்*
Tanabata tume no	*தநபத மனைவி*
Sono yado ni	*உறைவிடத்தில்*
Oru siratafe va	*நெய்திடு வெண் துகிலே*
Orite kemu kamo	*நெய்து முடித்திடும்கொல்!*

விளக்கம்

எனக்காக என் மனைவி தநபத, நான் வாழுமிடத்திலிருந்து நெய்கின்ற வெண்மையான ஆடையை இப்போது நெய்து முடிந்திருக்குமோ?

குறிப்புரை

பிகொபொசி அணிவதற்கென தநபத வெண்துகில் நெய்திடும். கையுறைப் பொருள்.

உணர்வு நிலை

தநபதவிடம் பெறப்போகும் காதற் கையுறையை பிகொபொசி நினைத்து நலிதல்.

பாடல் : 2028

Kimi ni afazu	*உன்னைக் காணாது*
Fisasiki toki yu	*நீண்ட காலமாயிற்று*
Oru fata no	*நெய்யும் தறியின்*
Siratafe goromo	*வெண்ணிற ஆடையிலே*
Aka tuku made ni	*தூசு படிந்திடுவரை*

விளக்கம்

நான் உன்னை நேரிலே கண்டு நீண்ட காலமாகிவிட்டது. நீ நெய்யும் தறியிலே உள்ள வெண்ணிற ஆடையும் தூசி படிந்திருக்கும்.

குறிப்புரை

வெண்ணிற ஆடை தூசு படியும்வரை-பிரிவுக் காலத்தைக் கணிக்கின்ற அளவு நிலை.

உணர்வு நிலை

தநபதவை நினைந்து இரங்கும் பிகொபொசி நிலை. ஓராண்டுப் பிரிவால் ஆடை தூசு படியும் நிலை. உள்ளத்திலும் துன்பம் மண்டிய நிலை.

பாடல் : 2029

Ama no gava	*விண்ணாற்றினிலே*
Kadi no to kikoyo	*தண்டு ஒலி கேட்குமே*
Fi kobosi to	*பிகொபொசியின்*
Tanabata tume to	*தநபத மனைவி*
Koyafi afurasi mo	*சேரும் இன்றிரவுமே*

விளக்கம்

விண்ணாற்றினிலே புணையின் தண்டு வலிக்கும் ஒலியும் கேட்குமே. பிகொபொசியும் மனைவி தநதபதவும் ஒன்றிணையும் இன்றிரவுதான்.

குறிப்புரை

தண்டு ஒலி காலத்தைக் காட்டும்.

உணர்வு நிலை

இப் பாடல் தநபதவும் பிகொபொசியும் இணைவதை அறிந்தவர் மனநிலை. இருவரும் இணைவது விருப்பமானது.

பாடல் : 2030

Aki sareba	*கார் வந்திடவே*
Kava zo giraferu	*ஆற்றில்தான் புகார் எழும்*

Ama no gava	*விண்ணாற்றினது*
Kava ni muki wite	*கரை எதிர் நின்றிட்டு*
Kofuru yo no ofoki	*நலியும் இரா நினையும்*

விளக்கம்

கார்காலம் வந்திடவே ஆற்றிலேதான் புகார் எழும். விண்ணாற்றினது கரை எதிர்நின்றே நலிகின்ற இரவை நான் நினையும்.

குறிப்புரை

காலத்தை ஆற்றிலெழும் புகார் உணர்த்தல். விண்ணாற்றின் கரை நினைவுக்கு வரல்.

உணர்வு நிலை

தநபதவும் பிகொபொசியும் எதிரெதிர் கரை நின்று காதலில் நலிகின்ற இரவின் நினைவு கூறும் பாடல்.

பாடல் : 2031

Yosiwe yasi	*நன்று இதுவும்*
Tada narazu tomo	*நேர்காணாது எனினும்*
Nuyedori no	*நுயெ புள்போல*
Uranage wori te	*பின் நலியும் எனவே*
Tugemu ko mo ga mo	*தூதுவனும் இருப்பின்*

விளக்கம்

இருவரும் ஒருவரையொருவர் நேரே காணாது இருப்பது நன்றுதான். எனினும் நுயெ புள்போலப் பின்னர் நலிவேன். எனவே உன்னிடம் அனுப்புவதற்கு ஒரு தூதுவன் இருந்தால் நல்லது.

குறிப்புரை

இப்பாடலிலே 'Nuyedori no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'uranage' என்னுந் தொடருடன் அணையும். இப்பறவை துன்பமான நிலை தருவது. ஒருவகை ஆந்தை இனத்தைச் சேர்ந்தது.

உணர்வு நிலை

பிகொபொசியிடம் தன்னிலையைச் சொல்லியனுப்பத் தூதுவன் வேண்டுமென நலியும் தநபத.

பாடல் : 2032

Fito tose ni — *ஓர் ஆண்டிலே*
Nanu ka no yo nemi — *ஏழாம் நாளின் இரவு*
Afu fito no — *காணும் மாந்தரின்*
Kofi mo tukineba — *காதலும் கழியாதே*
Yo va fuke yuku mo — *இரா ஆழமாயிடும்*

விளக்கம்

ஓர் ஆண்டிலே ஏழாம் மாதத்து ஏழாம் நாளிரவு நேரிலே காண்கின்ற மாந்தரின் காதல் கழிந்திடாது. இரவும் விரைவாகக் கழிகின்றதே.

குறிப்புரை

ஓராண்டில் ஒருமுறை மட்டுமே சேர்வதால் காதல் கழிந்திடாது. அந்த இரவு விடியின் இருவரும் பிரிய வேண்டும்.

உணர்வு நிலை

தநபத, பிகொபொசி இருவரும் குறிப்பிட்ட ஓரிரவு மட்டுமே இணைந்து பிரிவது, எல்லாருக்கும் துன்பந்தருவது என்பதை உணர்த்தும் பாடல்.

பாடல் : 2033

Ama no gava — *விண்ணாற்றினது*
Yasu no kafara ni — *கீழ்க் கரையினிலேதான்*
Todomarite — *ஒலியடங்க*
Kokoro kifofeba — *உள்ளம் நிறையுமுன்னர்*
Toki mo mata naku — *பொழுதும் கரைந்தது*

விளக்கம்

விண்ணாற்றினது கீழ்க்கரையிலேதான் ஒலியும் அடங்கியது. நீரோட்டம் அமைதியானது. உள்ளமும் நிறையுமுன்னரே பொழுதும் கரைந்துவிட்டது.

குறிப்புரை

இப்பாடல் ஜப்பானிய உரையாசிரியர்களால் பொருள் தெளிவது கடினமானது எனக் கருதப்படுகிறது. குறியீட்டு நிலையான பொருள் போலும்.

உணர்வு நிலை

காதலர் இருவரும் நேரில் காண நேரம் குறித்திருந்தபோதும், காண்பதற்கு இன்னும் நேரம் கைகூடாத நிலை.

பாடல் : 2034

Tanabata no — *தநபதவின்*
Ifo fata tatete — *ஐந்நூறு தறியிலே*
Oru nuno no — *நெய்த அறுவை*
Aki sari goromo — *கார்கால ஆடையையே*
Tare ka tori minu — *யார் எடுத்து அணியும்?*

விளக்கம்

தநபதவினுடைய ஐந்நூறு நெசவுத்தறியிலே நெய்திட்ட துணியை, கார்காலத்தின் சிறப்பான ஆடையை யார்தான் எடுத்து அணியுமோ?

குறிப்புரை

யார் எடுத்துப் பார்க்கும் எனப்பாடல் அமைந்திருந்தாலும், அணிவதே பொருளாகும். பிகொபொசிக்கென நெய்யப்படும் கார்கால ஆடை.

உணர்வு நிலை

தநபதவின் ஆடை நெய்யும் பாங்கு நோக்கிய பாடல். ஐந்நூறு தறியிலே இட்டுப் பல்வேறு வண்ணமிழைத்த ஆடைபோலும்.

பாடல் : 2035

Tosi ni arite — *ஆண்டு கழிந்தே*
Ima ka makuramu — *இப்போதா அணை செய்யும்*
Nubatama no — *நுப பழத்தின்*
Yo girigomori ni — *இரவின் புகாரிலே*
Tofo duma no te wo — *சேண் மனையாள் ன்கையை*

விளக்கம்

ஓர் ஆண்டு கழிந்துவிட்டது. நுப பழத்தின் கரிய நிறமொத்த இரவின் புகாரிலே தொலைவிலுள்ள மனையாளின் கையை இப்போதா அணையாக்கி உறங்கும்?

குறிப்புரை

இப்பாடலிலே 'Nubatama no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yo' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

தநபதவை இணைய இருக்கும் பிகொபொசியின் நிலை கூறும் பாடல்.

பாடல் : 2036

Waga mati si	*நானே காத்திடும்*
Aki va kitarinu	*காரே வந்திட்டதுவே*
Imo to ware	*மனைவியுடன் நான்*
Nani goto arezo	*என்ன நடப்பினும்தான்*
Fimo tokazaramu	*பட்டி களைவோமன்று*

விளக்கம்

நான் ஆவலோடு காத்திருந்த கார்காலமே வந்துவிட்டது. என்னதான் நடந்தாலும் மனைவியுடன் நான் பட்டி களைந்திடுவேனா? (உறுதியாக, ஒன்றாய் உறங்குவோம்)

குறிப்புரை

என்ன தடைகளேற்பட்டாலும், மனைவியிடம் போய்ச் சேரும் உறுதி நிலை. பட்டி களைதல்-ஒன்றாய் உறங்குதல்.

உணர்வு நிலை

தநபதவிடம் செல்லும் பிகொபொசியின் உள்ளத்து உறுதி நிலை.

பாடல் : 2037

Tosi no kofi	*ஆண்டின் காதலே*
Ko-yofi tukusite	*இவ்விரா தொடர்ந்திடும்*
Asu yori va	*நாளை தொடர*
Tune no gotoku ya	*மீண்டும் வழமைபோல*
Waga kofi woramu	*எம் நலிவும் வளரும்*

விளக்கம்

ஓர் ஆண்டுக் காதல் நலிவு. இவ்விரவிலே அது தீர்ந்திடும். ஆனால் நாளை தொடக்கம் நாம் இருவரும் மீண்டும் வழமைபோலக் காதல் நலிவுடன் வாழ வேண்டுமே.

குறிப்புரை

ஓராண்டுப் பிரிவுத் துயரை ஓரிரவிலே தீர்க்கும் நிலை.

உணர்வு நிலை

பிகொபொசியின் வரவு காக்கும் தநபதவின் உள்ளத்து எண்ணம்.

பாடல் : 2038

Afanaku va	*நேர் காணாமலே*
Ke nagaki mono wo	*நீண்ட நாளின் பொருளே*
Ama no gava	*விண்ணாற்றினது*
Fedatete mata ya	*பிரிப்பாலே மீண்டுமே*
Wagi kofi woramu	*எம் நலிவும் வளரும்*

விளக்கம்

இருவரும் நீண்ட நாட்களாக நேரிற் காணாமலிருக்கின்றோம். சேரும் ஓரிரவு கழிய மீண்டும் விண்ணாற்றினது பிரிப்பினாலே எம் காதல் நலிவும் வளரும்.

குறிப்புரை

காதல் நலிவின் காலம் நீண்டது. காணும் காலம் ஓரிரவே.

உணர்வு நிலை

பிகொபொசி வரவு காக்கும் தநபதவின் எண்ணம்.

பாடல் : 2039

Kofisikeku	*காதல் நலிவே*
Ke nagaki mono wo	*நீண்ட நாளின் பொருளே*
Afu bekaru	*காண வேண்டுமே*
Yofi dani kimi ga	*இரவு வருமோ நீ*
Ki masazaru ramu	*வாராதிருந்திடுமோ!*

விளக்கம்

எங்கள் காதல் நலிவென்பது நீண்ட நாட் காத்திடும் பொருளாகி விட்டது. உன்னைக் காண வேண்டுமே. இந்த இரவு நீ வருவாயோ அல்லது வராமல் விட்டுவிடுவாயோ!

குறிப்புரை

விரைவில் வர வேண்டுமென்ற விருப்பம். ஐயுறும் உள்ளம்.

உணர்வு நிலை

பிகொபொசியை ஆவலுடன் காத்திருக்கும் தநபதவின் உள்ளத்தின் எண்ணம்.

பாடல் : 2040

Fikobosi to	*பிகொபொசியும்*
Tanabata tume to	*தநபத மனைவியும்*
Ko yofi afu	*இன்றிரா காணும்*
Ama no gava-to ni	*விண்ணாற்றினது வாயில்*
Nami tatu na yume	*திரை எழுந்திடாதே*

விளக்கம்

பிகொபொசியும் தநபத மனைவியும் இன்றிரவு ஒருவரையொருவர் நேரிலே காணவுள்ளார்கள். விண்ணாற்றினது வாயிலில் திரையே நீ உயர எழுந்திடாதே.

குறிப்புரை

ஆற்றினது வாயில் - பிகொபொசியின் புணை கடந்து செல்லுமிடம். திரையிடம் பணிவாக வேண்டுதல்.

உணர்வு நிலை

இரு காதலரும் ஒருங்கிணைவதை ஆற்றுத் திரை தடுத்துவிடக் கூடாது என நினைப்பவர்; அல்லது தநபதவும் பிகொபொசியும் திரையிடம் வேண்டல்.

பாடல் : 2041

Aki kaze no	*கார் காற்றினிலே*
Fuji tadayofasu	*அலைந்து எழுந்திரு*

Sira kumo va	*வெண்ணிற முகில்*
Tanabata-tume no	*தநபத மனையாளின்*
Ama tu fire kamo	*மேலாடையாகிடுங்கொல்*

விளக்கம்

கார்காலக் காற்றினிலே அலைந்து எழுந்திடுகின்ற வெண்ணிறமான முகில்தான், தநபத மனைவியின் தலையிலணிகின்ற மேலாடையாக இருக்கின்றதோ!

குறிப்புரை

தநபதவின் தலையில் அணியும் வெண்ணிற மேலாடையாக வெண்ணிற முகிலைக் கூறல். வான் பரப்பில் விண்ணாற்றங்கரையில் காத்து நிற்கும் தநபதவின் தோற்றத்தைக் காண முயல்தல்.

உணர்வு நிலை

தநபதவின் தோற்றங் காண முயலும் நிலை.

பாடல் : 2042

Siba siba mo	*மீண்டும் மீண்டுமே*
Afi minu kimi wo	*நேரிற் காணா உன்னையே*
Ama no gava	*விண்ணாற்றினது*
Funade faya se yo	*புணை தள்ளி விரைவாய்*
Yo no fukenu ma ni	*இரா ஆழமாகுமுன்*

விளக்கம்

உன்னை நான் அடிக்கடி காண்பதில்லையே. இந்த இரவு வளருமுன் விண்ணாற்றிலே புணை செலுத்தி விரைந்துமே வருவாய்.

குறிப்புரை

இரவு விடிந்தால் மீண்டும் ஓராண்டு காத்திட வேண்டும். அதனால் விரைவாக விண்ணாற்றைக் கடந்து வர வேண்டுதல்.

உணர்வு நிலை

தநபதவின் ஆவல் நிலை பிகொபொசியை விரைந்து வர வேண்டுமென விரும்பல்.

பாடல் : 2043

Aki kaze no	கார் காற்றினிலே
Kiyoki yufube ni	தெளிந்த இராவினில்
Ama no gava	விண்ணாற்றினது
Fune kogi wataru	புணை தள்ளிக் கடக்கும்
Tuki fito watoko	நிலவு நன் மகனே

விளக்கம்

கார்காலக் காற்று வீசிடும் தெளிந்த இரவிலே விண்ணாற்றிலே புணையைச் செலுத்திக் கடந்து வரும். ஓ நிலவே, நீ நல்லாண் மகனே!

குறிப்புரை

இப்பாடல், நிலவு விண்ணாற்றிலே புணை தள்ளி வருவதற்கு உறுதுணையாக நிற்பதை விளக்கும்; இன்னும், இப்பாடல் ஏழாம் மாதத்து ஏழாம் நாளின் நிலவைக் குறிப்பது.

உணர்வு நிலை

குறிப்பிட்ட நாளது இயற்கை நிலை.

பாடல் : 2044

Ama no gava	விண்ணாற்றினது
Kiri tati watari	புகார் நின்று கடக்கும்
Fikofosi no	பிகொபொசியின்
Kadi no to kikoyu	சவள் ஒலி கேட்குமே
Yo no fuke yuke ba	இரா ஆழமாகிடின்

விளக்கம்

விண்ணாற்றிலே படியும் புகாரைக் கடந்து தண்டுவலிக்கும் ஒலி இரவு வளர்ந்திட நன்கு கேட்கும். பிகொபொசி விரைந்து வரும்.

குறிப்புரை

புகார் என்பது, இப்பாடலில் ஆற்றின் நுரையெனப் பொருள்படுமெனப் பியர்சன் கருதுவார். இரவு வளர்ந்திட அமைதி நிலவும். அதனால் நுரை கடந்து வரும் ஒலியைக் கேட்கலாம்.

உணர்வு நிலை

பிகொபொசி புணை தள்ளி வரும் நிலை கூறல்.

பாடல் : 2045

Kimi ga fune	*உனது புணை*
Ima kogi-ku rasi	*இப்போது தள்ளி வரும்*
Ama no gava	*விண்ணாற்றினது*
Kiri tati wataru	*புகார் நின்று கடக்கும்*
Kono kafa no se ni	*இந்த ஆற்று நீரின்மேல்*

விளக்கம்

நீ இப்போது உனது புணையைத் தள்ளி வரும். இந்த ஆற்று நீரின் மேற்பரப்பிலே கடந்து செல்வது புகாரா அல்லது உன் புணையின் சவளால் வரும் நுரையா?

குறிப்புரை

புகாரும் நுரையும் இருநிலையால் ஏற்படும். புகார், இயற்கை நிலையால்; நுரை, தண்டு வலிப்பதால் தோன்றுகிறது.

உணர்வு நிலை

விண்ணாற்றின் மேற்பரப்பைக் கூர்ந்து நோக்கியிருக்கின்ற தநபத, பிகொபொசியின் புணை தள்ளு நிலையை எண்ணுதல்.

பாடல் : 2046

Aki kaze ni	*கார் காற்றினில்*
Kava nami tatinu	*ஆற்று அலை எழுமே*
Simasiku va	*சிறுபொழுது*
Yaso no funa-tu ni	*எண்பதின் புணை நிற்கும்*
Mi fune todome yo	*அப்புணை நிறுத்துவாய்*

விளக்கம்

கார்காலத்திலே வீசுகின்ற காற்றிலே ஆற்றில் அலைகள் எழுமே. சிறுபொழுதிலே எண்பதுக்கு மேற்பட்ட புணைகள் தங்கி நிற்கும். புணை தங்குமிடத்திலே பிகொபொசியின் புணையையும் நிறுத்துவாய்.

குறிப்புரை

அலைகளை இக்காலத்தில் நிறுத்துவது கடினம். சிறுபொழுதும் அவை அடங்காது எழுந்திடும். 'எண்பது' இங்கே பல புணைகளைக் குறித்தது.

உணர்வு நிலை

பிகொபொசியின் புணை நிற்குமிடம்பற்றி எண்ணும் தநபத.

பாடல் : 2047

Ama no gava	*விண்ணாற்றினது*
Kafa to sayakesi	*குரல் தெளிவாய்க் கேட்கும்*
Fikobosi no	*பிகொபொசியின்*
Aki kogu fune no	*காரில் தள்ளும் புணையின்*
Nami no sawagi ka	*அலையின் ஒலிகொல்லோ!*

விளக்கம்

விண்ணாற்றினது குரல் தெளிவாய்க் கேட்கிறதே. இந்த ஒலி பிகொபொசி கார் காலத்திலே தள்ளி வருகின்ற புணையால் ஏற்படும் அலையின் ஒலியாக இருக்குமோ!

குறிப்புரை

ஆற்றின் ஒலியும் அலையின் ஒலியும் புணை தள்ளுவதால் ஏற்பட்டவை. புணையை மெதுவாகச் செலுத்தி வரல்.

உணர்வு நிலை

இருவரும் அலை ஒலி கேட்டல்.

பாடல் : 2048

Ama no gava	*விண்ணாற்றினது*
Kafa to ni tatite	*கடவையில் நின்றிட்டு*
Waga kofisi	*நான் விரும்பிடு*
Kimi kimasu nari	*நீயே வரு ஒலியே*
Fimo toki matamu	*பட்டியுடன் காத்திடும்*

விளக்கம்

விண்ணாற்றினது கடவையிலே நின்றிட்டே நான் விரும்புகின்ற நீயே புணைமீது வருகின்ற ஒலி; அதைக் கேட்டுத் தளர்ந்த அரைப்பட்டியுடன் காத்து நிற்கும்.

குறிப்புரை

ஆற்றின் கடவை - புணைகள் கடந்து செல்லும் குறிப்பிட்ட இடம்; பட்டி தளர நிற்றல். இணையும் ஆவலுடன் நிற்றல்.

உணர்வு நிலை

தநபத, பிகொபொசி வரவு காத்து காதல் நலிவுடன் நிற்றல்.

பாடல் : 2049

Ama no gava	*விண்ணாற்றினது*
Kafa to ni worite	*கடவையிலே நின்று*
Tosi Tuki wo	*ஆண்டும் திங்களும்*
Kofi kosi kimi ni	*விரும்பிடும் உன்னையே*
Ko-yofi aferu kamo	*இன்றிரா நேர்காணுங்கொல்!*

விளக்கம்

விண்ணாற்றினது கடவையிலே காத்து நின்று ஆண்டுகளும் மாதங்களும் கழிந்தன. நான் விரும்பும் உன்னை இன்றிரவு நேரிலே காண முடியுமா?

குறிப்புரை

காத்து நிற்கும் கால நீட்டமும் வழமையும் கூறல். இதுவரை ஆண்டுக்கொருமுறை நேரில் காணும் வழக்கத்தில் பல ஆண்டுகளும் பல மாதங்களும் கழிந்து சென்றுவிட்டன.

உணர்வு நிலை

பிகொபொசியைக் காத்துக் காதல் நலிவுடன் நிற்கும் தநபத.

பாடல் : 2050

Asu yori va	*நாளை தொடக்கம்*
Waga tama doko wo	*என் உறங்கும் இடமே*
Uti farafi	*திருத்தி நிற்கும்*
Kimi to wa inezu	*உன்னோடு உறங்காதே*
Fitori ka mo nemu	*தனியேகொல் உறங்கும்*

விளக்கம்

நாளை தொடக்கம் எனது உறங்கும் கட்டிலைத் தூய்மைப் படுத்துவேன். ஆனால் உன்னோடு நான் சேர்ந்துறங்க முடியாது. தனியே உறங்க வேண்டுமே.

குறிப்புரை

இன்றிரவு சேர்ந்துறங்கும். ஆனால் நாளை தொடக்கம் மீண்டும் ஓராண்டு காக்க வேண்டும். எனினும் ஒவ்வொரு நாளும் உறங்கும் கட்டிலைத் தூய்மைப்படுத்தி நினைவில் நலியும்.

உணர்வு நிலை

தநபத, நாளை தொடங்கும் வாழ்க்கை நடைமுறையை எண்ணி நலிதல்.

பாடல் : 2051

Ama no fara	*விண்ணின் வெளியைக்*
Yukite wo imu to	*கடந்து சென்றிடவே*
Sira ma yumi	*வெண்ணிற வில்லை*
Fikite kakuseru	*வளைத்து மறைத்திடும்*
Tuki fito wotoko	*நிலவு நன் மகனே.*

விளக்கம்

விண்ணின் வெளிப்பரப்பைக் கடந்து செல்வதற்காக உன்னுடைய வெண்ணிறமான வில்லை வளைத்து மறைந்து நீ செல்கின்றாய். நிலவே நீ நல்லாண் மகனே.

குறிப்புரை

நிலவு தன்னைத் தானே மறைத்துச் செல்லல். வெண்ணிற வில்- வெண்ணிறமான மரத்திலே செய்யப்பட்ட வில்.

உணர்வு நிலை

நிலவைப் பற்றிய பாடல். குறிப்பிட்ட நாளது இயற்கை நிலை.

பாடல் : 2052

Kono yufube	*இன்றிரவிலே*
Furi kuru ame va	*பெய்து வரு மழையே*
Fikobosi no	*பிகொபொசியின்*
Faya kogu fune no	*விரையத் தள்ளு புணை*
Kai no tiri kamo	*சவளில் தெறிக்கும்கொல்!*

விளக்கம்

இன்றிரவு பெய்கின்ற மழையே பிகொபொசி விரைவாய்த் தள்ளுகின்ற புணையின் சவளில் தெறிக்கும்கொல்.

குறிப்புரை

சவளில் தெறிக்கின்ற நீர்தான் மழையாகப் பெய்கிறதோ! சவளில் தெறிக்கின்ற நீர்த் துளி - மழைத் துளி ஒத்தல்.

உணர்வு நிலை

பிகொபொசியின் விரைவாய்ப் புணை தள்ளும் காட்சி.

பாடல் : 2053

Ama no gava	*விண்ணாற்றினது*
Yaso se kiraferi	*பல்மேடு எழு புகார்*
Fikobosi no	*பிகொபொசியின்*
Toki matu fune va	*நேரம் காக்கும் புணையே*
Imasi kogu rasi	*இப்போது தள்ளி வரும்*

விளக்கம்

விண்ணாற்றினது பல மேடுகளிலும் புகார் எழுகின்றது. பிகொபொசியின் நேர் காணும் நேரமும் வந்ததால் இப்போது புணையைத் தள்ளி வரும்.

குறிப்புரை

நேர் காணும் நேரம் ஏழாம் மாதத்தின் ஏழாம் நாள் இரவு.

உணர்வு நிலை

பிகொபொசி புணை தள்ளி வரும் காட்சி நினைத்தல்.

பாடல் : 2054

Kaze fukite	*காற்று வீசியே*
Kava nami tatinu	*ஆற்று அலை எழுந்திடும்*
Fikifune ni	*பிணை புணையில்*
Watari mo konu ka	*கடந்துமே வருங்கொல்*
Yo no fukenu ma ni	*இரா ஆழமாகுமுன்*

விளக்கம்

காற்று வீசியதால் விண்ணாற்றிலே அலையும் எழுந்திடும். பிணைத்துக் கட்டப்பட்ட புணையிலே இரவு வளருமுன் பிகொபொசியும் கடந்து வந்திடுமோ?

குறிப்புரை

பல தடிகளால் பிணைத்துக் கட்டப்பட்ட புணை.

உணர்வு நிலை

இயற்கையின் நிலை கண்டு பிகொபொசி வரவு காக்கும் தநபத.

பாடல் : 2055

Ama no gava	*விண்ணாற்றினது*
Tofoki watari va	*தொலைவுக் கடவையே*
Na kere domo	*அன்று எனினும்*
Kimi ga funedeva	*உனது புணையையே*
Tosi ni koso mate	*ஆண்டு வரைதான் காக்கும்*

விளக்கம்

விண்ணாற்றினது கடவை தொலைவானதன்று. எனினும் உன்னுடைய புணையையே ஓராண்டு முழுமையும் நான் காத்து நிற்க வேண்டுமே.

குறிப்புரை

கடந்து வரும் கடவையின் தூரம் குறைவானது. எனினும் வழக்கப்படி இருவரும் ஓராண்டிலே ஒருமுறைதான் நேரில் காணலாம்.

உணர்வு நிலை

நடைமுறையை எண்ணி நலியும் தநபத.

பாடல் : 2056

Ama no gava	*விண்ணாற்றினது*
utifasi watasi	*வழிப் பாலம் செய்திடும்*
Imo ga ifedi	*காதலி மனை*
Yamasu kayofamu	*நில்லாதே சென்றிடுமே*
Toki matazu tomo	*நேர்நேரம் காத்திடாமல்*

விளக்கம்

விண்ணாற்றினது மேலே வழிச்செல்லும் பாலம் ஒன்றைச் செய்திடும். அதன்மூலம் என் காதலி மனைக்குக் குறிப்பிட்ட நேரம்வரை காத்து நில்லாமல் விரைவாகச் சென்றிடலாம்.

குறிப்புரை

வழிப்பாலம் - போவதற்குரிய பாலம்-இடையிட்ட பாலம்; நேர்நேரம் - குறிப்பிட்ட நேரம்; எப்பொழுதும் போய் வரும் ஆவல்.

உணர்வு நிலை

தநபதவை நாளும் சென்று காண விரும்பும் பிகொபொசி.

பாடல் : 2057

Tuki kasane	*திங்கள் தொடரில்*
Waga mofu imo ni	*நான் நினைக்குங் காதலி*
Aferu yo va	*சேரும் இரவே*
Ima si nana yo wo	*இப்போது ஏழிராவாகத்*
Tugi kosenu kamo	*தொடர்ந்திடு அன்றுகொல்!*

விளக்கம்

மாதங்கள் தொடர்ந்தால் நான் எப்போதும் நினைக்கும் காதலியைச் சேருகின்ற இரவு வந்திடும்? இப்போது அது ஏழிரவாகத் தொடர்ந்திடாதே.

குறிப்புரை

இணையும் ஓரிரவு ஏழு இரவாகத் தொடர்ந்தால் நல்லதென எண்ணல்.

உணர்வு நிலை

பிகொபொசி தநபதவுடன் ஏழிரவு தங்க விரும்பல்.

பாடல் : 2058

Tosi ni yosofu	*ஆண்டுச் செலவில்*
Waga fune kogamu	*எனது புணை தள்ளும்*
Ama no gava	*விண்ணாற்றினிலே*

Kaze va fuku tomo	*காற்றே வீசி நிற்பினும்*
Nami tatu na yume	*அலையே எழுந்திடேல்*

விளக்கம்

ஆண்டுக்கொருமுறை செல்கின்ற செலவிற்காக நான் எனது புணையைத் தள்ளி வருகின்றேன். விண்ணாற்றினிலே காற்று வீசி நின்றாலும், அலையே நீ உயர எழுந்திடாதே.

குறிப்புரை

அலைகள் உயர எழுந்தால் புணையைத் தள்ளிச் செல்ல முடியாது. ஆண்டுக்கொருமுறை செய்கின்ற அருமையான செலவு.

உணர்வு நிலை

தன் புணைச் செலவைத் தடுக்க வேண்டாமென பிகொபொசி விண்ணாற்றின் அலையை வேண்டல்.

பாடல் : 2059

Ama no gava	*விண்ணாற்றினிலே*
Nami va tatu tomo	*அலை எழுந்திடினும்*
Waga fune va	*எனது புணை*
Iso kogi idemu	*வெளியே தள்ளிச் செல்லும்*
Yo no fukenu ma ni	*இரா ஆழமாகுமுன்*

விளக்கம்

விண்ணாற்றினிலே அலை எழுந்திடினும், நான் இரவு வளர்ந்திடு முன்னே எனது புணையை வெளியே தள்ளிச் செல்லும்.

குறிப்புரை

ஆற்றில் அலை எழுந்தாலும் குறிப்பிட்ட நேரம் போய்ச் சேர எண்ணல்.

உணர்வு நிலை

கால நிலை தடையாக இருப்பினும், புணையைத் தள்ளிச் சென்று தநபதவைக் காண விரும்பும் பிகொபொசி.

பாடல் : 2060

Tada ko yofi	*இந்த இரவே*
Afitaru ko ra ni	*இணைந்த மகளிடம்*

Koto-dofi mo	*விடை கூறிடும்*
Imada sesusite	*ஒரு சொல் கதையாமல்*
Sa yo zo ake ni keru	*இராதான் விடிந்தது*

விளக்கம்

இப்போது இந்த இரவுதான் ஒன்றாய் இணைந்த என் அன்புக்குரியவளுக்கு விடை கூறுகிறேன். அவளுடன் ஒரு சொல் கூடக் கதையாமலே இரவுந்தான் விடிந்தது.

குறிப்புரை

இரவு ஒரு சொல்தானும் இருவரும் கதைக்கவில்லை.

உணர்வு நிலை

தநபதவுடன் இணைந்து விடைபெறும் பிகொபொசி நிலை.

பாடல் : 2061

Ama no gava	*விண்ணாற்றினிலே*
Sira nami takasi	*வெள்ளலை உயர்ந்தது*
Waga kofuru	*நான் விரும்பிடும்*
Kimi ga funa de va	*நீ புணையில் வரவே*
Imasi surasi mo	*இப்போ அணியமாகும்*

விளக்கம்

விண்ணாற்றினிலே வெள்ளிய அலை உயர்ந்தெழுகின்றது. நான் விரும்பிடும் நீயும், இப்போது புணையில் புறப்படுவதற்காக அணியமாகும்.

குறிப்புரை

புணையிற் புறப்படும் நேரம் ஆற்றின் அலை உயர்வது செலவைத் தடைப்படுத்துமோ!

உணர்வு நிலை

பிகொபொசியின் வரவுக்கு இயற்கை தடையாகுமோவென நலியும் தநபத.

பாடல் : 2062

Fata mono no	*தறியின் பொருள்*
Maneki moti yukite	*பலகை எடுத்துப் போய்*
Ama no gava	*விண்ணாற்றினது*
Uti fasi wataru	*சிறு பாலம் செய்யுமே*
Kimi ga komu tame	*நீயும் வருவதற்கே*

விளக்கம்

நான் என் நெசவுத் தறியின் பொருளான மரப்பலகையை எடுத்துப்போய் விண்ணாற்றினது சிறு பாலம் ஒன்று கட்டப் போகின்றேன். அதன்மூலம் நீயும் வந்திடலாம்.

குறிப்புரை

பலகையால் இடையிட்ட பாலம் செய்தல். அப்பாலம் நெடுங்காலப் பயன்பாட்டிற்குரியதல்ல.

உணர்வு நிலை

பிகொபொசி விரைவில் வருவதற்காகப் பாலம் செய்ய எண்ணும் தநபத.

பாடல் : 2063

Ama no gava	*விண்ணாற்றினது*
Kiri tati noboru	*புகார் எழுந்து ஏறும்*
Tanabata no	*தநபதவின்*
Kumo no koromo no	*முகில் ஆடையினது*
Kaferu sode kamo	*கவிழ்ந்திடு கரைகொல்!*

விளக்கம்

விண்ணாற்றினுடைய புகார் எழுந்து ஏறும். அது தநபதவின் முகில் ஆடையினுடைய புரளும் கரைதானோ!

குறிப்புரை

காற்றில் ஆடைக்கரை கவிழ்தல் - புரண்டு மாறுதல்.

உணர்வு நிலை

தநபதவின் ஆடை நிலை கூறும் பாடல்.

பாடல் : 2064

Inisife ni	*பழங்காலத்தின்*
Orite si fata wo	*நெய்திட்ட அறுவையை*
Kono yufufe	*இன்றிரவிலே*
Koromo ni nufite	*ஆடையாய் செய்திட்டே*
Kimi matu ware wo	*உன்னையே காக்கும் நானே*

விளக்கம்

நீண்ட நாட்களாக இன்றுவரை நான் நெசவு செய்த துணியை, இன்றிரவு நீ அணிகின்ற ஆடையாகத் தைத்துக் காத்திருப்பேன் உனையே.

குறிப்புரை

பழங்காலம் - நீண்டநாள் பழங்கால முதல் நிலைபெற்றிருக்கும் நெசவுத்தறி; துணி நெய்து ஆடை தைக்கும் நடைமுறை.

உணர்வு நிலை

பிகொபொசிக்கென ஆடை தைத்துக் காத்திருக்கும் தநபத.

பாடல் : 2065

Asi dama mo	*கால்மணிகளும்*
Tadama mo yurani	*கைமணிகளும் கலந்து*
Oru fata wo	*நெய்யும் துணி*
Kimi ga mi kesi ni	*உனக்கு அணிந்திட*
Nufi afemu kamo	*ஆடை செய்து சேருங்கொல்!*

விளக்கம்

கால்மணிகளும் கைமணிகளும் கலந்து ஒலிக்க நான் நெய்திடும் துணியிலே உனக்கு அணிய ஆடை செய்து சேர்ந்திடுவேனோ.

குறிப்புரை

கால்மணி, கைமணி அணியும் நடைமுறை. துணியிலே ஆடை செய்து முடிக்கும் ஆவல்.

உணர்வு நிலை

பிகொபொசி அணிய ஆடை செய்யும் தநபத.

பாடல் : 2066

Tuki fe yeri	*திங்கள் நாள் தேர்ந்து*
Afite si areba	*இணைந்து இருந்திடவே*
Wakare maku	*பிரிவு நிலை*
Wosikaru kimi va	*இரங்கிடுவேன் நீயே*
Asu safe mo ga mo	*நாளையும் தங்கிடுமோ!*

விளக்கம்

மாதம் நாள் தேர்ந்து நாமிருவரும் இணைந்திருந்தாலும், மீண்டும் பிரிகின்ற நிலையை எண்ணி நான் இரங்குகின்றேன். எனவே நீ நாளையும் இங்கே தங்கிடுவாயா?

குறிப்புரை

தநபதவும் பிகொபொசியும் தேர்ந்த நாளொன்றிலே இணைவர். அதன் பின்னர் பிரிவர்.

உணர்வு நிலை

தநபத பிகொபொசியைப் பிரிவதை எண்ணி இரங்கல்.

பாடல் : 2067

Ama no gava	*விண்ணாற்றினது*
Watari ze fukami	*கடவை நீர் மேட்டினிலே*
Fune ukete	*புணை எடுத்துத்*
Kogi kuru kimi ga	*தள்ளியே வரும் நீயே*
Kati no to kikoyu	*சவள் ஒலி கேட்டிடும்*

விளக்கம்

விண்ணாற்றினது கடவை நீர் மேட்டிலிருந்து புணை பெற்றுத் தள்ளியே நீ வருகின்றாய். நீர் வலிக்கும் சவள் ஒலியும் கேட்கிறதே.

குறிப்புரை

இரவாகையால் சவள் ஒலி தெளிவாகக் கேட்டல்.

உணர்வு நிலை

தநபத, பிகொபொசி வரவு காத்து நிற்றல்.

பாடல் : 2068

Ama no fara	*விண்ணின் பரப்பை*
Furi sake mire ba	*உற்று நோக்கியபோது*
Ama no gava	*விண்ணாற்றினிலே*
Kiri tati wataru	*புகார் எழுந்து செல்லும்*
Kimi va kinu rasi	*நீயே வருகின்றாயோ!*

விளக்கம்

விண்ணின் பரப்பை நான் உற்றுப் பார்த்தபோது விண்ணாற்றிலே புகார் படர்ந்து எழுந்து செல்லும். நீயே வருகிறாய்போலும்.

குறிப்புரை

பார்வையை நீளப் படரவிடும்போது தெரியும் காட்சி. புகாரின் தோற்றம் - சவளினால் ஏற்படும் நுரை.

உணர்வு நிலை

பிகொபொசியின் புணையைப் பார்த்து நிற்கும் தநபத.

பாடல் : 2069

Ama no gava	*விண்ணாற்றினது*
Se goto ni nusa wo	*கரையெங்கும் தோரணம்*
Tate maturu	*நாட்டி மடையிடும்*
Kokoro va kimi wo	*என் உள்ளமே நீயுமே*
Sakiku kimase to	*நலமுடன் வரவே*

விளக்கம்

விண்ணாற்றினது கரையெங்கிலும் தோரணம் நாட்டி என் உள்ளம் மடையிட்டு வழிபாடு செய்யும். நீயுமே நலமுடன் திரும்பி வருவதற்கே.

குறிப்புரை

பிரிந்து சென்றவர் நலமுடன் திரும்பி வர வேண்டித் தோரணம் நாட்டி மடையிட்டு வழிபடும் நடைமுறை. ஆற்றில் வலிய காற்றும், திரையும் எழாவண்ணம் வேண்டுதல்.

உணர்வு நிலை

பிகொபொசி நலமுடன் திரும்பி வர மடையிடும் தநபத.

பாடல் : 2070

Fisakata no	*பிசகதவின்*
Ama no kafa tu ni	*விண்ணாற்றுத் தரிப்பிலே*
Fune ukete	*புணை எடுக்கும்*
Kimi matu yo Ta va	*உன்னைக் காக்கும் இரவே*
Akezu mo aranuka	*விடியாது அன்றிகொல்!*

விளக்கம்

பிசகதவின் விண்ணாற்றுத் தரிப்பிலே உள்ள காவலன் வழிகாட்டலில் புணையை நீ எடுக்கும் நீ வருகின்ற நேரத்தை நான் காத்து நின்றிட இரவும் விடியாதிருக்கும்கொல்! (இரவு விடியாதிருக்க விரும்பல்)

குறிப்புரை

இப்பாடலிலே 'Fisakata no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ama' என்னுஞ் சொல்லுடன் இணையும். பிகொபொசி வருமிரவு, அப்படியே விடியாது இரவாகவே இருக்க விரும்பல்.

உணர்வு நிலை

இரவிடம் விடியாதிருக்க வேண்டும் தநபத.

பாடல் : 2071

Ama no gava	*விண்ணாற்றினிலே*
Asi nure watari	*அடி நனையக் கடந்து*
Kimi ga te mo	*உனது கையை*
Imada makaneba	*இனனும் அணையாக்கிடேன்*
Yo no fukenuraku	*இரா ஆழமாயிற்று*

விளக்கம்

விண்ணாற்றினிலே அடி நனையக் கடந்து வந்து உன்னுடைய கைகளை இன்னும் நான் அணையாக்கவில்லை. ஆனால் இரவோ வளர்ந்து செல்கிறது.

குறிப்புரை

தநபத கைகளை அணையாக்கி ஒன்றாய் உறங்கல்.

உணர்வு நிலை

தநபதவோடு ஒன்றாய் உறங்க விரும்பும் பிகொபொசி.

பாடல் : 2072

Watari mori	*கடவைக் காவல*
Fune watase wo to	*புணை கடக்கும் இடம்*
Yobu kowe no	*கூவுங்குரலே*
Itaraneba kamo	*தொலைவில் கேளாதுகொல்*
Kati no to no senu	*சவள் ஒலி தேயும்*

விளக்கம்

கடவைக் காவலனே! புணையைக் கடந்து செல்லவிடுமிடம்வரை கூவுங்குரலே தொலைவிலே கேட்கவில்லையா. சவளின் ஒலியும் தேய்கிறதே. (இன்னும் புணை வரவில்லையே?)

குறிப்புரை

கடவைக் காவலன் - கடவையிலே புணைகளைச் செலுத்துவதற்கு இசைவு தருபவன். அவனிடம் கூவிச் சொல்லுங் குரல்.

உணர்வு நிலை

பிகொபொசி புணையொலி காத்து நிற்கும் தநபத.

பாடல் : 2073

Ma-ke nagaku	*நீண்ட நாளுமே*
Kava ni muki tati	*ஆற்றை நோக்கி நிற்கும்*
Ari si sode	*அவள் கையாடை*
Koyofi makamu to	*இன்றிரா அணையாக்கும்*
Omofaku ga yosa	*நினைந்திடிலும் நன்றே*

விளக்கம்

நீண்ட நாள்களாக ஆற்றின் கரையை நோக்கியே நிற்கின்ற அவளுடைய கையாடையை இன்றிரா அணையாக்குவேன். அதை நினைந்திடுவது நன்றே.

குறிப்புரை

ஆண்டில் ஒரு முறை, ஒருநாள் மட்டுமே நேரில் காண்பதால் காத்திருக்கும் நாள்கள் பல.

உணர்வு நிலை

தநபதவைக் காணவிருக்கும் பிகொபொசி நிலை.

பாடல் : 2074

Ama no gava	*விண்ணாற்றினது*
Watari se goto ni	*கடவை நீர் எங்கிலும்*
Omofi tutu	*நினைந்திட்ட என்*
Kosiku mo sirusi	*வருகை பயன் தரும்*
Aferaku amofaba	*இணையும் நினைவிலே*

விளக்கம்

விண்ணாற்றினது நீர்க் கடவை ஒவ்வொன்றிலும் அவளை நினைத்து வந்ததன் பயன் தெரிந்தது, அவளை நான் நினைந்து இணையும்போது. (நினைவில் இணைவது வருகையின் பயனாயிற்று)

குறிப்புரை

ஒவ்வொரு நீர்க்கடவையிலும் நினைத்து வருதல். பிரிவின் நலிவை உணர்த்தல்.

உணர்வு நிலை

பிகொபொசியின் பிரிவின் நலிவின் வெளிப்பாடு.

பாடல் : 2075

Fito safe ya	*மாந்தர் அறியா*
Mi tugazu aramu	*கண் காணாததும் உண்டே*
Fikobosi no	*பிகொபொசியின்*

Tuma yobu fune no — *மனைவி அழை புணை*
Tikaduki yuku wo — *அண்மையில் செல்லுவதே*

விளக்கம்

பிகொபொசியின் மனைவியிடம் செல்கின்ற புணை அண்மையில் செல்லுவதை அறியாத, கண்ணால் காணாத மனிதரும் உண்டே.

குறிப்புரை

புணையின் வரவு மற்றவர் அறிந்த பொருளே. மனைவி அழை புணை - அன்போடு செல்லும் புணை.

உணர்வு நிலை

பிகொபொசியின் புணை தநபதவிடம் செல்வதைக் கண்டவர் நிலை.

பாடல் : 2076

Ama no gava — *விண்ணாற்றினது*
Se wo fayami kamo — *நீர்ச்சுழல் விரைவுகொல்*
Nuba tama no — *நுப பழத்தின்*
Yo va akeni tutu — *இரவே விடிந்தது*
Afanu fikobosi — *இணையா பிகொபொசி*

விளக்கம்

விண்ணாற்றினது நீர்ச் சூழலின் விரைவினாலா நுப பழம்போன்ற இருண்ட இரவும் விடிந்துவிட்டது. பிகொபொசியும் இன்னும் இணைய வரவில்லையே!

குறிப்புரை

இப்பாடலிலே 'Nubatama no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yo' என்னுஞ் சொல்லுடன் இணையும்.

உணர்வு நிலை

பிகொபொசி வரவு காக்கும் தநபத.

பாடல் : 2077

Watari mori — *கடவைக் காவல*
Fune faya watase — *புணை கடிதில் விடு*

Fito tosi ni	*ஓராண்டினில்*
Futa tabi koyofu	*மறுமுறைக் கடப்பு*
Kimi ni aranaku ni	*உனக்கும் இன்றாதலால்*

விளக்கம்

கடவைக் காவலனே, என் காதலர் புணை கடிதில் செல்ல இசைவு கொடு. ஓராண்டிலே மீண்டும் ஒருமுறை கடக்கின்ற வாய்ப்பு என் காதலனே உனக்கும் இல்லையாதலால்.

குறிப்புரை

குறிப்பிட்ட நேரத்தில் வந்திட இசைவு கொடு. காவலனுக்கு நிலைமை தெரியாது என எண்ணல்.

உணர்வு நிலை

பிகொபொசி புணை விரைவில் வர விரும்பும் தநபத.

பாடல் : 2078

Tama katura	*மணிக் கொடியே*
Tayenu mono kara	*முடிவுற்ற பொருளே*
Sanuraku va	*எம் உறங்கலே*
Tosi no watari ni	*ஆண்டினது கழிவில்*
Tada fito yo nomi	*ஓர் இரவு மட்டுமே*

விளக்கம்

மணிக்கொடியே முடிவுற்ற பொருள் எனினும், எமது உறங்கலோ ஆண்டின் கடப்பிலே ஓர் இரவு மட்டுமேதான்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Tama katura' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Teyenu'வுடன் அணையும்.

உணர்வு நிலை

ஓர் இரவு மட்டும் இணையும் தநபதவின் நிலை.

பாடல் : 2079

Kofuru fi va	*நலியும் நாளே*
Ke nagaki mono wo	*நீண்ட பொழுதின் பொருள்*

Koyofi dani	*இவ்விரா மட்டும்*
Tomosimu besi ya	*நிறைவாக எண்ணுமா*
Afubeki mono wo	*சேரவேண்டு பொருளை*

விளக்கம்

பிரிவில் நலிகின்ற நாளே நீண்ட பொழுதின் பொருளாகும். இந்த இராமட்டும் சேர்வதை நிறைவாக எண்ணி இருக்குமோ!

குறிப்புரை

நீண்ட நாள்களாகப் பிரிவினால் நலியும் பொருள். அதனால் எதையும் நிறைவாக எண்ணுவதில்லை. இன்றிரவு இணைவதால் நிறைவாக எண்ணலாமே.

உணர்வு நிலை

இணையும் இருவர் உள்ள நிலை.

பாடல் : 2080

Tanabata no	*தநபதவும்*
Ko yofi afinaba	*இன்றிரா இணைந்திடும்*
Tune no goto	*வழமை போல*
Asu wo fedatete	*நாளையே பிரிந்திட*
Tosi va nagakemu	*ஆண்டின் காலமும் நீளுமே*

விளக்கம்

தநபத பிகொபொசியுடன் இணைந்திடும். ஆனால் வழமைபோல நாளை இருவரும் பிரிந்திட இந்த ஆண்டின் கால அளவும் நீளுமே.

குறிப்புரை

நடைமுறை நம்பிக்கை வெளிப்படுத்தல். தநபதவைப்பற்றிய பாடல்.

உணர்வு நிலை

தநபதவின் நிலை மூலமாகப் பிறர் உணர்வு வெளிப்படுத்தல். ஒருமுறை நேர்கண்டு பிரிவதால் பிரிவின் நீட்டம் பெரிது.

பாடல் : 2081

Ama no gava	*விண்ணாற்றினது*
Tanafasi watase	*பாலம் செய்திடுவாயே*

Tanabata no — *தநபதவும்*
I watarasamu ni — *கடந்து சென்றிடவே*
Tanafasi watase — *பாலம் செய்திடுவாயே*

விளக்கம்

விண்ணாற்றிற்கு ஒரு பாலம் செய்திடுவாயே. தநபதவும் அதன் மூலம் விண்ணாற்றைக் கடந்து சென்றிடவே பாலம் செய்திடுவாயே.

குறிப்புரை

பிகொபொசி வழமையாகக் கடக்கும் பாலத்தைத் தநபத கடந்திட அழைத்தல்.

உணர்வு நிலை

ஆற்றங்கரையிலே பிகொபொசியைக் காத்து நிற்கும் தநபதவுக்கு, ஒரு பாலமிருப்பின் நன்றெனை எண்ணல்.

பாடல் : 2082

Ama no gava — *விண்ணாற்றினிலே*
Kafa to yaso ari — *பல கடவை உண்டு*
Iduku ni ka — *எக் கடவைகொல்*
Kimi ga mifune wo — *உனது புணையையே*
Waga mati woramu — *நானும் காத்து நிற்கவே*

விளக்கம்

விண்ணாற்றினிலே பல கடவைகள் இருக்கின்றன. அவற்றிலே எந்தக் கடவையிலே நானும் உன்னுடைய புணையைக் காத்து நிற்பதோ!

குறிப்புரை

விண்ணாற்றிலே *80* கடவைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. *80* என்பது 'பல' எனப் பொருள்படும்.

உணர்வு நிலை

குறிப்பாக எந்தக் கடவையிலே பிகொபொசியைக் காத்து நிற்பதென எண்ணும் தநபதவின் அவல நிலை.

பாடல் : 2083

Aki kaze no	*கார் காற்றினது*
Fuki ni si fi yori	*வீசும் நாள் முதலாக*
Ama no gava	*விண்ணாற்றினது*
Se ni ide tati te	*கடவை வந்து நின்று*
Matu to tuge koso	*காக்கும் எனத் தூது சொல்*

விளக்கம்

கார்காலக் காற்று வீசும் முதல் நாள் தொடக்கம், விண்ணாற்றினது கடவையிலே நான் வந்து நின்று பிகொபொசியைக் காத்திருப்பதாகப் பிகொபொசியிடம் தூது சொல்லிடுவாய்.

குறிப்புரை

காத்து நிற்கும் செய்தியைச் சொல்லியனுப்பும் வழக்கம். பெண் தூது அனுப்ப விழைதல்.

உணர்வு நிலை

பிகொபொசியைக் காத்து நிற்கும் செய்தியை யாரிடமாவது சொல்லி அனுப்ப விரும்பும் தநபத.

பாடல் : 2084

Ama no gava	*விண்ணாற்றினது*
Kozo no watari se	*சென்ற ஆண்டுக் கடவை*
Are ni keri	*பாழானதுவே*
Kimi ga kimasamu	*நீயே வருகை தரும்*
Miti no siranaku	*வழி தெரியாமலே*

விளக்கம்

விண்ணாற்றிலே சென்ற ஆண்டு பிகொபொசி கடந்த கடவை இப்போது பாழாகிவிட்டது. இதனை நீயும் அறியாமல் வருகின்றாயே. (வழி தெரியாமல் தடுமாறுவாயே)

குறிப்புரை

ஆற்றோட்டத்திலே கடவைகள் பாழாவதுண்டு. அதனால் வழி மாறுபட நேரிடும்.

உணர்வு நிலை

பிகொபொசியின் கடவை நிலைபற்றிக் கவலைப்படும் தநபத.

பாடல் : 2085

Ama no gava	*விண்ணாற்றினது*
Sese ni sira nami	*நீரினிலே வெண் அலை*
Takake domo	*உயர்ந்திடினும்*
Tada watari kinu	*நேரே கடந்து வரும்*
Mata ba kurusimi	*காத்து நிற்பின் கொடிது*

விளக்கம்

விண்ணாற்று நீரிலே வெள்ளிய அலைகள் உயர்ந்திட்டாலும் நான் நேரே கடந்து வந்திட்டேன். ஏனெனில், அங்கு காத்து நிற்பதோ மிகவும் கொடிது.

குறிப்புரை

அலையடங்கும் வரை காத்து நின்றால் காலம் கரைந்துவிடும். அதனால் பிரிவு இன்னும் நீளும். பிகொபொசியின் பாடல்.

உணர்வு நிலை

தநபதவை விரைந்து காண எண்ணும் பிகொபொசி.

பாடல் : 2086

Fikobosi no	*பிகொபொசியின்*
Tuma yobu fune no	*காதலி அழை புணை*
Fiki tuna no	*இழு கயிற்றின்*
Tayemu to kimi wo	*அறுந்திடாது; உன்னை*
Waga mofanaku ni	*நான் நினையாதிருக்கும்*

விளக்கம்

பிகொபொசியினுடைய காதலியிடம் செல்லும் புணையின் இழுவைக் கயிறு அறுந்திடாது. அதுபோல நானும் உன்னை அறுத்திடாது நினைக்குமே. (நினைவு அறுந்திடாமல் தொடர்ந்து நினைத்தல்)

குறிப்புரை

இப்பாடல் வேறு பெண்ணுடையது. தன் காதலன் நினைவு உள்ளத்தில் என்றும் நிறைந்திருப்பதைப் புலப்படுத்தல்.

உணர்வு நிலை

காதலனுடன் தன்னுடைய தொடர்பு எப்படிப்பட்டது என்பதை விளக்க முயலும் காதலி.

பாடல் : 2087

Watari mori	*கடவைக் காவல*
Funa de si idemu	*புணை தள்ளி வருவாய்*
Koyo fi nomi	*இன்றிரா மட்டும்*
Afimite noti va	*இணைந்திட்ட பின்னரே*
Afazi mono kamo	*இணையாப் பொருள்கொல்*

விளக்கம்

கடவைக் காவலனே, விரைவிலே புணையைத் தள்ளி வந்திடுவாய். நான் இன்றிரவு மட்டும் அவளுடன் இணைந்திட்டுப் பின்னரே இணைந்திட முடியாத பொருள் ஆவேன்.

குறிப்புரை

கடவைக் காவலனிடம் உள்ள நிலையைக் கூறிப் புணையை வேண்டல்.

உணர்வு நிலை

தநபதவிடம் விரைந்து செல்ல, கடவைக் காவலனை வேண்டும் பிகொபொசி.

பாடல் : 2088

Waga kakuseru	*நான் மறைத்திட்ட*
Kadi sawo nakute	*சவள் தடி தொலைத்தேன்*
Watari mori	*கடவைக் காவல*
Fune kasame ya mo	*புணை கடன் தருவாயோ*
Simasi va ari mate	*சிறுபொழுது காக்கும்*

விளக்கம்

நான் மறைத்து வைத்திருந்த சவள் தடியைத் தொலைத்துவிட்டேன். கடவைக் காவலனே, நீ பிகொபொசிக்கு ஒரு புணை கடனாகக் கொடுப்பாயோ! இங்கே சிறுபொழுது காத்து நின்று போவதற்கே.

குறிப்புரை

கடவைக் காவலனிடம் புணை கடன் பெறுவதில் ஐயம். சிறுபொழுது தான் பிகொபோசி வந்து தங்க முடியும் என்பதை உணர்த்தல்.

உணர்வு நிலை

தநபத, கடவைக் காவலனிடம் புணை வேண்டல். குறிப்பிட்டபடி பிகொபோசியுடன் இணையும் ஆவல் வெளிப்பாடு.

பாடல் : 2089

Ama tuti no	*விண் நிலம் எனப்*
Fazime no toki yu	*பிரிந்த போதிருந்து*
Ama no gava	*விண்ணாற்றினது*
Imukafi worite	*எதிர்க்கரை நிற்குமே*
Fito tosi ni	*ஓராண்டினிலே*
Futa tabi afanu	*மறுமுறை இணையா*
Tuma kofi ni	*மனையாள் காதல்*
Mono omofu fito	*பொருள் நினையும் அவன்*
Ama no gava	*விண்ணாற்றினது*
Yasu no kafara no	*கடவை வெளியினைக்*
Ari gayofu	*கடந்து திரும்பும்*
Yoyono watari ni	*தலைமுறைக் கடப்பு*
Sofo fune no	*மண் புணையது*
Tomo nimo feni mo	*முன்னிலும் கடையிலும்*
Funa yosofi	*புணை தள்ளியே*
Makati sizi nuki	*இருபுறம் சவள்தள்ளி*
Fata susuki	*கொடி சுசுகி*
Moto fa mo soyo ni	*அடி இலைச் செடியும்*
Aki kaze no	*காரது காற்று*
Fuki kuru yofi ni	*வீசி வரு இரவிலே*
Ama no gava	*விண்ணாற்றினது*
Sira nami sinogi	*வெண்ணலையும் எழுந்தே*
Oti tagitu	*விழும் தளர்ந்தே,*
Fayase watarite	*நீர்ச் சுழலைக் கடந்தே*
Waka kusa no	*இளந்தளிரின்*
Tuma ga te maku to	*மனைவி கை அணைய*
Ofo fune no	*நம்பு புணையில்*

Omofi tanomite	நினைந்து மகிழ்ந்துமே
Kogi kuramu	கடந்து வரும்
Sono tuma no ko ga	நல் மனைவி காதலன்,
Aratama no	மணி ஆரத்தின்
Tosi no wo nagaku	ஆண்டுமே நீண்டிடுதே
Omofi kosi	நினைந்து வர
Kofi wo tuku samu	நலிவுற்றே சேர்ந்திடும்
Fumi tuki no	ஏழாம் மாதத்தின்
Nanuka no yofi va	ஏழாவது நாளிலே
Ware mo kanasi mo	நாங்களும் வருந்துமே

விளக்கம்

மிகப் பழைய காலத்திலிருந்து, விண்-நிலம் எனப் பிரிந்த காலந்தொடக்கமாகப் பிகொபொசி விண்ணாற்றினது எதிர்ப்புறக் கரையில் நிற்குமே. ஓராண்டிலே ஒருமுறை மட்டுமே இணைந்து மறுமுறை இணையாத தனது மனையாளின் காதலை நினைந்து நிற்கும். அவனுடைய விண்ணாற்றினது கடவை வெளியினை ஓராண்டிலே ஒருமுறை கடந்து திரும்புகின்ற காலங்காலமாக நடைமுறையான கடப்பு; மண்ணாலே செய்யப்பட்ட புணையை முன்னும் பின்னும் தள்ளி இருபுறமும் அமைந்த பல சவள்களால் தள்ளியே வரும். ஆற்றங்கரையின் கொடிச் சுசுகியின் அடி இலையும் காற்றில் ஒலிக்கும். கார்காலத்துக் காற்று வீசி வர-இரவிலே விண்ணாற்றினது வெண் அலையும் எழுந்து மடியும். நீர்ச்சுழலைக் கடந்தே இளந்தளிர்போன்ற மனைவியின் கையை அணைய, காவல் நிலையில் நம்பிக்கையான புணையிலே அவளை நினைந்து மகிழ்ந்து வரும். புணையைச் செலுத்திக் கடந்து வரும் அந்த நல்ல மனைவியின் காதற் கணவன் மணி ஆரம்போல ஆண்டும் நீள்கிறதே. பிகொபொசி அவளை நினைந்து நலிவுற்றுச் சேர்ந்திடும் ஏழாம் மாத்தின் ஏழாம் நாளிரவு, நாங்களும் அதை நினைய வருந்துவமே.

குறிப்புரை

பிகொபொசியின் ஆற்றுக் கடப்பை விரிவாய்க் கூறல். 3 தலையணைச் சொற்றொடர்கள்.

உணர்வு நிலை

புலவன் தன் உள்ளத்து நிலை வெளிப்படுத்தும் பாடல்.

பாடல் : 2090

Koma nisiki — *கொரம கயிறு*
Fimo toki kavasi — *மாற்றவும் நேரமின்றி*
Fikobosi no — *பிகொபொசியின்*
Tuma dofu yofi zo — *மனைவி சேர் இராதான்*
Ware mo sinofamu — *நானும் நினைத்து வருந்தும்*

விளக்கம்

பட்டாடையின் கயிற்றை மாற்றவும் நேரம் இன்றே, பிகொபொசி மனைவியுடன் இணைகின்ற இரவின் குறுமையை நினைத்து நானும் வருந்துகிறேன்.

குறிப்புரை

கொம - பட்டாடை; கயிறு - அதைச் சுற்றிக் கட்டும் கயிறு. கொரியாவிலுள்ள 'கொம' என்னும் இடத்துப் பட்டாடை. கயிறு மாற்றல் என்பதன் பொருள், ஒன்றாய் உறங்குதல்.

உணர்வு நிலை

பிகொபொசியின் நிலைபற்றிய புலவரது உள்ளத்து உணர்வு கூறல்.

பாடல் : 2091

Fikobosi no — *பிகொபொசியின்*
Kavase wo wataru — *ஆற்று நீரைக் கடக்கும்*
Sawo fune no — *சிறு புணையும்*
Iyukite fatemu — *சென்று நங்கூரமிட்டு*
Kavadu si omofoyu — *நிற்பதையே நினையும்*

விளக்கம்

பிகொபொசியினுடைய ஆற்று நீரைக் கடக்கும் சிறிய புணையும் சென்று நங்கூரமிட்டு நிற்குமிடத்தையே நான் நினைக்கின்றேன்.

குறிப்புரை

சிறிய புணையில் ஆறு கடத்தல். அந்த இடம் எதுவோ என எண்ணல்.

உணர்வு நிலை

பிகொபொசியின் புணை தரிக்குமிடத்தை எண்ணிப் பார்க்கும் புலவர் உள்ளத்து நிலை.

பாடல் : 2092

Ame tuti to	*விண் நிலம் எனப்*
Wakaresi toki yu	*பிரிந்திட்ட போதிலே*
Fisakata no	*பிசகதவின்*
Ama tu sirusi to	*விண்ணது எல்லை எனக்*
Sadametesi	*குறிக்கப்பட்ட*
Ama no kafara ni	*விண்ணது வெளியிலே*
Aratama no	*மணி ஆரத்தின்*
Tuki wo kasanete	*மாதங்களை அடுக்கி*
Imo ni afu	*காதலி சேரும்*
Toki samorafu to	*நேரத்தையும் நோக்கியே*
Tati matu ni	*நின்று காத்திட*
Waga koromo de ni	*எனது ஆடையின் கை*
Aki kaze no	*காரது காற்றும்*
Fuki kaferabeba	*வீசி அலைத்திடவே*
Tatitewiru	*நின்றும் இருந்தும்*
Tadoki wo sira ni	*செய்வகை அறியாதே*
Muragimo no	*தலைவனாகும்*
Kokoro isayofi	*உள்ளம் நலிந்திடவே*
Toki ginu no	*சீரற்ற ஆடையின்*
Omofi midarete	*நினைவு சிதைந்துமே*
Itusika to	*எப்போது தானோ*
Waga matu koyofi	*நான் காத்திடும் இரவு*
Kono kava no	*இந்த ஆற்றது*
Nagare no nagaku	*நகர்வின் நீளமென*
Ari kosenu kamo	*அமைந்திடும்தான்கொல்லோ!*

விளக்கம்

விண்-நிலமெனப் பிரிந்திட்ட பழைய காலத்திலே, பிசகதவினுடைய விண்ணினுடைய எல்லையெனக் குறிக்கப்பட்ட விண் பரப்பு வெளியிலே, மணி ஆரம்போல மாதங்களை அடுக்கிக் காதலியைப் போய்ச் சேரும் நேரத்தையும் எதிர்பார்த்து நான் நின்று காக்கும் போது, எனது ஆடைக் கையை கார்காலத்துக் காற்று வீசி அலைக்கும். நின்றும் இருந்தும் செய்வகை அறியாதே என் உடலுறுப்புகளுக்கெல்லாம் தலைவனான உள்ளமும் நலிந்திடும். சீர் செய்யப்படாத ஆடைபோல நினைவுகளும் சிதையும். எப்போது தான் நான் காத்திடும் இரவு வரும்? அது இந்த ஆற்றின் ஓட்டத்தின் நீளமாய் அமைந்திடுமோ?

குறிப்புரை

இப்பாடலில் 4 தலையணைத் தொடர்கள் வந்துள்ளன.

உணர்வு நிலை

காதலி இணைய நினைவில் நலியும் பிகொபொசியின் உள்ளத்து நிலை.

பாடல் : 2093

Imo ni afu — *மனைவி சேரும்*
Toki kata matu to — *நேரம் நோக்கிக் காத்திட*
Fisakata no — *பிசகதவின்*
Ama no kafara ni — *விண்ணதுவெளியிலே*
Tuki zo venikeru — *நிலாதான் எழுந்தது*

விளக்கம்

மனைவியைச் சேரும் நேரத்தை நோக்கிப் பிசகதவின் விண்ணுடைய வெளியிலே காத்து நின்றேன். இடையிலே எத்தனை முழு நிலவுதான் தோன்றியதோ.

குறிப்புரை

நீண்ட காலம் காத்திருந்தமை. முழு நிலவு மாதங்களின் கழிவைக் காட்டும். இப்பாடலிலே 'Fisakata no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'ama'வுடன் அணையும்.

உணர்வு நிலை

காலக் கடப்பு எண்ணி நலியும் பிகொபொசி.

பாடல் : 2094

Sawasika no — *கலைமானது*
Kokoro afi omofu — *உள்ளம் சேர நினையும்*
Akifagi no — *காரது பகி*
Sigure no furu ni — *பெருமழைப் பொழிவில்*
Tiraku si wosi mo — *சிதறிட நலியும்*

விளக்கம்

கலைமானின் உள்ளம் துணை சேர நினையும்; கார்காலத்துப் பகியின் மலர் பெருமழைப் பொலிவிலே சிதறிடத் துன்பமாகும்.

குறிப்புரை

மான் துணை சேருங்காலம் குறிப்புப் பொருள். பிரிவின் நலிவு தொடர *34* பாடல்கள் மலர்கள் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதலியுடன் இணைய எண்ணி நலியும் காதலன்.

பாடல் : 2095

Yufu sareba	*இரவு வரின்*
Nube no akifagi	*பரப்பின் மலர் பகி*
Ura wakami	*நல் இளமையும்*
Tuyu ni so karuru	*பனியில்தான் வாடும்*
Aki mati gatasi	*கார் காத்தல் கடினமே*

விளக்கம்

இரவு வந்தால் பரப்பிலே மலர்ந்துள்ள பகியின் நல்ல செழுமையும் பனியிலேதான் வாடும். கார் காலம்வரை காத்திருப்பதும் கடினமே.

குறிப்புரை

நல்லிளமை - நல்ல செழுமை. பனிப்பெயலால் இரவில் பகி வாடுதல் குறிப்புப் பொருள். காதலியின் காதல் நலிவு.

உணர்வு நிலை

காதலியின் நலிவு எண்ணி வருந்தும் ஆண் மகன்.

பாடல் : 2096

Ma kuzu fara	*நல் குசு வெளியில்*
Nabiku aki kaze	*வளைத்திடு கார் காற்று*
Fuku goto ni	*வீசிடும் போதில்*
Ada no ofo no no	*அட வெளியினது*
Fagi ga fana tiru	*பகி மலர் சிதறிடும்*

விளக்கம்

நல்ல குசு செடியினை அது வளரும் வெளியில் கார் காற்று வீசி வளையச் செய்யும் நேரத்திலே, அட வெளியிலே மலர்ந்த பகியின் மலரும் சிதறும்.

குறிப்புரை

குசு, ஒருவகைச் செடி; ma என்பது நல்ல அல்லது அழகிய எனும் பொருள் தரும். அட - வெளியின் பெயர். செடி வளைய, மலர் சிதற வீசும் கார்காலக் காற்று.

உணர்வு நிலை

பிரிந்திருக்கும் ஆண் மகன் காலநிலையும் இயற்கைத் தோற்றமுங் கண்டு உள்ளம் நலிதல்.

பாடல் : 2097

Karigane no	*காட்டுத் தாராவே*
Ki nakamu fi made	*வந்து கத்தும் நாள்வரை*
Mitutu aramu	*காண வேண்டுமே*
Kono fagi fara ni	*இந்தப் பகி வயலில்*
Ame na furi sone	*மழையே பொழியாதே*

விளக்கம்

காட்டுத் தாரா வந்து கத்தும் நாள்வரை இந்த வயலில் மலர்ந்த பகியை நான் பார்க்க வேண்டும். எனவே மழையே நீயும் பொழியாதே!

குறிப்புரை

காட்டுத் தாரா வந்து கத்துவது கால மாற்றம் குறிப்பது. அதுவரையும் பகி மலரைப் பார்த்திருக்க விரும்பல். மழை பெய்யின் மலர் சிதறிவிடும்.

உணர்வு நிலை

இயற்கைத் தோற்றத்தில் பிரிவுத் துயர் மறக்க எண்ணும் ஆண் மகன்.

பாடல் : 2098

Oku yama ni	*ஒகு மலையில்*
Sumu tofusika no	*வாழும் எனும் மானது*
Yofi sarazu	*இரவிரவின்*
Tuma dofu fagi no	*துணை சேர் பகியது*
Tira maku wosi mo	*சிதறல் வருந்துமே*

விளக்கம்

ஒரு மலையில் வாழ்வதாகச் சொல்லப்படுகின்ற மானுடைய இரவிரவாக, துணை தேடி வரும் வருகை, பகி மலரின் சிதறல் கண்டு வருந்துமே.

குறிப்புரை

மான் துணை தேடி வரும் இரவு. ஒரு மலையிலிருந்து வரும் மான். குறிப்புப் பொருள் - வினைவயிற் பிரிந்த ஆண் மகனைக் குறிக்கிறதெனலாம்.

உணர்வு நிலை

துணை தேடி மலையிலிருந்து வரும் மான். பகியின் சிதறல். இரு காட்சிகளும் துணையைப் பிரிந்து வாழும் ஆடவன் உள்ளத்தை நலியச் செய்தல்.

பாடல் : 2099

Sira tuyu no	*வெண் பனித்துளி*
Oko maku fosimi	*வீழ்ந்திடவே வருந்தும்*
Aki fagi wo	*கார்து பகி*
Wori nomi worite	*முடியும்வரை பறித்து*
Oki ya karasamu	*வைக்கவே வாடிடுமோ*

விளக்கம்

வெண்மையான பனித்துளி மேலே வந்து விழவே கார்காலத்துப் பகி மலரும் வருந்தும். எனவே அவற்றை முடியும்வரை பறித்து வைத்தேன். அப்போதும் வாடிடுமோ!

குறிப்புரை

கைகளால் பறிக்கக்கூடிய அளவு பறித்து வைத்தல். பனியினால் பகி துன்புறுவதைத் தடுக்கும் நோக்கம்.

உணர்வு நிலை

காதலியின் காலங்கண்டு வருந்தும் நிலையை எண்ணி நலியும் ஆண் மகன்.

பாடல் : 2100

Aki ta karu	கார் வயல் கரை
Kari fo no yado no	தங்கிடச் செய்தேன் குடில்
Nifofu made	நிறம் பெறுவரை
Sakeru aki fagi	அலர்ந்திட்ட கார்பகி
Miredo akanu kamo	பார்த்தே நிறையாதுகொல்!

விளக்கம்

கார்கால வயல் கதிர் முற்றும்வரை தங்கிட நான் குடில் செய்தேன். நிறம் பெறும்வரை முற்றாக அலர்ந்திருக்கும் பகி மலரைப் பலமுறை பார்த்தும் உள்ளம் நிறையாதே.

குறிப்புரை

கார் மலர் அலர்ந்து முழுமையான நிறம் பெறும்வரை பார்த்திருத்தல். காவல் குடிலில் தங்கியிருக்க வேண்டிய நிலை.

உணர்வு நிலை

பகி மலரின் அலர்வு பார்த்து நிறையாத ஆணின் உள்ளம். காதலியைக் காண விரும்பல்.

பாடல் : 2101

Waga koromo	எனது ஆடை
Sureru ni va arazu	நிறம் பெற்றது அன்றே
Takamatu no	தகமதுவின்
Nobe yuki sikaba	சாரல் நடந்து வர
Fagino sureru fo	பகி தரும் நிறம்தான்

விளக்கம்

என்னுடைய ஆடை நிறமூட்டப்பட்டதன்று. தகமது சாரலிலே நான் நடந்துவர பகி மலரும் என் ஆடைக்கு நிறமூட்டியது.

குறிப்புரை

பகி மலர்கள் ஆடையில் உரசியதால் ஆடை நிறம் பெறல். நீண்ட தூரம் நடந்தமை.

உணர்வு நிலை

இயற்கையை நன்கு உற்று நோக்கும் ஆண் மகன் எண்ணம்.

பாடல் : 2102

Kono yufube	*இன்று மாலையே*
Aki kaze fukinu	*கார் காற்று வீசிடுதே*
Sira tuyu ni	*வெண் பனித்துளி*
Arazofu fagi no	*வன்மை தாங்கு பகியும்*
Asu sakamu minu	*நாளை மலரக் காணும்*

விளக்கம்

இன்று மாலை கார்காலக் காற்று வீசுகின்றது. வெண் பனித்துளியின் வன்மையை இதுவரை பொறுத்திருந்த பகி மலரும் நாளை மலர்ந்திடக் காணலாம்.

குறிப்புரை

மொட்டாய் இருக்கும் பகி மலர்தல்; பனியின் குளிரையும் தாங்கிய பகி.

உணர்வு நிலை

காதலியை நாளை காண என்னும் காதலன் உள்ள நிலை.

பாடல் : 2103

Aki kaze va	*காரது காற்றே*
Suzusiku narinu	*தண்மையாகி வந்ததே*
Uma namete	*மா நிரை செய்தே*
Iza no ni yuka na	*வயல் வெளி செல்வோமே*
Fagi no fana mi ni	*பகி மலர் காணவே*

விளக்கம்

கார் காலக் காற்றும் தண்மையாக வீசுகிறது. குதிரைகளை அணி வகுத்து வயல் வெளிக்குச் செல்வோமே. அங்கே அழகாக மலர்ந்துள்ள பகி மலர்களைக் காண்போமே.

குறிப்புரை

குழுவாக மலர் காணச் செல்லும் மரபு. குதிரையில் செல்வதால் வீரர் எனக் கொள்ள இடமுண்டு.

உணர்வு நிலை

இயற்கை அழகைக் காண விரும்பும் ஆடவர் நிலை.

பாடல் : 2104

Asa gofo va	*அசகவொவே*
Asa duyu ofite	*காலைப் பனியிலே*
Saku to ifedo	*மலரும் என்பர்*
Yufu kake ni koso	*மாலை நிழலிலும்தான்*
Saki masari kere	*மலர்ந்திடுதே இன்னும்*

விளக்கம்

அசகவொ மலர் காலைப் பனியிலே மலருமென மாந்தர் கூறுவர். ஆனால் மாலை நிழலிலும்தான் அது இன்னும் நன்கு மலர்ந்திடுதே.

குறிப்புரை

அசகவொ மலர்வு குறிப்புப் பொருள் தரும். உருவக நிலையில் காதலி நிலை. வழமையான எண்ணம் மாறுபடல்.

உணர்வு நிலை

காதலி மலர்வு நிலை கண்ட காதலன் உள்ளத்து உவகை.

பாடல் : 2105

Faru sareba	*வேனில் வந்திட*
Kasumi gakurite	*புகாரில் மறைந்துமே*
Miyezarisi	*காண முடியா*
Aki fagi sakinu	*கார் பகி மலர்ந்தது*
Worite kazasamu	*பறித்துச் சூடுவோமே*

விளக்கம்

வேனிற் காலம் வந்திட புகாரில் மறையும் பகியைக் காண முடியாது. எனவே கார்காலத்தில் மலர்ந்த பகி மலரைப் பறித்துத் தலையில் சூடுவோமே.

குறிப்புரை

பகி கார்காலத்தில் மலரும் மலர். மலர் பறித்துச் சூடும் மாந்தர் நடைமுறை ஆவணம்.

உணர்வு நிலை

இயற்கை நிலையான பொருட்களைக் காலத்துக்கேற்பப் பயன்படுத்த எண்ணும் மாந்தர் நிலை.

பாடல் : 2106

Sanukata no	*சநுகதவின்*
Nube no aki fagi	*வெளியில் கார் பகியும்*
Toki nareba	*காலம் வந்திட*
Ima sakari nari	*இப்போது அலர்ந்தது*
Worite kazasamu	*பறித்துச் சூடுவோமே*

விளக்கம்

சநுகதவின் வெளியிலே கார் காலத்துப் பகி மலரும் ஏற்ற காலம் வந்ததால் மலர்ந்தது. அதைப் பறித்துச் சூடுவோமே.

குறிப்புரை

மலர் பறித்துச் சூடும் மாந்தர் நடைமுறை ஆவணம்.

உணர்வு நிலை

இயற்கை நிலையில் மலர்களைக் காலத்திற்கு அமையப் பயன்படுத்தும் மாந்தர் நிலை.

பாடல் : 2107

Kotosara ni	*சிறப்பாகவும்*
Koromo va surazi	*ஆடையே நிறமாகா*
Wominabesi	*வொமிநபெசி*
Saku no no fagi ni	*அலர் வெளியின் பகி*
Nifofite woramu	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

நான் என் ஆடைக்குச் சிறப்பாக நிறமூட்டுவதில்லை. வொமிநபெசி அலர்ந்துள்ள வெளியின் பகி மலர்களிடையே நடந்து சென்றதால் ஆடையும் நிறம் பெற்றது.

குறிப்புரை

இப்பாடலில் 'wominabesi' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'saku' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

இயற்கையை நன்கு உற்று நோக்கும் ஆண் மகன் உள்ள நிலை.

பாடல் : 2108

Aki kaze va	*காரது காற்றே*
Toku toku fuki ko	*கடிதாய் வீசிடுவாய்*
Fagi no fana	*பகியின் மலர்*
Sira maku wosimi	*சிதறல் வருந்திடும்*
Kifofi tatu mimu	*தாங்கி நிற்பது காணும்*

விளக்கம்

கார் காலக் காற்றே, விரைவாய் வீசிடுவாய். பகியின் மலர் சிதறல் காண்பது வருத்தமே. அது காற்றின் கொடுமையைத் தாங்கி நிற்பதை நான் காணும்.

குறிப்புரை

பிரிவுத் துயரைத் தாங்கி நிற்றல். பகி மலர் காற்றின் கொடுமையை முடியுமானவரை தாங்கி நிற்றல் மூலம் புலப்படுத்தல்.

உணர்வு நிலை

பிரிவின் கொடுமையை முடியும்வரை தாங்கி நிற்க எண்ணும் பெண் உள்ளம்.

பாடல் : 2109

Waga yado no	*எனது முன்றில்*
Fagi no ure nagasi	*பகி கிளை நெடிது*
Aki kaze no	*காரது காற்று*
Fuki namu toki ni	*வீசி வரும்பொழுது*
Sakamu to omofite	*அலர்ந்திட நினையும்*

விளக்கம்

எனது வீட்டு வாயிலில் உள்ள பகியின் கிளை நெடியது. கார் காலக் காற்று வீசி வரும்போது அது அலர்ந்திட நினைந்திருக்கும்.

குறிப்புரை

மலர் மலர காலம் வரும்வரை காத்திருத்தல்; கார் காலக் காற்று குறிப்புப் பொருள்.

உணர்வு நிலை

வீட்டிலிருக்கும் அன்புக்குரியாளின் நிலையை எண்ணிப் பார்க்கும் ஆண் மகன்.

பாடல் : 2110

Fito mina va	*மாந்தர் யாவரும்*
Fagi wo aki to ifu	*பகி கார் எனக் கூறும்*
Yosi ware va	*நன்று, நானுமே*
Wofana ga ure wo	*வொபன கிளை மலர்*
Aki to va ifamu	*கார் எனக் கூறிடுமே*

விளக்கம்

மாந்தர் யாவரும், பகியே கார்காலத்து மலர் எனக் கூறுவர். நன்று. ஆனால் நான் வொபனவின் உயர்ந்த கிளையிலுள்ள மலரே கார் காலத்தின் அழகிய மலரெனக் கூறுவேன்.

குறிப்புரை

கார் காலத்து அழகிய மலர் பகி என்பர். இது பொதுவான கருத்து. என் கருத்து வேறு என்னும் பொருள்.

உணர்வு நிலை

தன் கருத்து பிறர் கருத்தோடு வேறுபடுவதைக் கூறும் ஆண் மகன்.

பாடல் : 2111

Tamadusa no	*மணிக் கோலது*
Kimi ga tukavi no	*உனது தூதுவனும்*
Tawori keru	*கையால் முறித்த*
Kono aki fagi va	*இக் காரது பகியே*
Miredo akanu kamo	*பார்த்தும் நிறையாதுகொல்!*

விளக்கம்

மணிக்கோலுடைய உனது தூதுவனும் கையாலே முறித்துக் கொணர்ந்த இந்தக் கார் காலத்துப் பகி மலரைக் கண்ணால் நெடு நேரம் பார்த்தும் என் உள்ளம் நிறையாதுகொல்.

குறிப்புரை

கையில் மணிகள் பதித்த கோலுடன் வரும் தூதுவன் தூது மொழி கூறுகையில், அக்காலத்துக்குரிய மலர்க் கிளையையும் ஒடித்து வரும் நடைமுறை.

உணர்வு நிலை

காதலன் தூது கண்ட காதலியின் உள்ளத்து நிலை.

பாடல் : 2112

Waga yado ni	*எனது முன்றில்*
Sakeru akifagi	*மலர்ந்திடு கார்பகி*
Tune ni araba	*மாறாதிருப்பின்*
Waga matu fito ni	*என்னைக் காக்கும் மாந்தனின்*
Mise masi mono wo	*காட்டிடும் பொருளேயாம்*

விளக்கம்

என்னுடைய வீட்டு வாயிலிலே மலர்ந்திருக்கின்ற பகி மலர் நிலை மாறாதிருப்பின் (சிதறாமலிருப்பின்), என்னைக் காத்திருக்கும் மாந்தனுக்குக் காட்டுகின்ற பொருளாகிவிடும்.

குறிப்புரை

மலர் அழகு காணக் காதலன் வரவை எதிர்பார்த்தல்.

உணர்வு நிலை

உள்ளத்து விருப்பை வெளிப்படுத்தும் பெண்.

பாடல் : 2113

Taki sonafe	*கட்டிக் காத்திட்டே*
Uwesi mo siruku	*வளர்த்த நிலையிலே*
Ide mire ba	*வெளி வந்துகாண*
Yado no wasafagi	*வாயிலின் இளம்பகி*
Saki ni keru kamo	*மலர்ந்திருக்குமேகொல்!*

விளக்கம்

நான் கைகளாலே கட்டிக் காத்து வளர்த்த நல்நிலையிலே, வீட்டை விட்டு வெளியே வந்து காண்கின்ற வாசலிலே வளர்ந்துள்ள இளம் பகியும் மொட்டவிழ்ந்து மலர்ந்திருந்ததுவே.

குறிப்புரை

பகியின் செடியை நன்கு பராமரித்து வளர்த்ததன் பயன், செடியைக் கட்டி வளர்த்தல்.

உணர்வு நிலை

பகியின் மலர்வு கண்டு மகிழும் பெண் உள்ளம்.

பாடல் : 2114

Waga yado ni	*எனது முன்றில்*
Uwe ofositaru	*வளர்ந்திருக்கின்ற*
Aki fagi wo	*காரது பகி*
Tare ka simesasu	*யார்கொல் காவல் செய்தாரே*
Ware ni sirayesu	*நானும் அறிவேன் அன்றே*

விளக்கம்

எனது வீட்டு வாயிலிலே நன்கு வளர்ந்திருக்கின்ற கார் காலப் பகியினை, யார்தான் அடையாளமிட்டுக் காவல் செய்தாரே. அதை நானும் அறியேனே.

குறிப்புரை

பகி மரத்தைச் சுற்றித் தோரணம் கட்டிக் காவல் செய்தல். குறிப்புப் பொருள் தருவது. தாய் அறியாமல் மகளைத் தன்னுரிமையாக்கியவன். தாய் நிலை ஆவணம்.

உணர்வு நிலை

மகள் அன்புக்குரியவனுடன் இணைந்ததை அறியாத தாயின் அவலம்.

பாடல் : 2115

Te ni tore ba	*கையால் பறிக்க*
Sode safe nifofu	*கையாடை நிறம்பெறும்*
Wominabesi	*வொமி நபெசி*
Kono sira tuyu ni	*இந்த வெண் பனியிலே*
Tiramaku wosi mo	*சிதறல் நலிவு தரும்*

விளக்கம்

என் கையால் பறிக்கும்போது கையாடையை நிறம் பெறச் செய்யும் வொமிநபெசி, இந்த வெண்பனியிலே சிதறுவது வருத்தம் தரும்.

குறிப்புரை

வொமிநபெசி பூக்கள் கையாடையிலே படுவதால் கையாடையின் நிறம் வேறுபடுதல்.

உணர்வு நிலை

இயற்கை நிலையில் மலரின் நிலை கண்டு வருந்தும் உள்ளம்.

பாடல் : 2116

Sira tuyu ni	*வெண் பனியது*
Arasofi kanete	*வன்பெயல் தாங்கிடாது*
Sakeru fagi	*மலர்ந்த பகி*
Tiraba wosikemu	*சிதறிடின் வருந்தும்*
Ame na furi sone	*மழையே பொழியாதே*

விளக்கம்

கடுமையாகப் பெய்கின்ற வெண்பனியினது பெயலைத் தாங்கிட முடியாமல் பகி மலர்ந்தது. அது சிதறக் காணின் வருந்தும். எனவே மழையே நீயும் பொழியாதே.

குறிப்புரை

பனியின் கொடுமை தாங்கி மலரும் மலர்கள் மழையால் சிதறும். மழை பெய்வது மலரின் அழகைக் கெடுத்துவிடும்.

உணர்வு நிலை

பிரிவில் நலியும் பெண்ணின் துன்பம் எண்ணி இரங்கும் ஆண் உள்ளம்.

பாடல் : 2117

Wotomera ni	*காதல் மகளை*
Yuki afi no wase wo	*வந்து காணும் பயிரைக்*
Karu toki ni	*களையுங் காலம்*

Navi ni kerasi mo *ஆகியே வந்திடுமே*
Fagi no fana saku *பகி மலர் மலரும்*

விளக்கம்

காதல் மகளை வந்து நேரிலே காணும். நெற்பயிரையும் களையும் காலமாகிடும். அந்நேரம் பகியும் மலரும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'wotomerani' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yuki afi' என்னும் தொடருடன் அணையும். கோடையின் முடிவு. காரின் தொடக்கம்.

உணர்வு நிலை

காலங் கணித்துப் பிரிவின் நலிவைப் பொறுத்திருக்கும் ஆண்.

பாடல் : 2118

Asa giri no *காலைப் புகாரும்*
Tanabiku wo no no *தவழ் சிறு வயலில்*
Fagi no fana *பகி மலரே*
Ima ka tiriramu *இப்போது கொல் உதிரும்*
Imada akanaku ni *இன்னும் நிறையக் காணா*

விளக்கம்

காலைப் புகார் தவழ்கின்ற சிறுவயலில் மலர்ந்த பகி மலர், இப்போது உதிர்ந்து விடுமோ! நான் இன்னும் அதனை உள்ளம் நிறையப் பார்க்கவில்லையே.

குறிப்புரை

பகி விரைவிலே உதிர்ந்திடுமோ என்ற எண்ணம் குறிப்புப் பொருள் தருவது. காதலி பிரிவில் நலிந்திடும்.

உணர்வு நிலை

காதலியின் பிரிவின் நலிவை எண்ணியிருக்கும் காதலன்.

பாடல் : 2119

Kofisiku va	*காதல் நலிவில்*
Katami ni seyoto	*இதனைப் பார்த்திரு என*
Waga seko ga	*என் காதலரும்*
Uwesi akifagi	*நாட்டிய கார் பகி*
Fana sekinu keri	*அலர்ந்திட்டிருந்தது*

விளக்கம்

உனது காதல் நலிவு நேரம் 'இதனைப் பார்த்திரு' என்று கூறி எனது அன்புக்குரியவர் நாட்டிய பகி மரம். கார் காலம் வந்ததால் மலர்ந்திருக்கின்றதே.

குறிப்புரை

பிரிந்து செல்லும்போது நாட்டுதல். காலம் கணிக்க வேண்டிப் பயன்படும். துணையாக நிற்கும் மரம்.

உணர்வு நிலை

காதலன் நாட்டிய மரம் பூத்தது கண்டு நலியும் காதலி.

பாடல் : 2120

Aki fagi ni	*காரது பகி*
Kofi tuku sazi to	*காதல் நலிவு தரும்*
Omofe domo	*நினைந்திடினும்*
Siwe ya atarasi	*சிதறின் துயரமே*
Mata mo afame yamo	*மறுமுறை காணாதே*

விளக்கம்

கார் காலத்துப் பகியைக் காணின், காதல் நலிவே தரும் என நான் நினைத்தாலும், அது சிதறிவிட்டால் துன்பமே. மறுமுறை அதைப் பார்க்கவே முடியாது.

குறிப்புரை

நலிவு தருமென்பதால் காணாதிருக்க எண்ணல். ஆனால் சிதறினால் மறுமுறை காண்பதற்கில்லை.

உணர்வு நிலை

குறித்த காலத்திலே காதலியைப் போய்க் காண எண்ணும் காதலன்.

பாடல் : 2121

Aki kaze va	*காரது காற்றே*
Fi ni ke ni fukinu	*ஒவ்வொரு நாளும் வீசும்*
Takamatu no	*தகமதுவின்*
No be no akifagi	*வயல்வெளி கார் பகியும்*
Tira maku wosimo	*சிதறல் வருந்திடும்*

விளக்கம்

கார் காலக் காற்று ஒவ்வொரு நாளும் வீசுகின்றது. தகமதுவின் வயல் வெளியிலே மலர்ந்துள்ள கார் காலப் பகி மலரின் சிதறல் கண்டு வருந்திடுவேன்.

குறிப்புரை

ஒவ்வொரு நாளும் மலரின் சிதறல் காணல். அதனால் மிகுந்த துன்பம்.

உணர்வு நிலை

நாளும் காதலியின் நலிவு எண்ணி இரங்கும் ஆண்.

பாடல் : 2122

Masurawo no	*வீரனைப்போல*
Kokoro va nasi ni	*உள்ளமே இல்லையெனில்*
Aki fagi no	*காரது பகி*
Kofi nomi ni ya mo	*காதலில் நலிந்துமே*
Nadu mite arinamu	*வருந்தி இருந்திடும்*

விளக்கம்

போர் வீரனைப்போல வன்மை உள்ளம் இல்லை. அதனால் கார்காலத்துப் பகியினை விரும்பிக் காதலில் நலிந்து வருந்தி இருக்குமே.

குறிப்புரை

வீரனைப்போன்ற உறுதியான உள்ளம் இல்லை. அதனால்தான் காதல் நலிவால் வருந்தல்.

உணர்வு நிலை

உறுதியற்ற தள்ள உள்ளத்து நிலை எண்ணிப் பார்க்கும் ஆண்.

பாடல் : 2123

Waga mati si	*நான் காத்திருந்த*
Aki va kitari nu	*கார் காலமே வந்தது*
Sikare domo	*அப்படியெனும்*
Fagi no fana zo mo	*பகியின் மலர் தானும்*
Imada sakazu keru	*இன்னும் அலர்ந்திடாதே*

விளக்கம்

நான் காத்திருந்த கார் காலம் வந்துவிட்டது. அப்படியெனினும் பகியின் மலர் தானும் இன்னமும் மலரவில்லையே.

குறிப்புரை

காலம் வந்தபின்பும் மலர் மலராதது, குறிப்புப் பொருள்; பெண்ணின் விருப்பம் வெளிப்படாத நிலை.

உணர்வு நிலை

நான் விரும்பும் பெண்ணின் விருப்பம் வெளிப்படாத நிலையில் ஆவலுடன் காத்திருக்கும் ஆண்.

பாடல் : 2124

Mimaku wori	*காண விரும்பி*
Waga mati kofisi	*நான் காத்துக் காதலித்த*
Aki fagi va	*காரது பகி*
Yedo mo simimi ni	*கிளையில் நெருங்கியே*
Fana saki ni keri	*அலர் மலர்ந்ததுவே*

விளக்கம்

எப்போதும் நான் பார்க்க விரும்பி, காத்திருந்து காதல் செய்யும் கார்காலப் பகியும் கிளையிலே மொட்டுகள் நெருங்கி அலர்ந்ததே.

குறிப்புரை

கார் காலப் பகி உருவகம் - காதல் செய்யும் பெண்.

உணர்வு நிலை

நெடுநாள் விரும்பிய பெண்ணை நேரில் கண்ட ஆண் உள்ளம்.

பாடல் : 2125

Kasuga no no	*கசுக வெளி*
Fagi si tirinaba	*பகி அலர் சிதறிட*
Asa goti no	*காலை கிழக்குக்*
Kaze ni tagufite	*காற்றுடன் சேர்ந்திட்டே*
Koko ni tiri kone	*இங்கும் சிதறியே வா*

விளக்கம்

கசுக வயல்வெளியிலே பகி மலர் சிதறிவிட்டது. காலையிலே வீசும் கிழக்குக் காற்றுடன் சேர்ந்தே பகி மலரே இவ்விடத்திற்கும் சிதறியே நீ வா.

குறிப்புரை

நரவில் வசிப்பவர் பாடல் என்பர். காலைக் கிழக்குக் காற்றின் திக்கினது விளக்கம் இதனை உணர்த்துமென்பர்.

உணர்வு நிலை

காற்று வீசும் திக்குடன் காதலியும் வர வேண்டுமென விரும்பும் ஆண்.

பாடல் : 2126

Aki fagi va	*'காரது பகி*
Kari ni afazi to	*காட்டுத் தாரா காணாது'*
Ifareba ka	*என்பதால் சொல்லோ*
Kowe wo kikite va	*குரலைக் கேட்டிடவே*
Fana ni tiri nuru	*மலர் வாடி உதிரும்*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலரைக் காட்டுத் தாரா காணாது என்று சொல்வதாலோ, காட்டுத் தாராவின் குரலைக் கேட்டிடவே பகி மலரும் வாடி உதிரும்.

குறிப்புரை

மலர்-புள் தொடர்பான கருத்து. பகி மலரைக் காட்டுத் தாரா நேரிற் காணாது. இது காலக் கணிப்பை உணர்த்தும் நிலை.

உணர்வு நிலை

இயற்கை நடைமுறை எண்ணிப் பார்க்கும் உள்ளம்.

பாடல் : 2127

Aki saraba	*கார் வந்திடினே*
Imo ni misemu to	*காதலிக்குக் காட்டிட*
Uwe si fagi	*நாட்டிய பகி*
Tuyu zimo ofite	*உறைபனி மூடியே*
Tiri ni keru kamo	*சிதறியதுகொல்லோ!*

விளக்கம்

கார் காலம் வந்திட காதலிக்குக் காட்டுவோம் என எண்ணி, நான் நாட்டிய பகியும் உறைபனி மூடியே சிதறியதே.

குறிப்புரை

பகியை நாட்டி வளர்க்கும் நடைமுறை காலத்தைக் கணிக்கப் பயன்படல்.

உணர்வு நிலை

நாட்டிய பகியின் சிதறல் கண்டு வருந்தும் ஆண் உள்ளம்.

பாடல் : 2128

Aki kaze ni	*காரது காற்று*
Yamato fe koyuru	*யமதொவைக் கடக்கும்*
Kari gane va	*காட்டுத் தாராவே*
Iya tofozakaru	*மேல் உயரப் பறந்து*
Kumo gakuri tutu	*முகிலில் மறைந்திடுமே*

விளக்கம்

கார் காலக் காற்றிலே யமதொவெளியைப் பறந்து கடக்கும் காட்டுத் தாரா, மேலும் உயரப் பறந்து முகிலில் மறைந்திடுமே.

குறிப்புரை

உயரப் பறக்கும் காட்டுத் தாரா. மலை கடந்து செல்லும் காதலன் தொடர 13 பாடல்கள் காட்டுத் தாரா தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற காதலன் தோற்றம் கண்ணிலிருந்து மறைந்ததை நினைந்து இரங்கல்.

பாடல் : 2129

Ake gure no	*காலை மலர*
Asa giri gomori	*காலைப் புகார் மறைந்து*
Nakite yuku	*நரன் று செல்லும்*
Kari va waga kofu to	*தாராவே என் காதலை*
Imo ni tuge koso	*காதலிக்குத் தூ து சொல்*

விளக்கம்

காலை மலர்கின்ற நேரம், காலைப் புகாரிலே மறைந்து குரல் கொடுத்துச் செல்லும் தாராவே, என் காதலியிடம் என் காதல் நிலையையும் தூதாய்ப் போய்ச் சொல்.

குறிப்புரை

பறவையிடம் தூது சொல்லும் நடைமுறை ஆண் தூதனுப்பல்.

உணர்வு நிலை

தன் காதல் நிலையைக் காதலிக்கு உணர்த்த விரும்பும் காதலன்.

பாடல் : 2130

Waga yado ni	*எனது முன்றில்*
Nakisi karigane	*கத்திடு காட்டுத் தாரா*
Kumo no uwe ni	*முகிலின் மேலே*
Koyofi naku nari	*கடந்தும் கத்து ஒலி*
Kuni fe ka mo yuku	*தன்நாடுகொல்லோ செல்லும்*

விளக்கம்

எனது வீட்டு வாயிலிலே கத்திய காட்டுத் தாரா, முகிலின் மேலே கடந்து சென்று கத்தும் ஒலி கேட்கிறது. அது தன்னுடைய நாட்டிற்குச் செல்கிறதோ!

குறிப்புரை

காட்டுத் தாராவின் குரல் முகில் கடந்து செல்வது, தொலைவு குறிக்கும். காதலன் சென்ற தூரம்.

உணர்வு நிலை

இரவில் பறவை குரல் கேட்டுப் பிரிந்தவன் நினைவு வரல்.

பாடல் : 2131

Sawasika no	*கலைமானது*
Tumadofu toki ni	*துணை தேடு நேரம்*
Tuki wo yomi	*நிலவும் நன்று*
Karigane kikoyu	*தாராவின் குரல் கேட்கும்*
Imasi kurasi mo	*இப்போது வந்திடுமே*

விளக்கம்

கலைமான் தன் துணை தேடுகின்ற இரவு நேரம். நிலவும் நன்கு ஒளிரும் காட்டுத் தாராவின் குரலும் கேட்கும். இப்போது காதலனும் வந்திடுமே.

குறிப்புரை

நேரங் காட்டும் தன்மைகள். கருப்பொருள் மூலமும் முதற் பொருள் மூலமும் காதலன் வரவு தெளிதல்.

உணர்வு நிலை

காதலன் வீடு வருநேரம் அண்மித்ததை உணரும் பெண் உள்ளம்.

பாடல் : 2132

Ama gumo no	*விண் முகிலது*
Yoso ni karigane	*மேலே காட்டுத் தாராவின்*
Kikisi yori	*குரல் கேட்குங்கால்*
Fadare simo furi	*பரவுபனி பெய்யும்*
Samusi kono yo va	*குளிரும் இவ்விரவே*

விளக்கம்

விண் முகிலுக்கு மேலே காட்டுத் தாராவின் குரல் கேட்கும்போது பரவிய பனி இன்று பெய்யும். எனவே இன்றிரவு மிகவும் குளிரும்.

குறிப்புரை

இவ்விரவு குளிர்வதால் காதல் நலிவுங் கூடும்.

உணர்வு நிலை

இயற்கை நிலை கண்டு தனிமையில் காதலில் நலியும் ஆண்.

பாடல் : 2133

Aki no ta no	*காரது வயல்*
Waga kari fa ka mo	*என் கதிர் அறுப்புமே*
Sugi nureba	*முடிந்திடவே*
Karigane kikoyu	*காட்டுத் தாரா குரல் கேட்கும்*
Fuyu katamakete	*பனிக்காலம் விரைவில்*

விளக்கம்

கார் காலத்து வயலில் எனது கதிர் அறுக்கின்ற தொழில் முடிந்திடவே காட்டுத் தாராவின் குரலும் கேட்கும். பனிக் காலம் மிக விரைவிலே வரும்.

குறிப்புரை

காட்டுத் தாராவின் குரல் மூலம் பனிக் காலத்தைக் கணித்தல்.

உணர்வு நிலை

வினைவயிற் பிரிந்து வந்த காதலன், பணி முடித்து வீடு திரும்ப எண்ணல்.

பாடல் : 2134

Asibe naru	*நாணல் வளரும்*
Wogi no fa sayagi	*பொகி தளிர் அசைய*
Aki kaze no	*காரது காற்று*
Fuki kuru nafe ni	*வீசி வரும்போதில்*
Kari naki wataru	*தாரா நரன்று கடக்கும்*

விளக்கம்

நாணல் வளரும் இடத்துப் பொகி தளிரும் அசைய, கார் காலக் காற்று வீசி வரும்போதிலே காட்டுத் தாராவும் ஒலித்துக் கடக்கும்.

குறிப்புரை

கடற்கரைப் பகுதியில் இருக்கும் நாணல். பொகி, செடியின் பெயர்; asibe நாணல் வகை; நெடிது வளரும் ஒருவகைப் புல்.

உணர்வு நிலை

காட்டுத் தாராவின் குரல் கேட்டு நலியும் நிலை. இயற்கைச் செடிகளையும் கண்டு நிற்கும் பெண்.

பாடல் : 2135

Osi teru	*ஒளி வீசிடும்*
Naniva foriye no	*நநிவ ஓடையினது*
Asibe ni va	*நாணலின் மேலே*
Kari netaru ramu	*தாராவும் உறங்கிடும்*
Simo no furaki ni	*உறைபனி பெய்திட*

விளக்கம்

ஒளி வீசுகின்ற நநிவ ஓடைக் கரை வளர் நாணலின்மேலே காட்டுத் தாராவும் உறைபனி பெய்திட உறங்கிடுமே.

குறிப்புரை

கழிமுகத்தில் வளரும் நாணல். இப்பாடலிலே 'ositeru' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Naniva' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

செலவிற் சென்ற காதலன் உறக்க நிலை எண்ணி நலியும் காதலி.

பாடல் : 2136

Aki kaze ni	*கார்து காற்றில்*
Yama tobi koyuru	*மலை கடந்து செல்லும்*
Karigane no	*காட்டுத் தாராவின்*
Kowe tofozakaru	*குரல் தொலைவில் கேட்கும்*
Kumo gakuru rasi	*முகிலில் மறைந்ததோ!*

விளக்கம்

கார் காலத்துக் காற்றிலே மலையைக் கடந்து பறந்து செல்லும் காட்டுத் தாராவின் குரல், மிகத் தொலைவிலே கேட்கும். (அது ஒருவேளை) முகிலில் மறைந்ததோ!

குறிப்புரை

குரல் தொலைவிலே கேட்டல். பறவையின் பிரிவின் தூரம் உணர்த்தல். குறிப்புப் பொருள். காதலன் பிரிவும் தொலைவே.

உணர்வு நிலை

காதலன் மிகத்தொலைவு பிரிந்து சென்றதை எண்ணி நலியும் பெண்.

பாடல் : 2137

Tuto ni yuku	*காலையில் செல்லும்*
Kari no naku ne va	*தாரா கத்தும் ஒலியே*
Waga gotoku	*என்னைப் போலவே*
Mono omofe kamo	*பொருளை நினையுங்கொல்*
Kowe no kanasiki	*குரலிலும் துன்பமே*

விளக்கம்

விடியற்காலையில் பறந்து செல்லும் காட்டுத் தாராவின் குரலிலும் துன்பமே! அதுவும் என்னைப்போலவே துன்பமான பொருளை நினைத்துச் செல்கிறதோ!

குறிப்புரை

விடியற்காலை பறவையின் குரலில் துன்பம், தன் துன்ப நிலையைப் பறவையில் ஏற்றிக் கூறல்.

உணர்வு நிலை

விடியற்காலை காதலில் நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2138

Tatu gane no	*நாரையினது*
Kesa naku nabe ni	*காலை நரலும் சேர்ந்தே*
Kari gane va	*காட்டுத் தாராவே*
Iduku sasite ka	*எங்கு நோக்கியே தாண்டுகொல்*
kumo gakure ramu	*முகில் மறைத்ததுவே*

விளக்கம்

நாரையின் காலைக் குரலுடன் சேர்ந்தே காட்டுத் தாராவும் எவ்விடத்தை நோக்கித்தான் செல்கின்றனவோ! முகிலும் மறைத்ததே.

குறிப்புரை

இரு பறவைகளின் குரலிலும் செலவினும் நோக்கம் அறியும் ஆவல்.

உணர்வு நிலை

காதலன் வரவைக் காத்திருக்கும் பெண், இயற்கை நிலையில் ஆழ்தல்.

பாடல் : 2139

Nubatama no	*நுபதமவின்*
Yo wataru kari va	*இரா கடக்கும் தாரா*
Ofofosiku	*விளங்காமலே*
Iku yo wo fete ka	*எத்தனை இராவரைகொல்*
Onoga na wo noru	*தன் பெயரையே சொல்லும்*

விளக்கம்

நுபதமபோன்ற கரிய இரவைக் கடக்குந் தாரா, விளக்கமில்லாமலே எத்தனை இரவுகள்வரைதான் தன்னுடைய பெயரையே சொல்லும்.

குறிப்புரை

தாரா kari kari எனக் கத்தல். அதனால் விளங்காமலே தனது பெயரைக் கூறல். இப்பாடலிலே 'Nubatama no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yo' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

தன் நலிவையே எண்ணும் காதலியின் உள்ளத்தில் பறவையொலிப்பின் பொருளை ஆயும் ஆவல் ஏற்படல்.

பாடல் : 2140

Aratama no	*மணி ஆரத்தின்*
Tosi no fe yukeba	*ஆண்டுமே கடந்திடும்*

Adomofu to	*ஆயத்துடன் சேர*
Yo wataru ware wo	*இரா கடக்கும் என்னை*
Tofu fito ya tare	*கூவும் மாந்தன் யாரோ?*

விளக்கம்

மணி ஆரத்தைப்போன்ற ஆண்டு கடந்திடும். தோழமையுடன் சேர இரவைக் கடக்கும் என்னைக் கூப்பிடும் மாந்தன் யாரோ? (நாரையை நோக்கிக் கூறல்)

குறிப்புரை

பல ஆண்டுகளின் பின் துணையைச் சேரும் நிலை. கூட்டாகத் தனது இருப்பிடம் திரும்பல். இப்பாடலிலே 'aratama no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Tosi' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

பல ஆண்டுகளின் பின்னர் இருப்பிடம் நோக்கி இரவில் நடந்து வரும் ஆணின் நிலை.

பாடல் : 2141

Konogoro no	*இப்போதினது*
Aki no asake ni	*காரது காலையிலே*
Kiri gakuri	*புகார் மறைந்து*
Tuma yobu sika no	*துணை அழைக்கும் மானின்*
Kowe no sayakesa	*குரல் தெளிவானதே*

விளக்கம்

இப்போதைய கார் காலத்து விடியற்காலைப் புகாரிலே மறைந்து, துணை அழைக்கும் மானுடைய குரலும் தெளிவானதே.

குறிப்புரை

மான் துணை அழைக்கும் குரல், காலம் உணர்த்துவது தொடரப் *16* பாடல்கள் மான் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

இயற்கைக் கருப்பொருள்களது நிலை கண்டு பிரிவில் நலிதல்.

பாடல் : 2142

Sawo sika no	*கலை மானது*
Tuma totonofu to	*துணையை அழைத்திடும்*
Naku kowe no	*அழுகுரலே*
Itaramu kifami	*கேட்டிடும் எல்லை வரை*
Nabike fagi fara	*தாழ்ந்திடும் பகி வயல்*

விளக்கம்

கலைமான் தன் துணையை அழைக்கின்ற அழுகுரலே, தாழ்ந்திருக்கின்ற பகி வயலின் எல்லைவரை கேட்டிடும்.

குறிப்புரை

மானின் அழுகுரல் - காதலில் நலியும் குரல்.

உணர்வு நிலை

கலைமானின் குரல் கேட்டுக் காதலிலே நலியும் பெண் அல்லது ஆண்.

பாடல் : 2143

Kimi ni kofi	*உன்னில் நலியும்*
Urafure woreba	*உள்ளத்தின் துயர் போல*
Siki no no no	*சிகி வயலில்*
Aki fagi sinogi	*கார்து பகி சரிவு*
Sawasika naku mo	*கலைமானும் அழுமே*

விளக்கம்

உன் காதல் நினைவிலே நலிகின்ற என் உள்ளத்தின் துயர்போல, சிகி வயலிலே கார்காலத்துப் பகியின் தாழ்ந்த நிலையிலே கலைமானும் துணையைத் தேடி அழுமே.

குறிப்புரை

காதல் நலிவிலே உள்ளத்தின் உரமிழந்த நிலை. தன் துயருடன் ஒப்பு நோக்கிப் பார்த்தல்.

உணர்வு நிலை

துணை தேடி அழும் கலைமானின் குரல் கேட்டு நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2144

kari kure ba	*தாரா வந்தது*
Fagi va tirinu to	*பகியே உதிர்ந்திடும்*
sawo sika no	*கலைமானது*
Naku naru kowe mo	*துணை அழை குரலும்*
urabure ni keri	*துயரமாகியதே*

விளக்கம்

காட்டுத் தாரா வந்தது. பகி மலரும் உதிர்ந்திடும். கலைமானுடைய துணையை அழைக்கின்ற குரலும் துயரமானது.

குறிப்புரை

கலைமானின் குரலின் துயரம், காதல் நலிவின் துயரை அதிகமாக்கல்.

உணர்வு நிலை

காதலில் நலியும் பெண் உள்ளம், கலைமானின் குரல் கேட்டு வருந்தல்.

பாடல் : 2145

Aki fagi no	*காரது பகி*
Kofi mo tukineba	*காதல் நலிவு போகா*
Sawo sika no	*கலைமானது*
Kowe itugi itugi	*குரல் தொடர்ந்திடவே*
Kofi koso masare	*என் காதல் நலிவாகும்*

விளக்கம்

கார் காலத்துப் பகியிலே என் காதல் கழிந்து போகாது, கலைமானது துணை அழைக்கும் குரல் தொடர, எனக்கும் காதல் நலிவே.

குறிப்புரை

கார் காலத்துப் பகியைக் காணும் விருப்பே பகியின் காதல். மான் குரல் காதல் நலிவைப் பெருக்கல்.

உணர்வு நிலை

ஆண் மான் பெண் மானைத் தேடி அழுகிறது. ஆனால் என் காதலனோ இன்னும் வரவில்லையென எண்ணி நலியும் பெண்.

பாடல் : 2146

Yama tikaku	*மலை அணிமை*
Ife ya worubeki	*வீட்டிலே உறையுமே*
Sawa sika no	*கலைமானது*
Kowe wo kikitutu	*குரலைக் கேட்டிடவே*
Ine gatenu kamo	*உறக்கமே வருங்கொல்!*

விளக்கம்

மலைக்கு அருகிலே உள்ள வீட்டிலே உறைவதனால் கலை மானுடைய துணை தேடுங் குரலும் கேட்டிடும். உறங்கத்தான் முடியுமோ!

குறிப்புரை

உறக்கம் கெடுக்கும் மானின் குரல். மலையருகில் குடியிருத்தல் காதல் நலியைக் கூட்டல். இப்பாடலைப் புலவர் கூற்றாகப் பியர்சன் கொள்வார்.

உணர்வு நிலை

காதல் நலிவைக் கூட்டும் தன்னிருப்பிடச் சூழலை எண்ணிப் பார்க்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2147

Yama no fe ni	*மலைச் சாரலிலே*
Iyuku satu wo va	*கானவரும் பலரே*
Ofokaredo	*ஒலியெழுப்பும்*
Yama ni mo no ni mo	*மலையிலும் வயலிலும்*
Sawosika naku mo	*கலைமானும் அழுமே.*

விளக்கம்

மலைச் சாரலிலே விலங்குகளை வேட்டையாடும் கானவர் பலர் ஒலியெழுப்புகின்றனர். இதை அறியாத கலைமான் மலையிலும் வயலிலும் துணை தேடி அழுமே.

குறிப்புரை

கானவர் குரல் மானின் காதில் விழவில்லை.

உணர்வு நிலை

மானது காதல் நலிவு கண்டு இரங்கும் ஆண் உள்ளம்.

பாடல் : 2148

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama yori kiseba	*மலைப் பக்கம் வந்திட*
Sawo sika no	*கலைமானது*
Tuma yobu kowe wo	*துணை அழை குரலைக்*
Kikamasi mono wo	*கேட்கும் பொருள் நீயுமோ!*

விளக்கம்

அடி இழுக்கும் மலைப்பக்கம் வந்திடவே, கலைமானது துணை அழைக்கும் குரலைக் கேட்கும் பொருளாகிடுவாய் நீயே.

குறிப்புரை

இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலன் மலைப்பக்கம் வருவதை எண்ணிக் காத்திருக்கும் பெண்.

பாடல் : 2149

Yamabe ni va	*மலைச் சாரலில்*
Satu-wo no nerafi	*கானவர் விழித்திட்டுக்*
Kasi kokedo	*காத்திடினுமே*
Wosika naku nari	*கலைமான் அழுகுரல்*
Tuma ga me wo fori	*துணை விழி நாடியே*

விளக்கம்

மலைச் சாரலிலே கானவர்கள் விழித்திருந்து காத்திருப்பினும், கலைமானும் தன் துணையின் பார்வை நாடி அழுகுரல் எழுப்பிடுமே.

குறிப்புரை

கலைமான் துணையின் பார்வை நாடி அழுவது தந்நிலையோடு ஒப்பிட்டுக் கூறும் இயல்பு.

உணர்வு நிலை

காதலியின் விழி காண எண்ணும் காதலன், கலைமான் குரல் கேட்டு இரங்கும் நிலை.

பாடல் : 2150

Aki fagi no	*காரது பகி*
Tiri yuku mireba	*உதிர் கழிவு காண*
Ofofosimi	*வருந்திடுமே*
Tuma kofi surasi	*துணை காதல் விரும்பி*
Sawosika naku mo	*கலைமானும் அழுமே*

விளக்கம்

கார்காலத்தும் பகி மலர்கள் உதிர்ந்து கழிவதைக் கண்டு வருந்திக் கலைமானும் தன் காதல் துணையோடு சேர விரும்பி அழுமே.

குறிப்புரை

கார் பகி மலரின் உதிர்வு கலைமானுக்கு வருத்தம் தருமென்பது குறிப்புப் பொருள் உணர்த்தும்.

உணர்வு நிலை

தன்னுணர்வு நிலையிலே கலைமானைக் காண எண்ணும் ஆண் மகன்.

பாடல் : 2151

Yama tofoki	*மலையின் சேய்மை*
Mi sato ni si areba	*பேரூர் இருந்திடவோ*
Sawosika no	*கலைமானது*
Tuma yobu kowe va	*துணை அழை குரலே*
Tomosiku mo aru ka	*அரிதாகிடுமோகொல்!*

விளக்கம்

பேரூர் மலையிலிருந்து தொலைவில் இருந்ததால், கலைமான் தனது துணையை அழைக்கின்ற குரலைக் கேட்பதும் அரிதாயிற்றோ.

குறிப்புரை

பேரூர் - காதலி இருக்கின்ற ஊர். மானது குரல் கேட்க முடியாதிருப்பது பிரிவைக் குறிப்பாக உணர்த்தும்.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற காதலனது வரவை எதிர்பார்த்துப் பேரூரிலே காத்து இருக்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2152

Aki fagi no	*காரது பகி*
Tiri sugi yukaba	*உதிர்வு கழிந்திட*
Sawosika va	*கலைமானுமே*
Vabinaki semu na	*துயரக் குரல் தரும்*
Mizu va tomosimi	*காணாமலே இரங்கும்*

விளக்கம்

கார்காலத்துப் பகி மலர்வு உதிர்வு கழிந்திடக் கலைமானின் குரலிலும் துயரம் தெரியும். கார் மலரின் நிறைவு காணாமல் இரங்கும்.

குறிப்புரை

கலைமான் பகி மலர் உதிர்வு கண்டு அழுதல். துணையோடு அந்த மலரை நிறைவாகக் காணாத துயரம்-காதலனும் அவ்வாறே.

உணர்வு நிலை

காதலியோடு பகி மலரின் அலர்வைக் காண முடியாத காதலன் நலிவு.

பாடல் : 2153

Aki fagi no	*காரது பகி*
Saki taru nube va	*அலர்சிதறு வெளியில்*
Sawosika zo	*கலைமானுந்தான்*
Tuyu wo wake tutu	*உறைபனி துளைந்தே*
Tuma-dofi sikeru	*துணை தேடி நிற்குமே*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலர்கள் சிதறும் வெளியில், உறைபனியில் துளைந்து கலைமானும் தன் துணையைத் தேடி நிற்குமே.

குறிப்புரை

உறைபனியில் வழுக்கியபடி துணை தேடும் கலைமான்.

உணர்வு நிலை

காதலியைப் பிரிந்து ஆண் மகனுக்குத் துணை தேடும் கலைமானில் இரக்கம் ஏற்பட்ட நிலை.

பாடல் : 2154

Nado sika no	*ஏனோ கலைமான்*
Vabi naki su naru	*துயர் அழுகை ஒலி*
Kedasi kumo	*நினைத்திடுமோ*
Aki no no fagi ya	*கார் வயல் பகியது*
Sigeku tiru ramu	*அடர்ந்த உதிர்வையும்*

விளக்கம்

கலைமான் ஏனோ துயரமான அழுகை ஒலி செய்யும்! கார்காலத்து வயலது பகி மலர்களின் அடர்ந்த உதிர்வை நினைத்திடுமோ!

குறிப்புரை

கலைமான் கார் பகியது உதிர்வு கண்டு அழுதல்-இயற்கை நிலை மூலம் காதலன் தன் துயர் நலிவு கூறல்.

உணர்வு நிலை

கார் காலம் முடிந்த நிலையிலும் காதலியைக் காண முடியாமல் நலிந்திரங்கும் காதலன்.

பாடல் : 2155

Aki fagi no	*காரது பகி*
Saki taru nube ni	*அலர் மலர் வெளியில்*
Sawosika va	*கலைமானுமே*
Tiramaku wosimi	*உதிரல் இரங்கியே*
Naki nuru mono wo	*அழுதிடும் பொருளோ*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலர் பூத்திருக்கும் வெளியிலே, அதன் உதிர்வு கண்டு இரங்கும் கலைமான்தான் துயரமாக அழுதிடும் பொருளோ.

குறிப்புரை

பகியின் உதிரல் கண்டு இரங்கி அழும் பொருள் கலைமான். அது இயற்கை நிலையில் பகியின் மலர்வை என்றும் காண விரும்புகிறது.

உணர்வு நிலை

காலங்கண்டு பிரிவால் நலியும் ஆண் மகன் கலைமான் பற்றி எண்ணல்.

பாடல் : 2156

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama no to kage ni	*மலையின் உயர் நிழலில்*
Naku sika no	*அழும் மானது*
Kowe kikasu ya mo	*குரல் கேட்டிருப்பாயோ*
Yama da morasu ko	*மலை வயல் காவல*

விளக்கம்

அடி இழுக்கும் மலையினது உயர் நிழலிலே அழுகின்ற மானுடைய குரலை நீயும் கேட்டிருப்பாயோ? மலை வயலைக் காவல் செய்கின்ற என் காதலனே.

குறிப்புரை

'மலை வயல் காவல' என்ற விழிப்பு இப்பாடல் காதலி கூற்று என்பதை விளக்கும். இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

மலை வயல் காவற் கடமையில் ஈடுபட்டிருக்கும் காதலனை எண்ணி இரங்கும் காதலி.

பாடல் : 2157

Yufu-kage ni	*மாலை நிழலில்*
Kinaku figurasi	*வந்து நரல் பிகுரசி*
Kokodaku mo	*நிறைந்திடுமோ*
Figoto ni kikedo	*நாளும் நாளும் கேட்பினும்*
Akanu kowe ka mo	*நிறையா குரல்கொல்லோ!*

விளக்கம்

மாலை நேர மங்கல் நிழலிலே வந்து ஒலிக்கின்ற பிகுரசி புள்ளின் குரலை ஒவ்வொரு நாளும் கேட்டாலும் உள்ளம் நிறையாத குரல் அன்றோ!

குறிப்புரை

எத்தனை முறை கேட்டாலும் மீண்டும் மீண்டும் கேட்க விரும்பும் குரல். இரவில் வரும் காதலன் குரல் புள் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

மாலை வந்து உரையாடி மகிழ்வித்துச் செல்லும் காதலனை எண்ணி நலியும் காதலி.

பாடல் : 2158

Aki kaze no — *காரது காற்றின்*
Samuku fuku nabe — *குளிர் சேர்ந்திட வீச*
Waga yado no — *எனது முன்றில்*
Asadi ga moto ni — *அசதியின் அடியில்*
Koforogi naku mo — *சிள்வண்டு நரலுமே.*

விளக்கம்

குளிர் சேர வீசுகின்ற கார்காலக் காற்று. எனது வீட்டு வாயில் அசதிப் புல்லின் அடியிலே சிள்வண்டும் ஒலித்திருக்கும்.

குறிப்புரை

அசதி - புல்லின் பெயர். குளிரான இரவில் தனியேயிருந்து சிள் வண்டின் குரல் கேட்டல். விழித்திருத்தல் 3 பாடல் தொடர சிள்வண்டு தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதலன் பிரிவால் இரவில் துன்புற்று நலியும் காதலி.

பாடல் : 2159

Kage kusa no — *புல்லின் நிழலும்*
Ofitaru yado no — *வளர்ந்திடு முன்றில்*
Yufu kage ni — *இரா நிழலில்*
Naku koforogi va — *நரலும் சிள்வண்டுமே*
Kikedo akanu kamo — *கேட்டே நிறையுமோகொல்!*

விளக்கம்

புல்லது நிழலும் நன்கு வளர்ந்திருக்கின்ற என் வீட்டு வாயிலிலே. இரா நிழலில் வண்டு ஒலிக்கும். அதைக் கேட்டு உள்ளம் நிறையுமோ.

குறிப்புரை

சிள் வண்டின் குரல் கேட்டு உள்ளம் நிறையாது. காதலன் குரல் கேட்டே நிறையும்.

உணர்வு நிலை

காதலன் குரல் கேட்க விரும்பும் காதலி நிலை.

பாடல் : 2160

Niva-kusa ni	*பொழில் புல்லிலே*
Murasame furite	*புதுமழை பொழிய*
Koforogi no	*சிள் வண்டினது*
Naku kowe kikeba	*நரல் குரல் கேட்டது*
Aki tuki ni keri	*கார் காலம் வந்ததுவே*

விளக்கம்

எனது வீட்டுப் பூங்காவின் புல்மேலே புதுமழை பெய்திட, சிள்வண்டும் ஒலிக்கும் குரல் கேட்டது. கார் காலம் வந்ததுவே.

குறிப்புரை

இயற்கை நிலையில் காலத்தைக் கணித்தல்.

உணர்வு நிலை

பிரிந்து சென்றவன் திரும்பி வருங் காலத்தைக் கணித்துக் காத்திருக்கும் பெண்.

பாடல் : 2161

Mi yosino no	*நல் யொசிநொவின்*
Iwa moto sarazu	*கல்லின் அடியிலிருந்து*
Naku kafadu	*கத்தும் தவளை*
Ube mo naki keri	*மெய்யாகக் கத்திடுதே*
Kava wo sayakemi	*ஆற்று நீரின் தெளிவில்*

விளக்கம்

நல் யொசிநொ ஆற்றின் கல்லின் அடியிலிருந்து கத்தும் தவளை மெய்யாகக் கத்திடுதே. ஆற்று நீரின் தெளிவில் குரல் கேட்கிறது.

குறிப்புரை

யொசிநொ, ஆற்றின் பெயர். நீர் தெளிவாக இருப்பதால் தவளையின் குரலும் தெளிவாகக் கேட்டல். 5 பாடல்கள் தொடர தவளை தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

தவளையின் குரல் கேட்டு நிற்கும் பெண்.

பாடல் : 2162

Kamunabi no	*கமுநபியின்*
Yama sita toyomi	*மலையின்கீழ் ஒலித்து*
Yuku midu ni	*வரும் நீரிலே*
Kafadu naku nari	*தவளை கத்தும் ஒலி*
Akito wamu to ya	*கார் வருகை கூறுமோ!*

விளக்கம்

கமுநபி மலையின்கீழ் எதிரொலித்து வருநீரிலே, தவளை கத்தும் ஒலி எமக்குக் கார் வருகையைக் கூறுமோ!

குறிப்புரை

தவளையின் குரல், கார்கால வருகையைக் கூறும் குரல். இயற்கையைக் கூர்மையாக நோக்கும் இயல்பு.

உணர்வு நிலை

இயற்கை நிலையில் கார் வருகை உணர்ந்த காதலி.

பாடல் : 2163

Kusa makura	*புல்லணையது*
Tabi ni mono omofi	*செலவின் பொருள் நினை*
Waga kikeba	*நான் கேட்டிருக்கும்*
Yufu kata makete	*மாலையும் நெருங்கிட*
Naku kafadu kamo	*கத்தும் தவளைகொல்லோ*

விளக்கம்

புல்லணையிலே படுத்துத் துன்பமான வழிச் செலவை நினைத்திருக்கும் நான், மாலை நெருங்கிடக் கேட்டிருக்கும் குரல், அது கத்தும் தவளையின் குரலே.

குறிப்புரை

வழிச் செலவில் தவளை குரல் கேட்டிருத்தல்-தனிமை நிலை. இப்பாடலிலே 'kusa makura' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Tabi' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

வழிச்செலவில் தவளை கத்தும் குரல் கேட்டுத் தனித்திருக்கும் ஆண் மகன்.

பாடல் : 2164

Se wo fayami	*சுழல் விரைவில்*
Oti tagiti taru	*விழுந்து எழுந்திடு*
Sira nami ni	*வெண்ணிற அலை*
Kafadu naku nari	*தவளை கத்தும் ஒலி*
Asa yofi goto ni	*காலையும் மாலையும்*

விளக்கம்

நீர்ச் சுழலின் விரைவிலே வெண்ணிற அலைகள் எழுந்து மடியும். தவளை கத்தும் ஒலி காலையும் மாலையுங் கேட்கும்.

குறிப்புரை

நீரின் சுழற்சியும் அலையின் தன்மையும் காலம் உணர்த்தும் நிலைகள்.

உணர்வு நிலை

ஆற்றின் நீர்நிலையும் தவளை ஒலியும் காலங்காட்டப் பிரிவால் நலியும் பெண்.

பாடல் : 2165

Kami tu se ni	*மேல் அருவியில்*
Kafadu tuma yobu	*தவளை துணை கூவும்*
Yufu sare ba	*இரவு வந்தது*
Koromo de samumi	*ஆடையும் குளிரவே*
Tuma makamu to ka	*மனைவி அணையும்கொல்!*

விளக்கம்

மேல் அருவியில் தவளை தன் துணையைக் கூப்பிடும். இரவு வந்தது. கை ஆடையும் குளிரவே தன் மனைவியை அணைத்துறங்குமோ.

குறிப்புரை

தன் எண்ணத்தைத் தவளை மேலேற்றிக் கூறல்.

உணர்வு நிலை

காதலியையணைத்து உறங்கக் காத்திருக்கும் காதலன்.

பாடல் : 2166

Imo ga te wo	*காதலி கைபோல்*
Torosi no ike no	*தொரொசியின் மடுவின்*
Nami no ma yu	*திரையிடையில்*
Tori ga ne ke ni naku	*நீர்ப்புள் வியப்பாய்க் கூவும்*
Aki suginu rasi	*காரும் கழிந்ததுபோலும்!*

விளக்கம்

காதலியின் கையைப் பற்றுவதுபோன்ற தொரொசி மடுவின் திரை தாவும். அதனிடையே நீர்ப்புள்ளும் வியப்பாய்க் கூவும். கார் காலம் கழிந்துவிட்டதுபோலும்.

குறிப்புரை

நீர்ப்புள்-நீர்க்கோழி. இப்பாடலிலே 'Imo ga te wo' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Torosi' என்னும் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலி நினைவிலே கார் காலம் கழிந்ததை உணரும் ஆண் மகன்.

பாடல் : 2167

Aki no no no	*காரது வயல்*
Wobana ga ure ni	*வொபனவின் கிளையில்*
Naku mozu no	*நரலும் மொசுவின்*

Kowe kiku ramu ka	*குரலே கேட்டிடுங்கொல்*
Kata kiku wagino	*தொடர்ந்து கேள் காதலி*

விளக்கம்

கார் கால வயலது. வொபன மரக் கிளையிலே குரல் கொடுக்கின்ற மொசுவின் குரலை என் காதலியும் கேட்டிருக்குமோ! தொடர்ந்து கேட்டிடுவாய் என் காதலி.

குறிப்புரை

மொசு - பறவை காலங் காட்டும் குரல்.

உணர்வு நிலை

தன் காதலியும் இயற்கை நிலையில் காலத்தைக் காத்திருப்பாள் என எண்ணும் ஆண் மகன்.

பாடல் : 2168

Aki fagi ni	*காரது பகி*
Okeru sira tuyu	*விழுந்திடு வெண்பனி*
Asana asana	*நாளுங் காலையில்*
Tama to si go miru	*மணிபோலத்தான் தோன்றும்*
Okeru sira tuyu	*விழுந்திடு வெண்பனி*

விளக்கம்

கார் காலத்திலே பகி மலர்மீது விழுந்திடும் வெண்பனியே. ஒவ்வொரு நாட் காலையிலும் மணிபோலத் தோன்றும்-விழுந்திடும் வெண்பனியே.

குறிப்புரை

பகி மலர்மேல் விழுந்த வெண்பனியின் காலைத் தோற்றம். இயற்கையை ஊன்றி நோக்கல், 9 பாடல்கள் தொடரப் பனியைத் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

கார்காலப் பனியழகு கண்டு காதலன் வரவு காக்கும் நிலை.

பாடல் : 2169

Yufu dati no	*மாலை வந்திடும்*
Ame furu goto ni	*மழைப் பெயல் கடுக்கும்*
Kasuga no no	*கசுக வயல்*
Wobana ga weno	*வொபனவின்மேல் விழு*
Sira tuyu omofoyu	*வெண்பனி நினைந்திடும்*

விளக்கம்

மலையிலே வந்திடும் மழைப் பெயலைப்போல, கசுக வயலிலே வொபனவின்மேல் விழுகின்ற பனியை நினைப்பேன்.

குறிப்புரை

மழை பெய்யும்போது மாலையில் பனியின் நினைவு வரல்.

உணர்வு நிலை

பிரிந்துறையும் பெண் காதலனை நினைந்து நலிதல்.

பாடல் : 2170

Aki fagi no	*காரது பகி*
Yeda mo towowo ni	*கிளையும் வளைந்திட*
Tuyu simo oki	*உறைபனி விழு*
Samuku mo toki va	*குளிரான காலமே*
Nari ni keru kamo	*ஆகி வந்திட்டதுகொல்!*

விளக்கம்

கார் காலத்துப் பகியின் கிளையும் வளைந்திட, உறைபனி விழும் குளிரான காலமாகி வந்திட்டதுவோ!

குறிப்புரை

பகியின் கிளை எளிதில் வளையக்கூடியது. குளிர்காலத்தின் வரவு.

உணர்வு நிலை

குளிரான காலம் வந்ததைபுணர்ந்து பிரிவால் நலியும் பெண்.

பாடல் : 2171

Sira tuyu to	*வெண் பனியுடன்*
Aki no fagi to va	*காரது பகியுமே*

Kofi-midare	*கலந்திட்டது*
Waku koto kataki	*பிரித்தல் கடிது*
Waga kokoro kamo	*எனது உள்ளத்தில்கொல்!*

விளக்கம்

எனது உள்ளத்தின் வெண்பனியுடன் கார்காலத்துப் பகி மலரும் பிரிக்க முடியாதபடி கலந்துவிட்டன. இரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்பதும் கடினமே.

குறிப்புரை

இரண்டில் ஒன்றைத் தெரிவது கடினம்.

உணர்வு நிலை

இயற்கை நிலையில் காலம் உணர்த்தும் வெண்பனியும் பகி மலரும் பிரிந்தோர் உள்ளத்தில் நிலைபெறல்.

பாடல் : 2172

Waga yado no	*எனது முன்றில்*
Wobana osinabe	*வொபன தாழ தள்ளி*
Oku tuyu ni	*விழு பனியை*
Tefure wagimoko	*தொடுவாய் என் காதலி*
Tira maku mo mimu	*சிதறுவது காணும்*

விளக்கம்

எனது வீட்டு வாயிலிலுள்ள வொபன மரக்கிளையைத் தாழத் தள்ளி விழும் பனியைக் கையால் நீயும் தொடுவாய் என் காதலி. அது சிதறுவதை நான் காண வேண்டும்.

குறிப்புரை

ஆணும் பெண்ணுமாய்ப் பனியைக் காணல். 'தொடுவாய்' என்ற சொல் இதனை உணர்த்தும்.

உணர்வு நிலை

பனி விழுவதைக் காண விரும்பும் ஆணின் ஆவல் நிலை.

பாடல் : 2173

Sira tuyu wo	வெண் பனியையே
Toraba kenu besi	கையால் தொடக் கரையும்
Iza kodomo	தோழரே வாரும்
Tuyu ni kifofite	பனியில் எதிர் நின்று
Fagi no asobi semu	பகியின் ஆடல் செய்வோம்

விளக்கம்

வெண்பனியையே கையால் நாம் தொடக் கரையும். தோழரே வாரும். பனியின் எதிர் நின்று பகிபோல ஆடல் செய்வோம்.

குறிப்புரை

பகி பனிக்கு எதிர் நிற்பது நின்று விளையாடல்.

உணர்வு நிலை

பனியில் விளையாட விரும்பும் சிறார்.

பாடல் : 2174

Aki ta karu	காரது வயல்
Kari ifo wo tukuri	சிறுகுடில் செய்திட்டு
Waga woreba	நானும் இருக்க
Koromode samuku	கையாடை குளிரவே
Tuyu zo okini keru	பனிதான் விழுந்திடும்

விளக்கம்

கார் கால வயலில் காவலுக்கெனச் சிறுகுடில் செய்து நான் இருந்திட, என் கையாடையும் குளிரும்படி பனிதான் விழுந்திடும்.

குறிப்புரை

காவல் குடிலில் இருத்தல். தனிமை நிலை. வினைவயிற் பிரிவு.

உணர்வு நிலை

வினைவயிற் பிரிந்த ஆண் மனைவியை நினைந்திரங்கல்.

பாடல் : 2175

Konogoro no	இப்பொழுதிலே
Aki kaze samusi	காரது காற்றும் குளிர்

Fagi no fana	*பகியின் மலர்*
Tirasu sira tuyu	*சிதறும் வெண் பனியும்*
Oki ni kerasi mo	*விழுந்து வந்திட்டது*

விளக்கம்

இப்பொழுது வீசுகின்ற கார்காலக் காற்று மிகவும் குளிரானது. பகியின் மலர் சிதறுகின்ற வெண்பனியும் விழுந்தது.

குறிப்புரை

பனி முழுதாகப் பெய்தமையால் காற்று குளிரானது.

உணர்வு நிலை

கார்காலக் குளிர்க் காற்றில் நலியும் ஆண்.

பாடல் : 2176

Aki ta karu	*காரது வயல்*
Ifo ugoku nari	*குடில் அலைக்கும் ஒலி*
Sira tuyu si	*வெண் பனியுமே*
'oku foda nasi' to	*'விழும் கதிர் இல்லை'*
Tuge ni kinu rasi	*அறிவித்து வந்திடும்*

விளக்கம்

கார் காலத்து வயலின் காவற் குடிலைக் காற்று அலைக்கும் ஒலியில், வெண்பனியுமே 'விழுவதற்குக் கதிர் இல்லை' என அறிவித்து வந்திடும்.

குறிப்புரை

குடிலை அலைக்கும் குளிர்க் காற்று. பனியின் குரலாய்க் கேட்டல்.

உணர்வு நிலை

பிரிவின் நலிவும் தனிமையும், இயற்கை நிலையான துன்பமும் ஒருங்கே காணும் ஆண்.

பாடல் : 2177

Faru va moye	*வேனிலில் முகை*
Natu va midori ni	*கோடையே பசுமையில்*

Kurenavi no	*குரெநவியின்*
Simi iro ni miyuru	*செந்நிறத்தினில் காணும்*
Aki no yama kamo	*காரது மலையேகொல்!*

விளக்கம்

வேனிற் காலத்தில் மொட்டுகள். கோடைக் காலத்தில் இலைகளின் பசுமை. குரெநவிபோலச் செந்நிறத்தில் தோன்றும் கார்காலத்து மலையேதான்.

குறிப்புரை

காலத்திற்கேற்ப மாற்றமடையும் மலையின் இயற்கை அழகு. மலை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

மலைத் தோற்ற அழகிலே கால மாற்றத்தை எண்ணிப் பார்க்கும் பெண்.

பாடல் : *2178*

Tuma-gomoru	*தனிமனைப் பெண்*
Ya no no kami-yama	*யநொவின் கமியம*
Tuyu simo ni	*உறை பனியில்*
Nifofi sometari	*நிறத்தை அடைந்துமே*
Tiramaku wosi mo	*சிதறுவது நலிவே*

விளக்கம்

தனிமனைப் பெண்போன்ற யநொவின் கமியம மலையில், உறை பனிக் காலத்திலே நிறம் மாற்றமடைந்து இலைகள் சிதறுவதைக் காணத் துன்பமே.

குறிப்புரை

யநொ - இடப்பெயர்; தனிமனைப் பெண் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. காவல் செய்யப்பட்ட மனை. பெண்கள் சில காலம் இருக்க வேண்டிய இடம். கமியம - மலையின் பெயர். இப்பாடலிலே 'Tuma gomoru' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yano' என்னுஞ் சொல்லுடன் அணையும். தொடர *40* பாடல் கார் காலத்தில் நிறம் பெறும் இலை தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

மலையில் நிறம்பெற்ற இலைகள் சிதறுவது எண்ணி நலியும் உள்ளம்.

பாடல் : 2179

Asa tuyu ni	*காலைப் பனியில்*
Nifofi sometaru	*நிறத்தை அடைந்திடும்*
Aki yama ni	*காரது மலை*
Sigure na furi zo	*பெருமழை பொழியேல்*
Ari wataru gane	*அப்படி இருந்திடவே*

விளக்கம்

காலைப் பனியிலே நிறத்தை அடைந்திடும் கார்கால மலையிலை. பெருமழையே, நீ பொழியாதே. அவை அப்படியே இருக்கட்டுமே.

குறிப்புரை

மழை பொழியின், நிறம் பெற்ற இலைகள் விரைவில் சிதறும். எனவே மழையைப் பெய்யாதிருக்க வேண்டல்.

உணர்வு நிலை

இயற்கையழகை நிலைபெறச் செய்ய எண்ணும் பெண் உள்ளம்.

பாடல் : 2180

Naga duki no	*ஒன்பதாம் மாதப்*
Sugure no ame ni	*பெரும் பெயல் மழையில்*
Nure tofori	*நன்கு நனைந்து*
Kasuga no yama va	*கசுகவின் மலையே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

நீண்ட ஒன்பதாம் மாதத்துப் பெரும் பெயல் மழையிலே நன்கு நனைந்து, கசுகவின் மலையிலுள்ள மரக் கிளைகள் நிறத்தைப் பெற்றனவே.

குறிப்புரை

கசுக மலை மரக் கிளைகளின் நிறம் மாறியது. கார்கால வரவைக் கூறுவது.

உணர்வு நிலை

இயற்கை நிலையில் மாறும் அழகுத் தோற்றத்தைக் காணும் பெண் உள்ளம்.

பாடல் : 2181

Karigane no	*காட்டுத் தாராவின்*
Samuki asake no	*குளிர் குரல் காலையில்*
Tuyu narasi	*பெய்திடும் பனி*
Kasuga no yama wo	*கசுகவின் மலையை*
Momidasu mono va	*நிறமாக்கும் பொருளே*

விளக்கம்

காட்டுத் தாராவின் குளிரான குரல் கேட்கும் காலையிலே பெய்திடும் பனியும், கசுக மலை மர இலைகளை நிறமாக்கும் பொருளும் அதுவோ.

குறிப்புரை

தாராவின் குரல் காலைக் குளிரை உணர்த்தல்.

உணர்வு நிலை

கசுக மலையை நிறமாக்கும் பனியைப் பார்த்திருக்கும் பெண்.

பாடல் : 2182

Konogoro no	*இப்பொழுதிலே*
Aka toki tuyu ni	*காலை நேரப் பனியில்*
Waga yado no	*எனது முன்றில்*
Fagi no sitafa va	*பகியின் கீழ் நிலையே*
Iro duki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

இப்போதைய காலை நேரப் பனியில், எனது வீட்டு வாயிலிலுள்ள பகியின் கீழ் இலையே நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

வீட்டு மரத்து இலை நிறம் பெறல்.

உணர்வு நிலை

இயற்கை மாற்றத்தை அண்மையில் காணும் பெண் உள்ளம்.

பாடல் : 2183

Karigane va	*காட்டுத் தாராவே*
Ima va kinakinu	*இப்போதே வந்து கத்தியது*
Waga mati si	*நான் காத்திருக்கும்*
Momidi faya tuge	*கார் இலை விரைந்து செல்*
Mateba kurusi mo	*காத்து நிற்பதே துன்பம்*

விளக்கம்

காட்டுத் தாராவும் இப்போது வந்து கத்தியது. நான் காத்திருக்கிறேன். கார் கால நிறம் மாறிய இலையே விரைந்து செல். ஏனெனில், காத்து நிற்பதோ பெருந்துன்பம்.

குறிப்புரை

காட்டுத் தாரா கார் இலையின் காவலன் என்பர். அவை மேலே பறந்து செல்லும்போது இலை நிறம் பெற்றிருப்பதை அறியும். காலம் மாறியதை அறிவிக்கும் தூதுவன்.

உணர்வு நிலை

மர இலையைத் தூதுவிட எண்ணும் பெண் உள்ளம்.

பாடல் : 2184

Aki yama no	*காரது மலை*
Yume fito kaku na	*நல்மாந்தர் மறையாதே*
Wasure ni si	*மறந்திருக்கும்*
Sono momidi fa no	*உந்த மொமி இலையும்*
Omofoyu raku ni	*நினைந்திடச் செய்யுமே*

விளக்கம்

கார் கால மலையே, நல் மாந்தரை மறையாதே. அவர் மறந்திருக்கும் என்னை உந்த நிறம் மாறிய இலை நினைந்திடச் செய்யுமே.

குறிப்புரை

மொமி-நிறம் பெற்ற இலை. அழகான பெண்ணின் உடல் நிறம்.

உணர்வு நிலை

தன்னை மறந்திருக்கும் காதலன், மர இலையின் நிற மாற்றம் கண்டு நினைவு கூர்வான் என என்னும் பெண்.

பாடல் : 2185

Ofosaka wo	*ஒபொசகவை*
Waga koye kure ba	*நான் கடந்திடும்போது*
Futagami ni	*புதகமியின்*
Momidifa nagaru	*மொமி இலை தவழ*
Sigure furi tutu	*பெரும் பெயல் பெய்திடும்*

விளக்கம்

ஒபொசகவை நான் கடந்து வர, புதகமி மலையின் மர இலை நிறம் மாறி, நீரில் தவழப் பெருமழை பெய்திடும்.

குறிப்புரை

ஒபொசக-இடப்பெயர்; புதகமி - மலையின் பெயர்.

உணர்வு நிலை

மலை கடந்து வரும் ஆண் மகன் எண்ணம்.

பாடல் : 2186

Aki sareba	*கார் வந்திடவே*
Oku siratuyu ni	*விழு வெண்பனியிலே*
Waga kado no	*என் வாயில் கடை*
Asadi ga uraba	*அசதி இலை மேலும்*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

கார் காலம் வந்திட விழுகின்ற வெண்பனியிலே, எனது வாயில் கடை நிற்கும் அசதி மர இலையின் மேற்புறம் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

அசதி-மரப் பெயர். பனி விழுந்திட இலையின் நிறம் மாறல். வாயிற் கடை- வாசற்புறம்.

உணர்வு நிலை

வீட்டிலிருந்தே கார் காலம் வருவதையறியும் பெண்.

பாடல் : 2187

Imo ga sode	*மனைவி ஆடை*
Maki kino yama no	*மகிகி மலையிலே*
Asatuyu ni	*காலைப் பனியில்*
Nifofu momidi no	*நிறம் பெற்ற மொமியின்*
Tiramaku wosi mo	*சிதறல் வருத்தமே*

விளக்கம்

மனைவியின் கையாடை சுருட்டுவதுபோன்ற மகிகி மலையிலே, காலைப் பனியிலே நிறம் மாறிய இலைகள் சிதறக் காண்பது வருத்தமே.

குறிப்புரை

மகி என்ற பெயர், சொற்பொருள் நிலையில் சுருட்டுதல் என்ற பொருள். இப்பாடலிலே 'Imo ga sode' என்ற சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Maki' என்ற சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

இலையின் சிதறல் கண்டு வருந்தி மனைவியை எண்ணி நலியும் காதலன்.

பாடல் : 2188

Momidi fa no	*மொமித் இலை*
Nifofi va sigesi	*நிறமே பலவாகும்*
Sikare domo	*என்பதனாலே*
Tuma nasi no ki wo	*துமநசி இலையை*
Tawori kasasemu	*நான் களைந்து சூடுமே*

விளக்கம்

கார் காலத்து இலைகளின் நிறமே பலவாகும். அதனாலே நான் துமநசி இலையைப் பறித்து என் தலையில் அணிவேன்.

குறிப்புரை

மொமிதி - கார் கால நிறம் மாறிய இலை; துமநசி - பிறிதொரு இலை; தும-மனைவி; நசி-இல்லா. எனவே துமநசி என்பது 'மனைவி இல்லா' என்னும் மறைபொருள் தரும் சொல்லாகப் பயன்பட்டுள்ளது.

உணர்வு நிலை

மனைவியைப் பிரிந்துறையும் கணவன் நிலை.

பாடல் : 2189

Tuyu zimo no	*உறைபனியின்*
Samuki yufufe no	*குளிரான இரவில்*
Aki kaze ni	*கார்காலக் காற்றில்*
Momidi ni keri mo	*நிறம் பெற்றிடுமே*
Tuma nasi no ki va	*துமநசி மரமே*

விளக்கம்

உறைபனி பெய்கின்ற குளிரான இரவிலே கார்காலக் காற்று வீசும்போது, துமநசி மர இலைகளும் நிறம் பெற்றிடுமே.

குறிப்புரை

துமநசியும் கார் காலத்தில் நிறம் மாறல் - குறிப்புப் பொருள். மனைவியின் நிறம் மாறல்.

உணர்வு நிலை

மனைவியின் உடல் நிறம் எண்ணி நலியும் ஆண் மகன்.

பாடல் : 2190

Waga kado no	*என் வாயிற்கடை*
Asadi iroduku	*அசதி நிறமாக*
Yonabari no	*யொநபரியின்*
Namisifa no no no	*நமிசிப வயலின்*
Momidi tiru rasi	*மொமி சிதறிடும்போல்*

விளக்கம்

எனது வாயிற்கடை நிற்கின்ற அசதி மர இலைகள் நிறமாகின. யொநபரியின் நமிசிப வயலில் மொமியும் சிதறிடும்போல்.

குறிப்புரை

யொநபரி - இடப்பெயர்; நமிசிபவயல் - வெளியின் பெயர்.

உணர்வு நிலை

இயற்கை நிலையான மாற்றங்கண்டு காதலன் விரைவில் வருவானென எண்ணும் பெண்.

பாடல் : 2191

Karigane wo	*காட்டுத் தாராவும்*
Kikituru nabe ni	*கத்துகின்ற நேரத்தில்*
Takamatu no	*தகமதுவின்*
No no feno kusa zo	*வயல்வெளியின் புல்தான்*
Iroduki ni keru	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

காட்டுத் தாரா கத்துகின்ற அதே நேரத்தில், தகமது வயல்வெளியின் புல்லுந்தான் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

புல் நிறம் மாறல், குளிரான கார் காலத்தை உணர்த்தும்.

உணர்வு நிலை

பல்வேறு இயற்கை நிலையால் கார் வரவு அறிதல்.

பாடல் : 2192

Waga seko ga	*என் காதலரின்*
Sirotafe goromo	*வெண்ணிறத்து ஆடையை*
Yuki fureba	*சென்றிடுகையில்*
Nifofinu beku mo	*நிறமாக்கி விட்டதும்*
Momidu yama kamo	*மொமி நிற மலைகொல்!*

விளக்கம்

எனது காதலருடைய வெண்ணிறமான ஆடையை அவர் செல்லும் போது தடவி நிறமாக்கிவிட்டதும், மலையிலுள்ள நிறம் மாறிய இலைகள்தாமோ!

குறிப்புரை

நடந்து செல்லும்போது ஈரமான நிறம் மாறிய இலைகள் தடவிச் செல்வதால் ஆடை நிறம் பெறல்.

உணர்வு நிலை

காதலன் மலைவழி வருவதை எண்ணிப் பார்த்திருக்கும் காதலி.

பாடல் : 2193

Aki kaze no	*கார்து காற்று*
Fi ni ke ni fukeba	*நாளும் நாளும் வீசுமே*
Midu kuki no	*இளந்தண்டினில்*
Woka no ki no fa mo	*வொகவின் மர இலை*
Iroduku ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

கார் காலக் குளிர்க் காற்று ஒவ்வொரு நாளும் வீசும். இளந்தண்டுடைய வொகவின் மர இலையும் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

வொக-இடப் பெயர். இப்பாடலிலே ‘Midu kuki no’ என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். ‘woka’ என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

கார் கால வருகையை அறிந்த காதலன், இளங்காதலியை நினைத்திரங்கல்.

பாடல் : 2194

Karigane no	*காட்டுத் தாராவும்*
Kinaki si nabe ni	*வந்து கத்தும் நேரத்தில்*

Karagoromo *கொரிய ஆடை*
Tatuta no yama va *ஒத்த ததுத மலையே*
Momidi sometari *நிறத்தில் தோய்ந்ததுவே*

விளக்கம்

காட்டுத் தாரா வந்து கத்துகின்ற அதே நேரத்தில், கொரிய ஆடையின் வெட்டு ஒத்த ததுத மலையும் நிறம் பெற்றதுவே.

குறிப்புரை

இப்பாடலிலே 'kara goromo' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Tatu' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

கார் கால மலையின் தோற்றங்கண்டு தலைவன் வரும் காலம் கணித்தல்.

பாடல் : 2195

Kari gane no *காட்டுத் தாராவின்*
Kowe kiku nabe ni *குரல் கேட்கும் நேரத்தின்*
Asu yori va *நாள் முதலாக*
Kasuga no yama va *கசுகவின் மலையே*
Momidi some namu *நிறத்தில் தோய்ந்திருக்கும்*

விளக்கம்

காட்டுத் தாராவின் குரல் கேட்கும் அதே நேரத்தில், அதே நாள் முதலாகக் கசுக மலையும் நிறம் பெற்றிருக்கும்.

குறிப்புரை

காட்டுத் தாராவின் குரல் கார் காலம் காட்டும் குரல். எனவே இயற்கை நிலையும் மாறியிருக்கும்.

உணர்வு நிலை

காதலன் சென்றிருக்குமிடத்திலும் கார் காலம் வந்ததை இயற்கை நிலை உணர்த்துமென எண்ணும் காதலி.

பாடல் : 2196

Sigure no ame	*பொழி மழையும்*
Ma nakusi fureba	*விடாமலே பொழிய*
Maki no fa mo	*மகியின் இலை*
Arasofi kanete	*வன்மை பொறுக்கலாது*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

பொழிகின்ற மழையும் இடைவிடாமல் பொழியவே, மகி மர இலை மழையின் வலிமை பொறுக்கலாற்றாது நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

விடாத மழையால் இலை நிறம் மாறல்.

உணர்வு நிலை

மழைப்பொழில் மர இலை நிறம் மாறுவது காண் ஆண்.

பாடல் : 2197

Itiziroku	*குறிப்பாகவே*
Sigure no ame va	*பெரும் பெயல் மழையே*
Fura naku ni	*பெய்யாதபோதும்*
Ofoki no yama va	*ஒபொகி மலையும்*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

குறிப்பாகப் பெரும் பெயல் மழை பெய்யாத இடத்தும் ஒபொகி மலையும் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

மழை பெய்யாதபோதும் மலை மரம் நிறம் மாறல்.

உணர்வு நிலை

மலைத் தோற்றத்தையும் கால நிலையையும் எண்ணிப் பார்த்தல்.

பாடல் : 2198

Kaze fukeba	*காற்று வீசிட*
Momidi tiri tutu	*மொமி இலை சிதறும்*
Suku naku mo	*சிறுபொழுதும்*
Aga no matu fara	*அகவின் மதுபர*
Kiyo kara naku ni	*தெளிவின்றி ஆகிடும்*

விளக்கம்

காற்று வீசிட நிறம் மாறிய இலைகள் சிதறும். சிறு பொழுதுகூட அகமதுபர தெளிவின்றி ஆகிவிடும்.

குறிப்புரை

அகமதுபர - இடப்பெயர். காற்றும் வீச இலைகள் சிதறி வர, சிறு பொழுது தெரியாமல் இருக்கும்.

உணர்வு நிலை

கார் காலக் காற்று வீச அகமதுபரவை நோக்கும் ஆசை.

பாடல் : 2199

Mono mofu to	*பொருள் நினைய*
Komorafi worite	*வீட்டில் மறைந்து வாழும்*
Kefu mireba	*இன்று பார்த்திட*
Kasuga no yama va	*கசுக மலையுமே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

என் துன்பமான நினைவுகளில் வீட்டிலே மறைந்து வாழ்ந்தேன். இன்று வெளியே வந்து பார்த்தால் கசுக மலையே நிறத்தைப் பெற்றிருந்தது.

குறிப்புரை

பொருள் - துன்பமான நினைவு.

உணர்வு நிலை

திடீரெனக் கால மாற்றங் கண்ட காதலியின் உவகை நிலை.

பாடல் : 2200

Naga tuki no	*ஒன்பதாம் மாதம்*
Sira tuyu ofite	*வெண்பனி விழுந்திட்ட*
Asifiki no	*அடி இழுக்கும்*
Yama no momidamu	*மலையின் மொமி இலை*
Mi maku si mo yosi	*கண்ணால் காண்பதும் நன்று.*

விளக்கம்

ஒன்பதாம் மாதம் வெண் பனி விழுந்திருக்கும் அடி இழுக்கும் மலையின் நிறம் மாறிய இலைகளின் தோற்றத்தைக் கண்ணால் காண்பதும் நன்று.

குறிப்புரை

இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலியின் கார் காலத் தோற்றம் காண விரும்பும் காதலன்.

பாடல் : 2201

Imo gari to	*மனைவி வீடு*
Uma ni kura okite	*மாவில் ஏறி வரவே*
Iko ma yama	*இகொம மலை*
Uti koye kure ba	*இடை கடந்து வர*
Momidi tiri tutu	*மொமி சிதறிட்டதே*

விளக்கம்

மனைவி வீட்டிற்குக் குதிரையில் ஏறி வரும்போது இகொமமலை இடை கடந்து வர, நிற இலைகள் சிதறியிருந்தன.

குறிப்புரை

தொலைவிலிருந்து வருதல் - காலங் கடந்து வருதல்.

உணர்வு நிலை

காலங்கடந்து மனைவி வீடு வரும் கணவன்.

பாடல் : 2202

Momidi suru	*நிறம் செய்திடும்*
Toki ni naru rasi	*நேரமும் வந்ததுவே*
Tuki fito no	*நிலா மனிதன்*
Katura no yeda no	*கதுரவின் கிளையும்*
Iroduku mireba	*நிறமானது காணும்*

விளக்கம்

மர இலைகளை நிறம் மாற்றுகின்ற காலமும் வந்துவிட்டது. நிலா மனிதனுடைய கதுர மரக்கிளையின் இலைகளும் நிறம் பெற்றிருப்பது தெரிகிறது.

குறிப்புரை

நிலவின் நடுவில் ஆறு இருப்பதாகவும், அதன் கரையில் கதுர மரம் *(500 அடி)* நிற்பதாகவும் நம்பப்படுகிறது.

உணர்வு நிலை

நிலவு கண்டு காலம் வந்ததை எண்ணும் பெண்.

பாடல் : 2203

Sato goto ni	*ஊர் முழுவதும்*
Simo va oku rasi	*பனியே வீழும்போலும்*
Takamatu no	*தகமதுவின்*
No-yama-dukasa no	*வெளி, மலை, உயர்வில்*
Iroduku mireba	*நிறமானது காணும்*

விளக்கம்

இன்று ஊர் முழுவதுமே பனி விழும்போலும். (ஏனெனில்) தகமதுவின் அருகிலுள்ள வெளிகள், மலை, உயர்ந்த இடங்கள் எல்லாம் நிறம் பெற்றிருப்பது தெரிகிறது.

குறிப்புரை

பனியின் வீழ்வினைக் கணிக்கும் முறை.

உணர்வு நிலை

பனியின் வரவை எண்ணிப் பிரிவில் நலியும் பெண்.

பாடல் : 2204

Aki kaze no	*காரது காற்றும்*
Fi ni ke ni fukeba	*நாளும் வீசி வரவே*
Tuyu sigemi	*பனி அடர்வில்*
Fagi no sita fa va	*பகி அடி இலையே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

கார் காலக் காற்று ஒவ்வொரு நாளும் வீசி வர பனியும் அடர்வானது. பகியின் அடி இலையே நிறம் பெற்றது.

குறிப்புரை

பனி நிறையப் பெய்ய மர இலைகள் நிறம் பெயர்தல்-கால மாற்றம்.

உணர்வு நிலை

பகியின் அடி இலை நிறம் பெற்றது கண்டு, கால மாற்றம் உணரும் பெண்.

பாடல் : 2205

Aki fagi no	*காரது பகி*
Sita-fa momidi nu	*அடி இலை நிறமாகும்*
Aratama no	*என்றும் ஒளிரும்*
Tuki no fe yukeba	*நிலா பல கடக்க*
Kaze fayami kamo	*காற்றும் கடிதாகும்கொல்!*

விளக்கம்

கார் காலத்துப் பகியின் அடி இலை நிறம் பெறும். என்றும் ஒளிரும் நிலவும் பல கடந்திடக் காற்றும் வன்மையாக வீசுமே.

குறிப்புரை

நிலா பல கடத்தல் - மாதங்கள் கழிதல். இப்பாடலிலே 'aratama no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Tuki' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

நிலவின் கடப்பில் காலத்தைக் கணிக்கும் பெண்.

பாடல் : 2206

Maso-kagami	*நல் அடி போன்ற*
Minabuti yama va	*மிநபுதி மலையே*
Kefu mo kamo	*இன் றுமேகொல்*
Sira tuyu okite	*வெண் பனியும் விழுந்தே*
Momidi Tiruramu	*கார் கால இலை சிதறும்*

விளக்கம்

நல்ல கண்ணாடி காண்பதுபோன்ற மிநபுதி மலையிலே இன்றைக்கும் வெண்பனி பெய்து, கார்கால நிறம் பெற்ற இலைகள் சிதறும்.

குறிப்புரை

இப்பாடலிலே '**Maso-kagami**' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். '**Mi**' என்னும் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

செலவில் சென்றிருக்கும் ஆண் மகன், தன் காதலி வாழும் பகுதி மலையிலே கார் கால இலை சிதறுவதை எண்ணியிருத்தல்.

பாடல் : 2207

Waga yado no	*எனது முன்றில்*
Asadi iroduku	*அசதி நிறம் பெற்றது*
Yonobari no	*யொநபரியின்*
Natu mi no uwe ni	*அருகு நதுமியில்*
Sigure furu ramu	*பெரும் பெயல் பொழிபோல்*

விளக்கம்

எனது வீட்டு வாயிலில் நிறம் பெற்று அசதி நிற்கிறது. யொநபரியின் அருகிலுள்ள நதுமியிலே பெருமழை பெய்யப் போகின்றதுபோலும்.

குறிப்புரை

யொநபரி, நதுமி - இடப்பெயர்கள்.

உணர்வு நிலை

மரத்தின் நிறம் கண்டு காதலன் வாழும் ஊரின் கால நிலையைக் கணிக்கும் காதலி.

பாடல் : 2208

Karigane no	*காட்டுத் தாராவும்*
Samuku nakisi yu	*குளிர் குரல் தருவதால்*
Midu kuki no	*நீர்த் தண்டினது*
Woka no kuzu-fa va	*குன்றின் குசு இலையே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

காட்டுத் தாராவும் குளிரான குரலிலே கத்துவதால், நீர்த்தண்டின் ஔிர் குன்றிலுள்ள குசு இலையும் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

காட்டுத் தாராவின் குளிர் குரல்-குளிர்காலம் உணர்த்தும் குரல். இப்பாடலிலே 'midu kukino' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும் 'woka' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

இயற்கை நிலை மாற்றத்தைப் பறவையின் குரலிலும், இலையிலும் கண்டு பிரிவில் நலியும் பெண்.

பாடல் : 2209

Aki fagi no	*காரது பகி*
Sitafa no momidi	*அடி இலை நிறமாய்*
Fana ni tugi	*மலர் சிதறும்*
Toki sugi yukaba	*நேரம் கடந்திடினே*
Noti kofimu kamo	*பின்பு நலியும்தான்கொல்!*

விளக்கம்

கார் காலத்துப் பகியின் இலை நிறமடைந்திருக்கையிலே, தொடர்ந்து மலர் சிதறும் நேரமும் கடந்திடவே நாம் பின்னரும் நலிய வேண்டுமோ!

குறிப்புரை

இலை நிறம் மாறலும், மலர் சிதறலும் தொடர்ந்து நடப்பதை, அதை எண்ணிப் பின்னர் நலியும் நிலை.

உணர்வு நிலை

காலக் கடப்பினை இயற்கை நிலையிலே நாம் உணர்ந்தாலும் பிரிவின் நலிவே என வருந்தும் நிலை.

பாடல் : 2210

Asuka gava — *அசுக ஆறு*
Momidifa nagaru — *நிற இலை நீந்துமே*
Kaduraki no — *கதுரகியின்*
Yama no ko no fa va — *மலை மர இலையே*
Imasi tiriramu — *இப்போது சிதறிடும்*

விளக்கம்

அசுக ஆற்றிலே நிற இலை நீந்துகின்றது. கதுரகியின் மலையிலுள்ள மர இலைகள் இப்போது சிதறுகின்றது.

குறிப்புரை

கதுரகி - இடத்தின் பெயர்.

உணர்வு நிலை

ஆற்றில் மிதந்து வரும் மர இலை கண்டு காலங்கணித்தல்.

பாடல் : 2211

Imo ga fimo — *மனைவி பட்டி*
Toku to musubite — *களைந்திட கட்டியே*
Tatuta yama — *ததுத மலை*
Ima koso momidi — *இப்போதே நிறம்பெறத்*
Fagimete ari kere — *தொடங்கியிருக்குமே*

விளக்கம்

மனைவி பட்டியைக் களைந்திட்டும், கட்டியும் (செலவிற்கு முன்னர்) நின்றிட, ததுத மலை இப்போதே நிறம் பெறத் தொடங்கியிருக்குமே.

குறிப்புரை

செலவில் செல்லுமுன் மனைவியோடிருந்த நிலை.

உணர்வு நிலை

மனைவியை விட்டு வந்த நிலையை எண்ணிப் பார்க்கும் ஆண்.

பாடல் : 2212

Kari gane no	*காட்டுத் தாராவின்*
Nakisi asake yu	*அழுகைத் தொடர்ந்ததால்*
Kasuga naru	*கசுகவினது*
Mikasa no yama va	*மிகச மலையுமே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

காட்டுத் தாராவின் அழுகைக் குரல் தொடர்ந்ததால், கசுகவிலுள்ள மிகச மலை மரங்களின் இலைகளும் நிறத்தைப் பெற்றனவே.

குறிப்புரை

அழுகை தொடர்தல் - அழும் நாள் தொடக்கமாக மலை நிறம் பெற்றது. பறவையின் குரல் காலம் உணர்த்தியது.

உணர்வு நிலை

காலத்தின் வரவை இயற்கை நிலையில் உணரும் பெண் உள்ளம்.

பாடல் : 2213

Konogoro no	*இப்போதினது*
Aka-toki-duyu ni	*விடியல் நேரப் பனி*
Waga yado no	*எனது முன்றில்*
Aki no fagi fara	*காரது பகி வயல்*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

இப்போதைய விடியற்காலை நேரப் பனியிலே எனது முன்றிலிலுள்ள கார் காலப் பகி வயலும் நிறத்தைப் பெற்றதுவே.

குறிப்புரை

காலைப் பனியில் நிறம் பெறல். திடீரெனக் கண்ட காட்சி.

உணர்வு நிலை

பகி வயல் கண்டு வியக்கும் பெண்.

பாடல் : 2214

Yufu sare ba	*மாலை வந்திட*
Kari no koye yuku	*தாராவும் கடந்து செல்*
Tatuta yama	*ததுத மலை*
Sigure ni kifofi	*பெரும்பெயல் தாங்கியே*
Iroduki ni keri	*நிறத்தைப் பெற்றதுவே*

விளக்கம்

மாலை நேரம் வந்திடக் காட்டுத் தாராவும் கடந்து செல்கின்ற ததுத மலை பெரும் மழையைத் தாங்கி, மர இலைகளும் நிறத்தைப் பெற்றன.

குறிப்புரை

மழையால் நிறம் பெறல்.

உணர்வு நிலை

இயற்கை நிலை மாற்றத்தில் காலத்தை உணரும் பெண்.

பாடல் : 2215

Sayo fukete	*இரா வளர*
Sigure na furi so	*பெரும் பெயல் பொழியேல்*
Aki fagi no	*காரது பகி*
Moto fa no momidi	*கீழிலையின் நிறமும்*
TIra maku wosi mo	*சிதறிட வருந்தும்*

விளக்கம்

இரவு வளரும் பெருமழையே பொழியேல், கார் காலத்துப் பகியின் கீழ் இலை நிறம் சிதறிடும். அதனால் வருந்தும்.

குறிப்புரை

இலை சிதறல் வருந்துதல் - குறிப்புப் பொருள். இரவில் மனைவியிடம் போக மழை தடுத்தல்.

உணர்வு நிலை

தனது மனைவியிடம் போவதைத் தடுக்கும் மழையைப் 'பெய்யாதே' என வேண்டும் கணவன்.

பாடல் : 2216

Furu sato no — *எனது ஊரின்*
Fatu momidifa wo — *முதல் நிறத்து இலை*
Tawori moti — *களைந்தெடுத்து*
Kefu zo waga kosi — *இன்றுதான் நானும் வந்தேன்*
Minu fito no tame — *காணா மாந்தர் பொருட்டே*

விளக்கம்

எனது ஊரிலே முதல் நிறமடைந்த இலையைப் பறித்துக் கொண்டு இன்றுதான் நானும் வந்தேன், அதைப் பார்க்காதவர் பார்க்கும் பொருட்டே.

குறிப்புரை

ஊரிலிருந்து வரும்போது கொண்டு வரும் கையுறை.

உணர்வு நிலை

குறிப்பிட்ட காலத்திலே திரும்பி வந்த ஆண் மகன்.

பாடல் : 2217

Kimi ga ife no — *உனது வீட்டின்*
Momidi - fa fayaku — *நிற இலை விரைவில்*
Tiri ni keri — *சிதறியதே*
Sigure no ame ni — *பெரும் பெயல் மழையில்*
Nure ni kerasi mo — *நனைந்திட்டிருக்குதே*

விளக்கம்

உன்னுடைய வீட்டின் நிறம் மாறிய இலைகள் விரைவில் சிதறியதே. பெரும் மழையின் பொழிவிலே நனைந்திட்டிருக்குதே.

குறிப்புரை

மனைவி வீட்டு நிறம் மாறிய இலை கண்டு கூறல். தான் காலம் கடந்து வந்ததை உணர்த்தும் கணவன்.

உணர்வு நிலை

வீடு திரும்பிய கணவன் மனைவியிடம் உரையாடும் நிலை.

பாடல் : 2218

Fito tose ni	*ஒரு ஆண்டிலே*
Futatabi yukanu	*இருமுறை வராது*
Aki yama wo	*காரது மலை*
Kokoro ni akazu	*உள்ளங் கண்டும் நிறையா*
Sugusi turu kamo	*நேரம் கழிந்திடும்கொல்*

விளக்கம்

ஓர் ஆண்டிலே கார் காலம் இருமுறை வராது. கார்கால மலையைப் பார்த்து உள்ளமும் நிறையாது. நேரந்தான் கழிந்திடும்.

குறிப்புரை

இப்பாடலிலே கார் இரு பொருள்களை இணைக்கும் சொல்.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்திருக்கும் பெண்.

பாடல் : 2219

Asifiki no	*அடி இழுக்கும்*
Yamada tukuru ko	*மலை வயல் செய் மகள்*
Fidezu tomo	*கதிராகாது*
Sime dani fafeyo	*தோரணம் கட்டிடுமே*
Moru to sirugane	*காவல் செய்திட என*

விளக்கம்

அடி இழுக்கும் மலையின் சாரல் வயல் செய்கின்ற மகள், கதிர்வரு முன்பே தோரணம் கட்டிடும் வயலைக் காவல் செய்திடவே.

குறிப்புரை

குறிப்புப் பொருள். பருவம் வருமுன்பே மகளைக் காவல் செய்யும் அன்னை. பெண்கள் வயல் செய்யும் மரபு ஆவணம். 'asifiki no' தலையணைச் சொற்றொடர், 'yama'வுடன் அணையும். *3* பாடல் வயல் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

விரும்பிய பெண் வெளிவராததால் நலியும் ஆண் மகன்.

பாடல் : 2220

Sawosika no	*கலைமானது*
Tuma yobu yama no	*துணை அழை மலையின்*
Wokafe naru	*சாரலில் வளர்*
Wasada va karazi	*பசு நெல்லே களையேன்*
Simo va furu tomo	*பனியே பெய்திடினும்*

விளக்கம்

கலைமான் தன்னுடைய துணையை அழைக்கின்ற மலையின் சாரலிலே வளர்கின்ற பசிய நெல்லை, நான் பனி பெய்திடினும் அறுக்கமாட்டேன்.

குறிப்புரை

பனி பெய்து நெல்லைப் பழுதாக்கினாலும் களைவதில்லை என்ற நோக்கம். இளநெல்லாக இருப்பதால் களைவதற்கில்லை.

உணர்வு நிலை

வினைவயிற் சென்றிருக்கும் ஆண் மகன் உணர்வு நிலை.

பாடல் : 2221

Waga kado ni	*எனது முன்றில்*
Moru ta wo mireba	*காவல் வயலைக் காண*
Sawo no uti no	*சவொவில் உள்ள*
Aki fagi susuki	*கார் பகி, சுசுகியை*
Omofoyuru kamo	*நான் நினைந்திடுமேகொல்!*

விளக்கம்

எனது வீட்டிற்கு முன்னால் உள்ள காவல் செய்யப்பட்ட வயலைக் காணும்போது, சவொ ஊரின் கார் காலப் பகியையும் சுசுகியையும் நான் நினைக்கின்றேனே.

குறிப்புரை

தோரணம் கட்டிக் காவல் செய்யப்பட்ட வயல் காண, ஊரது இயற்கைத் தோற்றம் நினைவுக்கு வரல்.

உணர்வு நிலை

காதலன் ஊர் நினையும் காதலி.

பாடல் : 2222

Yufu sarazu	*மாலை தோறுமே*
Kafadu naku naru	*தவளை கத்துங் குரல்*
Miwa gava no	*மிவ ஆற்றது*
Kiyoki se no to wo	*தெளிர் நீர் சுழல் ஒலி*
Kikaku si yosimo	*கேட்டிருத்தல் நன்றாகும்*

விளக்கம்

ஒவ்வொரு நாளும் மாலையில் தவளை கத்துங் குரலை, மிவ ஆற்றினது தெளிந்த நீரோட்டத்திலே கேட்டிருத்தல் நன்றாகும்.

குறிப்புரை

தெளிந்த நீரோட்ட ஒலியில் தவளை கத்தும் ஒலி இணைதல். ஆறு தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதலனை மாலையில் காத்திருக்கும் பெண், இயற்கை ஒலியில் ஆழ்ந்து நிற்றல்.

பாடல் : 2223

Ama no umi ni	*விண்ணது கடல்*
Tuki no fune uke	*நிலாப் புணை தள்ளி*
Katura kadi	*கதுர சவள்*
Kakete koyu miyu	*இணைத்து செலுத்தக்காண*
Toki fito wotoko	*நிலவின் நல் ஆண் மகன்*

விளக்கம்

விண்ணாகிய கடலிலே நிலவெனும் புணை தள்ளி, கதுரவினால் சவள் இணைத்துச் செலுத்தக் காணும் நிலவின் நல் ஆண் மகனே.

குறிப்புரை

நிலவின்மேல் எண்ணம் செலுத்தல் தொடர, 7 பாடல்கள் நிலவு தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

நிலவு கண்ட பெண்ணின் உணர்வு வெளிப்பாடு.

பாடல் : 2224

Kono yo ra va	*இன்றைய இரா*
Sa yo fukenu rasi	*மிகவும் நீளும்போலும்*
Karigane no	*காட்டுத் தாராவின்*
Kikoyoru sora yu	*கேட்டு வானத்தையுமே*
Tuki tati wataru	*நிலா கடந்திடுமே*

விளக்கம்

இன்றிரவு மிக நீளும்போலும். காட்டுத் தாராவின் குரல் கேட்டு வானத்தையும் நிலா கடந்திடுமே.

குறிப்புரை

கேட்டு - குரலைக் கேட்டு என்ற பொருள். வானம் தெளிவாக இருத்தல்.

உணர்வு நிலை

நிலவு கண்டு பல எண்ணும் காதலி.

பாடல் : 2225

Waga seko ga	*என் காதலரே*
Kazasi no fagi ni	*தலையில் சூடு பகி*
Oku tuyu wo	*விழு பனியை*
Sayaka ni mi yo to	*நன்றாகப் பார்க்கவென*
Tuki va teru rasi	*நிலவே ஒளிருமே*

விளக்கம்

என் காதலர் தலையிலே சூடுகின்ற பகியிலே விழும் பனியை 'நன்றாகப் பார்த்திடு' என நிலவும் ஒளிருமே.

குறிப்புரை

நிலவொளியில் பகியின்மேல் விழு பனி அழகு காணல்.

உணர்வு நிலை

கணவன் தலையில் சூடும் பகி மலரை நினையும் மனைவி.

பாடல் : 2226

Kokoro naki	*உள்ளம் இல்லாத*
aki no tuku yo no	*கார் நிலவு இரவில்*
Mono mofu to	*பொருள் நினைந்து*
Ino nerayenu ni	*துயிலின்றி வருத்த*
Teri tutu moto na	*தெளிர் ஒளி செய்யுதே*

விளக்கம்

உள்ளத்தில் இரக்கம் இல்லாத கார் காலத்து நிலவு, இரவிலே நான் துன்பமான பொருளை நினைந்து தூக்கமின்றி வருத்தமடைய, தெளிந்த ஒளியை வீசுதே.

குறிப்புரை

கார் கால நிலவு ஒளி காலுதல்.

உணர்வு நிலை

காதல் நலிவில் நிலவொளியில் துயிலின்றி வருந்தும் பெண்.

பாடல் : 2227

Omofanu ni	*எதிர்பாராமலே*
Sigure no ame va	*பெரும் பெயல் மழையே*
Furi tare do	*பொழிந்ததுவே*
Ama gumo farete	*மழை முகில் கலைய*
Tuku yo sayakesi	*நிலா இரா ஒளிரும்*

விளக்கம்

எதிர்பாராமலே பெரும் வயல் மழை பெய்தது. ஆனால் மழை முகில் கலைய நிலவும் இரவிலே ஒளிர்ந்தது.

குறிப்புரை

மழையால் காதலன் உடனுறையும் என எண்ண நிலா தோன்றியதே. நிலவை விரும்பாத நிலை.

உணர்வு நிலை

காதலன் திரும்பிப் போக வேண்டுமேயென நினையும் பெண்.

பாடல் : 2228

Fagi no fana — *பகியின் மலர்*
Saki no wowori wo — *அலர்ந்து தாழ்ந்திடுவதை*
Miyo to kamo — *காண் என்றிடுங்கொல்*
Tuku yo no kiyoki — *நிலா இரா ஒளியே*
Kofi masaraku ni — *நலிவும் பெருகிடும்!*

விளக்கம்

பகியின் மலர் அலர்ந்து தாழ்ந்திருப்பதைப் பார் என்று சொல்லுமோ. நிலவின் இரவு ஒளியால் காதல் நலிவும் பெருகிடுமே.

குறிப்புரை

பகி மலர் நிலவொளியில் காண்பது அழகு. இங்கே அழகான காதலியை நிலவில் காணல் என்ற குறிப்புப் பொருள் தரும்.

உணர்வு நிலை

நிலவொளியில் காதலி நினைவால் வாடும் காதலன்.

பாடல் : 2229

Sira tuyu wo — *வெண் பனியையே*
Tama ni nasitaru — *முத்துப் போலாக்கிடுமே*
Naga duki no — *நீண்ட மாதத்து*
Ari ake no tuku yo — *விடியலின் நிலவே*
Miredo akanu kamo — *பார்த்தும் நிறைந்திடுங்கொல்!*

விளக்கம்

வெண்ணிறமான பனியையே முத்துப் போலாக்கிடுவேன். நீண்ட ஒன்பதாம் மாதத்து வைகறை நிலவைப் பார்த்து உள்ளமும் நிறையுமோ! நிறையாதே.

குறிப்புரை

வெண் பனியில் முத்துச் செய்தல்.

உணர்வு நிலை

காதலன் பிரிவால் வைகறைவரை தூங்காது நலியும் காதலி.

பாடல் : 2230

Kofitutu mo *நலிந்திட்டுமே*
Inaba kaki wake *நெல் இலை இடையிலே*
Ife wore ba *குடில் இருக்க*
Tomosiku mo arazu *அருமையும் இன்றியே*
Aki no yufu kaze *கார் மாலைக் காற்று வீசும்*

விளக்கம்

காதலிலே நலிந்து நெற்பயிரது இலை நடுவிலே குடிலில் நான் இருக்க, அருமை எதுவுமின்றே கார் காலத்து மாலைக் காற்றும் வீசும்.

குறிப்புரை

குடிலில் இருப்பதால் காற்று வீசுவது குறைவதில்லை. தனிமை நிலை கூறல் 3 பாடல் தொடர, காற்றைத் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

வினை வயிற் பிரிவால் நலியும் ஆண் மகன்.

பாடல் : 2231

Fagi no fana *பகியின் மலர்*
Saki taru nobe ni *அலர்ந்திடும் வெளியில்*
Figurasi no *பிகுரசியின்*
Naku naru nabe ni *குரல் ஒலி இடையில்*
Aki no kaze fuku *காரது காற்று வீசும்*

விளக்கம்

பகியின் மலர் அலர்ந்திடும் வெளியில், பிகுரசியின் குரலும் ஒலித்திடுகையில் கார் காலக் காற்று வீசும்.

குறிப்புரை

குளிர்க் காற்றிடையே வரும் குரல் தனிமையுணர்வு தரல்.

உணர்வு நிலை

காதலன் வரவைக் காத்திருக்கும் பெண். தனிமையை இயற்கை நிலைகளும் மிகுவித்தல்.

பாடல் : 2232

Aki yama no	*கார்து மலை*
Ko no fa mo imada	*மர இலையும் இன்னும்*
Momi tane ba	*நிறம் பெறாவே*
Kesa fuku kaze va	*காலையில் வீசும் காற்றே*
Simo mo okinu beku	*பனியும் விழுந்திடும்*

விளக்கம்

கார் காலத்து மலையின் மர இலையே இன்னும் நிறம் பெறவில்லையெனினும், காலையில் குளிரான காற்று வீசும். பனியும் மரங்களில் விழுந்திடும்.

குறிப்புரை

மர இலை நிறம் பெறாதபோதும் பனி விழும் அறிகுறி.

உணர்வு நிலை

இயற்கையை ஊன்றி நோக்கும் பெண்.

பாடல் : 2233

Taka matu no	*தகமதுவின்*
Kono mine no se ni	*இந்த உச்சி ஒடுக்கம்*
Kasa tatete	*குடையாய் நின்று*
Miti sakari taru	*நிறைந்து வளர்ந்திட்டு*
Aki no ka no yosa	*கார்து மணம் தரும்*

விளக்கம்

தகமது மலையின் இந்த உச்சியின் ஒடுக்கத்திலே குடைபோல நின்று அடர்ந்து வளர்ந்து கார் கால மணம் தரும் *(காளான்)*.

குறிப்புரை

கார் காலத்தில் மணம் தரும் காளான் தோற்றம். காளான் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காளான் மணம் காலத்தை உணர்த்தக் காணுதல்.

பாடல் : 2234

Fito fi ni va	*ஒரு நாளிலே*
Tife siku siku ni	*ஆயிரம் முறை முறை*
Waga kofuru	*நான். நலிந்திடும்*
Imo ga atari ni	*காதலி வாழ் பக்கமே*
Sigure fure mimu	*பெரிதாய்ப் பெய் காணவே*

விளக்கம்

ஒரு நாளிலே ஆயிரம் முறை மீண்டும் மீண்டும் அவளை நினைந்து நான் நலிந்திடுவேன். என் காதலி வாழ்கின்ற பக்கம் பெருமழையே பெய். அதை நான் காண விரும்புகிறேன்.

குறிப்புரை

கார் மழை காண விரும்பல். 4 பாடல் மழை தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதலி நினைவால் கார் கால மழை காண விரும்பும் காதலன் நிலை.

பாடல் : 2235

Aki ta karu	*கார் வயல் களை*
Tabi no ifori ni	*செலவுக் குடிலிலே*
Sigure furi	*பெயல் பொழிந்து*
Waga sode nurenu	*என் கையாடை நனையும்*
Fasu fito nasi ni	*உலர்த்த யாரும் இன்றி*

விளக்கம்

கார் காலத்து வயல் களைகின்ற என் செலவுக் குடிலிலே பெரும்பெயல் பொழிய, என் கையாடையும் நனையும். அதை உலர்த்த யாரும் இல்லையே.

குறிப்புரை

செலவுக் குடில் - வினைவயிற் செல்லும்போது தங்க அமைக்கும் சிறுகுடில். தனிமை நிலை.

உணர்வு நிலை

காதலியை விளைமேற் கொண்டிருக்கையில் எண்ணி நலியும் ஆண்.

பாடல் : 2236

Tama dasuki	*மணிக் கரையின்*
Kakenu toki nasi	*நினையா, நேரம் இன்றி*
Waga kofi va	*என் நலிவுமே*
Sigure si furaba	*பெரும் பெயல் பொழியின்*
Nure tutu mo yukamu	*நனைந்திட்டுமே செல்லும்*

விளக்கம்

ஆடையின் மணிக்கரைபோல நினையாத நேரமே இல்லை. எப்போதும் நலியும் நானே, பெரும் மழை பொழிந்தாலும் நான் நனைந்துமே அவளிடம் செல்லும்.

குறிப்புரை

எப்போதும் நினைத்திருத்தல் - மணிக்கரைபோன்ற தொடர்பான நினைவு. இப்பாடலிலே 'Tama-dasuki' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'kake' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலியிடம் செல்ல நினைத்த காதலன் பெருமழைப் பொழிவையும் கருதாது செல்ல விரும்பல்.

பாடல் : 2237

Momidi fa wo	*காரது இலை*
Tirasu sigure no	*சிதறு பெரும் பெயலும்*
Furu nabe ni	*பொழி நேரமே*
Yosafe zo samuki	*இரவுதான் குளிரும்*
Fitori si nureba	*தனித்து உறங்கிட*

விளக்கம்

கார் காலத்து இலை சிதறிப் பெரும் மழை பொழிகின்ற நேரம், தனித்து உறங்கிட இரவுதான் குளிராய் இருக்கும்.

குறிப்புரை

கார் கால மழைப் பொழிவின் குளிர்நிலை தனிமை கூட்டும்.

உணர்வு நிலை

கார் காலக் குளிரில் நலியும் காதலி நிலை.

பாடல் : 2238

Ama tobu ya	*விண் பறந்திடு*
Kari no tubasa no	*தாராவின் தூவியிலே*
Ofofi ba no	*மூடியிருக்கும்*
Iduku morite ka	*எங்கு இடம் உண்டுகொல்*
Simo no furi kemu	*உறைபனி விழவே*

விளக்கம்

விண்ணிலே பறந்திடு தாராவின் மூடியிருக்கும் தூவியிலே, எங்கு இடமிருந்ததோ அதற்கூடாக உறை பனியும் விழுவதற்கே.

குறிப்புரை

தூவி - மூடிப் பரந்த சிறகு. உறை பனி தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

இயற்கைத் தோற்ற நிலையை நுண்ணிதாக நோக்கல்.

பாடல் : 2239

Aki yama no	*கார் மலையது*
Sitabi ga sita ni	*வண்ண இலையடியில்*
Naku tori no	*நரலும் புள்ளின்*
Kowe dani kikaba	*கால்போலக் கேட்டிட*
Nani ka nage kamu	*ஏதுகொல் நலியுமே*

விளக்கம்

கார் காலத்து மலையிலே வண்ணம் பெற்றிருக்கும் மரத்து இலையின் அடியிலே குரல் கொடுக்கின்ற பறவையின் குரலைப் போன்ற அவளுடைய குரலையும் நான் கேட்க முடிந்தால், ஏன் நான் உள்ளம் வருந்தி நலிய வேண்டும்?

குறிப்புரை

மலையடிவாரத்து இலைகளின் நிறம் கார்காலம் வந்ததைக் காட்டும். தொடர்ந்த 5 பாடல்கள் கார் காலக் காதற் பாடல்கள்.

உணர்வு நிலை

அன்புக்குரியவளின் குரலைக் கேட்க விரும்பும் ஆண் மகன் நிலை.

பாடல் : 2240

Ta so kare to	*யார்தான் அவன் என்*
Ware wo na tofi so	*றென்னையே வினவாதே*
Naga duki no	*ஒன்பதாம் திங்கள்*
Tuyu ni nure tutu	*பனியில் நனைந்துமே*
Kimi matu ware wo	*அவனைக் காக்கும் என்னை*

விளக்கம்

'யார்தான் உன் காதலன்' என்று என்னைக் கேளாதே. ஒன்பதாம் மாதத்துப் பனியிலே நான் நனைந்து நின்றே அவனைக் காத்திடுகின்றேன்.

குறிப்புரை

காத்து நிற்பவளுக்கே அவனுடைய பெயர் தெரியாது. அதனால் கேளாதே எனப் பணிவாகக் கூறல்.

உணர்வு நிலை

தான் விரும்பியிருப்பவனைக் காண்பதற்காக வெளியே சென்று நீண்ட நேரம் காத்து நிற்கும் பெண்.

பாடல் : 2241

Aki no yo no	*காரது இரவில்*
Kiri tati watari	*புகார் நின்று கடக்கும்*
Oforoka ni	*மங்கல் பொழுதில்*
Ime ni zo mituru	*கனவில்தான் கண்டிடும்*
Imo ga sugata wo	*காதலி உருவையே*

விளக்கம்

கார் காலத்து இரவிலே புகார் எழுந்து சென்று கடந்து போகும் மங்கற் பொழுதிலே, கனவினிலோ நான் கண்டேன்; என்னுடைய காதலியின் மங்கலான உருவையே.

குறிப்புரை

மங்கற் பொழுதிற் கண்டமை, கனவில் கண்டதுபோல உடன் மறைந்துவிட்ட தோற்றம்.

உணர்வு நிலை

உள்ளம் விரும்பும் காதலியை நேரிலே காண விரும்பும் ஆண் மகன்.

பாடல் : 2242

Aki no no no	*கார் வயலது*
Wobana ga ure no	*வொ மலரின் பக்கமாய்*
Ofi nabiki	*உயர்ந்து சாயும்*
Kokoro wa imo ni	*உள்ளமே காதலிமேல்*
Yori ni keru kamo	*அந்நிலையாகும்கொல்லோ!*

விளக்கம்

கார் காலத்து வயலிலே மலர்ந்திருக்கின்ற வொ மலர் உயர்ந்து ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருக்கும். அந்த மலரைப்போல என் உள்ளமும் என் காதலியின் நினைவிலே நலிந்து அவள் பக்கமாகவே சாய்ந்து விட்டது.

குறிப்புரை

காற்றிலே வொ மலர் ஒரே பக்கமாகச் சாய்தல். காதலன் உள்ளம் காதலி நினைவிலே சாய்தல்.

உணர்வு நிலை

வொ மலரின் தன்மையோடு தந்நிலை ஒப்பிடும் காதலன்!

பாடல் : 2243

Aki yama ni	*காரது மலை*
Simo furi ofofi	*பனி பெய்து மூடி*

Ko no fa tiri — *மர இலை உதிர்*
Tosi va yuku tomo — *ஆண்டே கழிந்திடினும்*
Ware wasureme ya — *நான் மறந்திடுவேனா!*

விளக்கம்

கார் காலத்திலே மலையிலே பனி நிறையப் பெய்து மூடிட, மரங்களின் இலைகள் உதிர்ந்து ஆண்டு பல கழிந்தாலும், நான் உன்னை மறந்திடுவேனோ!

குறிப்புரை

இயற்கையின் தோற்ற நிலை வேறுபாட்டில் ஆண்டின் கழிவை உணர்ந்த காலம்.

உணர்வு நிலை

பல ஆண்டுகளாகக் காதலி நினைவில் நலியும் காதலன்.

பாடல் : 2244

Suminoye no — *சுமிநொயெயின்*
Kisi wo ta ni fari — *கரை வயலின் புது*
Mikisi ine no — *விதை நெல்லது*
Sate karu made ni — *கதிர் முற்று வரையில்*
Afanu kimi kamo — *காணேன் உன்னையுமே நான்*

விளக்கம்

சுமிநொயெயின் கரையில் வயலிலே விதைத்த புதிய விதை வளர்ந்து நெல்லாகிக் கதிரும் தள்ளி, அதுவும் நன்றாக முற்றிவிட்டது. இக்காலப் பகுதியிலே நான் உன்னை நேரிலே காணவில்லையே.

குறிப்புரை

சுமிநொயெ-இடப்பெயர். அங்குள்ள ஆற்றங்கரையில் புது வயல் செய்தல். தொடர்ந்து *8* பாடல்கள் வயல் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

வயல் செய்யும் வினைவயிற் சென்றுள்ள ஆண், அன்புக்குரியவளை எண்ணி இரங்கல்.

பாடல் : 2245

Tati no siri	*வாளின் முனை நேர்*
Tama maki tawi ni	*மணி விதை வயலில்*
Itu made ka	*என்று வரைகொல்*
Imo wo afimizu	*காதலியைக் காணாமே*
Ife kofi woramu	*வீடு நினைந்து நலியும்*

விளக்கம்

வாளின் முனைபோல ஒளி வீசும் புதிய நெல் மணி விதைத்த வயலில், எப்போதுவரைக்குமோ நான் காதலியை நேரிலே காணாமலே வீட்டை நினைத்து வருந்துவதோ!

குறிப்புரை

இப்பாடலிலே 'Tati no siri' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'tama' என்னுஞ் சொல்லுடன் அணையும் 'தம மகி தவி', ஓரிடத்தின் பெயரெனவும் சில உரையாளர் கருதுவர்.

உணர்வு நிலை

வினைவயிற் சென்ற ஆண் மகன் வீடு நினைந்து வருந்தல்.

பாடல் : 2246

Aki no ta no	*கார் வயலது*
Fo no fe ni okeru	*கதிரின் மேலே விழும்*
Sira tuyu no	*வெண் பனிபோலக்*
Kenubeku ware va	*கரைந்திடினும் நானே*
Omofoyuru kamo	*அவளை நினையும்கொல்*

விளக்கம்

கார் காலத்து வயலின் கதிரின்மேலே விழுகின்ற வெண்பனி விரைவிலே கரைந்துவிடும். அதுபோல நானும் விரைவிலே இறந்திடக் கூடும் எனினும், அவளையே நினைத்துக்கொண்டிருப்பேன்.

குறிப்புரை

எதிர்ப் பக்கமிருந்து அன்பு செலுத்தாத நிலை. பனி மறையும். என் நினைவாலும் பயன் ஏதுமில்லை. எனினும் தொடர்ந்து நினைக்கும்.

உணர்வு நிலை

ஒருதலை நிலையான காதல் நினைவும், நலியும் பெண்ணின் உள்ளமறியாது விரும்பும் ஆண்.

பாடல் : 2247

Aki no ta no	*கார் வயலது*
Fo muki no yoreru	*கதிரின் சாய்வுபோல*
Katayori ni	*ஒரு பக்கமே*
Ware va mono omofu	*நான் காதலை நினையும்*
Ture naki mono wo	*துணையிலாப் பொருளே*

விளக்கம்

கார் காலத்து வயலிலே விளைந்துள்ள நெற்கதிரின் சாய்வு எப்போதும் ஒரு பக்கமாகவே இருக்கும். அதுபோல நானும் விரும்புகின்ற பெண்ணை ஒரு பக்கமாக நினைத்துக் கொண்டிருக்கின்ற துணையில்லாத பொருளானேன்.

குறிப்புரை

துணையிலாப் பொருள் என்பது இருநிலைப் பொருள். ஒன்று, நலியும் ஆண்; மற்றது, அவனை நினையாத பெண். ஆனால் 'பொருள்' என்பது துன்பமான நினைவுடையவரையே குறிக்கும்.

உணர்வு நிலை

பெண் உள்ளமறிய அவாவுறும் ஆண் நிலை.

பாடல் : 2248

Aki ta karu	*கார் வயல்களை*
Kari fo wo tukuri	*சிறுகுடிலைச் செய்து*
Ifori site	*காவல் செய்திட்டே*
Aruramu kimi wo	*இருக்கும் உன்னையுமே*
Miyu yosi mo ga mo	*காண விரும்பும் நானும்*

விளக்கம்

கார் காலத்தில் விளைந்த வயலைக் காவல் செய்வதற்காகச் சிறுகுடில் செய்து தங்கியிருக்கின்ற உன்னை, நான் அங்கு வந்து நேரிற் காண விரும்புகிறேன்.

குறிப்புரை

வயலில் செய்யும் காவற் குடில் சில நாள்கள் தங்குவதற்காகச் செய்யப்படும். கதிரறுப்பு முடிய குடிலும் கைவிடப்படும்.

உணர்வு நிலை

தன் கணவனை அவன் காவற் பணியிலே ஈடுபட்டிருக்கும் பாங்கினைக் காண விரும்பும் மனைவி.

பாடல் : 2249

Tatu ga ne no	*நாரை ஒலியும்*
Kikoyuru tawi ni	*கேட்கும் வயலிடையே*
Ifori site	*குடில் செய்திட்டே*
Ware tabi ni ari to	*நான் தங்கிச் செல்வதையே*
Imo ni tuga koso	*காதலிக்கும் சொல்வாயே*

விளக்கம்

நாரை ஒலி கேட்கின்ற வயலிடையே நான் சிறிய குடில் செய்து இரவு தங்கிப் போவதை, நாரையே, நீ போய் என் காதலிக்கும் சொல்வாயோ.

குறிப்புரை

செலவிடைக் குடிலில் தங்கிப் போவதைச் செய்தியாக மனைவிக்கே அனுப்பும் வழக்கம் உண்டு. பறவையிடம் தூது சொல்லும் மரபு.

உணர்வு நிலை

வழிச் செலவிலே செல்லும்போது மனைவியுடன் தொடர்பு கொள்ள விரும்பும் கணவன்.

பாடல் : 2250

Faru gasumi	*வேனிலின் புகார்*
Tanafiku tawi ni	*தவழும் வயலிலே*
Ifo tukite	*குடிலும் செய்தே*
Aki ta karu made	*கார் வயல் களையும்வரை*
Omofasimu raku	*காதலியை நினையும்*

விளக்கம்

வேனிற் காலத்திலே புகார் தவழுகின்ற வயலிலே தங்குவதற்காகச் சிறு குடிலும் செய்தே, கார் கால வயலின் கதிர் அறுக்கின்ற காலம் வரையும் காதலியை நினைந்தே வாழும்.

குறிப்புரை

வேனிற் காலம் தொடக்கம் கார் காலம்வரை கால நீட்டம். மனைவி வீட்டிலிருக்கின்றாள்.

உணர்வு நிலை

வினை நடுவே மனைவி நினைவால் வருந்தும் கணவன்.

பாடல் : 2251

Tatibana wo	*ததிபநவின்*
Mori be no sato no	*மொரிபெ ஊரினது*
Kado tawase	*வாயில் வயல் நெல்*
Karu toki suginu	*கொய் பொழுது கழியும்*
Kozi to surasimo	*வாராதிருப்பர்போலும்*

விளக்கம்

ததிபந (தோடை) மரங்கள் நிறைந்த மொரிபெ ஊரின் வாயில் வயலிலே விளைந்த நெல்லை அறுக்கின்ற காலம் கழிந்தது. இன்னமும் கதிரறுப்போர் வாராதிருக்கின்றாரே.

குறிப்புரை

ததிபந-தோடை மரம். 'Tati bana wo' என்னுஞ் சொற்றொடர், இப்பாடலிலே தலையணைச் சொற்றொடராகும். 'Mori' என்னுஞ் சொல்லுடன் அணையும். மொரிபெ-ஊரின் பெயர்.

உணர்வு நிலை

வயலிற் கதிரறுப்பவர்களைக் காத்து நிற்கும் பெண். கதிர் அறுப்பு முடியின் காதலனுடன் இணையும் காலமும் விரைவில் வரும்.

பாடல் : 2252

Aki fagi no	*கார் பகியினது*
Saki tiru nobe no	*மலர் உதிர் சாரலின்*

Yufu tuyu ni	*மாலைப் பனியில்*
Nure tutu kimase	*நனைந்துமே வருக*
Yo va fukenu tomo	*இரவே வளரினும்*

விளக்கம்

கார் காலத்துப் பகியின் மலர்கள் உதிர்கின்ற சாரலிலே மாலைக் காலப் பனியிலே நனைந்துமே வந்திடுக. இரவு வளர்ந்து சென்றாலும் நீயே வருக.

குறிப்புரை

நயமாக வரும்படி வேண்டல். பெண்ணினுடைய பாடல். இரவு எந்நேரமாயினும் வருக. *8* பாடல்கள் தொடர்ந்து பனி தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதலனோடு இரவில் இணைய வேண்டும் காதலி.

பாடல் : 2253

Iro dukafu	*நிறம் பெயரும்*
Aki no tuyu zimo	*கார் காலம், வீழ் பனியே*
Na furi sone	*பெய்யாதே நீயும்*
Imo ga tamoto wo	*காதலி கையாடையை*
Makanu koyofi va	*அணையா இன்றிரவே*

விளக்கம்

மரங்களின் இலைகள் நிறம் பெயர்கின்ற கார் காலத்தில் வீழ்கின்ற பனியே! நீயும் பெய்யாதே. ஏனெனில், இன்றிரவு நான் என்னுடைய காதலியின் கையாடையை அணையாக்காமல் தனித்து உறங்குகிறேனே.

குறிப்புரை

தனித்துறங்கும்போது பனி பெய்யின் குளிர் கூடும். எனவே பெய்யாதிருக்குமாறு பனியை வேண்டல்.

உணர்வு நிலை

காதலியைப் பிரிந்து தனித்துறங்கும் காதலன் பிரிவுத் துன்பம்.

பாடல் : 2254

Aki fagi no	*காரது பகி*
Ufe ni oki taru	*மேலே விழுந்து கரை*
Sira tuyu no	*வெண் பனிபோலக்*
Ke kamo sinamasi	*கரைந்திறந்திடுவேன்*
Kofi tutu arazu fa	*காதலுக்கு ஏங்காதே*

விளக்கம்

கார் காலத்திலே பகி மலர் மேலே விழுந்து கரைகின்ற வெண்ணிறப் பனிபோலக் காதலுக்கு ஏங்காதே. நானும் கரைந்து இறந்திடுவேன்.

குறிப்புரை

கரைதல் – மறைதல். இவ்வுலகத்திலிருந்து மறைதல். பிரிவுத் துயரின் உச்சநிலை வெளிப்பாடு.

உணர்வு நிலை

காதலன் பிரிவைத் தாங்க முடியாமல் இறந்துவிட எண்ணுகின்ற காதலி.

பாடல் : 2255

Wago yado no	*எனது முன்றில்*
Aki fagi no fe ni	*காரது பகி மேலே*
Oku tuyu no	*விழு பனியின்*
Itiziroku simo	*வெண்ணிறமாகிடுமோ*
Ware kofime ya mo	*என் காதல் கண்களுமே*

விளக்கம்

எனது வீட்டு முன்றிலிலுள்ள கார்காலப் பகி மலர்மேலே விழுகின்ற பனியின் வெண்ணிறமாக' என் காதலில் நலிகின்ற கண்களும் தோற்றந் தருமோ? (அதனால் மாந்தரும் என் காதலை அறிந்திடுவரோ!)

குறிப்புரை

உள்ளத்துக் காதல் நிலையைக் கண்கள் வெளிப்படுத்தும் தன்மையன.

உணர்வு நிலை

மாந்தர் கண்களுக்கு உள்ளத்துக் கரந்திருக்கும் காதல் தெரிய வருமோ என அஞ்சும் நிலை.

பாடல் : 2256

Aki no fo wo — *காரது கதிர்*
Sino ni osinabe — *மடியுமாறு தள்ளி*
Oku tuyu no — *விழு பனியின்*
Ke kamo sinamasi — *கரைந்திறந்திடுவேன்*
Kofi tutu arazu fa — *காதலுக்கு ஏங்காதே*

விளக்கம்

கார் காலத்திலே நெல்லின் கதிர் மடியுமாறு தள்ளி, அதன்மேலே விழுகின்ற பனி கரைவதுபோல, நானும் காதலுக்காக ஏங்காதே கரைந்திருந்திடுவேன்.

குறிப்புரை

பனி பெய்யும் நிலையால் கதிர் மடிதல். ஆனால் கதிர் அழியாது. பனி கரைந்து மறையும் தன்மையது.

உணர்வு நிலை

காதலி பிரிவு தாளாது வருந்தும் ஆண் மகன்.

பாடல் : 2257

Tuyu zimo ni — *வீழ் பனியிலே*
Koromo de nurete — *ஆடைக் கரை நனைந்தே*
Ima dani mo — *இப்பொழுதேனும்*
Imo gari yuka na — *காதலி மனை செல்வேன்*
Yo wa fukenu tomo — *இரவே வளரினும்*

விளக்கம்

வீழ்கின்ற பனியிலே எனது ஆடைக் கரை நனைய இரவு வளர்ந்து வந்திட்டாலும், இப்பொழுதேனும் என் காதல் மனையாள் வீடு செல்ல வேண்டும்.

குறிப்புரை

பனியில் நனைதல் தொலைவைக் காட்டும். இரவில் மனைவி வீடு செல்லும் ஜப்பானியர் குடும்ப வாழ்க்கை நடைமுறை பாடலிலே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

உணர்வு நிலை

காதல் மனையாளுடன் இணையத் துடிக்கும் ஆணின் ஆவல் நிலை.

பாடல் : 2258

Aki fagi no	*காரது பகி*
Yeda mo towowo ni	*கிளையும் சரிந்திட*
Oku tuyu no	*விழு பனியின்*
Ke kamo sinamasi	*கரைந்திறந்திடுவேன்*
Kofi tutu arazu fa	*காதலுக்கு ஏங்காதே*

விளக்கம்

கார் காலத்திலே பகியின் கிளையும் சரிந்திடுமாறு பெய்யும் பனி போலக் காதலுக்கு ஏங்காதே. நானும் கரைந்து இறந்திடுவேன்.

குறிப்புரை

காதல் துன்பத்தைத் தாள முடியாமல் இறக்க எண்ணல்.

உணர்வு நிலை

பிரிவு பொறுக்க முடியாமல் இறப்பது மேலென எண்ணும் காதல் வயப்பட்ட உள்ளத்து நிலை.

பாடல் : 2259

Aki fagi no	*காரது பகி*
Ufe ni sira tuyu	*மேலே வெண்ணிறப் பனி*
Oku goto ni	*வீழ் நிலை தோறும்*
Mitutu zo sinobu	*காணவே எண்ணுகிறேன்*
Kimi ga sugata wo	*நின்னக உருவையே*

விளக்கம்

கார் காலத்திலே பகிமேலே வெண்ணிறப் பனி வீழ்கின்ற நிலையைக் காணுந்தோறும், உன்னுடைய உருவத்தையே நான் காண விரும்புகிறேன்.

குறிப்புரை

பனி வீழும்போது உருவைக் காண விரும்பல். அவன் வரவை விரும்பல்.

உணர்வு நிலை

காலம் கடப்பது கண்டு விரைவில் காண விரும்பல். பனிப்பெயலில் காதலன் வரும் தோற்றத்தை எண்ணல்.

பாடல் : 2260

Wagimoko va	*என் காதலியே*
Kinu ni aranamu	*ஓர் ஆடையாகிடினே*
Aki kaze no	*காரது காற்றின்*
Samuki konogoro	*குளிரான இப்போது*
Sita ni kima si wo	*ஆடையுள் அணியுமே!*

விளக்கம்

என் காதலியே ஓர் ஆடையாகிவிட்டால், கார் காலக் காற்று வீசுகின்ற இக் குளிரான பொழுதில், நான் என் உள்ளாடையாக அணிந்திடுவேன்.

குறிப்புரை

காதலியை உள்ளாடையாக அணிய எண்ணுதல், உடன் சேர விரும்பல் தொடர இரு பாடல்கள் காற்றுடன் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

குளிரான பொழுதிலே காதலியுடன் இணைய எண்ணும் ஆண் உள்ளம்.

பாடல் : 2261

Fatuse kaze	*பதுசெ காற்று*
Kaku fuku yoru fa	*கடிதாய் வீசு இரா*

Idu made ka	*என் று வரைகொல்*
Koromo katasiki	*ஆடை ஒன்றே விரித்து*
Waga fitori nemu	*நான் தனியே உறங்கும்*

விளக்கம்

பதுசெயிலிருந்து காற்று இரவிலே மிகவும் குளிராய் வீசுகிறது. நான் எப்போது வரைக்கும் ஓர் ஆடையையே விரித்துத் தனியாக உறங்குவதோ!

குறிப்புரை

ஓர் ஆடை - தன்னுடைய ஆடையை மட்டும் விரித்துறங்கல்; பதுசெ - இடத்தின் பெயர்.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்துத் தனியே உறங்கும் காதலி.

பாடல் : 2262

Aki fagi wo	*கார் து பகி*
Tirasu nagame no	*சிதறும் விடா மழை*
Furu koro va	*பொழி பொழுதே*
Fitori oki wite	*தனியே எழுந்து வாழ்*
Kofuru yo zo ofoki	*நலியிராதான் பல*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலரைச் சிதறிப் பெய்யும் தொடர்ந்த மழை பெய்கின்ற பொழுதிலே, தனியே உறக்கம் விட்டு எழுகின்ற வாழ்க்கையால் நான் நலிகின்ற இரவும் பலவே.

குறிப்புரை

விடா மழை காதலன் வரவு தடுக்கும் தொடர, இரு பாடல் மழை தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

மழைக் காலம் தனித்துறங்கி எழும் பெண்ணின் நலிவுள்ளம்.

பாடல் : 2263

Naga duki no — *ஒன்பதாம் திங்கள்*
Sigure no ame no — *பெரும் பெயல் மழை*
Yama giri no — *மலைப் புகாரின்*
Ibuseki waga mune — *புகையும் என் உள்ளமே*
Tare wi miba yamamu — *யாரைக் காணில் அடங்கும்?*

விளக்கம்

ஒன்பதாம் திங்கள் பெய்கின்ற பெருமழையின் பின்னர் மலைமீது படரும் புகார்போல என் உள்ளம் புகையும். அது யாரைக் கண்டால் அடங்குமோ?

குறிப்புரை

ஒன்பதாம் திங்கள் பெய்யும் மழை 'sigure' எனப்படும் பெருமழை.

உணர்வு நிலை

மழையால் காதலன் வரவு பிந்துவதால் நலியும் பெண்ணுள்ளம்.

பாடல் : 2264

Koforogi no — *காதல் கரும்பு*
Mati yoro koburu — *காத்துக் களிப்புற்றிடும்*
Aki no yo wo — *காரது இரா*
Nuru sirusi nasi — *உறக்கம் பயன் இன்று*
Makura to ware va — *அணையுடன் நானுமே*

விளக்கம்

கார் காலத்து இரவைக் காத்திருந்த காதல் கரும்புகள் களிப்புற்றிருக்கும் இரவின் உறக்கம் பயன் தராது. நான் என் அணையுடன்தான் இருக்கிறேன்.

குறிப்புரை

காதல் கரும்பு-கார் கால இரவில் இணைந்து ஒலிக்கும் வண்டு. சிள்வண்டு; தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

இரவு உறங்காமல் நலியும் பெண் உள்ளம் தூக்கம் வராமல் அணையுடன் இருக்கும் பெண். தனியே இருக்கும் பெண்.

பாடல் : 2265

Asa gasumi	*காலைப் புகாரில்*
Kafi ya ga sita ni	*காவல் குடில் அடியில்*
Naku Kafadu	*கத்தும் தவளை*
Kowe dani kikaba	*குரல் மட்டும் கேட்பின்*
Ware kofime ya mo	*என் காதல் தணியுமோ*

விளக்கம்

காலைப் பொழுதின் புகாரிலே காவல் குடிலின் அடியில் தவளை கத்தும். தவளையின் குரல்போன்ற காதலியின் குரலை மட்டும் கேட்டால் என் காதல் தணியுமோ? *(இல்லை)*

குறிப்புரை

காவல் குடில் - காட்டு மிருகங்களிடமிருந்து பயிர் காக்கத் தங்குவதற்கு அமைக்கும் சிறு குடில். தவளையின் குரல் காதலி குரல் ஒத்தது. தவளைக் குரல் தொடர்புறுத்திய பாடல். 'asagasumi' தலையணைச் சொற்றொடர். 'kafiya' வுடன் அணையும்.

உணர்வு நிலை

வினை நடுவே காதலி நினைவால் நலியும் ஆண் மகன்.

பாடல் : 2266

Idete inaba	*செலவில் சென்றிட*
Ama tobu kari no	*வானில் பறக்கும் வாத்து*
Nakinu bemi	*குரலில் அழும்*
Kefu kefu to ifu ni	*இன்று இன்று எனக் கூற*
Tosi zo fe ni keru	*ஓர் ஆண்டுதான் கழியும்*

விளக்கம்

நான் செலவிலே சென்றிட்டேன். வானில் பறக்கும் வாத்தின் குரல்போல அவளும் அழும். இன்று வரும், இன்று வரும் எனக் கூறிக் காத்திட ஓர் ஆண்டுதான் கழிந்ததே.

குறிப்புரை

காதலி வானில் பறக்கும் வாத்தின் குரலில் அழுமென எண்ணல். வாத்து தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

வீட்டு நிலையில் காதலியின் நலிவை எண்ணும் ஆண் உள்ளம்.

பாடல் : 2267

Sawo sika no	*கலை மானுமே*
Asa fusu wo no no	*காலை புல்மேய் வெளியின்*
Kusa wakami	*இளம் புல்லிலே*
Kakurofi kanete	*மறைதலும் அரிதே*
Fito ni sirayu na	*மாந்தர் அறிய விடேல்*

விளக்கம்

காலைப் பொழுதிலே புல்வெளியிலே புல் மேய்கின்ற கலைமானும் அந்த இளம் புல்லிலே தன்னை மறைத்துக் கொள்வது கடினம். எம்முடைய காதல் தொடர்பையும் பிற மாந்தர் அறியச் செய்யாதே.

குறிப்புரை

இளம் புல்லில் மான் தோற்றம் மறையாது. இளம் புல் இங்கே நெடிது வளராத நிலை குறிக்கும். மான் தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

பிறர் அறியாவண்ணம் கரந்த காதல் தொடர்பு கொண்டுள்ள பெண்ணின் உள்ள நிலை.

பாடல் : 2268

Sawo sika no	*கலை மானது*
Wo no no kusa busi	*இள வயல் புல் மறை*
Itiziro ku	*வெளிப்படல்போல்*
Waga tofanaku ni	*நான் சொல்லாவிடத்துமே*
Fito no sireraku	*மாந்தர் அறிந்தனரே*

விளக்கம்

கலை மானது இளவயல் புல்லிலே மறைகின்ற நிலை எல்லாரும் அறிய வெளிப்பட்டுவிடும். அதுபோல, எமது காதல் தொடர்பைப் பற்றி நான் யாரிடமும் சொல்லாதவிடத்தும் மாந்தர் அறிந்து கொண்டனரே.

குறிப்புரை

இருவரும் சொல்லாதவிடத்தும் பிறர் அறிந்த நிலை. மான் தொடர் புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

உள்ளத்துக் கரந்திருந்த காதலைப் பிறர் அறிந்தமையுணர்ந்த ஆண் மகன் நிலை.

பாடல் : 2269

Kono yofi no	*இந்த இரவும்*
Akatoki kudati	*விடியற் காலையிலே*
Naku tadu no	*கத்தும் நாரையின்*
Omafi va sugigz	*நினைவே கழியாதே*
Kofi koso masare	*நலிவுதான் வளருமே*

விளக்கம்

விடிந்த காலையிலே கத்துகின்ற நாரைபோல இந்த இரவு கழிந்த பின்னும் நினைவு கழியாது. அதனால் காதல் நலிவு மேலும் வளருதே.

குறிப்புரை

துணை தேடிக் கத்தும் நாரையின் குரல், விடிந்தபின்னும் காதல் நலிவு தொடரச் செய்தல். நாரை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

இரவில் மட்டுமல்ல, விடிந்த பின்னும் காதல் நலிவால் வாடும் உள்ளம்.

பாடல் : 2270

Miti no fe no	*தெருக் கரையின்*
Wofana ga sita mo	*வொபனவின் அடியின்*
Omofi gusa	*ஒமொபி புல்போல்*
Imasara ni nado	*இனிமேலும் ஏனோ நான்*
Mono ka amofamu	*துயர் பொருள் நினையும்*

விளக்கம்

தெருக் கரையது வொபன மரத்தினடியில் உள்ள ஒமொபி புல் போல, இனிமேலும் நான் ஏன் துயரமான பொருளையே நினைக்க வேண்டும்?

குறிப்புரை

நீண்ட காலத்திற்குப் பின்னர் துயரமான நினைவுகளை மீட்டல் பயனற்றது. 'வொபன', மரத்தின் பெயர்; 'ஒமொபி' ஒருவகைப் புல்; ஆணின் காவல் இருக்கையில், ஏன் துன்புற வேண்டும் என்ற உள் பொருள்.

உணர்வு நிலை

கழிந்தவை நினையும் பெண்ணின் உள்ளம்.

பாடல் : 2271

Kusa fukami	*புல்லின் அடரில்*
Koforogi safa ni	*சுரும்பும் நெருங்கியே*
Naku yado no	*கத்து முன்றிலின்*
Fagi mi ni kimi va	*பகியைக் காண நீயே*
Itu ka kimasamu	*என்றுகொல் வந்திடுமே!*

விளக்கம்

அடர்ந்த புல்லிலே நெருங்கி வண்டுகள் கத்துவதை, என் வீட்டு முன்றில் பகி மரவடியில் காண்கிறேன். நீதான் எப்போது இங்கு வருவாயோ?

குறிப்புரை

பகி மலர் காண நீ வருவாய் என்ற எதிர்பார்ப்பு தொடர, *23* பாடல்கள் மலர்கள் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காலம் கண்டு காதலன் வரவை நாடி நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2272

Aki dukaba	*கார் வந்திடினே*
Mi kusa no fana no	*மிகுசவின் மலரின்*
Ayenu gani	*அலர் நிலையின்*
Omofedo sirazi	*நினைவு அறியாதே*
Tada ni afazarba	*நேரிலும் கண்டிலனே*

விளக்கம்

கார் காலம் வந்தால் மிகுசவின் மலருடைய முழுமையான மலர்ச்சி போல, நான் அவளை நிறைவாக நினைத்துக் காதலிப்பதை அவளும் அறியாள். நானும் அவளை இன்னும் நேரிலும் கண்டிலேன்.

குறிப்புரை

மலரின் முழுமையான மலர்ச்சிபோன்ற நினைவில் நிறைந்த காதல். மிகுச, ஒருவகை நீர்ச் செடி.

உணர்வு நிலை

உள்ளம் நிறைந்த காதலியை நேரில் காணாததால் நலியும் ஆண்.

பாடல் : 2273

Nani su to ka	*எதற்காகவோ*
Kimi wo ito famu	*உன்னை வெறுத்திடுமே*
Aki fagi no	*காரது பகி*
Sono fatu fana no	*முதல் தோன்று மலரின்*
Uresiki mono wo	*மகிழ்வான பொருளை*

விளக்கம்

நான் ஏன் உன்னை வெறுக்க வேண்டும்? நீ எனக்குக் கார் காலத்துப் பகியின் முதல் மலர்போன்ற மகிழ்வான பொருள் அல்லவா?

குறிப்புரை

காதலன் நினைவு காலங்கண்டு முதல் மலரும் மலரைக் காண்பது போன்ற மகிழ்வைத் தருவது.

உணர்வு நிலை

காதலன் நினைவிலே காலத்தின் வரவு கண்டு மகிழும் பெண் உள்ளம்.

பாடல் : 2274

Koyi marofi	*துயரில் அலை*
Kofi va sinu tomo	*காதலே இறப்பினும்*

Itiziroku	*தெளிவாகவே*
Iro ni va idezi	*நிறத்தில் வெளிப்படா*
Asagafo no fana	*அசகபொ மலரே*

விளக்கம்

துன்பத்திலே உள்ளம் அலைக்கின்ற காதலே நான் இறப்பினும் வெளிவராது. அது தெளிவான நிறத்திலே வெளிவராத அசகபொ மலர் போன்றிருக்கும்.

குறிப்புரை

அசகபொ - செவ்வரத்தம்பூ. தெளிவான நிறம் பெறாத பூ; முற்றாக மலராத பூ.

உணர்வு நிலை

உள்ளத்திலே கரந்த காதலுடன் நலியும் பெண்.

பாடல் : 2275

Koto ni idete	*சொல்லில் வெளிப்படக்*
Ifaba yuyusimi	*கூறுதல் அஞ்சிடுமே*
Asagafo no	*அசகபொவின்*
Fo ni va sakidenu	*முற்றாக மலராத*
Kofi mo suru kamo	*காதலும் செய்வேன்கொல்!*

விளக்கம்

என் காதலைச் சொல்லால் வெளிப்படுத்துவதற்கு அஞ்சுகிறேன். அதனால், என் காதலும் முற்றாக மலராத அசகபொ மலரை ஒத்ததுவோ.

குறிப்புரை

காதலை வெளிப்படுத்த அஞ்சல், இடையூறு இருப்பதை உள்ளிறுத்திக் காட்டல். பிறர் அறியின் சிக்கல் ஏற்படும்.

உணர்வு நிலை

காதலுக்கான இடையூறுகளை எதிர்நோக்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2276

Karigane no	*காட்டுத் தாராவின்*
Fatu kowe kikite	*முதற் குரல் கேட்டு*
Saki detaru	*மலர்ந்திருக்கும்*
Yado no akifagi	*முன்றிலின் கார் பகியைக்*
Mi ni ko waga seko	*காணவே வா காதல!*

விளக்கம்

காட்டுத் தாராவினது முதற் குரலைக் கேட்டுமே, என் வீட்டு வாயிலிலே மலர்ந்திருக்கும் பகியைக் காண வா, என் காதலனே.

குறிப்புரை

காட்டுத் தாராவின் முதற்குரல்-பகியின் மலர்வு-காதலன் திரும்பி வரும் காலம் உணர்த்துபவை.

உணர்வு நிலை

காதலன் வரவைக் காலங் கண்டு எதிர்பார்த்திருக்கும் காதலி.

பாடல் : 2277

Sawo sika no	*கலை மானுமே*
Iri no no susuki	*நுழை பொழிலின் சுசுகி*
Fata wobana	*முதல் வொபந*
Itusika imo ga	*என்றுகொல் காதலியின்*
Te wo makura kamu	*கையை அணையாக்குமே*

விளக்கம்

கலை மான் நுழைகின்ற பொழிலில் உள்ள அடர்ந்த சுசுகி. முதல் மலர்ந்த வொபந மலரையொத்த காதலியின் கையை என்றைக்கு நான் அணையாக்கி உறங்குவேனோ?

குறிப்புரை

இப்பாடலிலே 'sawo sika no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Irino'வுடன் அணையும்.

உணர்வு நிலை

காதலியோடு விரைவில் இணைய விரும்பும் காதலன்.

பாடல் : 2278

Kofuru fi no	*காதல் நலி நாள்*
Ke nagaku areba	*கடந்து நீண்டிடவே*
Waga sono no	*எனது பொழில்*
Kara awi no fana no	*கரஅவி மலரின்*
Iro ni de ni keri	*நிறத்தில் வந்திடுமே*

விளக்கம்

காதலிலே நான் நலிகின்ற நாள்களும் பல கடந்து காலம் நீண்டிடவே, என் முகம் எனது பொழிலில் மலர்ந்துள்ள கரஅவி மலரின் நிறத்தைப் பெற்றிடுமே (அதனால் பிறரும் என் காதலை அறிந்திடுவர்).

குறிப்புரை

நாள்கள் கடப்பது காலக்கழிவின் விரைவை உணர்த்தும்.

உணர்வு நிலை

பிறர் தன் காதலை அறியக்கூடுமென அஞ்சும் பெண் உள்ளம்.

பாடல் : 2279

Waga sato ni	*எனது ஊரில்*
Ima saku fana no	*இப்போ அலர் மலரின்*
Wominabesi	*வொமிநபெசி*
Tafenu kokoro ni	*வாட்டம் உள்ளத்தினிலே*
Nafo kofi ni keri	*இன்னும் காதல் இருக்கும்*

விளக்கம்

எனது ஊரிலே இப்போது மலர்ந்துள்ள வொமிநபெசி மலர் நீண்ட நாள் இராது. விரைவில் வாடிவிடும். அதுபோலவே இன்னும் என் உள்ளத்துக் காதலும் இருக்கிறது.

குறிப்புரை

வொமிநபெசி மலரின் வாட்டம்போல என் உள்ளமும் விரைவில் வாடிவிடும். எனவே விரைவில் வருவாய். இளம்பெண்ணும் மணம் செய்யாமல் நீண்ட காலம் இருக்க முடியாது. பல ஆண்டுகள் கழிந்தமை புலப்படுத்தல்.

உணர்வு நிலை

திருமணம் செய்ய வேண்டிய காலம் வந்ததை உணர்த்தும் பெண்.

பாடல் : 2280

Fagi no fana	*பகியின் மலர்*
Sakeru wo mireba	*அலர்வதைக் காணவே*
Kimi ni afazu	*நின்னைக் காணாது*
Makoto mo fisa ni	*உண்மையில் நீண்ட காலம்*
Nari ni keru kamo	*ஆகிவிட்டதுகொல்லோ!*

விளக்கம்

பகியின் மலர் மலர்வதைக் காணும்போது உன்னைக் காணாமல் உண்மையிலே நீண்ட காலம் கடந்ததும் புரிகின்றது.

குறிப்புரை

இன்னும் எவ்வளவு காலம் காக்க வேண்டுமோ என்ற ஐயப் பொருளும் புலப்படுத்தப்படுகிறது.

உணர்வு நிலை

காலக் கடப்புக் கண்டு பிரிவில் நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2281

Asi tuyu ni	*காலைப் பனியில்*
Saki susabi taru	*மலர்ந்து வளைந்திடு*
Tuki kusa no	*துகிப் புல்போல*
Fi kururu nabe ni	*ஞாயிறு உயர் போதில்*
Kenu beku omofoyu	*கரையும் காதல் நினைவு*

விளக்கம்

காலைப் பனியிலே மலர்ந்து வளைந்திடுகின்ற துகிப் புல்போல எனது காதல் நினைவும் ஞாயிறு உச்சிக்கு வரக் கரைந்திடுமே.

குறிப்புரை

காலையிலே அரும்பும் காதல் நினைவு உச்சிப்போதிலே கரைந்து மாலையிலே மடியும் நிலை. நாளது காதல் நலிவின் தன்மை.

உணர்வு நிலை

காதல் நினைவு தாளாமல் கரைந்து நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2282

Nagaki yo wo	*நீண்ட இரவில்*
Kimi ni kofitutu	*உன் காதலில் நலிந்து*
I kerazu va	*வாழ்வதைவிட*
Sakite tiri nisi	*அலர்ந்தே உதிர்ந்திடு*
Fana ni aramasi wo	*மலராய் ஆகிடவோ*

விளக்கம்

நீண்ட இரவு நேரத்திலே உன் காதலை எண்ணி நலிந்து வாழ்வதை விட, நான் மலர்ந்து உதிரும் ஒரு மலராய் ஆகிட விரும்புகிறேன்.

குறிப்புரை

மனித வாழ்வைவிட மலரின் வாழ்வு நன்று; காலத்துக்கியைய வாழ்வு நடக்கும்.

உணர்வு நிலை

நீண்ட காலக் காதல் நலிவால் மனித வாழ்க்கையை வெறுக்கும் பெண்.

பாடல் : 2283

Wagimo ni	*என் காதல் மகள்*
Afu saka yama no	*அபுசக மலையின்*
Fata susuki	*கொடிச் சுசுகி*
Fo ni va sakidezu	*அலர்போல் தோன்றிடாது*
Kofi wataru kamo	*காதலின் நலிவுகொல்!*

விளக்கம்

என் காதல் மகள் அபுசக மலையின் கொடிச் சுசுகியின் அலர் போலக் காதலை வெளிப்படையாகக் காட்டாது. எனவே நானும் காதலை வெளிப்படுத்தாமல் நலிய வேண்டியதே.

குறிப்புரை

இப்பாடலிலே '**Wagimo ni**' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். '**afu saka yama**'வுடன் அணையும். **afu** - ஒருவர் காதலியை நேரில் காணல்.

உணர்வு நிலை

காதலியின் விருப்பம் தெரியாமையால் ஒருதலைக் காதல் படர நலியும் ஆண்.

பாடல் : 2284

Yukuri naku	*சிறிது நேரம்*
Ima mo mi ga wosi	*இப்போதும் காண வேண்டும்*
Aki fagi no	*காரது பகி*
Sinafi ni aramu	*சாய்வினில் தோன்றிடுமே*
Imo ga sugata wo	*காதலியின் தோற்றமே*

விளக்கம்

சிறிது நேரம் இப்போதும் நான் காண விரும்புகிறேன். கார்காலத்துப் பகியின் சாய்வினிலே தோன்றிடும் என் காதலியின் அழகுத் தோற்றத்தையே.

குறிப்புரை

பகியின் சாய்நிலைத் தோற்றம் அழகான பெண்ணின் தோற்றத்திற்கு உவமை.

உணர்வு நிலை

சிறுபொழுதேனும் காதலியைக் காணத் தவிக்கும் ஆணின் உள்ளம்.

பாடல் : 2285

Aki fagi no	*காரது பகி*
Fana no no susuki	*மலர் வயல் சுசுகி*
Fo ni va dezu	*கதிரின் தோன்றா*
Waga kofi wataru	*என் காதல் நலிவுமே*
Komori duma va mo	*காமக் கிழத்தியிலே*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலர்ந்த வயலின் சுசுகியின் கதிர்போல வெளிப்படத் தோன்றாது. நான் என் காமக் கிழத்தியின்மேற் கொண்ட காதல் நலிவே.

குறிப்புரை

காமக் கிழத்தி - மறைவான மனைவி என ஜப்பானியர் அழைப்பர். காதல் நலிவையும் மறைவாகவே வைத்திருக்க வேண்டும்.

உணர்வு நிலை

காமக் கிழத்தியாற் கொண்ட காதல் நலிவை மறைக்க எண்ணும் ஆண்.

பாடல் : 2286

Waga yado ni	*எனது முன்றில்*
Sakisi aki fagi	*மலரும் காரின் பகி*
Tiri sugite	*உதிர் கழிந்து*
Mi ni naru made ni	*விதையின் முதிர்வரை*
Kimi ni afanu kamo	*உன்னிடம் இணையேன்கொல்!*

விளக்கம்

எனது வீட்டு முற்றத்திலே மலரும் கார் காலத்துப் பகி உதிர்ந்து விதையாகிடும்வரை! உன்னிடம் நான் இணையமாட்டேனோ!

குறிப்புரை

மலர் மலர்ந்து விதையாகும் காலம்வரை காத்திருத்தல்.

உணர்வு நிலை

நீண்ட காலம் பிரிவால் வாடும் பெண்ணின் நிலை.

பாடல் : 2287

Waga yado no	*எனது முன்றில்*
Fagi saki ni keri	*பகியும் மலர்ந்தது*
Tiranu ma ni	*உதிர் இடையில்*
Faya kite mibesi	*கடிதின் வந்து காண்க*
Nara no sato bito	*நரவின் ஊர்மகனே*

விளக்கம்

எனது வீட்டு முற்றத்தின் பகியும் மலர்ந்துவிட்டது. அது உதிர்வதற்கிடையிலே நரவில் வாழ்கின்ற நண்பனே, விரைவாக வந்து பார்.

குறிப்புரை

ஒரே ஊரைச் சேர்ந்த நண்பர்களென்பதை satobito எனுந் தொடர் விளக்கும்.

உணர்வு நிலை

விருப்பத்திற்குரியவன் வீட்டு வாயிலிலே மலர்ந்துள்ள மலரை, விரைவாய் வந்து பார்க்க வேணுமென விரும்பும் பெண்.

பாடல் : 2288

Ifa basi no	*கல் வழியது*
Mama ni ofitaru	*இடையில் தோன்றிடும்*
Kafo fana no	*கபொ மலரின்*
Fana ni si ari keri	*மலர்போல இருக்கும்*
Ari tutu mireba	*இப்போதும் கண்டிடவே*

விளக்கம்

கல்லாலான வழியிலே கற்களுக்கு இடையே தோன்றும் கபொ மலர் போலவே இருப்பாள், அவளை நான் இப்போதும் பார்த்திடுகையில் (அதே தோற்றந்தான்).

குறிப்புரை

இப்பாடலிலே 'Ifa basi no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும்.

உணர்வு நிலை

விட்டு வந்த பெண்ணின் நிலையெண்ணி நலிபும் காதலன்.

பாடல் : 2289

Fudi fara no	*புதிபரவின*
Furi ni si sato no	*முது பழ ஊரிலே*

Aki fagi va	*காரது பகி*
Sakite tiri ni ki	*மலர்ந்து சிதறிற்று*
Kimi mati kanete	*உன்னைக் காத்து நில்லாதே*

விளக்கம்

எனது மிகப் பழைய ஊரான பரவிலே கார்காலத்துப் பகி மலரும் உன் வரவைக் காத்து நில்லாது மலர்ந்து சிதறியும்விட்டது.

குறிப்புரை

புதிபர - ஊரின் பெயர்; பெண் இருக்கும் ஊர்.

உணர்வு நிலை

பிரிந்து சென்ற காதலன் கார் காலத்தும் திரும்பி வராமையால், பிரிவால் நலியும் காதலி.

பாடல் : 2290

Aki fagi wo	*காரது பகி*
Tiri suginu bemi	*உதிர் கடக்கு முன்னர்*
Ta wori moti	*களைந்து கையில்*
Mire domo sabusi	*காணினும் தனிமையே*
Kimi ni si araneba	*நின்னையே காணாதெனில்*

விளக்கம்

கார் காலத்துப் பகி மலரை அது உதிர்ந்திடு முன்னர் பறித்துக் கையிலே வைத்திருப்பினும், அதைப் பார்க்கையில் என் தனிமை உணர்வே மேலோங்கும். ஏனெனில், உன்னை அந்த மலர்களிலே காண முடியவில்லையே.

குறிப்புரை

பகியைக் கையிலே பறித்து வைத்துக் காண விரும்பல். ஆனால் அதுவே தனிமையை மிகைப்படுத்துமெனல். இருவருமாகப் பார்க்க வேண்டிய மலரை ஒருவர் பார்ப்பது பிரிவுத் துயரை மிகைப்படுத்தும்.

உணர்வு நிலை

மலர் கண்டு பிரிவால் நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2291

Asita saki	*காலை மலர்ந்து*
Yufu be va kenuru	*மாலையில் துவண்டிடும்*
Tuki kusa no	*துகிப் புல்போல்*
Kenu beki kofi mo	*துவண்டு காதலும்*
Ware va suru kamo	*நான் செய்திடுவேன்கொல்லோ!*

விளக்கம்

காலையிலே மலர்ந்து மாலையிலே வாடித் துவளும் துகிப் புல்போல, நானும் வாடித் துவளும் காதல் நலிவினிலேதான்.

குறிப்புரை

துகிப் புல், காதலுக்கு உவமை; காத்திருப்பில் பயனின்மை.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்தும் வராமையால், துவளும் பெண் உள்ளம்.

பாடல் : 2292

Akitu nono	*அகிது வயல்*
Wobana kari sofe	*வொபன வெட்டிச் சேரக்*
Aki fagi no	*காரது பகி*
Fana wo fukarane	*மலரையும் வேந்திடு*
Kimi ga karifo ni	*உனது குடிலுக்கே*

விளக்கம்

அகிதுவின் வயலில் மலர்ந்து வொபன மலரையும் வெட்டிக் கார் காலத்துப் பகி மலரையும் சேர்த்து உன் குடிலுக்கு வேய்ந்திடுக.

குறிப்புரை

மலர்களால் காவற்குடில் வேயும் வழக்கம்.

உணர்வு நிலை

வினையிடைத் தங்கு குடில் செய்யும் அன்புக்குரியவனை எண்ணி நலியும் பெண்.

பாடல் : 2293

Sakeri tomo	*மலர்ந்திருப்பின்*
Sirazu si araba	*அறியா நிலையான*
Moda mo aramu	*நலிவும் உண்டு*
Kono aki fagi wo	*இந்தக் காரது பகி*
Mise tutu moto na	*காட்டுதல் பயனின்றே*

விளக்கம்

மலர் மலர்ந்திருந்தாலும் யாரும் அறியாத நலிவும் அம்மலருக்குண்டு. இந்தக் கார் காலப் பகி மலரைக் காட்டுவதும் பயனற்றதே.

குறிப்புரை

பெண்ணின் வெளித்தோற்றம் மலர்ந்திருப்பினும் உள்ளே மறைத்து வைத்திருக்கும் நலிவும் உண்டு.

உணர்வு நிலை

தன் உண்மை நிலையை எண்ணியிருக்கும் பெண்.

பாடல் : 2294

Aki sareba	*கார் காலம் வர*
Kari tobi koyuru	*காட்டு வாத்து கடக்கும்*
Tatuta yama	*ததுத மலை*
Tatite mo wite mo	*நின் றுமே இருந்துமே*
Kimi wo si zo omofu	*உன்னைத்தான் நினையுமே*

விளக்கம்

கார் காலம் வந்திடக் காட்டு வாத்து ததுத மலையைக் கடந்து பறக்கும் நான், நின்றும் இருந்தும் உன்னைத்தான் நினைந்திருக்கும்.

குறிப்புரை

நின்றும் இருந்தும் நினைத்தல்-நிலை கொள்ளாதிருத்தல். மலை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

நீண்ட நாள்களின் பிரிவால் நிலை கொள்ளாது தவிக்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2295

Waga yado no	*எனது முன்றில்*
Kusu fa fi ni ke ni	*குசு இலை நாள் செல்ல*
Irodu kinu	*நிறம் பெற்றது*
Ki masanu kimi va	*வந்திடாயோ நீயுமே*
Nani gokoro zo mo	*என்ன உள்ளமும்தானோ!*

விளக்கம்

எனது வீட்டு வாயில் குசு இலையும் நாள்கள் கழிய நிறம் பெற்றது. நீயோ வரவில்லை. உன்னுடைய உள்ளம் எத்தகையதோ!

குறிப்புரை

வராதது-எப்படி வராமல் இருக்க முடியும்? தொடர 3 பாடல்கள் கார் கால இலைகள் நிறம் பெறுவது தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

கார் காலம் வந்த பின்பும் வீடு வந்து சேராத காதலனை எண்ணி நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2296

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama sana kadura	*மலை சநகதுர*
Momidu made	*நிறம் மாறும்வரை*
Imo ni afasu ya	*காதலியைக் காணாமே*
Waga kofi woramu	*நான் நலிவில் வருந்தும்*

விளக்கம்

அடி இழுக்கும் மலையின் சநகதுர இலை நிறம் மாறிடும் வரையில், என் காதலியை நேரில் காணாமல் நலிவில் வருந்தும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'asifiki no' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

கார் காலம்வரை காதலியுடன் இணைய முடியாமை எண்ணி வருந்தும் ஆண் மகன்.

பாடல் : 2297

Momidi fa no	*நிறம் மாறும் இலை*
Sugi gatenu ko wo	*பார்வை அகலாப் பெண்ணைப்*
Fito duma to	*பிறன் பெண்டெனப்*
Mitutu ya aramu	*பார்த்திட்டே இருக்கவோ*
Kofisiki mono wo	*விரும்பிய பொருளை*

விளக்கம்

நிறம் மாறிடும் இலைபோன்ற அழகிய பெண்ணிடமிருந்து எனது பார்வை அகலாது. அவள் பிறன் மனைவியெனினும், நான் விரும்பிய பொருளைப் பார்த்திட்டே இருக்கவோ.

குறிப்புரை

இப்பாடலில் 'Momidifa no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'sugi getenu ko' என்னுந் தொடருடன் அணையும். பிறன் மனையாளை விரும்பும் நிலை ஆவணம்.

உணர்வு நிலை

பிறன் மனையாளை விரும்பி நலியும் ஆண் உள்ளம்.

பாடல் : 2298

Kimi ni kofi	*உன் காதலில்*
Sinaye ura bure	*துவண்டு மெலிந்துமே*
Waga woreba	*நான் வருந்திட*
Aki kaze fukite	*காரது காற்று வீசி*
Tuki kata bukinu	*திங்களும் சாய்ந்ததுமே*

விளக்கம்

உன்மீது கொண்ட காதலால் நான் துவண்டு, நலிந்து, மெலிந்து வருந்துகின்றேன். என் நாள் இவ்வாறு கழிய, கார் காலக் காற்று வீசித் திங்களும் மேற்குத் திசையில் சாய்ந்ததே.

குறிப்புரை

நீண்ட பிரிவுத் துயரால் உடலும் உள்ளமும் வாடித் துவள்தல் தொடர, 3 பாடல்கள் நிலவு தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

கார் காலமாகியும் திரும்பி வராத காதலனை நினைந்து நலியும் பெண்.

பாடல் : 2299

Aki no yo no	*கார் இரவின்*
Tuki kamo kimi va	*திங்கள்கொல் நீயுமேதான்*
Kumo gakuri	*முகில் மறைந்து*
Simasiku mineba	*சிறிதுமே காணாது*
Kokoda kofisiki	*இது காதல் நலிவே*

விளக்கம்

கார் காலத்து இரவின் நிலவுதான் நீயுமே! முகிலில் மறைந்து சிறுபொழுதும் காணவும் முடியாது. இது என் காதல் நலிவே.

குறிப்புரை

கார் கால நிலவுபோலக் காதலனும் கண்ணால் காண முடியாத பொருள்.

உணர்வு நிலை

நேரில் காண முடியாத காதலனை எண்ணி நலியும் பெண் உள்ளம்.

பாடல் : 2300

Naga duki no	*ஒன்பதாம் மாதம்*
Ari ake no tu ku yo	*தோன்று காலைத் திங்களின்*
Ari tutu mo	*தொடர்ந்திடவே*
Kimi ga ki masaba	*நீ வாராதிருப்பினே*
Ware kofime ya mo	*நானும் நலிந்திடவோ*

விளக்கம்

நீண்ட ஒன்பதாம் மாதத்திலே தோன்றுகின்ற காலை நேர நிலவு போலத் தொடர்ந்து நீ வாராதிருக்கின்றாய். நானும் நீ வரும்வரை காதலில் நலிந்திடவோ.

குறிப்புரை

9ஆம் மாதம் நீண்ட மாதம். நிலவு வரும். ஆனால் நீயோ வரவில்லை.

உணர்வு நிலை

நீண்ட நாள்கள் பிரிவால் நலியும் பெண்.

பாடல் : 2301

Yosi weyasi — *நன்று இனியே*
Kofisi to suredo — *நலியேன் என எண்ணும்*
Aki kaze no — *காரது காற்று*
Samuku fuku yo va — *குளிர வீசு இரவே*
Kimi wo si zo omofu — *உன்னைத்தான் நினைக்குமே*

விளக்கம்

நல்லது. இனிமேல் உன்னை நினைத்து வருந்துவதில்லை என நான் எண்ணி இருக்கும்போது, கார் காலக் காற்று இரவிலே குளிர வீசும். மீண்டும் நான் உன்னையே நினைத்து நலியும்.

குறிப்புரை

இனிமேல் நினைத்து நலிவதில்லை என உள்ளத்தில் உறுதி பூணல். ஆனால் காலநிலையால் அதைக் கைவிடல். 3 பாடல்கள் தொடர இரவு தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

உறுதி பூண்டும் கடைப்பிடிக்க முடியாத பெண்ணின் அவல நிலை.

பாடல் : 2302

Kedasiku mo — *பெரும்பாலுமே*
Ana kokoro nato — *உள்ளமற்றவன் என*
Omofu ramu — *நினைந்திருக்கும்*
Aki no naga ya wo — *காரது நீள் இரவில்*
Ine fusaku nomi — *உறங்கிடும் தனியே*

விளக்கம்

பெரும்பாலும் எல்லாரும் உன்னை உள்ளமற்றவன் என்றே எண்ணுவர். நானும் கார்காலத்து நீண்ட இரவிலே தனியே உறங்கும்.

குறிப்புரை

கார் கால இரவு நீண்டது. அதனால் பிரிவின் நலிவும் நீண்டது.

உணர்வு நிலை

மற்றவர் காதலனைப்பற்றி எண்ணுவதை நினைந்து நலியும் பெண்.

பாடல் : 2303

Aki no yo wo	*கார்த்து இரா*
Nagasi to ifedo	*நீண்டதெனக் கூறினும்*
Tumori ni si	*என் எண்ணத்திலே*
Kofi wo tukuseba	*காதல் நலிவு தொடர*
Mizikaku ari keri	*குறுகியதாய் விடும்*

விளக்கம்

கார் காலத்து நீண்ட இரவு எனக் கூறினாலும், என்னுடைய எண்ணத்திலே காதல் நலிவு தொடர இரவும் குறுகியதாய் விடுமே.

குறிப்புரை

காதல் நலிவு பற்றிய எண்ணங்களைத் தொடர்ந்து எண்ணிப் பார்த்திட்டிருக்கப் பொழுதும் கழிதல்.

உணர்வு நிலை

நீண்ட இரவைக் குறுகச் செய்யும் பெண்.

பாடல் : 2304

Akitu fa ni	*தும்பி இறகின்*
Nifoferu koromo	*நிறத்து ஆடையையே*
Ware va kizi	*நானும் அணியேன்*
Kimi ni maturaba	*உனக்குத் தந்திடினே*
Yoru mo kiru gane	*இரவும் அணிவாயே*

விளக்கம்

தும்பியின் அழகிய இறகுபோன்ற நிறத்து ஆடையையே நான் அணிவதில்லை. எனவே அதை நான் உனக்குத் தந்தால் நீயும் இரவில் என் நினைவாக அணிந்திடுவாயே.

குறிப்புரை

பிரிந்திட்டபோதில் நினைவாக ஆடை தருதல். இப்பாடல் ஆடை தொடர்புறுத்தியது.

உணர்வு நிலை

பிரிவின் நலிவை ஆடை மூலம் தீர்க்க எண்ணும் உள்ளம். இப்பாடல் ஆண் உள்ள நிலை காட்டும் பாடல் எனலாம்.

பாடல் : 2305

Tabi ni sura	*செலவினிலும்*
Fimo toku mono wo	*நெகிழேன் ஆடையையே*
Koto sigemi	*அலர் அடர்வால்*
Morone ware kasu	*ஆடையோடு உறங்கும்*
nagaki kono yo wo	*நீண்ட இவ்விரவிலே*

விளக்கம்

வழிச் செலவிலே செல்லும்போதும் நான் என் ஆடையை நெகிழ்த்து உறங்குவதில்லை. பிறர் கூறும் அலரால் நீண்ட இந்த இரவிலும் ஆடையோடு உறங்குவேன்.

குறிப்புரை

ஆடையின் பட்டியை நெகிழ்த்து உறங்கல். ஊர் அலருக்கு அஞ்சல். ஆண் அனுப்பிய பாடல். ஊர் அலர்பற்றிய ஆவணம்.

உணர்வு நிலை

ஊர் அலருக்கு அஞ்சும் ஆணின் நிலை.

பாடல் : 2306

Sigure furu	*பெயல் பொழியும்*
Akatoki dukuyo	*வைகறை நிலவிலே*
Fimo tokazu	*ஆடை நெகிழா*
Kofuramu kimi to	*காதல் நலி உன்னுடன்*
Wora masi mono wo	*ஒன்றிணையும் பொருளே*

விளக்கம்

பெயல் பொழிகின்ற வைகறை நிலவு நேரம் ஆடை நெகிழாமல் காதலில் நலியும் உன்னுடன் ஒன்றிணையும் பொருளும் நானே.

குறிப்புரை

நிலவின் சிவந்த தோற்றம் இரவின் முடிவு. இப்பாடல் முதற்பாடலுக்குப் பெண் அனுப்பும் மறுமொழி நிலையான பாடல்.

உணர்வு நிலை

காதலன் நிலையறிந்து தேற்ற நினையும் பெண்.

பாடல் : 2307

Momidifa ni	*நிறத்த இலை*
Oku sira tuyu no	*விழு வெண் பனியது*
Iro ni va mo	*நிறத்திலுமே*
Idezi to mofeba	*வெளிப்படாது நினையின்*
Koto no sigekeku	*அலர் அடர்வு உண்டே*

விளக்கம்

நிறம் பெற்ற இலைமேலே விழுகின்ற வெண்பனிபோல நிறமாக என் காதல் முகத்தில் வெளிப்படத் தோன்றாது. நினைத்துப் பார்க்கின், ஊர் அலர் இருப்பதே அதற்கு ஏதுவாகும்.

குறிப்புரை

பிறர் காதல்பற்றி அலர் தூற்றப் பலர் உளர். அதனால் காதலை முகத்தில் வெளிப்படுத்துவது நன்றன்று. அலர் பற்றிய ஆவணம்.

உணர்வு நிலை

ஊர் அலர் நிலைபற்றிக் காதலனுக்குத் தெளிவுபடுத்தும் பெண்.

பாடல் : 2308

Ame fure ba	*மழை பொழியின்*
Tagitu yama gava	*பொங்கிடு மலையாறே*
Ifa ni fure	*பாறை பிளக்கும்*
Kimi ga kudakamu	*உன்னையே உடைத்திடும்*
Kokoro va motazi	*உள்ளமே எனக்கில்லை*

விளக்கம்

பெருமழை பொழியின் பொங்கி வரும் மலையாறு பாறையைப் பிளக்கும். ஆனால் உன்னை உடையச் செய்யும் உள்ளம் எனக்கில்லை.

குறிப்புரை

கார் காலப் பாடல்களோடு தொடர்பில்லாத பாடல் எனினும், காதல் மகன் மறுமொழி நிலையான பாடல்.

உணர்வு நிலை

பிரிவில் நலியும் பெண்ணைத் தேற்றும் ஆண்.

பாடல் : 2309

Fafuri ra ga	*மடையிடுவார்*
Ifafu yasiro no	*மடையிடு கோவிலின்*
Momidifa mo	*நிறத்து இலை*
Simenava koyete	*தோரணத்தில் தொங்கியே*
Tiru to ifu mono wo	*சிதறிடும் பொருளே*

விளக்கம்

மடையிடுபவர்கள் கோயிலிலே தோரணமாகத் தொங்கும் நிறமான இலைகளும் சிதறிடும் பொருள் என்பர்.

குறிப்புரை

கோயிலில் தோரணம் நாட்டி மடையிடும் வழக்கம் ஆவணம்.

உணர்வு நிலை

மடையிடுபொருள் நிலை கூறி இரங்கல்.

பாடல் : 2310

Koforogi no	*சுரும்புகளும்*
Waga toko no fe ni	*என் படுக்கையருகில்*
Naki tutu moto na	*ஒலிக்கும் பயனின்றி*
Oki wi tutu	*நின்று இருந்து*
Kimi ni kofuru ni	*உன் காதல் நலிவில்*
Ine gate naku ni	*உறக்கமும் இல்லையே*

விளக்கம்

வண்டுகள் என் படுக்கையருகில் வந்து பயனின்றி ஒலிக்கின்றன. உன் காதல் நலிவிலே நின்றும், இருந்தும் பொழுது கழிந்திட இரவில் எனக்கு உறக்கமும் இல்லையே.

குறிப்புரை

படுக்கையருகில் வண்டு ஒலித்தல் செலவிலிருப்பதை உணர்த்தும். sedoka அமைப்பிலான பாடல்.

உணர்வு நிலை

செலவில் சென்றுள்ள ஆண் காதலில் நலியும் நிலை.

பாடல் : 2311

Fata susu ki	*கொடிச் சுசுகி*
Fo ni va saki denu	*கதிரின் மலராத*
Kofi wo waga suru	*காதலே நானும் செய்வேன்*
Tama kagiru	*மணியொலியின்*
Tada fito me nomi	*ஒரு பார்வை மட்டுமே*
Misi fito yuwe ni	*படும் மகளின் மேலுமே*

விளக்கம்

கொடிச் சுசுகியின் முற்றாத கதிர்போல என் காதலும் முகத்தில் நன்கு வெளிப்படாது. மணியொலிபோன்ற ஒரு பார்வை மட்டுமே அந்தக் காதல் மகளின்மீது படும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'Fatasusuki', 'Tama ka giru' என்னும் இரு சொற்றொடர்களும், தலையணைச் சொற்றொடர்களாகும். முறையே Fo, tada fito me என்பவற்றுடன் இணையும். sedoka அமைப்பிலான பாடல்.

உணர்வு நிலை

உள்ளத்துக் காதலுணர்வை வெளிப்படுத்தாமல் காதலில் நலியும் ஆண்.

பாடல் : 2312

Waga sode ni	*என் கையாடையில்*
Arare tabasiru	*ஆலி துள்ளி வந்திடும்*
Maki kakusi	*மடித்து மறைக்கக்*
Katazute aramu	*கரையாமல் இருக்கும்*
Imo ga mimu tame	*மனைவி காண்பதற்கே*

விளக்கம்

என் கையாடையில் ஆலி துள்ளி வந்து விழும். அதைக் கையாடையுள் மடித்து மறைத்து வைத்தால் கரையாமல் இருக்கும். என் மனைவியும் அதைப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

குறிப்புரை

ஆலி - ஆலங்கட்டி மழைத் துளிபோன்ற பனித்துளி. 4 பாடல்கள் தொடரப் பனி தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

காதல் மனைவி காண்பதற்காகப் பனித்துளி எடுத்து வைக்க விரும்பும் கணவன்.

பாடல் : 2313

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama kamo takaki	*மலைகொல் உயர்ந்தது*
Maki muku no	*மகிமுகுவின்*
Kisino komatu ni	*முனை சிறு மதுவில்*
Mi yuki furi kuru	*தெளிர் பனி பெய்து வரும்*

விளக்கம்

அடி இழுக்கும் மலை உயர்ந்ததுவோ. மகிமுகு மலையின் முனையின் மது மரத்தின்மேல் தெளிவான பனி பெய்திடுகின்றதே.

குறிப்புரை

தெளிவான பனி-கண்ணால் தெளிவாகக் காணக்கூடிய பனி. இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

மலைப் பகுதியின் தெளிவான பனியின் தோற்றம் கண்டு நலியும் பெண்.

பாடல் : 2314

Maki muku no	*மகிமுகுவின்*
Fifara mo imada	*பிபரவில் இப்போது*
Kumo ineba	*முகில் படியா*
Ko matu ga ureyu	*சிறு மதுவின் மேலே*
Awa yuki nagaru	*நுரை பனி நகரும்*

விளக்கம்

மகிழுகுவிலுள்ள பிபரவில் இன்னும் முகில் படியாது. அங்குள்ள சிறு மது மரத்தின்மேலே நுரை பனியும் நகர்ந்து வரும்.

குறிப்புரை

நுரை பனி-நுரைபோன்று விரைவில் கரையும் பனி. பிபர-இடப் பெயர்.

உணர்வு நிலை

நுரை பனியின் நகர்வு கண்டு நலியும் உள்ளம்.

பாடல் : 2315

Asifiki no	*அடி இழுக்கும்*
Yamadi mo sirazu	*மலை வழியும் தெரியா*
Sira gasi no	*சிரகசியின்*
Yeda mo towowo ni	*கிளையும் தாழ்ந்திடவே*
Yuki no fure neba	*பனியும் பெய்ததுவே*

விளக்கம்

அடி இழுக்கும் மலையின் வழியும் நான் அறியேன். சிரகசி மரக் கிளையின் நிமிர்வு தாழ்ந்திடப் பனியும் பெய்ததுவே.

குறிப்புரை

சிரகசி, மரத்தின் பெயர். இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

வினை முடித்து வரும் ஆண் மலை வழி தெரியாது மயங்கல்.

பாடல் : 2316

Nara yama no	*நரமலையின்*
Mine nafo kirafu	*உச்சி முகில் படரும்*
Ubesi koso	*எனவே தானும்*
Ma-gaki ga moto no	*என் வேலியின் கீழே*
Yuki va kezu kere	*பனியே கரையாதே*

விளக்கம்

நரமலையின் உச்சியிலே முகில் படரும். எனவேதான்போலும் என் வேலியின் கீழுள்ள பனியும் இன்னும் கரையாதே.

குறிப்புரை

மலையில் முகில் படர்வதால் இன்னும் பனி பெய்யும். 9 பாடல் பனிப்பெயல் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

பனிப்பெயல் காதல் வரவைத் தடுக்குமே என எண்ணி நலியும் பெண்.

பாடல் : 2317

Koto furaba	*இப்படிப் பெய்யின்*
Sode safe nurete	*கையாடையும் நனையச்*
Toforu beku	*சென்றிட வேண்டும்*
Furi namu yuki no	*பெய்து வரு பனியோ*
Sora ni keni tutu	*வானிலே கரைந்தது*

விளக்கம்

பனி இப்படிப் பெய்தால் கையாடை நனைந்தே மாந்தர் செல்ல வேண்டும். ஆனால் பெய்து வரு பனியோ வானிடையிலே கரைந்தது.

குறிப்புரை

பனி நிலத்திலே விழு முன்னரேயே கரைதல்.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்திருக்கும் பெண். பனிப் பெயல் கண்டு எண்ணல்.

பாடல் : 2318

Yo wo samumi	*இராவே குளிர்*
Asa to wo firaki	*காலை கடை திறந்து*
Ide mire ba	*வெளியே நோக்க*
Niwa mo fadare ni	*பூங்காவிலும் பரந்து*
Mi yuki furitari	*தெளிர் பனியே கிடக்கும்*

விளக்கம்

இரவே மிகவும் குளிர் காலையிலே கதவைத் திறந்து வெளியே நோக்கிட, என் வீட்டுப் பூங்கா எங்கும் பரந்து தெளிர் பனி சிதறிக் கிடந்ததே.

குறிப்புரை

இரவின் குளிர்நிலை பனிப் பெயலை உணர்த்தல்.

உணர்வு நிலை

தனித்துறங்கும் பெண்ணின் எண்ணம்.

பாடல் : 2319

Yufu sareba	*மாலை வந்திடக்*
Koromo de samusi	*கையாடை குளிருது*
Taka matu no	*தகமதுவின்*
Yama no ki goto ni	*மலை மரமெங்குமே*
Yuki zo furi taru	*பனிதான் பெய்திருக்கும்*

விளக்கம்

மாலை நேரம் வந்திட எனது கையாடையும் மிகவும் குளிருதே. தகமது மலைப்பகுதி மரமெங்குமே பனிதான் பெய்திருக்கும்.

குறிப்புரை

மரம் எங்கும்-எல்லா மரங்களிலும் பனி பெய்திருத்தல்.

உணர்வு நிலை

பனியின் தோற்றங்கண்டு குளிரால் நலிதல்.

பாடல் : 2320

Waga sode ni	*என் கையாடையில்*
Furi turu yuki mo	*பெய்திட்ட பனியுமே*
Nagare yukite	*நகர்ந்து சென்றே*
Imo ga tamoto ni	*காதலி கையாடையில்*
I yuki furenu ka	*சென்று பெய்திடாதுகொல்!*

விளக்கம்

என்னுடைய கையாடையிலே பெய்த பனியே நகர்ந்து சென்றே என் காதலியின் கையாடையிலும் சென்று பெய்திடாதோ!

குறிப்புரை

பெய்யும் பனியைக் காதல் தூதாக்கல்.

உணர்வு நிலை

பெய்யும் பனி கொண்டு காதலியுடன் தொடர்புற எண்ணும் ஆண்.

பாடல் : 2321

Awa yuki va	*நுரை பனியே*
Kefu va nafuri zo	*இன்றே பொழியாதே*
Sirotafe no	*வெண் கரையது*
Sode maki fosamu	*கையாடை அணை காயும்*
Fito mo aranaku ni	*காதலியும் இன்றே*

விளக்கம்

நுரை பனியே, இன்று நீ பொழியாதே. வெண் கரைகொண்ட என் கையாடை நனையின், அதை அணைத்துக் காய வைத்திடும் காதலியும் இல்லையே.

குறிப்புரை

காதலி இல்லாத ஆண்போலும்.

உணர்வு நிலை

காதலிக்காக ஏங்கும் காதலன்.

பாடல் : 2322

Fana fada mo	*நிறையவுமே*
Furanu yuki ywuve	*பெய்யாது பனியுமே*
Koti taku mo	*இந்த அளவிலே*
Amatu misora va	*வானத்தின் முகிலே*
Kumori afitutu	*படர்ந்து நிற்குதே*

விளக்கம்

பனி நிறையப் பெய்யவும் இல்லை. எப்படி இவ்வளவிலே வானத்தின் முகிலும் மூடிப் படர்ந்து நிற்குதே?

குறிப்புரை

இயற்கை நிலையின் தோற்றங்கண்டு வியத்தல்.

உணர்வு நிலை

பனிக் காலத்திற்குரிய இயற்கை நிலை இல்லாமையைக் கண்டு வியக்கும் பெண்.

பாடல் : 2323

Waga seko wo	*என் காதலரே*
Ima ka ima ka to	*இப்போ இப்போகொல் என*
Ide mire ba	*வெளி நோக்கிட*
Awa yuki fureri	*நுரை பனி பெய்திருக்கும்*
Niwa mo fodoro ni	*பூங்கா எங்கும் படர*

விளக்கம்

என் காதலரே இப்போ இப்போ வருவாரா என எண்ணி வெளியே வந்து பார்த்திடப் பூங்கா எங்கும் படரப் பனி பெய்திருக்கும்.

குறிப்புரை

காதலன் வினை முடித்து வரல் அல்லது ஜப்பானிய மரபுப்படி கணவன் மனைவியை இரவில் காண வருதல்.

உணர்வு நிலை

விருப்பத்துக்குகந்தவன் வரவை எதிர்பார்த்திருக்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2324

Asifiki no	*அடி இழுக்கும்*
Yama ni siroki va	*மலையிலும் வெண்மையே*
Waga yado ni	*எனது முன்றில்*
Kinofu no yufufe	*நேற்று மாலை நேரமே*
Furi si yuki kamo	*பெய்திட்ட பனிகொல்லோ!*

விளக்கம்

அடி இழுக்கும் மலையிலும் வெண்மை நிறமே. எனது முன்றிலிலே நேற்று மாலை நேரத்திலே பெய்த பனியுமோ.

குறிப்புரை

மலையிலும் வீட்டு வாயிலிலும் ஒரே நேரத்தில் வெண்பனி பெய்தமை. இப்பாடலிலே '**asifiki no**' என்னுந் தொடர், தலையணைச் சொற்றொடர். '**yama**'வுடன் அணையும்.

உணர்வு நிலை

பனிப் பெயல் கண்டு காலமாற்றத்தை உணரும் பெண்.

பாடல் : 2325

Taka sono no	*யாரது பொழில்*
ume no fana zo mo	*உமெயின் மலர் தானும்*
Fisakata no	*பிசகதவின்*
Kiyoki tuku yo ni	*ஒளிர் நிலா இரவில்*
kokoda tiri-kuru	*இம்மட்டிலே சிதறும்*

விளக்கம்

யாருடைய பூங்காவின் உமெ மலர்களோ? இப்படிப் பிசகதவின் ஒளிர் நிலவுபோல இரவிலே சிதறும்.

குறிப்புரை

இப்பாடலிலே '**Fisa kata no**' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். '**kiyoki**' என்னும் தொடருடன் அணையும் 5 பாடல் தொடர, மலர் தொடர்புறுத்தியவை.

உணர்வு நிலை

உமெ மலர் சிதறல் கண்டு நலியும் உள்ளம்.

பாடல் : 2326

Ume no fana	*உமெ மலரின்*
Madu saku yeda wo	*முதல் அலர் கிளையை*
Ta worite ba	*முறித்திடவே*

Tuto to nadu kete — *'பரிசெனப் பெயர் விளி'*
Yoso fete mu kamo — *மாந்தரும் என்னையேகொல்!*

விளக்கம்

உமெ மலரின் மரத்து முதல் பூத்திடும் கிளையை நான் முறிக்கவே 'உது பரிசோ' என என்னை மாந்தர் கேட்டிடுவாரோ.

குறிப்புரை

மலர் கையுறையாகக் கொடுக்கும் வழக்கம்.

உணர்வு நிலை

காதலிக்குக் கையுறை கொடுக்க விரும்புங் காதலன் நிலை.

பாடல் : 2327

Taga sono no — *யாரது பொழில்*
Ume ni ka arikemu — *உமெகொல் இருந்திடும்*
Kokodaku mo — *இம்மட்டிலுமே*
Saki ni keru kamo — *அலர்ந்து வந்ததுகொல்*
Mi ga fosimade ni — *கண் நிறையக் காணுதும்*

விளக்கம்

இது யாருடைய பூங்காவின் உமெ மலர்களாக இருக்குமோ? இப்படி முற்றாக அலர்ந்திருக்கிறதே. எம் கண் நிறைய அவற்றைப் பார்க்கும்.

குறிப்புரை

குறிப்புப் பொருள் - அழகான பெண் யாரோ?

உணர்வு நிலை

உள்ளங் கவர்ந்த பெண்ணைக் கண்ட ஆண் நிலை.

பாடல் : 2328

Kite mi beki — *வந்து காணவே*
Fito mo aranaku ni — *மாந்தரும் இல்லையே*
Wagife naru — *எனது வீட்டு*
Ume no fatu fana — *உமெயின் புதுமலர்*
Tirinu tomo yosi — *சிதறிடினும் நன்றே*

விளக்கம்

வந்து பார்ப்பதற்கு யாரும் இல்லை. அதனால் எனது வீட்டிலுள்ள உமெயின் புது மலர் சிதறுவதும் நன்றேயாம்.

குறிப்புரை

காதலை வெளிப்படுத்தும் குறிப்பு நிலை. மலர்நிலை-குறிப்புப் பொருள்.

உணர்வு நிலை

காதலுக்குத் தன் நிலையை விளக்கும் பெண். பாடலாக எழுதி அனுப்பல்.

பாடல் : 2329

Yuki samumi	*பனி குளிரே*
Saki ni va sakanu	*மலராய் அலராத*
Ume no fana	*உமெயின் மலர்*
Yosi konogoro va	*நன்று இந்நேரத்திலே*
Sika ni mo aru gane	*இப்படி இருக்கட்டும்*

விளக்கம்

பனி மிகவும் குளிராக இருப்பதால், இன்னும் மலராக மலர்ந்திடாத உமெயின் மலர் நன்றே. இந்த நேரத்திலே இப்படியே இருக்கட்டுமே.

குறிப்புரை

மலர் மொட்டாக இருப்பின், பனி விழும்போது சிதையாது.

உணர்வு நிலை

உரிய காலம்வரை பொறுத்திருக்கும் உள்ளம்.

பாடல் : 2330

Imo ga tame	*மனைவிக்காக*
Fatuye no ume wo	*மேற்கிளையின் உமெயைப்*
Taworu to va	*பறித்திடவே*
Sidu-ye no tuyu ni	*கீழ்க் கிளையின் பனியில்*
Nure ni keru kamo	*நானும் நனைந்திட்டேன்கொல்!*

விளக்கம்

மனைவிக்கென மேற்கிளையிலுள்ள உமெ மலரைப் பறித்திடவே கீழ்க் கிளையிலிருந்த பனியிலே நானும் நனைந்திட்டேனே.

குறிப்புரை

பனி தொடர்புறுத்திய பாடல். காதலி தன் முயற்சியை அறியாள் எனும் குறிப்புப் பொருள். கையுறையாக மலர் கொடுக்கும் மரபு.

உணர்வு நிலை

மனைவியைக் காண உமெ மலருடன் செல்ல எண்ணுங் கணவன்.

பாடல் : 2331

Yata no no no	*யத வயல்*
Asadi iroduku	*அசதி நிறம் பெறும்*
Arati yama	*அரதி மலை*
Mine no awa yuki	*உச்சியின் நுரைபனி*
Samuku furu rasi	*குளிராய்ப் பெய்திடுமே*

விளக்கம்

யத வயற்பகுதி வளர்கின்ற அசதியும் நிறம் பெறும். அரதி மலையின் உச்சியிலே நுரை பனியும் குளிராய்ப் பெய்திடுகின்றதோ.

குறிப்புரை

கார் கால நிறம் தொடர்புறுத்திய பாடல். அரதி, மலையின் பெயர்.

உணர்வு நிலை

இயற்கைத் தோற்ற நிலை கண்டு காலத்தைக் கணிக்கும் பெண்.

பாடல் : 2332

Sayo fuke ba	*இரா நீண்டிட*
Ide komu tuki wo	*வெளி வருநிலவை*
Taka yama no	*தகமலையின்*
Mine no sira kumo	*உச்சியின் வெண்முகிலும்*
Kakusi namu kamo	*மறைத்து நிற்குங்கொல்லோ!*

விளக்கம்

இரவு வளர்ந்திட வெளிவரும் நிலவைத் தகமலையின் உச்சியிலுள்ள வெண் முகிலும் மறைத்து நிற்கின்றதோ.

குறிப்புரை

நிலவு - இரவில் வரும் காதலன் குறிப்புப் பொருள். நிலா தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதல் வரவுக்குத் தடையும் இருக்குமோவென எண்ணிடும் பெண்.

பாடல் : 2333

Furu yuki no	*பெய்யும் பனியின்*
Sora ni kenubeku	*வானிலே கரைந்திடும்*
Kofure domo	*நலிவெனினும்*
Afu yosi nasi ni	*காணும் நிலை இன்றியே*
Tuki zo fe nikeru	*மாதங்கள்தாம் கழியும்*

விளக்கம்

பெய்கின்ற பனியும் வானத்திலே கரைந்திடும். காதல் நலிவினிலே அவளைக் காணும் வாய்ப்புமின்றியே மாதங்கள்தாம் கழியும்.

குறிப்புரை

பனி கரைவதுபோல என் உயிரும் காதல் நலிவில் கரையும்.

உணர்வு நிலை

காதலியைப் பல மாதங்களாகக் காணாமல் நலியும் காதலன்.

பாடல் : 2334

Afa yuki va	*கரை பனியே*
Tife ni furi sike	*ஆயிரம் மடிப்பில் பொழி*
Kofisi keku	*காதல் நலியும்*
Ke nagaki ware va	*நீள் நாளிலே நானுமே*
Mi tutu sinobamu	*காணுதும் நினைவிலே*

விளக்கம்

கரையப் பெய்யும் பனியே, நீ ஆயிரம் மடிப்புகளாகப் பொழிக. காதலிலே நலிகின்ற நீண்ட நாளிலே நான் என் காதலியை நினைவிலே காணலாம்.

குறிப்புரை

ஆயிரம் மடிப்பில் பொழிதல். தொடர்ந்து பொழிதல். கரை பனி நுரை போல விரைவில் கரையும் பனி.

உணர்வு நிலை

காதலி நினைவைக் கரை பனியூடே காண எண்ணும் காதலன்.

பாடல் : 2335

Saki deteru	*மலர் ஒளிர்*
Ume no sidu ye ni	*உமெயின் தாழ்கிளையில்*
Aku tuyu no	*விழு பனியின்*
Kenubeku imo ni	*கரையும் காதலியில்*
kofuru konogoro	*நலியும் இவ்வேளையே*

விளக்கம்

மொட்டு மலர்ந்து ஒளிர்கின்ற உமெயினது தாழ்ந்த கிளையிலே விழும் பனிபோல, விரைவில் கரையும் காதலிபால் நானும் நலியும் இவ்வேளையே.

குறிப்புரை

பனி கரைவதுபோலக் கரைந்து இறந்துவிடும் பெண். பனி தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

மென்மையான உள்ளங்கொண்ட காதலி, பிரிவினால் நலிந்து வருந்துமேயெனக் கவலைப்படும் ஆண் உள்ளம்.

பாடல் : 2336

Fanafoda mo	*மிகப்பெரிதும்*
Yo fukete na yuki	*இரா வளரும் செல்லல்*
Miti no fe no	*தெரு அருகின்*

Yu asa no ufe ni	*குறு மூங்கிலின் மேலே*
Simo no furu yo wo	*பனி பொழி இரவே*

விளக்கம்

இரவு மிகவும் வளர்ந்துவிட்டது. நீயும் செல்ல வேண்டாம். தெருக் கரையோரக் குறு மூங்கிலின் மேலே இவ்விரவு பனி மிகப் பெய்யுமே.

குறிப்புரை

இரவின் வழிக் கடுமை, பனிக் கடுமை தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதலன் செல்லும் வழியின் பனிக் கடுமை எண்ணி நலியும் காதலி.

பாடல் : 2337

Sasa no fa ni	*சிறுவேய் இலைமேல்*
Fadare furi ofofi	*சிதறிப் பெய்து மூடி*
Kenabaku mo	*அழித்திடுமே*
Wasuremu to ife ba	*மறந்திடு எனவே*
Masite omofoyu	*மீண்டும் நினைத்திடுமே*

விளக்கம்

சிறிய மூங்கிலின் இலைமேலே சிதறிப் பெய்து மூடி, பனி அதை அழித்திடுமே. 'நானும் அழிந்திடும் என்னை மறந்திடு' என நீ சொல்லியது மீண்டும் உன்னை நான் நினைக்க வைக்குமே.

குறிப்புரை

சிறு மூங்கில் இலையைப் பெண் தனக்கு உவமையாகக் கூறல். பனியின் பெயர் குறிப்பிடாத பாடல் தொடர 12 பாடல்கள்.

உணர்வு நிலை

பிரிந்து வந்த காதலியின் கூற்றை எண்ணி நலியும் ஆண்.

பாடல் : 2338

Arare furi	*வன்பனி பெய்ய*
Itaku kaze fuki	*கொடிய காற்று வீசும்*
Samuki yo ya	*குளிர் இரவே*

Fata no ni ko yofi	*பத வயல் இவ்விரா*
Waga fitori nemu	*நான் தனி உறங்குமே*

விளக்கம்

கடுமையான பனி பெய்யும், கொடிய காற்று வீசும் குளிரான இரவு. பத வயலிலே இவ்விரவும் நான் தனியாக உறங்குமே.

குறிப்புரை

பனியின் கடுமை காற்றின் கொடுமை-இயற்கை நிலையான துன்பங்கள்; பத-இடத்தின் பெயர்.

உணர்வு நிலை

இயற்கை நிலையான துன்பங்களாலும் பிரிவாலும் நலியும் ஆண்.

பாடல் : 2339

Yo-nabari no	*யொநபரியின்*
Nugi ni furi ofofu	*மரங்களில் பெய்திடு*
Sira yuki no	*வெண்பனிபோலத்*
Itiziroku si mo	*தெளிவாய்த் தோன்றிடுமே*
Kofimu ware kamo	*நலிந்திடும் நானேகொல்!*

விளக்கம்

யொநொபரியின் வெளியிலுள்ள மரங்களிலே பெய்து, அவற்றை மூடியிருக்கும் வெண் பனிபோலத் தெளிவாகத் தோன்றுவேனோ, காதலில் நலிகின்ற நானுமே.

குறிப்புரை

வெண்பனியின் தெளிவான தோற்றம்போலக் காதல் நலிவு முகத்திலே தெளிவாய் வெளிப்படல்.

உணர்வு நிலை

தன் காதல் நலிவு தெளிவாக முகத்திலே வெளிப்படுமோ என எண்ணும் பெண்.

பாடல் : 2340

Fito me misi	*ஒரு பார்வையில்*
Fito ni kofuraku	*பெண்ணில் நலிவுறுமே*

Ama-girasi	*வானம் படரப்*
Furi kuru yuki no	*பெய்துவரு பனியின்*
Kenubeku omofoyu	*கரைவுபோல் நினையும்*

விளக்கம்

ஒரு பார்வையிலே கண்ட பெண்ணை நினைத்து நலிகின்றேனே. வானம் படரப் பெய்து வரும் பனி கரைவதுபோல் என் காதல் நினைவும் கரையுமோ.

குறிப்புரை

தன் நினைவிலிருந்து அவள் மறையுமா? ஒருதலைப்பட்ட காதல்.

உணர்வு நிலை

ஒரு முறைமட்டுமே கண்ட பெண்ணை நினைத்து நலியும் ஆண்.

பாடல் : 2341

Omofi iduru	*நினைவு செல்லும்*
Toki va sube nami	*நேரம் மயங்கிடுமே*
Toyo kuni no	*தொயொ நாட்டது*
Yufu yama yuki no	*யபுமலைப் பனியின்*
Kenubeku omofoyu	*கரைவென நினையும்*

விளக்கம்

ஒவ்வொரு முறையும் அவள் நினைவு உள்ளத்திலே வரும்போது மயங்கும் தொயொ நாட்டிலுள்ள யபுமலையின் பனிபோல அவள் நினைவும் கரையும்.

குறிப்புரை

அவள் நினைவு தடுக்க முடியாதது. ஆனால் கரைந்து போகும் நிலை. எனவே உள்ளம் மயங்கல்.

உணர்வு நிலை

அடைய முடியாத பெண்ணின் நினைவில் நலியும் ஆண்.

பாடல் : 2342

Ime no goto	*கனவில் போலும்*
kimi wo afi mite	*உன்னை இணையக் கண்டே*

Ama-girasi — வானம் படரப்
Furi kuru yuki no — பெய்துவரு பனியின்
Kenubeku omofoyu — கரைவுபோல் நினையும்

விளக்கம்

உன்னைக் கண்டது கனவு போலிருக்கின்றது. வானம் படரப் பெய்து வரும் பனி கரைவதுபோல, என் காதல் நினைவும் கரையுமோ!

குறிப்புரை

அவள் நினைவு பனிபோல மறையும். காலம் கடந்துவிட்டது.

உணர்வு நிலை

பல காலமாக நேரில் காணாத விருப்பத்திற்குரியவளின் நினைவிலே நலியும் ஆண்.

பாடல் : 2343

Waga seko ga — எம் காதலரே
Koto utu kusimi — பேசிய இன்மொழிகள்
Idete yukaba — வெளியே செலின்
Mo fiki sirukemu — அவர் ஆடை காணவே
Yuki na furi sone — பனியே நீ பெய்யாதே

விளக்கம்

என்னிடம் இன்மொழிகள் பேசிய எம் காதலர், வீட்டை விட்டு வெளியே செல்லும்போது புரளும் அவர் ஆடைக்கரை காண விரும்புகிறேன். எனவே, பனியே நீயும் பெய்யாதே.

குறிப்புரை

வெளியே செல்லும் காதல் வழிச் செலவைப் பனிப்பெயல் தடுக்குமோ என அஞ்சுதல்.

உணர்வு நிலை

பனியைப் பெய்ய வேண்டாமென விநயமாய் வேண்டும் பெண்.

பாடல் : 2344

Ume no fana — உமெயின் மலர்
Sore to mo miyezu — உதுவோ தெரியாதே

Furu yuki no	*பெய்யும் பனிபோல்*
Itizirokemu na	*தெளிவுற்றிடுந்தானே*
Ma dukafi yaraba	*தூதும் பரிமாறிடினே*

விளக்கம்

உமெயின் மலரே உதுவோ எனத் தெரியாதபடி, மூடிப் பெய்யும் பனிபோலத் தெளிவாக இருக்கும் எமது காதல் இருவருக்கிடையே தூது பரிமாறுவதாலே.

குறிப்புரை

காதலரிடைத் தூதுவன் மூலம் செய்திப் பரிமாற்ற நடைமுறை ஆவணம்.

உணர்வு நிலை

பலரும் அறிந்த காதல் நிலையென்பதை உணர்த்தல்.

பாடல் : 2345

Ama girafi	*வானம் படரப்*
Furi kuru yuki no	*பெய்துவரு பனியின்*
Keyenu domo	*கரைவு எனினும்*
Kimi ni afamu to	*உன்னைக் காணும் எனவே*
Nagarafe wataru	*வாழ்வையும் கடக்கும்*

விளக்கம்

வானம் படரப் பெய்து வருகின்ற பனியின் கரைவுபோல, நானும் கரைந்திறந்திடுமெனினும் உன்னைக் காணுவேன் என்ற நம்பிக்கையில், என் உயிர் வாழ்க்கை தொடர்கிறது.

குறிப்புரை

வாழ்நாளின் கடப்பு, நம்பிக்கையிலே நடக்கிறது. காதலனை நேரிலே காண்பதற்காக உயிர் வாழ்க்கை நடத்தல்.

உணர்வு நிலை

காதலன் வரவு காத்திருக்கும் பெண் உள்ளம்.

பாடல் : 2346

Ukanerafu	*வழி நடையர்*
Tomi yama yuki no	*தொமி மலைப் பனியின்*

Itiziroku — *தெளிவுபோல*
Kofiba imo ga na — *நலிவில் அவள் பெயர்*
Fito siramu kamo — *மாந்தர் அறியக் கூடும்*

விளக்கம்

வழிப்போக்கர் செல்கின்ற தொமி மலைப் பனியின் தெளிவுபோல நான் நலிவதால், என் காதலி பெயரை மாந்தர் அறியவுங் கூடும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'ukanerafu' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Tomi' என்னுஞ் சொல்லுடன் அணையும்.

உணர்வு நிலை

காதல் நலிவின் வெளிப்பாட்டால் காதலியின் பெயரும் வெளிப்பட்டு விடுமோ என அஞ்சுதல்.

பாடல் : 2347

Ama wobune — *நிறத்து புணை*
Fatuse no yama ni — *பதுசெயின் மலையில்*
Furu yuki no — *பெய்யும் பனியின்*
Ke nagaku kofisi — *கரைவு நீள் காதலே*
Kimi ga oto zo suru — *நீ வரு ஒலிதான் செய்*

விளக்கம்

நிறத்து புணை போன்ற பதுசெயின் மலையில் பெய்யும் பனி கரைவதற்கு நீண்ட நேரமாகும். அதுபோல நீண்ட நாள் நான் உன் காதலில் நலிகிறேன். நீ வரும் (வண்டியின்) ஒலியையும் செய்வாயோ.

குறிப்புரை

இப்பாடலிலே 'ama wobune' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'Fatu'வுடன் அணையும். குதிரை வண்டியில் வருதல்.

உணர்வு நிலை

காதலன் வரவு ஒலி கேட்கக் காத்திருக்கும் பெண்.

பாடல் : 2348

wazami no	*வசமி மலை*
Mine yuki sugite	*உச்சி கடந்து சென்று*
Furu yuki no	*பெய்யும் பனியின்*
Itofi mo nasi to	*பராபரிப்பும் இன்றெனக்*
Mawase sono ko ni	*கூறிடும் மகளுக்கே*

விளக்கம்

வசமி மலையின் உச்சி கடந்து சென்று பெய்யும் பனிபோல, எனக்கும் பராபரிப்பு இல்லையென்பதை என் காதலியைக் காணும்போது கூறிடுக.

குறிப்புரை

காதல் நிலையை மற்றவர் காண்பதில்லை. அதனால் தூது அனுப்பல்.

உணர்வு நிலை

தன்னிலை விளக்கும் ஆண் மகன்.

பாடல் : 2349

Waga yado ni	*எனது முன்றில்*
Sakitaru ume wo	*மலர்ந்திடு உமெயை*
Tuku yo yomi	*நிலவிரவில்*
Yofi yofi misemu	*மாலை மாலை காணுதும்*
Kimi wo koso mate	*உன்னைக் காத்து நிற்குமே*

விளக்கம்

எனது வீட்டு முன் பக்கத்தில் மலர்ந்திருக்கும் உமெ மலரின் அழகை, இரவு நிலவொளியிலே ஒவ்வொரு நாளும் மாலையிற் காண வேண்டும். அதற்காக உன்னைக் காத்து நிற்கிறேனே.

குறிப்புரை

இரவு நிலவொளியில் மலர் காணல். மலர் தொடர்புறுத்திய பாடல். மாலை-இரவு என்னும் பொருள்.

உணர்வு நிலை

காதலனுடன் சேர்ந்து இயற்கையழகைக் காண விரும்பும் பெண்.

பாடல் : 2350

Asifiki no — *அடி இழுக்கும்*
Yama no arasi va — *மலையது கடுங்காற்றே*
Fukane domo — *வீசா விடினும்*
Kimi naki yofi va — *நீ இல்லாத இரவே*
Kanete samusi mo — *முன்னிலும் குளிருமே*

விளக்கம்

அடி இழுக்கும் மலையது கொடிய காற்று இப்போது வீசாவிடினும், நீ இல்லாத இரவு முன்னிலும் குளிராய் இருக்கும்.

குறிப்புரை

இப்பாடலிலே 'asifiki no' என்னுஞ் சொற்றொடர், தலையணைச் சொற்றொடராகும். 'yama' என்னுஞ் சொல்லுடன் அணையும். இரவு தொடர்புறுத்திய பாடல்.

உணர்வு நிலை

காதலன் அருகில் இல்லாமையால் குளிராலும் வருந்தி நலியும் பெண்.

* * *

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
சங்க இலக்கிய ஆய்வுகள்	30.00
தொல்காப்பிய ஆய்வுகள்	20.00
Indian Epistemology	125.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-3	50.00
இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-2	70.00
இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-1	75.00
இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-2	65.00
இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-1	70.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2	64.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1	56.00
இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து	125.00
லவகுச நாடகம்	30.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3	110.00
எட்டையபுரப் பள்ளு	60.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2	65.00
நானும் என் கவிதையும்	40.00
On Translation	95.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
Literary Criticism in Tamil and Sanskrit	45.00
செந்தமிழ் அகராதி	150.00
சொற்பிறப்பு - ஒப்பியல்-தமிழ் அகராதி	200.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	30.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2	110.00
பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம்	55.00
அறநூல்	38.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
பொருள் புதிது	35.00
ஆளும் தமிழ்	28.00

Pub.No. 369 **ஜப்பானியக் காதல் பாடல்கள்** **Rs. 75.00**